110.6

T. N. L. A. Debates
V. 33. No. 2 1990

C

D
V2V,31'N90
N90 33.2
143983

வெளியீடு 25-2-1991

Issued 25-2-1991

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் 19 ஜுன் 1991 எழும்பூர், சென்னை-600008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

புதன்கிழமை, மே 9, 1990 - தொகுதி 33 - எண் 2

Wednesday, the 9th May, 1990-Volume 33-No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George**

**Madras-600 009**

விலை ரூ. 3.00]

[Price Rs. 3-00

143983
தமிழ்நாடு சட்டப்பேரவைச் செயலகம், சென்னை-600 009

**உள்ளடக்கம்**

*9—5—1990*

**பக்கங்கள்.**

1.* **வினாக்கள்—விடைகள்**

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. *145—183*

2. **தகவல் கோரல்—**

(அ) தஞ்சை மாவட்டத்தின் சில பகுதிகளிலிருந்து சென்ற மீனவர்கள் திரும்பாதது குறித்தும், புயல் விளைவித்த பாதிப்புகளையொட்டி எடுக்க வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும். .. .. *183—189*

(ஆ) தமிழகத்திலே விடுதலைப் புலிகள் நடமாட்டம் பற்றிய செய்தி குறித்து முதலமைச்சர் தெரிவித்த கருத்து. .. .. *199*

3. **ஒழுங்குப் பிரச்சினை—**

விதி 109 இன்கீழ் ஓர் அமைச்சர் தன்னிலை விளக்கம் அளிக்கும் உரிமை குறித்து. .. *189—194*

4. **அறிவிப்புகள்—**

(அ) 1990—91ஆம் ஆண்டிற்கான பேரவைக் குழுக்கள். .. .. *195—199*

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1990. (ஆ.இ.) .. *207*

(இ) பயணிப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1990. (ஆ.இ.) .. *252*

(ஈ) பேரவை அலுவல்கள் .. .. *295*

5. **கவன ஈர்ப்பு—**

(அ) நம்பியாற்றில் மணல் எடுப்பதால் நீர்வளம் குறைதலும் நிலங்கள் பாதிக்கப்படுதலும். *200—203*

**டி 2 ஏ 53-139—1**

D
V211,31'N90
N90 33-2

பக்கங்கள்.

(ஆ) கத்திவாக்கத்திலுள்ள இ.ஐ.டி. பாரி, கோத்தாரி போன்ற நிறுவனங்களிலிருந்து வரும் கழிவு நீரால் குடிநீர் பாதிப்பு. 203—207

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990. .. .. 207—208

(ஆ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1990. .. 208

(இ) பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) சட்ட முன்வடிவு, 1990. .. 208

(ஈ) குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990. .. .. 209

(உ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு 1990. .. .. 209

7. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990. .. .. 210—230

(ஆ) மக்கள் நல்வாழ்வு (திருத்த) சட்ட முன் வடிவு, 1990. 230—240

(இ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1990. .. .. 240—252

(ஈ) பயணிப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (இயக்கப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1990. .. .. 252—294

8. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. 295

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 26, பிரமோதூத, திருவள்ளுவர் ஆண்டு–2021—
1990 மே 9, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வி. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் 9–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

'உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான்
— எண்ணப் படவேண்டா தார்.''

கள்ளை உண்ணக்கூடாது. சான்றோரால் நன்கு எண்ணப் படுவதை விரும்பாதவர் கள்ளை உண்ணவேண்டுமானால், உண்ணலாம்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்தல்

* 3335—திரு. கா. அண்ணாதுரை :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையில் உள்ள காவல் நிலையத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிரிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி துணைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையில் உள்ள காவல் நிலையத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை காவல் நிலையம், பட்டுக்கோட்டை வட்டம் மற்றும் பேராவூரணி வட்டத்தினுடைய சில பகுதிகளை உள்ளடக்கிய மிகப் பெரிய காவல் நிலையமாக இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நீதி வழங்கமுடியாத நிலையிலே இன்றைக்கு அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், பட்டுக்கோட்டை காவல் நிலையத்தை, வட்டக் காவல் நிலையம் மற்றும் நகர காவல் நிலையம் என்று இரண்டாகப் பிரிப்பதற்குக் கருணையுடன் நமது முதல்வர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு காவல் நிலையம் வைக்கப்படுமா என்ற கேள்வி கேட்டால் புரிந்துகொள்ள முடியும். இருக்கிற காவல் நிலையத்தை இரண்டாகப் பிரிக்க முடியுமா என்று கேட்பது எனக்குப் புரியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியினுடைய அடிப்படையில், இயலுமானால் அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகரம் ஒரு வளர்ந்து வரக்கூடிய நகரம் என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நன்கு அறிவார்கள். எனவே, அந்தப் பட்டுக்கோட்டை நகரத்திலே ஒரு பெண் காவலர் பிரிவை வழங்குவதற்காவது நம்முடைய முதல்வர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இன்னும் வளரட்டும். பார்க்கலாம் (சிரிப்பு.)

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாலுக்கா மட்டத்திலே நம்முடைய காவல் நிலையங்கள் இப்போது சட்டம்–ஒழுங்கு, கிரைம் (லா அண்டு ஆர்டர் மற்றும் கிரைம்) இவை இரண்டையும் சேர்த்தே கவனிக்கக்கூடிய நிலைமையிலே அமைந்திருக்கின்றன. இந்தப் பிரச்சினைகள் எல்லாம், கிராமப்புறங்களிலே வேறுவிதமான பிரச்சினைகளாகவும், நகர்ப் புறங்களிலே வேறுவிதமான பிரச்சினைகளாகவும் இருக்கின்றன. தமிழ்நாடு தழுவிய அளவிலே காவல் துறையினுடைய நிலையங்களை, 'ரூரல், அர்பன்' என்று பிரித்துச் செயல்படுத்துகிற செயற்குறிப்பு,' திட்டம் அரசின் பரிசீலனையில் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை. இது குறித்தெல்லாம் போலீஸ் கமிஷனுடைய பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அவர்களோடு கலந்தாலோசித்து அதுகுறித்து' முடிவு எடுக்கலாம்.



திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணாதுரை அவர்கள் கேட்ட கேள்வி மிகவும் அருமையான கேள்வி. பட்டுக்கோட்டை என்பது, மிகப் பெரிய அளவிலே இருக்கின்ற ஒரு பகுதியாகும். ஆகவே, அந்தப் பட்டுக்கோட்டையைப் பிரிப்பது என்பதை விட, பட்டுக்கோட்டையினுடைய சுமைகளைக் குறைப்பதற்கு, பட்டுக்கோட்டை வட்டத்திலேயே 'குறிச்சி' என்ற ஒரு இடத்திலே போலீஸ் ஸ்டேஷனை வைத்தால் மிகவும் சௌகரியமாக இருக்கும். அதைப் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, குறிச்சி எந்தத் தொகுதியில் இருக்கிறது என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. அதற்கு ஒரு அரசுக் கட்டிடம் இருந்தால் நன்றாக இருக்கும். துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம், அரசுக் கட்டிடத்திலே இயங்குவதற்கு முதல்வர் ஐயா அவர்கள் கருணைகூர்ந்து நடவடிக்கை எடுப்பாரா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, முதல்வர் தான் பதிலளிக்க முடியும். முதல்வர் ஐயா பதில் அளிக்கமுடியாது. (சிரிப்பு).

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் பல இடங்களிலே புதிதாகப் போலீஸ் ஸ்டேஷன்களை ஆரம்பித்து இருக்கின்றோம். கிராமங்களிலே எல்லாம் போலீஸ் ஸ்டேஷன்களை ஆரம்பித்து— முதல்வர் அவர்கள் சிரிப்பின் காரணத்தாலே, மகிழ்ச்சியோடு இருக்கிற காரணத்தாலே---(குறுக்கீடு), பல இடங்களிலே நாம் ஏற்கனவே 4, 5 ஆண்டுக் காலமாக புதிதாக போலீஸ் ஸ்டேஷன்களை கிராமப்புறங்களிலே ஆரம்பித்து இருக்கிறோம். அப்படி கிராமப்புறங்களிலே ஆரம்பிக்கப்பட்ட போலீஸ் ஸ்டேஷன்களுக்கு இன்னும் கட்டிடம் கட்டாத காரணத்தால், சப் இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் தங்கமுடியாமல், போலீஸ்காரர்கள் எல்லாம் தங்கமுடியாமல், போலீஸ் ஸ்டேஷன் நடத்துவதற்கே இடம் இல்லாமல் உள்ள சூழ்நிலை இருக்கிறது. நடப்பு ஆண்டிலே எத்தனை இடங்களிலே இந்த மாதிரி கட்டிடம் கட்டுவதற்கான வசதிகள் செய்யப்படும் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் கேட்ட கேள்வியின் தொடர்ச்சிதான் இந்தக் கேள்வியும். அரசினுடைய குறிக்கோளே எல்லாக் காவல் நிலையங்களுக்கும் காவல்துறை அதிகாரிகள் இருக்கின்ற இடங்களுக்கும், அரசின் சார்பிலேயே கட்டிடங்கள் அமைத்துத் தர வேண்டும் என்பதுதான். இருந்தாலும், நிதியாதாரங்களைக் கொண்டு, படிப்படியாக, இந்தப் பணிகளை நாம் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே, எல்லாக் காவல் நிலையங்களுக்கும், அதற்குரிய கட்டிடங்கள் அமைத்துத் தரவேண்டுமென்ற குறிக்கோளை நோக்கி, இந்த அரசு நடைபோடும்.

*9-05 மணி*

**டாக்டர் எஸ். சுந்தரராஜ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களை கூட்டாவிட்டாலும், மக்கள் தொகைக்கேற்ப, காவலர்களையாவது கூட்டும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்து ஏற்கப்பட வேண்டிய ஒன்று; இருந்தாலும், நிதியாதாரத்தை முக்கியமாகக் கொண்டு, இதைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. மக்கள் தொகை பெருகி வருகிற நேரத்தில், காவலர்களினுடைய எண்ணிக்கையையும் பெருக்க வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லை.

மெக்னீஷிய உலோகத் திட்டம்.

*** 6490 திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், மெக்னீசிய உலோகத் திட்டம் செயல்படுத்தப்படுவது குறித்த பணிகள் எந்த நிலையில் உள்ளன ?

(ஆ) இத்திட்டம் எப்போது நிறைவு பெறும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு மெக்னீசியம் அண்டு மெரைன் கெமிக்கல்ஸ் நிறுவனத்தில், மெக்னீசிய உலோகத் திட்டப் பணி செப்டம்பர் திங்கள் 1989-ல் முடிவுற்றது. உற்பத்திக்கான முன்னோட்டம் தொடங்கப்பட்டுவிட்டது.





(ஆ) 1—2—1990-ஆம் நாள் முதல் வர்த்தக ரீதியில் தொடங்கப்பட்டுள்ளது.

மண்டல போக்குவரத்து அலுவலகம்

*** 9919 திரு. மு. க். ஸ்டாலின் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆயிரம் விளக்குத் தொகுதியில் உள்ள விஜயராகவாச்சாரி தெருவில் அமைந்துள்ள மண்டல போக்குவரத்து அலுவலகத்தை (R.T.O.) வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்து செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. மு. க. ஸ்டாலின் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்குத் தொகுதியில் விஜயராகவாச்சாரி தெரு, சென்னை நகரத்தினுடைய மையபகுதியாக இருக்கிற அண்ணாசாலையில் இணைகின்ற ஒரு தெருவாகும். இந்தத் தெருவில் அமைந்துள்ள ஆர்.டி.ஓ அலுவலகத்தால், போக்குவரத்து மாத்திரமல்ல. அந்தத் தெருவில் குடியிருப்பவர்களும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இதை மனதில் கொண்டு, துரிதமாக ஆர்.டி.ஓ அலுவலகத்தை, வேறிடத்திற்கு மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆர்.டி.ஓ. அலுவலகத்தைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, பொது மக்கள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறான ஒரு இடத்திலே தான் அது அமைந்திருக்கிறது. எனவேதான் சொந்தமாக ஒரு கட்டிடத்தைக் கட்ட வேண்டுமென்று, கிண்டி-மாம்பலம் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில், இரண்டாவது தளம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கு வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் இசைவும் பெறப்பட்டுள்ளது. மதிப்பீடு செய்யப்பட்டு, புதியக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ 20.57 இலட்சம் செலவாகும் என்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக, போக்குவரத்து ஆணையர் அவர்கள் எவ்வளவு செலவாகும் என்பதற்கான செயற்குறிப்பைத் தெரிவித்துள்ளார்கள். அரசு, விரைவிலே இதன்

மீது முடிவு எடுத்து, இரண்டாம் தளம், வட்டாட்சியர் அலுவலகத்திலே கட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்தவுடன், தற்போதுள்ள அலுவலகத்தை சொந்தமான கட்டிடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. மு. க. ஸ்டாலின் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களிலுள்ள ஆர்.டி.ஓ. அலுவலகங்களில், வாகனங்களுக்கு நம்பர் பெறுவதற்கு, அல்லது 'லைசன்ஸ்' பெறுவதற்கு, மேலும் இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும், ஒரு குறிப்பிட்ட நாளுக்குள், ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்கப்படுமென்று அறிவிப்புப் பலகையில் எழுதி வைக்கப்பட்டுள்ளதைப் போல, நம்முடைய அரசும் ஒரு முறையைப் பின்பற்றுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்நாடகாவிலும், ஆந்திராவிலும் இந்த முறை பின்பற்றப்படுகிறது என்ற விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. இருந்தாலும், அத்தகைய முறை பொது மக்களுக்கு வசதி செய்து தருகின்ற ஒரு முறையாக இருக்குமானால், நிச்சயமாக அதைப் பரிசீலித்து, இந்த அரசும் அதைப் பின்பற்றும்.

**திரு. வ. அன்புழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஆண்டிலே, தமிழகத்திலே, ஆர்.டி.ஓ. அலுவலகமோ அல்லது பிரிவோ, தொடங்குகிற திட்டம் உள்ளதா? ஆம் எனில், எங்கெங்கு தொடங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கரூரில் புதிதாக ஏற்கெனவே இருக்கக்கூடிய 'மோட்டார் வெஹிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்' அலுவலகம் அந்த அலுவலகத்தை உயர்த்தி, ஆர்.டி.ஓ. அலுவலகமாக மாற்றக்கூடிய திட்டம் அனுமதிக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பல்லவர் கோட்டம்

*** 1516 திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாமல்லபுரத்தில் பல்லவர் கோட்டம் அமைக்க அரசு முன்வருமா?





**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** துணைத் தலைவர் அவர்களே,

மாமல்லபுரத்தில் பல்லவபுரம் சுற்றுலா வளாகம் மத்திய அரசு சுற்றுலாத்துறை நிதியுதவியுடன் அமைக்கப்படும்.

### வனத்துறைக்கு சொந்தமான நிலத்தை அறநிலையத் துறைக்கு சேர்த்தல்.

* 5483—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் அருகிலுள்ள அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோவிலைச் சுற்றியுள்ள வனத்துறைக்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் நிலத்தை அறநிலையத்துறைக்குச் சேர்க்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) தற்போது வனத்துறைக்கு எவ்வளவு பணம் கோவிலிலிருந்து குத்தகையாக கட்டப்படுகிறது?

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** துணைத் தலைவர் அவர்களே,

(அ) இந்துசமய அறநிலையத்துறையால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000 குத்தகை தொகையாக செலுத்தப்பட்டு வருகிறது.

9.10 மணி.

**திரு. வி. சே. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பன்னாரி திருக்கோயில் என்பது மிகப் பெரிய கூட்டம் கூடுகின்ற திருக்கோயில். கோடிக் கணக்கிலே வருமானம் வருகின்ற கோயில். ஆகவே, திருவிழாக் காலங்களில் மக்கள் இலட்சக்கணக்கிலே வருவதாலே, அந்தக் கோயிலைச் சுற்றி, வனத்துறை நிலம் இருக்கின்ற காரணத்தால் அவற்றை உடனடியாக அறநிலையத்துறைக்குச் சொந்தமாக்க முன்வருவார்களா? வனவிலங்குகள் எல்லாம் அதிகமாகத் திருவிழாக் காலங்களில் கோவிலுக்கே வந்துவிடுகின்றன. ஆகவே, அந்த இடத்தைக் கொடுத்தால், அவர்கள் சுற்றுச் சுவர் அமைத்து பொதுமக்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கை எடுப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** துணைத் தலைவர் அவர்களே, இந்த பன்னாரி திருக்கோயிலினுடைய வருமானம் கோடியை எட்டவில்லை. ஆகவே, மீதமுள்ள தொகை எங்கே போகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஏறத்தாழ 40 இலட்சம் ரூபாய் அல்லது 50 இலட்சம் ரூபாய் அளவிலேதான் அந்த வருமானம் இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் கோயிலினுடைய நிலத்தைப் பொறுத்தவரையில், அது வனத்துறையைச் சார்ந்த நிலமாக இருந்தது. அந்தக் கோயில் இருக்கின்ற 20 ஏக்கர் நிலத்தை, கோயிலுக்கே பட்டா செய்து கொடுக்க ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது. ஆனால், அதற்கான தொகை ரூபாய் 5,000 கோயிலிலிருந்து வனத்துறைக்குச் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் பட்டா செய்து கொடுக்கின்ற பணி இன்னும் நிறைவுபெறவில்லை. அது நிறைவு செய்யப்படும். இது தவிர, இன்னொரு 20 ஏக்கர் நிலம் குத்தகையாகக் கொடுக்கப்பட்டிருந்தது. 1983ஆம் ஆண்டிலேயே இது முடிவுற்றது. ஏன் அதை மேற்கொண்டு ரெனியூ செய்யவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் அதற்கான ஏற்பாடும் செய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறையைச் சார்ந்த கோயில்களிலே, சமூகநலக் காடுகளையும் பயன்படுத்துவதற்கு சில கோயில்களிலே முன் வந்திருக்கிறார்கள். அப்படி வருகின்ற போது—மரங்களை மட்டும் வித்தியாசமாக—அவர்கள் தருகின்ற மரங்களைப் பயிர் செய்கிறார்கள். அதற்கு மாறாக இலுப்பை, புளி போன்ற மரங்களை, வறட்சியைத் தாங்கக் கூடிய மரங்களை இந்து அறநிலையத் துறை மூலமாக அறிவுரை வழங்கி, இருக்கின்ற கோயில்களிலே சமூகநலத்துறையோடு இணைந்து அந்த மரங்களைப் பயிராக்கி, அதற்குத் தனியான கணக்கை இந்து அறநிலையத் துறையே கண்காணிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அப்படி ஒரு திட்டம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றது. ஆங்காங்கே 500 ஏக்கர், 1,000 ஏக்கர் நிலம் என்று தரிசாக, புஞ்சை நிலமாக கோயிலைச் சார்ந்த நிலங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. சமூக நலக் காடுகள் வளர்ப்பதற்காக, ஆங்காங்கே நிலங்களைத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, கோயிலைச் சார்ந்த நிலங்களிலே இலுப்பை, புளிய மரங்கள் மட்டுமல்லாமல், தொழிற்சாலைக்கு வேண்டிய யூகலிப்டஸ் மரங்களையும் வளர்க்கலாமா என்பதும் அரசினுடைய வனத்துறை, சமூகநலத்துறை ஆகிய துறைகளினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.



**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத்துறையைச் சார்ந்து இருக்கக்கூடிய பல்வேறு கோயில்களுக்குச் சொந்தமான இடத்தில் ஏராளமான மக்கள் 50 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கே ஒரு குறைந்த பட்ச கிரயம் வைத்து அரசு அளிப்பதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் எந்த இடம் என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதற்கான நடவடிக்கை எடுக்க இந்த அரசு, அறநிலையத்துறை முன்வரும்.

9–15 மணி.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன்;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற போது, கோடியை எட்டவில்லை, லட்சத்தைத்தான் எட்டியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், 40 லட்சம் வரை வருமானம் வரக்கூடிய அந்தக் கோயிலில், பக்தர்கள் வந்து தங்கிச் செல்வதற்கு வேண்டிய வசதிகள் இல்லை. பக்தர்கள் வந்து தங்கிச் செல்கின்ற அளவுக்கு, விடுதிகளைக் கட்டித் தருவதற்கு, 20 ஏக்கரா நிலங்களை, ஐயாயிரம் ருபாய் பட்டா செய்து கொடுப்பதற்காக, அந்தத் துறையின் சார்பாக, அந்தக் கோயிலின் சார்பாக, கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதேபோல் பட்டா செய்து தருவது போக, மீதம் இருக்கிற நிலங்களை கல்லூரி கட்டுவதற்காகக் கேட்டிருக்கிறார்கள். அதையும் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஆயிரம் ரூபாய், 27–7–76 அன்றே கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுதே பட்டா செய்து கொடுத்திருக்கலாம், ஆனால் கொடுக்கவில்லை. அதற்குப் பிறகு 1980 ஆம் ஆண்டு மத்திய அரசு ஒரு சட்டம், இது 'கன்கரன்ட் லிஸ்ட்' என்ற காரணத்தினால், இயற்றி இருக்கிறது. ஆகவே, மத்திய அரசின் அனுமதி பெற்றுதான், இந்தச் சூழ்நிலையிலே பட்டா செய்து கொடுக்கமுடியும். அந்த அனுமதியை பெற்றுத் தரமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**திரு. யூ. கே. வெள்ளிங்கிரி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனத்துறைக்குச் சொந்தமான பல கோயில்கள் இருக்கின்றன. குறிப்பாக, பன்னாரி மாரியம்மன் கோயிலைப்

போன்று ஒரு கோயிலும், வெள்ளியங்கிரி மலையில் இருக்கிறது. அந்த மலையில் பல ஏக்கரா நிலங்கள் வனத்துறைக்கு சொந்தமாக இருக்கின்றன. அங்கே, அந்தக் கோயிலுக்கு பொது வேலைக்காகத் தேவைப்படுகின்ற நிலம், இந்து சமய அறநிலையத் துறைக்கு மாற்றிக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமானப் பிரச்சினை. பல இடங்களில் வனத்துறை பகுதியிலே கோயில்கள் இருக்கின்றன. வெள்ளியங்கிரி மலை மீது அப்படிப்பட்ட ஒரு கோயில் இருப்பதைப் போல, மதுரையிலும் அழகர் கோவில் இருக்கிறது. வெள்ளைக்காரர்கள் காலத்திலே, இப்படிப்பட்ட கோயில்களுக்கு, தாராளமாக பட்டா செய்து கொடுத்திருந்தார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், திருச்செந்தூர் பகுதியிலே, குதிரைமேடு என்ற இடத்தில் 10 ஆயிரம் ஏக்கரா வனப்பகுதி இருக்கிறது. அப்போது அங்கிருந்த ஒரு வெள்ளைக்கார அதிகாரி, ஏதோ ஒரு இரவு ஒரு காட்சியைக் கண்டதாகவும் மறுநாளே 150 ஏக்கரா நிலத்தை அங்கே இருந்த கோயிலுக்கு பட்டா செய்து கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. அந்த 150 ஏக்கரா நிலம் இன்றைக்கும் வனத்துறையைச் சார்ந்த நிலமாக இருந்து கொண்டிருக்கிறது. இதுபோல, இன்றைக்கும் வனத்துறை தாராளமாக நடந்துகொள்ளுமென்று எதிர்பார்க்கிறேன்.

சந்தனத் தொழிற்சாலை

*** 8172 திரு. எஸ். ஆர். சிவலிங்கம் :**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் நகரத்தை மையமாகக் கொண்டு சந்தன தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் நகரத்தை மையமாகக் கொண்டு சந்தனத் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் நகரத்தைச் சுற்றி, ஏற்காடு, கொல்லிமலை, கல்வராயன்மலை ஆகிய பகுதிகளிலிருந்து நல்ல முதிர்ந்த சந்தன மரங்கள் சேலம் வன இலாகாவுக்குக் கொண்டு



வரப்படுகிறது. அங்கு அவைகளைச் சீராக்கி ஏலத்திற்கு வைக்கின்றனர். கேரளா, மைசூர், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் உள்ள தனியார்கள், குறைந்த ஏலத்திற்கு எடுத்து, நிறைந்த லாபத்தைச் சம்பாதிக்கின்றனர். எனவே, சேலத்தில் ஒரு சந்தனத் தொழிற்சாலை உருவாக்கினால், கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வரும்; மேலும், அதனால், எங்களது சேலம் மாவட்டத்தில் படித்த இளைஞர்கள் பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். ஆகவே, அரசு பரிசீலித்து, தொழிற்சாலையை அமைக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அம்பேத்கார் மாவட்டம், தெற்குப்பேட்டையில் நிறுவப்பட்ட தொழிற்சாலை சந்தன எண்ணெய் தொழிற்சாலை இன்னும் மூடிக் கிடக்கிறது. அதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். உற்பத்தி செய்யப்படுகின்ற எண்ணெயினுடைய விலை சற்றுக் குறைவாக இருக்கிற காரணத்தினால், இதை லாபகரமாக ஓட்ட முடியுமா என்று ஒரு கேள்வி எழுந்தது. பல்வேறு வெளிநாடுகளிலே இருக்கக்கூடிய கம்பெனிகளோடு தொடர்பு கொண்டு இப்போது அதற்கு நல்ல விலையைப் பெற்றுத் தரமுடியுமென்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, முதலிலே அம்பேத்கார் மாவட்டத்தில் இருக்கக்கூடிய தெற்குப்பேட்டை தொழிற்சாலையை லாபகரமாக ஓட்ட வேண்டும்; அதற்குப் பிறகு, சேலம் தொழிற்சாலையைப் பற்றி கவனிக்கலாம்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள தொழிற்சாலையைத் திறந்தவுடன், அரசு அவசரமாகப் பரிசீலித்து, எங்களுடைய சேலம் மாவட்டத்தினுடைய பொதுமக்கள் நலன் கருதியும், அதே நேரத்தில் எங்களுடைய மாவட்டத்தில் விளைகின்ற சந்தன மரங்களைக் காப்பாற்றும் வகையிலேயும் அடுத்த ஆண்டிலாவது கூட்டுறவுத் துறையின் மூலமாக சந்தன தொழிற்சாலையை அமைப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்

9.20 மணி.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, தெற்குப்பேட்டை தொழிற்சாலை முதலிலே திறந்து நடத்தப்படட்டும். பிறகு அது வனத்துறையிலா அல்லது கூட்டுறவுத் துறையிலா என்பதை சேலம் தொழிற்சாலையை நாம் தொடங்க நினைக்கின்றபோது முடிவு செய்யலாம்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனை அரசு சந்தனத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. எத்தனை தனியார் சந்தனத் தொழிற்சாலைகள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னது போல் இங்கே அம்பேத்கார், மாவட்டத்திலே தெற்குப்பேட்டை என்ற அந்த இடத்திலே மட்டும்தான் அரசுத்துறையிலே சந்தனத் தொழிற்சாலை வைக்க பட்டிருக்கின்றது. தனியார் தொழிற்சாலை ஆங்காங்கே வைக்கப்பட்டு நடத்தப்பட்டாலும் கூட இன்றைக்கு எங்கேயும் அது லாபகரமாக நடந்து கொண்டிருக்கக்கூடிய தொழிற்சாலை யாக இருப்பதாகத் தெரியவில்லை.

பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைத்தல்

* 3968 டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புகைவண்டி நிலையங்களில் இருப்பதுபோன்று மாநகராட்சி, நகராட்சி பேருந்து நிலையங்களில் டி. வி. வைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளின் பேருந்து நிலையங்களில் மாநகராட்சிகளின் சட்ட விதிகளுக்குட்பட்டு தொலைக் காட்சிப் பெட்டிகள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்துப் பேருந்து நிலையங்களையும் அரசு சார்ந்த போக்குவரத்துக் கழகங்கள் பராமரிக்கின்றன. எனவே சென்னை, மாநகராட்சியால் பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டி அமைக்கும் பொருள் எழவில்லை.

நகராட்சிப் பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி பேருந்து நிலையங்களில் பயணிகள் மணிக்கணக்காக பிரயாணம் செய்யும்போது காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அவ்வாறு காத்திருக்கும் பிரயாணிகள் பொழுதுபோக்கிற்காவது டி.வி. பெட்டி வைப்பது நல்ல கருத்து என்பதை யாரும் மறுக்க முடியாது. புகைவண்டி நிலையம், மாநகராட்சி பேருந்து நிலையங்களில் இருப்பதுபோல், நகராட்சி பேருந்து நிலையங்களிலும் டி.வி. பெட்டி வைக்க துரித நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 நிமிடத்திற்கு, 5 நிமிடத்திற்கு பேருந்துகள் போய்க்கொண்டும், வந்துகொண்டும் இருக்கின்றன. எனவே அதில் எந்தப் பிரயாணிகள் தங்கியிருக்கிறார்கள், யார் யார் ரொம்ப நீண்ட நேரம் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் வர்ணிக்க முடியாது. புகைவண்டி நிலையம் என்பது நாழிகள் கழித்து வண்டிகள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, பொருளாதார நிலையை ஒட்டியும், இது வைக்கப்பட அது சாத்தியக்கூறாக இருக்காது. எனவே, தற்போது அப்படிப்பட்ட திட்டமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொழுதுபோக்கிற்காக டி.வி. பெட்டி வைக்காவிட்டாலும், பஸ் எந்த நேரம் வருகிறது, எந்த பிளாட் பாரத்திலிருந்து புறப்படுகிறது என்று பிரயாணிகளுக்கு அறிவிக்கவாவது இந்த டி.வி. பெட்டிகள் பயன்படும். அதைக் கருத்திற்கொண்டாவது இந்த டி.வி. பெட்டியை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில பெரிய பேருந்து நிலையங்களில் ஒலிபெருக்கி மூலம் அது அறிக்கப்படுகிறது. தேவைப்படுமாயின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த நகராட்சி பேருந்து நிலையங்களில் அது அத்தியாவசியமென கருதுகிறாரோ அதைத் தெரிவித்தால், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, மதுரை போன்ற மாநகராட்சி பேருந்து நிலையத்தில் இவற்றை வைப்பது பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலிலே சொன்னார்கள். ஆனால், ஏற்கெனவே தனியாருக்கு ஈரோடு பேருந்து நிலையத்திலே டி.வி. பெட்டி மூலம் விளம்பரம் செய்வதற்கும், பஸ்ஸுக்காகக் காத்திருக்கக்கூடியவர்கள் பொழுது போக்கிற்காகவும் என்ற முறையிலே தனியாருக்கு அது ஒரு வருமானம் என்கின்ற அடிப்படையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொருளாதார நிலையைப் பற்றிய ஒரு சங்கடத்தைச் சொன்னார்கள். தனியாருக்கே அதைத் தந்து நகராட்சிகளுக்கு வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளவும், அதன் மூலம் மக்களுக்கு பொழுதுபோக்கவும், அறிவிப்பு செய்யவும் உண்டான ஒரு செயற் குறிப்பை நம்முடைய அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பெரியார்

பேருந்து நிலையம் மற்றும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் ஆகியவற்றில் தொலைக்காட்சிப் பெட்டிகளை அமைத்து விளம்பர அறிக்கை முதலானவைகளை அறிவிக்க, ஏலம் விடப்பட்டு உத்தரவு வழங்கவும் சிந்தனையுள்ளது. மாநகராட்சி பேருந்து நிலையங்கள், கோவை மாநகராட்சிப் பேருந்து நிலையங்களிலே மாநகராட்சி சட்ட விதிகளுக்குட்பட்டு தொலைக் காட்சிப் பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்யும் உரிமையை, பொது ஏலத்தில் விட முடிவு செய்யலாமா என்று மாமன்றம் ஒப்புதல் அளித்து அதைப் பற்றிய விவரங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. முடிந்தவுடன் அது ஏற்பாடு செய்யப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடிக்கை பார்த்து வீணாகி வருகின்ற தமிழ் சமுதாயம், வேடிக்கை பார்ப்பதன் காரணமாக பாமர மக்கள் பஸ்ஸை விட்டுவிட்டு பரிதவித்துக் கொண்டிருப்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுவும் தற்போதைய கருத்தில் ஒன்றாகத் தான் பரிசீலனையில் இருக்கிறது.

### தமிழகத்திற்கு ஒதுக்கப்படும் சர்க்கரை.

*5391 திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மத்திய அரசு தமிழகத்திற்கு மாதம் எவ்வளவு சர்க்கரை ஒதுக்குகிறது ?

(ஆ) மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் சர்க்கரை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மத்திய அரசு தமிழகத்திற்கு சராசரியாக மாதம் 22,500 மெட்ரிக் டன் லெவி சர்க்கரை பொது விநியோகத்தின் மூலம் வழங்க ஒதுக்குகிறது.

(ஆ) மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் சர்க்கரை குறித்த விவரங்களை மத்திய அரசு இவ்வரசுக்கு தெரிவிப்பதில்லை.





9-25 மணி

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால் எந்த அடிப்படையில் சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்படுகிறது ? ஜனத்தொகையின் அடிப்படையிலே சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்படுகிறதா ? இந்தக் கேள்வி சென்ற ஆண்டு கேட்கப்பட்ட கேள்வியாகும். ஆகவே, 1989 மார்ச் முதல் 1990 மார்ச் வரையில் நமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு எவ்வளவு ? குடும்ப கார்டுகளுக்கு சர்க்கரை வழங்கும்போது எந்த அடிப்படையில் மாநில அரசு சர்க்கரை வழங்குகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 1981 ஆம் ஆண்டு ஜனத்தொகையின் அடிப்படையிலேயும், 1986 ஆம் ஆண்டு ப்ரொஜெக்டட் பாப்புலேஷன் என்கின்ற அடிப்படையிலே ஆண்டுதோறும் எவ்வளவு ஜனத்தொகை அதிகமாகும் என்கின்ற அனுமானக் கணக்கின் அடிப்படையில் உள்ள ஜனத் தொகையின் அடிப்படையிலேயும் தலா 425 கிராம் அடிப்படையில், தமிழகத்திற்கு 22,500 மெட்ரிக் டன் சர்க்கரையை மத்திய அரசு வழங்குகிறது. நாம் பெற்றுக்கொண்ட சர்க்கரையை தலா 500 கிராம் அடிப்படையில் ஒரு குடும்ப அட்டைக்கு அதிகபட்சம் 2 கிலோ என்கின்ற அடிப்படையிலே குடும்ப அட்டைகளுக்கு நாம் வழங்கிக்கொண்டு இருக்கிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்க்கரை வழங்கப்படும் போது நகரத்திலே உள்ளவர்களுக்கு அதிகமாகவும் கிராமப்புறங்களிலே உள்ளவர்களுக்கு குறைவாகவும் குடும்ப அட்டையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. நகரத்திலே உள்ளவர்கள் உணவு விடுதிகளில் சாப்பிடுவதற்கு வசதி இருக்கிறது. கிராமப் பகுதிகளிலே உள்ள, உழைக்கும் மக்கள் இருக்கிறார்களே, அவர்கள் உணவு விடுதிகளிலே சாப்பிடக்கூடிய வசதி குறைவாக இருக்கிற காரணத்தால் நகரத்திலே உள்ளவர்களுக்கு வழங்குவதைப் போல் கிராமப்பகுதிகளிலே உள்ள மக்களுக்கும் சர்க்கரை வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலா 500 கிராம் அடிப்படையில் அதிகபட்சம் 2 கிலோ என்கின்ற அடிப்படையிலே தான் எல்லோருக்கும் சர்க்கரை வழங்கப்படுகிறது. கிராமம், நகரம் என்கின்ற வேறுபாடு அதிலே இல்லை. எனவே, உறுப்பினர் சொல்வதைப் போல நகரம், கிராமம் என்கின்ற வேறுபாட்டின் அடிப்படையில் சர்க்கரை வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி ஆகக்கூடிய சர்க்கரை அனைத்தையும் பொது விநியோக முறைக்காக, முழுமையாக கொள்முதல் செய்தால், குடும்பக் கார்டுகளுக்கு கூடுதலாக சர்க்கரை விநியோகம் செய்ய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அரசு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகின்ற சர்க்கரை அனைத்தையும் முழுமையாக கொள்முதல் செய்து குடும்பக் கார்டுகளுக்கு கூடுதலாக சர்க்கரை வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற சர்க்கரையில் 45 சதவீதம் லெவி சுகராகவும், 55 சதவீதம் ஃபிரி மார்க்கெட்டில், அதாவது வெளிச் சந்தையிலே விற்பதற்கும் அனுமதி வழங்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக சர்க்கரை ஆலைகளிலே உற்பத்திச் செய்யப்படுகின்ற சர்க்கரை முழுவதையும் நாம் வாங்கி விடுவோமேயானால், அதை லெவி ரேட் அடிப்படையிலே வாங்கி விடுவோமேயானால், அந்தச் சர்க்கரை ஆலைகள் நலிந்து போகக்கூடிய சூழ்நிலை உருவாகும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், எந்தவொரு தனி நபருக்கும் சொந்தமான ஒன்றல்ல. அங்கே, விவசாயிகள், மற்றவர்களெல்லாம் பங்குதாரர்களாக இருக்கிறார்கள். எனவே, அதையும் மனதிலே கொண்டு, நாம் குறிப்பிட்ட அளவிற்குத்தான் லெவி சர்க்கரை அங்கேயிருந்து வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

**9-30 மணி**

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் தனியார் சர்க்கரை ஆலைகளிலும் உற்பத்தி செய்யப்படுகிற மொத்த சர்க்கரையினுடைய அளவு என்ன? தமிழ்நாட்டிற்காக நாம் மத்திய அரசினிடத்திலே இருந்து எந்த அளவு சர்க்கரை வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறோம்? மத்திய அரசு இப்போது நமக்குத் தருகிற அளவு என்ன? சர்க்கரை இப்போது பற்றாக்குறையாக இருக்கிறதா? தமிழ்நாட்டின் தேவையை சமாளிக்கக்கூடிய அளவில் இருக்கிறதா? இந்த விவரங்களை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்காக மத்திய அரசு இப்போது வழங்குகிற சர்க்கரையினுடைய அளவு 22,500 மெட்ரிக் டன். தமிழகத்திற்கு ஒருவருக்கு 500 கிராம் என்ற அடிப்படையில் நமக்கு மத்திய அரசு வழங்க வேண்டும் என்று தமிழக அரசின் சார்பாக கோரிக்கை விடப்பட்டிருக்கிற அளவு 31,000



மெட்ரிக் டன். தலா 500 கிராம் சர்க்கரை ஒரு குடும்ப அட்டைக்கு என்றும் அதிக பட்சமாக 2 கிலோ என்றும் வழங்குகிறோம். கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலிருந்தும், தனியார் ஆலைகளிலிருந்தும் எவ்வளவு சர்க்கரை மொத்தம் உற்பத்தியாகிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். அதற்காகத் தனிக் கேள்வி போடவும். விவரம் இப்போது இல்லை.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரிலேயிருந்து தமிழ்நாட்டிற்கு வருகிற சர்க்கரையின் அளவு 22,500 மெட்ரிக் டன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டில் அரசின் மூலம் மத்திய அரசுக்கு நாம் எவ்வளவு சர்க்கரை தந்துகொண்டிருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை மொத்தம் எவ்வளவு உற்பத்தி ஆகிறது என்ற கணக்கு இப்போது என்னிடம் இல்லை. உற்பத்தி ஆகிற சர்க்கரையில் 45 சதவீதம் லெவிக்கும், 55 சதவீதம் வெளி மார்க்கெட்டிலே விற்கவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்குத்தான் விவரம் இருக்கிறது. மற்றைய விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் சேகரித்து வழங்கப்படும்.

திரு. தி. ரா. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவுப் பங்கீட்டுக் கடைகளில் சென்னை, மதுரை போன்ற மாநகரங்களில் வழங்கப்படுவது போன்று கிராமப் புறங்களில் உணவு பொருட்கள் வழங்கப்படுவது இல்லை என்ற குறை மக்களிடத்திலே இருக்கிறது. பாமாயில், சர்க்கரை போன்றவை கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களில் வழங்கப்படுவதைப்போன்றே வழங்குவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி. கிராமப்புறங்களிலேயும் எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாமல் வழங்கப்படவேண்டும் என்பதுதான் அரசின் சார்பாக எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிற அறிவுரைகள் ஆகும். எங்கேயாவது கிராமப்புறங்களில் அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்குமேயானால் அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால் உரிய நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்படும் என்கிற உறுதியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சர்க்கரையைப் பொறுத்தமட்டில் வெளி மார்க்கெட்டில் 8½ ரூபாய், 9 ரூபாய் ஒரு கிலோ என்ற அளவுக்கு விற்கிறார்கள். ஆகவே, இன்ன விலைக்குத் தான் விற்க வேண்டும் என்ற நிலையை அமைச்சர் அவர்கள் உருவாக்குவார்களா ? ரேஷன் கடைகளில் ஒரு கிலோ சர்க்கரை என்ன விலைக்கு விற்கப்படுகிறது? அதுமட்டுமல்ல. கிராமப் பகுதிகளில் திருவிழாக் காலங்களில் ஒரு குடும்பத்தில் திருமணம் போன்றவை ...... .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எப்போதாவது உங்களுடைய வாழ்க்கையில், ஒரே ஒரு கேள்வி கேட்டதுண்டா ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்க்கரையினுடைய விலையைப் பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் ஏறத்தாழ ஒரு வார காலத்திற்கு முன்பு விசாரித்த கணக்கை இப்போது சொல்கிறார்கள். இன்றைய விலை ரூ. 7.50லிருந்து ரூ. 7.90.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்க்கரை விலை கூடுதலாக இருக்கிறது. சர்க்கரை உற்பத்தியாளர்களுக்கு நல்ல வருமானமும் கிடைக்கிறது. இந்த நேரத்தில் அவர்களிடத்திலே இருந்து பெற வேண்டிய அந்த சர்க்கரை செஸ் நிதியினை அரசு கேட்டுப் பெறுமா ? ஏறக்குறைய கோடிக் கணக்கான ரூபாய் இருக்கிறது. அது நம்முடைய சாலை வளர்ச்சிக்காகக் கொடுக்கப்பட வேண்டிய பணம். எனவே, அதைப் பெற்று சாலை அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கும் எனக்கும் தொடர்பு இல்லை. இருந்தாலும் தொடர்புடைய அமைச்சர் அதைக் கவனத்தில் எடுத்துக்கொள்வார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

9-35 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அரசுக்குச் சேரவேண்டிய செஸ் தொகையை ஒழுங்காகக் கட்டுகிறார்கள். 8 தனியார் ஆலைகள் அதற்கு உயர்நீதிமன்றத்தில் தடை வாங்கியிருக்கிறார்கள் நம்முடைய முதல்வர் அவர்களின் ஆலோசனையின் பேரில், அவர்களோடு



பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் 4 தவணைகளில் அதாவது 2 ஆண்டுகளில் 16 கோடி ரூபாயைக் கட்ட முன்வந்திருக்கிறார்கள். அதற்கான ஆணையை வழங்க முதல்வர் அவர்கள் பரிசீலித்து வருகிறார்கள்.

பகுதி நேர கூட்டுறவுப் பயிற்சி.

* 7690 திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கூட்டுறவுப் பயிற்சி பெறாமல் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கூட்டுறவுத் துறையில் பணியாற்றி வரும் எல்லாப் பணியாளர்களுக்கும் கட்டாயமாக பகுதி நேர கூட்டுறவுப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''பகுதி நேர கூட்டுறவுப் பயிற்சியில் சேருவதற்கு அனைத்து தகுதிகள் உள்ள கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.''

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது. பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று சொன்னார்கள். கோவாப்பரேடிவ் இன்ஸ்டியூட்டுகள் என்று இருக்கின்றனவே, அந்த பயிற்சியை அமைச்சர் சொல்கிறாரா? அல்லது பயிற்சி பெறாத கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களைச் சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : துணைத் தலைவரவர்களே, பணியாற்றிக் கொண்டிருக்கிற கூட்டுறவு சங்க ஊழியர்கள் கூட்டுறவுப் பயிற்சி பெறாவிட்டால் சில நிபந்தனைகளின் அடிப்படையில் அவர்களுக்குச் சில தகுதிகள் இருக்குமேயானால், அவர்கள் கூட்டுறவுப் பயிற்சி பெறுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படியானால் அதை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வந்து இருக்கிறீர்களா ? அதற்குக் கால அவகாசம் ஏதும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, அது நடைமுறையில் இருக்கிறது. இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக வருடத்தில் 240 நாட்கள் ஒருவர் வேலை செய்திருந்தால் அவருடைய வேலை நிரந்தரமாக்கப்படும் என்பது அரசின் ஆணை. மதுரை மாவட்டத்தில், கூட்டுறவுத் துறையில் மதுரை மாவட்ட கூட்டுறவு வங்கியில் 800 நாட்கள், 900 நாட்கள், 1,000 நாட்கள் என்று வேலை பார்த்தவர்களை, தற்காலிகமாக வேலை நீக்கம் செய்திருப்பதால், அவர்கள் நீதி மன்றம் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக வேலை யாட்களை அங்கே போட்டிருக்கிற காரணத்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது முற்றிலும் தொடர்பில்லாத கேள்வி என்றாலும், அவர்கள் தொடர்ந்து அங்கே 240 நாட்கள் வேலை செய்திருக்கிறார்களா? எதற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள் என்று அதற்கான காரண விளக்கங்கள் எங்களுக்குத் தெரிந்தால்தான் உரிய பதிலை மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்கு வழங்க இயலும். அந்த விபரங்களைத் கோரி, தனியாகக் கேள்வி எழுப்ப வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, கூட்டுற பயிற்சி பெற்று பணி புரிபவர்களைத் தவிர, பயிற்சி பெறாம கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகின்ற அந்த ஊழியர்க 5 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்திருந்தால் அவர்களுடை கூட்டுறவுப் பயிற்சிக்கு சில தகுதிகள் அடிப்படையில் பயிற் அளிக்கப்படும் என்றார்கள். அப்படிப்பட்ட தகுதிகள் இல்ல விட்டாலும், அந்தச் சலுகைகளை அவர்களுக்கு அளித்து குறைந்த எண்ணிக்கையில் உள்ள அந்த மாதிரி ஊழியர்களுக்கு பயிற்சியை அளித்து, அவர்களுக்கும் பாதுகாப்பை அளிப்பத கான ஏற்பாடுகளைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவா களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமி துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் நியமிக்கப்படுகி போது, முறையாக வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூல நியமிக்கப்பட்டு இருக்கிறார்களா, அல்லது அப்படி வேலைவாய்ப் அலுவலகம் மூலம் நியமிக்கப்படாவிட்டால் பண வரன்முறைப் படுத்தப்பட்டிருக்கிறதா என்பதையெல்லா மனதில் கொண்டு, முறைப்படி பணி வரன்முறைப் படுத்தப் பட்டிருக்கிறதா, அல்லது வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பணி அமர்த்தப்பட்டிருக்கிறார்களா என்ற விபரங்களை மைய மாகக் கொண்டுதான் அவர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படுகிறா கள்.





திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் 5 ஆண்டுகள் பணி புரிந்து அந்தப் பணியில் இருந்து விலக்கியவர்களை மீண்டும் அந்தப் பணியில் சேர்த்துக் கொள்வதற்கு அவர்கள் பணி புரிந்த 5 ஆண்டுக் காலத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு, அவர்கள் வயது வரம்பு மிகுந்து போகாமல் அந்தப் பணிக் காலத்தை எடுத்துக்கொண்டு, அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப் போன்று தனிப்பட்ட வழக்குகள் அல்லது தனிப்பட்ட பிரச்சினைகள் அப்படி ஏதாவது இருக்கு மானால் அது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அது பரிசீலிக்கப்படும்.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பயிற்சி பெற்ற கூட்டுறவு விவசாய நாணயச் சங்க செக்ரட்டரிகள், மத்திய வங்கி ஊழியர்களாக மாற்றப் படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் விளக்கமாக, புரிந்து கொள்ளத்தக்க வகையில் தனிக் கேள்வி போட்டால் நலமாக இருக்கும்.

### பையூர் வேளாண்மை ஆராய்ச்சி பண்ணையை விரிவுபடுத்துதல்

* 8131 திரு. வி. கி. கோவிந்தசாமி :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) கிருஷ்ணகிரி வட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி பையூர் வேளாண்மை ஆராய்ச்சி பண்ணையை விரிவுபடுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கிருட்டிணகிரி வட்டம், காவேரிப்பட்டணம் தொகுதி பையூர் வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையின் மொத்தப் பரப்பளவு 38.71 எக்டேராகும். இந்தப் பரப்பில் 18.51 எக்டேர் நிலத்தில் மட்டும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 20.20 எக்டேர் நிலத்தை சீர்செய்து மா, திராட்சை, காய்கறிகள் மற்றும் பண்ணைக் கருவிகள் பற்றிய ஆய்வுகள், இந்திய வேளாண்மை அராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனை விரிவுபடுத்த கூடுதல் பரப்பளவு நிலம் வாங்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உத்தேசித்துள்ளது.

திரு. வி. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பையூர் வேளாண்மைப் பயிற்சி நிலையம் சிறப்பு வாய்ந்தது. பையூர்-1 என்ற நெல் ரகம் அங்கே கண்டு பிடிக்கப்பட்டு, நல்ல விளைச்சல் தருகிறது. ஆகவே இன்னும் சில ஏக்கரா நிலத்தைக் கையகப்படுத்தி, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் முன்பு பதில் சொல்லும்போதே, மேலும் நிலத்தைக் கையகப்படுத்தி, இந்த ஆராய்ச்சிப் பண்ணையை விரிவுபடுத்த உத்தேசம் இருக்கிறதென்றுதான் பதில் தந்தேன். இந்த ஆண்டு தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியான ரூபாய் 19.01 இலட்சத்தில் இந்த ஆராய்ச்சிப் பண்ணையில் எஞ்சியுள்ள 20.20 எக்டேர் நிலத்தைச் சீர் செய்து, மா, திராட்சை, காய்கறிகள் மற்றும் பண்ணைக் கருவிகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களும் ஒத்துழைப்பு கொடுத்து ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு ஒரு தகவல். சேலம் ஜில்லா மாம்பழம் என்று பெயர்தான் வழக்கில் வந்து விட்டதே தவிர, உள்ளபடியே சுவை மிகுதியான சாறு, சத்து, மணம், குணம் நிறைந்த பாதிரி, பச்சரிசி, மல்கோவா போன்ற மாம்பழங்கள் அதிகமாக வளர்வது எங்கள் தர்மபுரி மாவட்டம் தான். இந்த ரகங்கள் அன்னியில், சுவை மிகுந்த புதிய மாம்பழ ரகங்களை உற்பத்தி செய்ய, எங்கள் பையூர் வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையில் மேற்கொள்ளவிருக்கிற ஆராய்ச்சி அமைய வேண்டுமென்று அரசு அறிவுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தர்மபுரி மாவட்டத்தில், குறிப்பாக கிருஷ்ணகிரி பகுதியில் நல்ல ருசியுள்ள மாம்பழம் உற்பத்தியானாலும், அதற்குப் பெயர் சேலம் மாம்பழம் என்பது தான்.

## இராசிபுரம் நகரின் புறவழிச் சாலை

*2152 திரு. ஏ. சுப்பு :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராசிபுரம் நகரில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

9-45 மணி

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் நகரத்தில் புதிய பேருந்து நிலையம் செயல்படத் துவங்கியதும் மிகுந்த நெருக்கடியான நிலையை உண்டாக்கும். ஆகவே ஆத்தூர் சாலையையும், நாமக்கல் சாலையையும் இணைக்கும் புறவழிச் சாலையாவது உடனடியாக ஏற்படுத்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, தற்போது இராசிபுரத்தில் பேருந்து நிலையம், ஆத்தூர்-இராசிபுரம் சாலையிலே அமைந்து இருக்கிறது. இதை ஊருக்கு மத்தியிலே இருக்கிற சந்தைத் திடலில் மாற்ற ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. பேருந்து நிலையம் சந்தைத் திடலுக்குப் போனதற்குப் பிறகு மேலும் போக்குவரத்து நெருக்கடி இருக்குமானால் அது குறித்து பின்னர் முடிவு செய்யலாம். ஏனென்று கேட்டால் அந்த புறவழிச் சாலையை அமைப்பது என்று சொன்னால் அதிகமான தொகை வேண்டி இருக்கிறது. எனவே நிலைமையை முதலிலே பார்த்து பின்னர் முடிவு எடுக்கலாம்.

## நொய்யல் நீர்த்தேக்கம்

*3023 திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நொய்யல் நீர்த்தேக்கத்திலிருந்து எப்போது விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நொய்யல் நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் பெரும் பகுதி முடிக்கப்பட்டு விட்டன. நொய்யல் ஆற்றிலிருந்து ஆத்துப்பாளையம் மண் அணைக்குத் தண்ணீர் கொண்டுவரவுள்ள ஊட்டுக்கால்வாய் வெட்டுவதை எதிர்த்து சில நிலச் சொந்தக்காரர்கள் அந்த நிலங்கள் வழியாக கால்வாய் வெட்ட அனுமதி மறுத்து நீதிமன்றத்துக்குச் சென்று வழக்குகளைத் தொடுத்துள்ளனர். அதனால் அப்பகுதியில் கால்வாய் வெட்டும் பணிகள் தடைபட்டன. திட்டத்தை நிறைவேற்றுவதில் மேற்கொண்டு காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, வேறு ஒரு இடத்தில் ஊட்டுக்கால்வாயை ரூ. 4.23 இலட்சங்களில், அதிகச் செலவில் வெட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. எனவே திட்டம் முடிந்த உடன் அந்தப் பகுதியிலே விவசாயத்துக்குத் தண்ணீர் விடப்படும்.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஊட்டுக்கால்வாய் வெட்டுகிற வேலை நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் தீவிர முயற்சியாலே இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 2 மாத காலத்துக்குள்ளாக வேலை முடிவடையும் நிலையில் இருக்கிறது. ஒரு மாத காலம் முடிவடைந்துவிட்டது. அந்தப் பணி இப்போது மீண்டும் தொய்வடையும் நிலையில் இருக்கிறது. நிர்வாகக் காரணத்தாலே தொய்வடையும் நிலையிலே இருக்கிறது. அது பற்றி பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அது தெரிந்தால் அதற்கான நடவடிக்கைகள் என்ன எடுத்தார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சோர்ந்து போய், இருக்கிற இடமே தெரியாமல் இருந்த அணை நொய்யல் அணை. இதை அரசு இவ்வளவு விரைபடுத்துவதாக சொன்னார். மாண்புமிகு உறுப்பினர் ராமசாமி அவர்கள் சொன்ன இடைவிடாத முயற்சி என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அவர் குறிப்பிட்டதைப் போல ஊட்டுக்கால்வாய் வெட்டுவதிலே இன்னும் வழக்கு





மன்றத் தீர்ப்பை எதிர்பார்த்து இருந்தாலும் கூட, அரசு தனியாக 4 1/4 இலட்சம் ரூபாய் ஒதுக்கி அந்தக் கால்வாய் வெட்டுகிற பணியைச் செய்து கொண்டிருக்கிறது. இவ்வளவு செய்த பிறகும் அரசாங்கம் மெத்தனப் போக்கில் இருக்கிறது என்று சொல்வது தான் எனக்கு விந்தையாக இருக்கிறது. அப்படி இருக்குமானால் அந்த மெத்தனத்தைப் போக்கி விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இன்றைக்கு அந்த வேலை துரிதமாக நடைபெறுவதற்கான காரணத்தைச் சொன்னார்கள். அதற்காக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு அந்த வேலை ஒரு மாத காலத்தில் முடிவடையும் நிலையில் இருக்கிறது. அங்கு இருக்கிற அந்த ஒப்பந்தக்காரர் 500 ஆட்களை வைத்து ஏககாலத்தில் வேலை செய்தார். அவருக்கு உடனடியாக சேரவேண்டிய பில்தொகை கொடுக்கப்படாமல் நிறுத்தப்பட்டு இருக்கின்ற காரணத்தாலே, அந்த 500 ஆட்களை பாதியாகக் குறைத்து இன்றைக்கு 150 ஆட்களை வைத்து வேலை செய்து கொண்டு இருக்கிறார். எனவே உடனடியாக அவர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படுமானால் ஒரு மாத காலத்தில் அந்தப் பணி நிறைவேற்றப்பட்டு, வருகிற ஆகஸ்ட் மாதத்தில் நம்முடைய முதல்வர் அவர்களாலே அந்த அணையைத் திறந்துவைக்கிற வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்து அந்த வேலை மிக விரைந்து நடைபெற வேண்டும் என்று ஒரு விண்ணப்பமாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, மார்ச் மாதம் பொதுவாகவே பில்கள் தாமதம் ஆகும். இப்போது தானே மார்ச் முடிந்து இருக்கிறது. அடுத்த மாதம் பில் தொகை விரைவில் கொடுக்கப்படும், வேலை துரிதமாக்கப்படும்.

திரு. ப. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை எவ்வளவு? எந்தெந்தத் தொகுதிக்கு அந்தத் திட்டம் பயன்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, முதலிலே இந்தத் திட்டத்துக்கு 1981 ஆம் ஆண்டு 713 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. எந்தெந்தப் பகுதிக்கு அதனுடைய பயன் என்பதைப் பொறுத்தவரையில் பெரியார் மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் அதனுடைய பயன் உண்டு.

9-50 மணி

[1990 மே 9

**சாலை ஓரங்களில் நடப்படுகின்ற மரக்கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றுதல்**

*3771—**திரு. எம். முகமது சித்திக் :**

*மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—*

*சாலை ஓரங்களில் நடப்படுகின்ற மரக்கன்றுகளுக்கு வாகனம் மூலம் தண்ணீர் கொண்டுவந்து காலை, மாலை தண்ணீர் ஊற்ற அரசு திட்டமிடுமா ?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வாகனம் மூலம் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றுவது குறித்து திட்டம் ஏதும் தற்போது அரசின் வசம் இல்லை.

**திரு. எம். முகமது சித்திக் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் மற்றும் பொதுப்பணித் துறை மூலமாக நெடுஞ்சாலை ஓரமாக மரக்கன்றுகள் நடப்படுகின்றன. அப்படி நடப்படுகின்ற மரக் கன்றுகள் எல்லாம் கோடை காலங்களிலே நீர் ஆதாரம் இல்லாத இடத்தில் நடப்பட்டு, ஊற்றுவதற்குத் தண்ணீர் கூட இல்லாத இடங்களிலே அந்த மரக் கன்றுகளெல்லாம் சாய்ந்து விடுகின்றன. தண்ணீர் கிடைக்கின்ற இடங்களிலிருந்து வாகனங்களின் மூலமாகத் தண்ணீர் கொண்டு வந்து அந்த மரக் கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றிப் பாதுகாப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமூக நலக் காடுகள் இந்த இலாக்காவின்கீழ் வராது. சாலை ஓரத்திலே நடப்படுகின்ற மரங்களைப் பாதுகாப்பது இந்த நெடுஞ்சாலைத் துறையினுடைய பொறுப்பிலே இருக்கிறது. அப்படி நடப்பட்ட மரங்கள் பட்டுப் போகாமல் இருக்க, உயிரூட்டுவதற்காகச் சொட்டு நீர்ப் பாசன முறையின் மூலம் தண்ணீர் அவைகளுக்கு வழங்கப்படுகிறது. சிலயிடங்களில் சாலை ஆய்வுப் பணியாளர்கள் கைவண்டியின் மூலம் தண்ணீரைக் கொண்டு வந்து அந்தச் செடிகளுக்கு ஊற்றுகிறார்கள். எனவே, செடிகள் சாகாது.

**திரு. எம். முகமது சித்திக் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சுமார் 100 மரக் கன்றுகளைப் பாதுகாத்து, பராமரித்து, சுமார் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னாலே அரசிடம் ஒப்படைத்தால், படித்துவிட்டு வேலைவாய்ப்பு இல்லாதவர்



1990 மே 9]

களுக்கு, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத்துறை, உள்ளாட்சித்துறை, மற்ற மற்ற ஏதேனும் ஒரு துறையில் தற்காலிகப் பணி, தினக்கூலி அடிப்படையில் வேலைவாய்ப்பு பெற முன்னுரிமை தர அரசு முன் வந்து, மரம் வளர்ப்பதிலே ஆர்வம் காட்டுமா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொதுப்பணித்துறையிலே, நெடுஞ்சாலைத் துறையிலே, தாங்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தத் தினக்கூலிகள் அளவுக்கு மேல் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களிடம்தான் இந்தப் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. வேலை நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சாலை ஓரங்களில் பூங்கா என்று ஒரு காலத்திலே வைக்கப்பட்டது. அந்தப் பூங்கா என்பதில் அந்தச் செடிகளும் இல்லை. இப்பொழுது அந்த மரங்களும் காய்ந்துபோயிருக்கின்றன. அதுமட்டுமல்ல, 'ரெஸ்ட் எ ஓய்ல்' என்று சொல்லி அங்கு ஒரு சிறு கட்டிடம் — அப்படிப்பட்ட ஒரு நிலை அந்த நெடுஞ்சாலையிலே பல்வேறு இடங்களிலே இருக்கின்றன. அவைகளெல்லாம் இன்றைக்குப் பழுதாகிக் கிடக்கின்றன. அவைகளையெல்லாம் பழுது பார்த்து, அந்தப் பூங்காவைச் சுற்றியிருக்கக்கூடிய மரங்களுக்காவது சொட்டுத் தண்ணீருக்குப் பதிலாக நல்ல தண்ணீரை விட்டு, அவைகளையெல்லாம் பாதுகாப்பதற்கு இந்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சாலையோரத்துப் பூங்காக்களைப் பராமரிக்கும்படி அரசு உத்தரவிட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் பார்த்தால் தெரியும் ; என்.எச். 45–இலே போகின்றபொழுது, இடையிடையே ஒரு வட்டம் போட்டு, தனியாக வைத்திருக்கிறோம். இதை நானாக அந்த அதிகாரிகளிடத்திலே சொல்லியிருக்கிறேன். காரணம், அங்கு சில மலர்ச் செடிகளை வைத்து சுவர் வைத்துப் பாதுகாத்தால் அது பார்ப்பதற்கு அழகாக இருக்கும் என்று. மேலும், சாலையிலே கூட பஸ் நிற்கக் கூடாது. பஸ் நிற்கிற நேரத்திலே பஸ் ஸ்டாண்டிலே கொஞ்சம் ஒதுங்கி நிற்க வேண்டும் என்று ஒரு வளைவும் அமைத்து இருக்கிறோம். இவையெல்லாம் இப்பொழுது இந்த ஆட்சி வந்தபிறகு செய்கின்ற அத்தகைய புதிய காரியங்கள். மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராஜன் அவர்கள் சொன்ன கருத்துக்கள் நியாயமான கருத்துக்கள், அரசு அதனை உணர்ந்து செயல்படும்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலையோரங்களிலே அல்லது வனத் துறைக்குக் காலியாக இருக்கக்கூடிய இடங்களிலே யூகலிப்டஸ் மரங்களை நடுவதற்காகப் பேப்பர் மில் அதிபர்கள் முயற்சி எடுத்துச் செய்கிறார்கள். ஆனால் யூகலிப்டஸ் மரங்களை நடுவதால் நிலத்தடி நீர் வெகுவாக உறிஞ்சப்பட்டு, அது காலியாகிறது. மேலும், அந்த மண் வளம் மிகவும் கெடுகின்றது என்று ஆதாரபூர்வமாக நிரூபித்திருக்கிறார்கள். ஆகவே, யூகலிப்டஸ் மரத்தை நடுவதைப்பற்றி அரசு நங்கு தீவிரமாகச் சிந்தனை செய்து மறு பரிசீலனை செய்யுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது சாலையோரத்திலே நிழல் தரும் மரங்களைக் குறித்த கேள்வி. யூகலிப்டஸ் மரங்களை நிழல் தருவதற்காகச் சாலை ஓரத்திலே நாங்கள் வைப்பதில்லை. சமுதாயக் காடுகளிலே வைக்கிறார்களே என்றால் அதற்குத் தனிக் கேள்வியை மாண்புமிகு வனத்துறை அமைச்சரவர்களிடத்திலே நீங்கள் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்த யூகலிப்டஸ் மரம் இங்கே மட்டுமல்ல ; ஆஸ்திரேலியாவிலே இது தான் மிக முக்கியமாக வருவாய் தரக் கூடிய மரம். இங்கேயும் அது நிலத்தடி நீரை உறிஞ்சி, அதன் மூலமாக அந்த நிலம் பாழ்படுகிறதா இல்லையா என்பதற்கு இரண்டு வேறு கருத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, ஒரு கருத்தை மட்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

### தார் சாலையாக மாற்றுதல்.

*3781 திரு. கே. அர்ஜுனன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தோப்பூரிலிருந்து போத்தனூர் வழியாக தாரமங்கலம் வரை செல்லும் பேருந்து வழித்தடத்தை தார் சாலையாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சேலம் மாட்டம், ஓமலூர் வட்ட தோப்பூரிலேயிருந்து போத்தனூர் வழியாகத் தாரமங்கலம் வரை செல்லும்சாலையை மேம்பாடு செய்வதற்காக ஒரு ஒப்பந்தப் புள்ளி



கோரப்பட்டு இருக்கிறது. இந்த ஆறு கிலோ மீட்டர் தூரத்தைப் பராமரிக்க அரசு இந்தப் ஒப்பந்தப் புள்ளியினுடைய முடிவு ஏற்பட்ட பிறகு பணியை மேற்கொள்ளும்.

9-55 மணி

திரு. கே. அர்ஜுனன் : துணைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு அதற்கு முன்பு பஸ் போக்குவரத்து உள்ள சாலைகளை மட்டும் தார் சாலையாக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. அதை மாற்றி தற்போது பஸ் போக்குவரத்து உள்ள அனைத்து சாலைகளையும் தார் சாலையாக்க முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டிலிருந்து பஸ் போகிற சாலையை தார் சாலையாக மாற்றுகிற திட்டம் இல்லாமல் முன்பிருந்த அரசு நடந்து இருக்கிறது. இப்போது நாங்கள் 1984, 1985, 1986 என்று தான் வருகிறோம். அப்படி வருகிறபோது வரிசையாக ஒவ்வொரு ஆண்டும் எடுத்து தார் சாலையாக மாற்றிக்கொண்டு வருகிறோம். சில தவிர்க்க முடியாத இடங்களில் இந்த ஆண்டு பஸ் விட்ட இடத்தைக் கூட எடுக்க வேண்டுமென்றால், போட்டே ஆகவேண்டுமென்று விதிவிலக்காக சில இடங்களை மட்டும் தேர்வு செய்து நாங்கள் அப்படி அமைக்கிறோம்.

திரு. கே. அர்ஜுனன் : துணை தலைவர் அவர்களே, சில சாலைகளில் மக்கள் வேண்டுகோளை ஏற்று பஸ்களை விட போக்குவரத்துக் கழகம் முன்வந்தாலும், ஹைவேஸ் டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்கள் சாலைகள் சரியாக இல்லையென்று சொல்கிற காரணத்தால் பஸ்களை விட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் இருக்கிற சாலைகளுக்கு ஹைவேஸ் துறை முன்னுரிமை அளித்து, அவைகளை தார்சாலையாக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலை துறையில் சாலை சரியில்லை என்றால், சரியாக இல்லையென்று தான் சர்டிபிகேட் கொடுப்பார்கள். பொய் சர்டிபிகேட் எல்லாம் இலாக்கா கொடுக்காது. இரண்டாவது, அப்படிப்பட்ட மக்கள் விரும்புகிற அந்த சாலைகளில் பஸ் விட வேண்டுமென்று சொன்னால், பஸ் விட்ட பிறகு அதைத் தார் சாலையாக மாற்றுவதோ, கப்பிச் சாலையாக மாற்றுவதோ, நிதிநிலைக்கு ஏற்ப அரசு அதை மேற்கொள்ளும்.

கூட்டுக் குடிநீர்த்திட்டம்.

*254 திரு. கே. ஏ. செங்கோட்டையன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி தொகுதி—பாரியூர் நஞ்சகவுண்டம்பாளையம் —வெள்ளாளபாளையம் — குள்ளம்பாளையம் — நாதிபாளையம் நாகதேவன் பாளையம் — கடுக்காம்பாளையம் — வெள்ளாங்கோயில் ஆகிய ஊராட்சி மன்றங்களை இணைக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பாரியூர் நஞ்சகவுண்டம்பாளையம், வெள்ளாள பாளையம், குள்ளம்பாளையம், நாதிபாளையம், நாகதேவன் பாளையம், கடுக்காம்பாளையம், வெள்ளாங்கோவில் ஆகிய கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வில் உள்ளது. நீர் ஆதார இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. பின்னர், மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டபின் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஏழு ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கிய அந்த கிராமங்களுக்கு ஆய்வுப்பணிகள் முடிவுற்றதாக குறிப்பிட்டார்கள். ஆய்வுப் பணிகள் முடிவுற்ற இந்த நேரத்தில் உடனடியாக மதிப்பீடுகள் தயாரித்து, இந்தப் பணிகளை விரைவாக தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ? இன்றைக்கு பல்வேறு ஆழ்துளை கிணறுகள் பொய்த்துக்கொண்டிருக்கிற இந்த வேளையில் இதுபோன்ற கூட்டு குடிநீர்த் திட்டங்களை விரைவுபடுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும், இன்னும் அந்த நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. கே. ஏ. செங்கோடையன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது கோபியில் டிவிஷனல் அலுவலகம் ஒன்று 1—9—1989 ஆம் தேதியன்று உருவாக்கபபட்டு, ஒன்பது நாட்களுக்குள்ளாக இந்த டிவிஷனல் அலுவலகம் மாற்றப்பட்டு இருக்கிறது. அதைப்போல நிலைமை இருக்குமானால், இதுபோன்ற பணிகளை விரைவாக செய்ய முடியாமல், கால தாமதம் ஏற்படும் என்பதால், மிக விரைவாக அங்கே டிவிஷனல் அலுவலகத்தை உருவாக்க, அதனை விரைவுபடுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் நடைபெறுகிற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்து அங்கே அலுவலகங்கள் அமைக்கப்படுகின்றன. ஆகவே, நிர்வாக வசதியைப் பொறுத்து, புதிய அமைப்பை உருவாக்குவதைப் பொறுத்து, குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமங்கலம் அரசு மருத்துவமனை.

*5210—திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருமங்கலம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி அதிக படுக்கைகள் கொண்டதாக ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. இரா. சாமிநாதன் : தலைவர் அவர்களே, திருமங்கலம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு, குழந்தைகள் நலம், குடும்ப நலக்கட்டுப்பாடு, தொழுநோய், காலரா, காசநோய் ஆகிய அத்தனை பிரிவுகளுக்கும் சேர்த்து 111 படுக்கை வசதிதான் தற்போது இருக்கிறது. மேலும், திருமங்கலம், உசிலம்பட்டி, சேடப்பட்டி ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் சேர்த்து குடும்பநல கட்டுப்பாட்டு முகாமும் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் தான் நடத்தப்படுகிறது.

அதோடு நாள் தோறும் சுமார் 1,800 முதல் 2 ஆயிரம் வரை வெளிநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. எனவே, குறைந்தபட்சம் 20 வெளி நோயாளிகளுக்கு ஒரு படுக்கை வசதி என்ற அடிப்படையில் 200 கூடுதல் படுக்கை வசதியை செய்து கொடுத்திட இந்த ஆண்டு திருமங்கலம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த, கழக அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த ஆண்டு விரிவுபடுத்தும் நோக்கம், திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. வருகிற ஆண்டுகளில் அரசினுடைய நிதிநிலையைக் கருதி அதற்கான திட்டங்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகளுக்காக இயங்கிவந்த பிரிவை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிக்குக் கொடுக்கப்பட்ட காரணத்தால், 10 பேர்களைக் கொண்ட சில்ட்ரன் வார்ட்ஸ்க்கு என்று இருக்கிற சிறிய கட்டிடத்தில் கடந்த 7, 8 ஆண்டுகளாக வெளி நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதால், அங்கே சிகிச்சைக்காக வருகிற ஆண்கள், பெண்கள், மற்றும் மருத்துவர் ஆகியோர்களுக்கு சங்கடமான நிலை ஏற்படுகிறது. காரணம் அங்கே பிரைவசி இல்லை. எனவே, இப்படிப்பட்ட சங்கடமான நிலையைத் தவிர்க்க அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு தனி இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கோ அல்லது அரசு மருத்துவமனை உள்ள வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் தனியாக வெளி நோயாளிகளுக்கு என்று ஒரு பிரிவிற்காக ஒரு கட்டிடம் கட்டுவதற்கோ அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனை ஒரு தாலுக்கா மருத்துவமனை என்ற அடிப்படையில் அனைத்துச் சிறப்புப் பகுதிகளையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. நான் முன்பே சொன்னதைப் போல அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப இதுபோன்ற தேவைகளை படிப்படியாக இந்த அரசு நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.



திரு. பெ. ஆசையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல தாலுக்காக்களில் தாலுக்காவிற்கு குறைந்தபட்சம் ஒரு அரசு மருத்துவமனை கூட இல்லாமல் இருக்கிறது. இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தின் வழியாக போதிய சிகிச்சையைப் பெற முடியாமல் மக்கள் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, குறைந்தபட்சம் ஒரு தாலுக்காவிற்கு ஒரு அரசு மருத்துவமனை இருந்தாக வேண்டும் என்கிற இலக்கை இந்த அரசு மேற்கொள்ளுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசில் 30 ஆயிரம் பேர்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அந்த இலக்கை எட்டியிருக்கிறோம். மேலும் அது 20 ஆயிரம் பேர்களுக்கு விரிவுபடுத்த வேண்டும் என்ற இலக்கை நோக்கி நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். தாலுக்கா மருத்துவமனைகளை உருவாக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. உங்களுடைய பகுதியிலே இதுபோன்ற தேவைகளும் நோயாளிகளுடைய எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும் என்று சொன்னால், அதற்கான திட்டங்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

* 5516—திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதயத்துறைப் பிரிவிற்கு புதிதாகக் கட்டிடம் கட்டப்பட்டு நவீன கருவிகள் வழங்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அப்பிரிவு இன்னும் இயங்காமல் இருக்க காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதயத்துறை 10—7—1989 முதல் இயங்கிவருகிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே இதயத் துறையில் மருத்துவர் கார்டியாலஜிஸ்ட் யார் யாரை நியமித்தாலும்

அவர்கள் விடுமுறை எடுத்துக்கொண்டு வராமல் இருக்கிறார்கள். எனவே இந்தத் துறையே ஒரு முடக்கப்பட்ட துறையாக இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கேயுள்ள திருநெல்வேலி மருத்துவமனைக்கு ஒரு இதயத்துறைமருத்துவரை, கார்டியாலஜிஸ்ட்டை உடனடியாக வேலையில் சேர உத்தரவிடுவாரா என்று அறிய விரும்புறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது போன்ற தனிச் சிறப்புப் பகுதிகளை பல்வேறு இடங்களில் துவக்குகின்றபோது, அரசுக்கு இருக்கிற பிரச்சினையும் இது தான். பெரும்பாலான மருத்துவர்கள் சென்னையைவிட்டு நகருவதற்கே மறுக்கிறார்கள். உத்தரவு போடுகின்றபோது, அவர்களுக்கு இருக்கிற பாதுகாப்போடு விடுப்பை எடுத்துக் கொண்டு, இங்கே இருந்துவிடுகிறார்கள். உறுப்பினர்களும் இது போன்று ஒத்துழைப்பார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அங்கே மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள். அவர்களே, ஏதேனும் மருத்துவர்கள் அங்கே பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டால், அவர்களைக் கூட அங்கே போடுவதற்கு அரசு தயாராக இருக்கிறது. ஏன் என்றால், பல்வேறு சிறப்புப் பகுதிகளைத் துவக்குகின்றபோது இந்தப் பிரச்சினைகள் அரசுக்கு இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டவே இதை நான் குறிப்பிடுகிறேன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பு படித்தவர்கள் அரசு வேலைக்கு வருகின்றபோது அவர்கள் பிரைமரி ஹெல்த் சென்டரிலே 3 ஆண்டுக்காலம் பணியாற்ற வேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. அதுபோன்று சிவில் சர்ஜன்களாக பதவி உயர்வு பெறுபவர்கள் சென்னையைத் தவிர்த்து பிற நகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் கட்டாயம் இரண்டு ஆண்டுகள் மூன்று ஆண்டுகள் பணி புரியவேண்டும் என்ற திட்டத்தை அல்லது சட்டத்தை அரசு இயற்றுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு இருக்கிற பிரச்சினை எல்லாம் அப்படிப்பட்ட சிவில் சர்ஜன்களைப் போடுகிறபோது, இதுபோன்ற சட்டங்கள் இருந்தாலும், அவர்களுக்கே இருக்கிற பாதுகாப்போடு விடுப்பை எடுத்துக்கொள்கிறார்கள். 3 மாதம், 4 மாதம் என்று விடுப்பை எடுத்துக் கொள்கிறபோது, வேறு ஆளை அங்கே போடமுடிவதில்லை. அதற்கான உடனடி நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. இதையெல்லாம் இந்த அரசு பரிசீலித்து வருகிறது. உடனடியாக இவ்வாறு ஒட்டு மொத்தமாக அதிக நாட்கள் விடுப்பிலே இருக்கிற





மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான செயற்குறிப்புகள் கூட அரசினுடைய கவனத்திலே இருக்கிறது. ஆகவே மேலும் உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற கருத்துக்களைப் பரிசீலித்து இதுபோன்று மருத்துவமனைகளிலே மருத்துவர்களை நியமிப்பதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாசுக் கட்டுப்பாடு வாரியம்.

*7771 **திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) மாசுக்கட்டுப்பாடு வாரியத்தை (போர்டு) சுற்றுச்சூழல் கட்டுப்பாடு ஆணையமாக (அத்தாரிடி) உயர்த்த அரசு தீர்மானித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

10.05 மணி.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, இன்றைய விஞ்ஞான உலகத்தில் தூசு போன்ற, தண்ணீரிலே வருகின்ற மாசுபோன்ற சத்தத்தால் வருகின்ற மாசு போன்றவைகள் எல்லாம் மனித வாழ்க்கைக்கு மிகவும் இடையூறாக இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் சுற்றுச் சூழல் கட்டுப்பாடு வாரியத்தை நீங்கள் அமைத்திருக்கிறீர்கள். ஆனால் வாரியம் என்று சொல்கின்றபோது அது தனக்குத் தானே சில திட்டங்களை வகுத்துக் கொண்டு தன்னிச்சையாக அது இயங்க முடியாது. தன்னிச்சையாக இயங்காத ஒன்று செம்மையாக பணிகளை ஆற்ற முடியாது. ஏனென்றால் அதாரிட்டி என்று சொன்னால்தான், அவர்களே திட்டங்களைத் தீட்டி, அவர்களே செயல்படுத்துகின்ற வசதி, உரிமை அவர்களுக்கு இருக்கிறது. எனவே மீண்டும் அதனைப் பரிசீலித்து அதை ஆணையமாக, 'அதாரிட்டியாக' மாற்றுவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாரியம் என்று சொல்கின்றபோது ஓரளவிற்கு அரசு கட்டுப்பாடோடும்,

மிகுதியான சுதந்திரத் தன்மையோடும் செயல்படுகின்ற அளவிலேதான் மாசுக் கட்டுப்பாடு வாரியம் செயல்பட்டிருக்கின்றது. குடிநீர் வடிகால் வாரியம் போன்றவைகள் எல்லாம் எப்படி செயல்படுகின்றனவோ அதேபோல் இந்த வாரியமும் செயல்படுகிறது. இந்த வாரியத்திற்கு என்று ஒரு ஆலோசனைக்குழுவும் நியமிக்கப்பட்டிருக்கின்றது. அந்த ஆலோசனைக் குழுவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைவராகவும், மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சார்ந்திருக்கின்ற நான் அதிலே துணைத் தலைவராகவும், இந்தக் குழுவிலே பல்வேறு பகுதிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனைப்படிதான் இந்தக் குழு செயல்பட்டு வருகிறது. அந்தக் குழுவிற்கு அதிகாரங்கள் இல்லை என்ற பிரச்சினைகள் இப்போது எதுவும் எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே இந்த மாசுக் கட்டுப்பாட்டை மத்திய அரசிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கின்ற அமைச்சர் திருமதி மேனகா அவர்கள் ஒரு இனத்திலே கூட மரக் கன்று கூட இந்த மாசுக் கட்டுப்பாடு விதிகளுக்கு ஏற்ப இல்லை என்பதற்காக மறுத்துவிட்டார். இவ்வளவு தூரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற தேசிய முன்னணி அரசினுடைய ஒரு அங்கமாக இது இருக்கின்ற காரணத்தால் மீண்டும் ஒரு பல்கலைக் கழகத்திற்கு என்ன உரிமை உண்டோ, அந்த உரிமையையாவது, அந்த அதாரிட்டியையாவது இந்த மாசுக் கட்டுப்பாட்டில் இருக்கின்ற அந்த ஆணையத்திற்குக் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் அதனை அதாரிட்டியாக வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்தே இதைச் செய்வதற்கு முன் வருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள அதிகாரங்களே அதற்குப் போதுமானதாக இருக்கிறது. இருந்தாலும், மேலும் தொழிற்சாலைகளைத் துவக்குகின்ற போது, இப்போது பல தொழிற்சாலைகளைச் சார்ந்தவர்கள் எல்லாம் மாசுக் கட்டுப்பாடு வாரியத்திலிருந்து எங்களுக்கு வருகின்ற அனுமதிகள் தாமதமாக வருகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அவைகளை தீர்மானிக்கின்ற அதிகாரங்கள் மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் மேலும் அதனுடைய அதிகாரத்தை விரிவாக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகின்றேன். இருந்தாலும் உறுப்பினர் அவர்கள் தனிப்பட்டு, இதுபோன்ற கருத்துக்கள் இருக்குமென்று சொன்னால் அந்த இடத்திலே இந்த மாசுக் காட்டுப்பாடு வாரியம் செயல்பட முடியவில்லை, அதிகாரக் குறைவு இருக்கின்ற காரணத்தால், இதைச் செய்ய



முடியவில்லை என்று தனிப்பட்ட முறையிலே ஏதேனும் சுட்டிக் காட்டுவாரேயானால் அது குறித்து இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மத்திய சட்டம் 'ஏர் பொல்யூஷன், வாட்டர் பொல்யூஷன் ஆக்ட்' என்ற இரண்டு சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்களின் அடிப்படையில் பல்வேறு விதிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டு, அந்த விதிமுறைகள்-மீறப்பட்டாலும் கடுமையான அளவில் தண்டிப்பதற்குக்கூட அதிலே வழிவகைகள் இருக்கின்றன. அந்தச் சட்டங்களைக் கடுமையாக அமல்படுத்தி சென்னை நகரத்தைப் பொறுத்தவரையிலும், தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், சிறப்பான முறையில் இந்த மாசுக்களை, அது காற்றாக இருந்தாலும், தண்ணீராக இருந்தாலும், வேறு எதுவாக இருந்தாலும் அதை அகற்றுவதற்கு அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாசுக் கட்டுப்பாடு வாரியம், இதுபோன்ற நிலைகளைக் கவனிப்பதற்காக, மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்ற செயற்குறிப்பு அரசினுடைய கவனத்திலே இருக்கிறது. மாசுக்கட்டுப்பாடு வாரியத்தினுடைய தலைமையகம் ஒன்று சென்னையிலே இருக்கிறது. மாவட்டங்களில் பல அதற்குரிய பொறியாளர்களை நியமித்திருக்கிறார்கள். மேலும் இது அங்கேயிருக்கின்ற பல்வேறு தொழிற்சாலைகளைப் பார்வையிடுவதற்குரிய வகையில் அதனுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டுமென்ற செயற்குறிப்பு அரசினுடைய கருத்திலே இருக்கிறது. இந்தச் சட்டத்தை மீறுகின்றவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது இந்த ஓராண்டு காலத்திலே பல்வேறு தொழிற்சாலைகளுக்கு இந்த குறிப்பிட்ட மாசுகளைக் கட்டுப்படுத்துகின்ற கருவிகளை அமைக்க வேண்டுமென்ற உத்தரவு இடப்பட்டிருக்கிறது. தேதியும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தேதிக்குள் அவைகள் நிர்ணயிக்கப்படாவிட்டால், அந்த தொழிற்சாலைகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் மாசுக் கட்டுப்பாடு வாரியம் முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறது.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய செயற்பாடு குறித்து, மைய அரசினுடைய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அவர்கள் ஒரு விரிவான அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்குவது என்கின்ற பிரச்சினைகள் ஒரு பக்கமாக இருந்தாலும் கூட, ஏற்கெனவே நடைபெறுகின்ற அந்தத் தொழிற்சாலைகளுக்கு

[1990 மே 9

10.10மணி

அனுமதிகள் வழங்கப்பட்டு, அந்தத் தொழிற்சாலைகள் சுற்றுப்புறச் சூழலைக் கெடுக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். அதனால் நிலத்தடி நீர் உட்பட பல்வேறு பாதிப்புகள் எல்லாம் ஏற்படுகின்றன. அப்படி மீறி நடக்கக் கூடிய தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இன்றைய வாரியம் என்ற அமைப்பு போதுமான அளவு அதிகாரம் உடையதாக இல்லை என்ற காரணத்தினாலே தான் அப்படி கடுமையான நடவடிக்கை எடுப்பதற்குரிய ஒரு ஆணையமாக, அத்தாரிட்டியாக செயல்படவேண்டும் என்ற கருத்து மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்களாலே வலியுறுத்தப் பட்டது. அதை மீண்டும் பரிசீலித்து அப்படி ஒரு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதை உறுதியாகச் செய்வதற்குண்டான முறையிலே இதை ஒரு ஆணையமாக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** துணைத் தலைவர் அவர்களே, இதற்கான பதிலை நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**ஆலோசனைக் குழு.**

*1317 **திரு. இரா. மதிவாணன் :**—மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் மீனவர்களுக்கென்று ஆலோசனைக் குழு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்குழு எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). 1986 மார்ச் திங்களில் தமிழ்நாடு மீன் வள ஆலோசனைக் குழு மற்றும் உள்நாட்டு மீன் வள ஆலோசனைக் குழு ஆகிய இரு ஆலோசனைக் குழுக்கள், 1–4–1986 முதல் 31–3–1989 வரை மூன்றாண்டுக் காலம் செயல்பட அமைக்கப்பட்டன. இவ்விரு ஆலோசனைக் குழுக்களின் கால வரம்பு 31–3–1989 டன் முடிவுற்றதால் அவற்றை மீண்டும் புதுப்பிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.



1990 மே 9]

**திரு. இரா. மதிவாணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய அரசில் இந்தக் குழுவில் இருந்த உறுப்பினர்களைவிடக் கூடுதலாக உறுப்பினர்களைச் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தை இந்த அரசு சூழ்நிலைக்கேற்ப கருத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கன்று வளர்ப்புத் திட்டம்.**

* 6538 **திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் கன்று வளர்ப்புத் திட்டத்திற்கு மூன்றில் ஒரு பங்கு மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) வங்கி வழங்கும் கடன் உதவியை ஊக்குவிக்க அரசு மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**2. தகவல் கோரல்.**

(அ) தஞ்சை மாவட்டத்தில் சில பகுதிகளிலிருந்து சென்ற மீனவர்கள் திரும்பாதது குறித்து, புயல் விளைவித்த பாதிப்புகளையொட்டி எடுக்கவேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும்.

**திரு. ஆர். சிங்காரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய தமிழக முதல்வர் அவர்களைச் சந்தித்து மீனவர்கள் காணாமல் போன சில விவரங்களை நானும்

[திரு. ஆர். சிங்காரம்] [1990 மே 9

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.வி. இராஜேந்திரன் அவர்களும் கொடுத்திருந்தோம். அந்த அடிப்படையிலே தஞ்சை மாவட்டம் நாகையை அடுத்த அக்கரைப்பேட்டை கிராமத்திலிருந்து 12 மீனவர்கள் கடந்த சனிக்கிழமை ஒரு படகில் மீன் பிடிக்கச் சென்றார்கள். ஆனால் அவர்கள் இன்னும் வந்து சேரவில்லை. அவர்கள் புயல் காற்றால் சிக்கி கடலில் மூழ்கிவிட்டார்களா என்று சந்தேகப்படுகின்றோம். அதே நேரத்தில் தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினம் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற சுமார் 15 பேர்கள் இதுவரை வந்து சேரவில்லை. இவர்கள் கதி என்னவாயிற்று என்றும் தெரியவில்லை. அதே நேரத்தில் தஞ்சை மாவட்டம் சீர்காழி பகுதியில் உள்ள பழையாறு பகுதியில் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றார்கள். அவர்களும் இதுவரை வரவில்லை. இதே போல வேதாரண்யத்தை அடுத்த புஷ்பவனத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்றார்கள். அவர்களும் இன்னும் வந்து சேரவில்லை. வேதாரண்யம் அருகே கோடிக்கரை அருகில் இருந்த மீனவர்களில் பழனியாண்டி, அவர்கள் மகன் முருகேசன், நந்தன் ஆகிய 3 பேரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலையில் படகில் மீன் பிடிக்கச் சென்றார்கள். இதுவரையில் கரைக்கு வ்ந்து சேரவில்லை. அவர்கள் நிலை என்னவாயிற்று என்று தெரியவில்லை. இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை கரைப்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 4 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மீன் பிடிக்கச் சென்றார்கள். அவர்களில் பால்ராஜ், முனியாண்டி, மத்தியாஸ், காளி ஆகிய 4 பேரும் சென்ற படகு கடல் கொந்தளிப்பால் ராட்சஸ அலை வீசியதால் அதில் சிக்கி படகு கவிழ்ந்து மேற்கண்ட 4 பேரும் படகிலிருந்து விழுந்து கடலில் தத்தளித்து இருக்கிறார்கள். இந்நிலையில் நேற்று காலை மீனவர் பால்ராஜ் பிணம் மட்டும் கரையில் ஒதுங்கி இருக்கிறது. மற்ற 3 பேர்களுடைய நிலை என்னவாயிற்று என்று தெரியவில்லை. அவர்கள் 3 பேரும் அநேகமாக கடலில் மூழ்கி பலியாகியிருப்பார்கள் என்று அஞ்சப்படுகிறது. சென்னை ராயபுரம் பகுதியில் இருந்தவர்கள் புயலுக்கு முன்பு 20 படகுகளில் மீன் பிடிக்கச் சென்றார்கள். ஆனால் 5 படகுகள் மட்டும் திரும்பி வந்திருக்கின்றன. மீதி 15 படகுகளில் சென்ற 80 மீனவர்கள் இன்னும் திரும்பி வரவில்லை. ஆகவே மேற்கொண்டு தமிழக கடலோரப் பகுதிகள் அனைத்திலும் மீனவர்கள் நிலை குறித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த அவைக்குத் தெரிவிப்பதோடு இது தொடர்பாக அரசு என்ன பாதுகாப்பு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன். இறந்தவர்களுக்கு தக்க பாதுகாப்பும் அதற்கான நிவாரண நிதியும் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, புயல் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு விளைவுகள் இன்றைக்கு அரசாங்கத்தினுடைய நிவாரணப் பணிகளைப்



1990 மே 9] [திரு. எஸ். ஆர். இராதா]

பற்றியும் இந்த மன்றத்திலே அறிவிக்க வேண்டும் என்ற முறையில் இன்றைக்கு கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மீனவர்களும், தாக்கப்பட்டவர்களும், மற்றவர்களும் பல்வேறு வகையிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

10–15 மணி

குறிப்பாக செங்கை-அண்ணா மாவட்டத்தில் செய்யூர் வட்டத்தில், கடலூர் ஊராட்சி ஒன்றியம் பெரிய குப்பம், சின்ன குப்பம், ஆழி குப்பம் ஆகிய பகுதிகளிலே கடல் நீர் வீடுகளிலே புகுந்து வீடுகள் பாதிக்கப்பட்டும், உடைமைகள் அடித்துச் செல்லப்பட்டும் இருக்கிற நிலைமைகள் இருக்கின்றன. சில பாலங்கள்—கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கும் பாலங்கள்கூட அதனால் மிகப்பெரிய பாதிப்புக்கு ஆளாகி மக்கள் போக்குவரத்துக்கு செல்ல இயலாத நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. சிக்கனாங்குப்பம், செய்யூர் பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்துவிட்ட காரணத்தால் அந்தப் பகுதி மக்கள் மற்றப் பகுதி மக்களோடு தொடர்புகொள்ள முடியாத அளவுக்கு பல்வேறு பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

அதேபோல் மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு வட்டம், சைதாப்பேட்டை வட்டம், பொன்னேரி வட்டம் ஆகிய வட்டங்களில் மிகப்பெரிய பாதிப்புகள் ஏற்பட்டு இருப்பதாகவும் எண்ணூர் பகுதிகளிலும், திருவொற்றியூர் பகுதிகளிலும், புலிகாட் பகுதிகளிலும் பல இடங்களில் தொடர்பு துண்டிக்கப்பட்டு இருக்கிற நிலைமைகள் இருக்கின்றன.

நிவாரண உதவிகள்கூட அனுப்புவதில் காலதாமதம் ஆகியிருப்பதாகவும், சில இடங்களிலே உணவுப் பொட்டலங்கள் கிடைக்கவில்லை என்ற குறைபாடுகளும் நிறைய இருக்கின்றன. பல வீடுகள் இடிந்துள்ள நிலையிலே அவர்கள் புது வீடுகள் கட்டுவதற்கு அவர்களுக்கு வாழ்வு அளிப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். மின்சாரம் தாக்கப்பட்ட காரணத்தால் 3 பேர் மாண்டதாக பத்திரிகையில் இருக்கின்றது. இருந்தாலும் இப்படிப்பட்ட பாதிப்புகளுக்கு ஆளாகி இருக்கிற அந்த மக்களுக்கு உடனடியாக நிவாரணமும், உதவியும் செய்ய வேண்டியது நம்முடைய கடமை என்ற வகையில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றனவா ? மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில் இதிலே விழிப்போடு, வேகமாக செயல்படவேண்டிய துறையாக இருக்கிறது. குறிப்பாக சென்னை நகரத்திலே கூட மின்சாரம் சில இடங்களிலே துண்டிப்பு ஏற்பட்டு மின்சாரம் இணைப்புகள் இதுவரையிலேகூட [illegible] தரப்படவில்லை. குறிப்பாக அண்ணா [illegible] சாலை அருகிலே இருக்கிற பல

[திரு. எஸ். ஆர். இராதா] [1990 மே 9

இடங்களிலே நேற்று முன் தினம் மின்சாரத் துண்டிப்பு ஏற்பட்டு, இன்றுவரை— காலைவரை—கூட மின்சார இணைப்புத் தராத நிலையில் மிகப்பெரிய பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே, இந்த பாதிப்புகளுக்கு அரசு உடனடி நிவாரணம் மேற்கொள்ளுகிற அதே நேரத்தில் பொதுவாக இப்படிப்பட்ட புயல் அறிவிப்பு வெளியிடப்படுகிற நேரத்தில் மீன் வளத் துறையிலிருந்து இந்த அறிவிப்புகள் உரிய காலத்தில் அதனுடைய ஆபத்தை மீனவர்களுக்கு அறிவிக்கப்படவேண்டும் என்பது கடமை ஆகும். அப்படிப்பட்ட அந்தக் கடமை செய்யப் பட்டு இருக்கிறதா என்பதை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும், ஏன் என்றால் பல மீனவர்கள் காணவில்லை என்ற நிலை வருவதற்குக் காரணம், இந்த அறிவிப்புகள் முன்கூட்டியே செய்யப்பட்டு இருக்கவேண்டும் என்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதையும் அரசு எடுத்து இருக்கிற நடவடிக்கைகளையும் நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல், பெருமழை இவைகளின் காரணமாக தமிழகத்திலே சில பகுதிகளும் குறிப்பாக சென்னை மாநகரமும் பெரும் பாதிப்புக்கு ஆளாகும் என்ற நிலை மாறி மழையும் நமக்குக் கிடைத்தது, அதே நேரத்தில் மன ஆறுதலும் கிடைத்தது என்ற அளவில் இங்கே வீச இருந்த புயல் இப்போது மசூலிப்பட்டிணத்தினுடைய பகுதிக்கு அருகே கரையைக் கடக்கக் கூடும் என்ற செய்தி வந்துள்ளது. இருந்தாலும்கூட அங்கேயும் மக்கள் எத்தகைய பாதிப்புக்கு ஆளாவார்களோ என்ற அச்சத்தோடு அந்தச் செய்தியையும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது குறித்து முன் நடவடிக்கைகள் உரிய நேரத்திலே அறிவிக்கப்பட்டதா என்ற ஐயப்பாட்டை எதிர்க்கட்சித் தலைவர் இங்கே எழுப்பியுள்ளார்.

கடந்த 2, 3 நாட்களாக இதுபோன்ற முன்னறிவிப்புகள் எல்லாத் துறைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன. அது மீனளத் துறையாக இருந்தாலும், வேளாண்மைத் துறையாக இருந் தாலும், காவல் துறையாக இருந்தாலும், மின்சாரத் துறையாக இருந்தாலும் எங்கெங்கே தக்க பாதுகாப்புகள் செய்யப்பட வேண்டுமோ, எச்சரிக்கைகள் செய்யப்படவேண்டுமோ அவைகள் அனைத்தும் செய்யப்பட்டிருக்கின்றன.

10–20 மணி

மின் துறையைப் பொறுத்தவரையில் உடனடியாக, சில இடங்களில் நிவாரணம் இன்னும் கிடைக்கவில்லை என்ற கருத்தை எதிர்க்கட்சித் தலைவர் இங்கே குறிப்பிட்டார். இன்று காலை யிலேதான் மழை நின்று இருக்கிறது, தொடர்ந்து பெய்து



1990 மே 9] [டாக்டர் மு. கருணாநிதி]

கொண்டிருந்த மழையில் எந்தப் பணிகளையும் யாரும் ஆற்றிட
இயலவில்லை. பாதிக்கப்பட்ட ஏழையெளிய மக்களைக்
காப்பாற்றவும், அவர்களுக்கு உணவு தரவும், அவர்களுக்கு
உறைவிடங்களை ஏற்பாடு செய்வதற்கும்தான் பெரும்பகுதி
நம்முடைய அலுவலாளர்களுடைய பணி பயன்பட்டிருக்கிறதே
யல்லாமல், மின்தடை, தொலைபேசித் தடை இவைகளை
யெல்லாம் கவனிக்க மாநில அரசு ஊழியர்களுக்கோ, மத்திய
அரசு ஊழியர்களுக்கோ நேரம் இல்லை. நேரம் இருந்தாலும்
கூட மழை அல்லது புயல் அபாயம் என்ற நிலை அதற்கு இடம்
தரவில்லை. தொடர்ந்து அத்தகைய துயர்துடைப்புப் பணிகள்
நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. நமக்கு வந்துள்ள
தகவலின்படி நேற்று இரவு அநேகமாக எல்லா மாவட்டங்
களிலும் மழை குறைந்து இருக்கிறது. நேற்றும் அதற்கு முன்
தினமும் பெய்த மழையினால், தென்னாற்காடு, செங்கை—
அண்ணா ஆகிய மாவட்டங்களில் ஏரி, குளங்களுக்கு தண்ணீர்
வரவு அதிகரித்துள்ளது. மாவட்டங்களிலே உள்ள நிலைமைகள்
குறித்துத் தகவல்கள் முழுமையாக வந்து சேரவில்லை. வந்து
கொண்டிருக்கின்றன. காரணம், மாவட்ட அதிகாரிகள் ஆங்
காங்கே துயர் துடைப்புப் பணிகளிலே ஈடுபட்டிருக்கிற
காரணத்தால், அத்தகைய கணக்குகளை, விவரங்களைத்
தெரிவிப்பதற்கு சற்று காலதாமதம் ஏற்படுகிறது. காற்று,
மழை காரணமாகப் பலப் இடங்களில் மின் கம்பிகள் அறுந்து
விழுந்துள்ளன. அவைகளைச் சரிப்படுத்தும் முயற்சிகளும்
தேவைக்கேற்ப செய்யப்பட்டு வருகின்றன. இந்த மின் கம்பி
களை மழைநீரில் தெரியாமல் மிதித்து விட்ட 3 பேர் அந்த
விபத்துக்குப் பலியாகி இருக்கின்றார்கள். சென்னை, டி.பி.
சத்திரத்தைச் சேர்ந்த ஜெயவேல் என்பவரும், எண்ணூர் பெரிய
குப்பத்தைச் சேர்ந்த 21 வயதுடைய குமார் என்பவரும், சென்
னையிலே அடையாளம் தெரியாத ஒருவரும் இந்த மின் விபத்
துக்குப் பலியாகி இருக்கின்றார்கள். சில இடங்களில் சுவர்கள்
விழுந்தும் மரங்கள் விழுந்தும் சேதம் ஏற்பட்டிருக்கின்றன.
அதுகுறித்தெல்லாம் உடனடியாக நிவாரணப் பணிகளை
மேற்கொள்ள தமிழக அரசின் அனைத்துத் துறை அதிகாரி
களும் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள். வீடு இல்லாதவர்
களுக்குத் தங்குவதற்கான இட வசதிகள் செய்யும் பணியும்
தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. பள்ளி
களிலும், திருமண மண்டபங்களிலும் தங்க வைக்கப்பட்டவர்
களுக்கு சென்னையிலே மாநகராட்சி மன்றத்தின் சார்பில்
உணவுப் பொட்டலங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு இருக்
கின்றன. இதுவரை சுமார் 1 இலட்சத்துக்கும் மேற்பட்ட
உணவுப் பொட்டலங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்
கின்றன.

எண்ணூர் நெடுஞ்சாலையில் கடல் அரிப்பால் பாதிக்கப்
பட்ட பகுதிகளைச் செப்பனிடும் பணியினை நெடுஞ்சாலைத்
துறையினர் விரைவாக மேற்கொண்டு உள்ளார்கள். இந்தப்

பகுதிகளிலும் போக்குவரத்துத் தடை ஏற்பட்டுள்ளது. அதனை விரைவிலே தொடரச் செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. பழவேற்காடு பகுதியில் தண்ணீரால் சூழப்பட்ட குடும்பங்களைக் காப்பாற்ற நேற்று படகு மூலமாக அவர்களுக்கு ஏழாயிரம் உணவுப் பொட்டலங்கள் அனுப்பப் பட்டன. எண்ணூரில் பலகைக்குப்பம், ரெட்டிக்குப்பம், சத்தியவாணிமுத்து நகர், பாரதியார் நகர் ஆகிய பகுதிகளில் கடல் தண்ணீர் புகுந்துவிட்ட காரணத்தால் அந்தப் பகுதி களிலே உள்ள மக்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

சென்னை நகரில் இன்று காலை வரை உள்ள 24 மணி நேரத்தில் 67.9 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. நகரிலே பல தொலைபேசிகள் இந்த மழை காரணமாக இயங்காமல் உள்ளன. அந்தத் துறையுடன் பேசி அவைகளுக்கு மீண்டும் இணைப்புத் தருவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. சென்னை நகரிலேயும், சுற்றுப் பகுதிகளிலேயும் பெய்த கடும் மழை காரணமாக நகர மக்களுக்கு குடிநீர்ப் பஞ்சம் ஓரளவு துடைக்கப்பட்டுள்ளது. புழல் ஏரியிலே மாத்திரம் நேற்று மாலை வரை சுமார் 10 கோடி கன அடி நீர் அதிகரித்து உள்ளது. இன்று இது மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இது குறித்து மேலும் வேறு விவரங்கள் இன்னும் அந்தந்தத் துறையினரிடமிருந்து வந்து சேரவில்லை. அதற் கான காரணத்தை நான் சொல்லியிருக்கிறேன். இவைக ளெல்லாம் வந்த பிறகு நாளை அதை ஒரு அறிக்கையாக இந்த அவைக்கு வைக்க நான் தயாராக இருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசேந்திரன் அவர்களும் நேற்றைய தினம் என்னிடத்திலே பழையாறு பகுதி குறித்தும் அதிராம்பட்டினம் பகுதி குறித்தும் இரண்டு முறையீடுகளைத் தந்தார்கள். உடனடியாக அவை களைக் கவனிக்குமாறு அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டு அது குறித்து வந்துள்ள விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சீர்காழி, பழையாறு பகுதியில் 6–5–1990 அன்று கடலில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் திரும்பவில்லை என்பதை அறிந்த மாவட்ட நிர்வாகம், அவர்களைத் தேடும் பணியிலே ஈடுபட்டது. காணாமல் போனதாகச் சொல்லப்பட்ட 5 மீனவர் களும் நேற்று 8–5–1990 காலையில் பத்திரமாக ஊர் திரும்பி விட்டார்கள். அதைப் போலவே, அதிராம்பட்டினம் பகுதியில்







மீன் பிடிக்கச் சென்று காணாமல் போனதாகச் சொல்லப்பட்ட 15 மீனவர்களை மாவட்ட நிர்வாகம் தேடிக் கண்டுபிடித்து நேற்று 8–5–1990 நடுப்பகலில் அவர்களைக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்துள்ளார்கள். புயலை ஒட்டி மீனவர் களுக்குத் தகுந்த எச்சரிக்கை நடவடிக்கை தரப்படவில்லை என்று கூறுவது சரியல்ல. ஆனால் புயல் வரக்கூடும் என்று தெரிவதற்கு முன்பே அவர்கள் எல்லாம் மீன் பிடிக்கச் சென்ற வர்கள்.

அதைப்போலவே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் ஒரு விவரத்தைத் தந்தார்கள். அதைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இப்போது குறிப்பிட்டார்கள். செங்கை—அண்ணா மாவட்டம் கடலூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த பெரிய குப்பம், சின்னக்குப்பம், ஆழிகுப்பம் ஆகிய தாழ்வான பகுதிகளிலிருந்து மொத்தம் 263 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே வைக்கப்பட்டுள்ளார்கள். 138 குடும் பங்கள் கடலூரில் உள்ள புயல் புகலிடத்திலே—இது செங்கை— அண்ணா மாவட்டத்தில் உள்ள கடலூர்—அதாவது சைக் ளோன் ஷெல்டரிலே வைக்கப்பட்டுள்ளார்கள். 128 குடும்பங் கள் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளார்கள். அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வரு கிறது. சின்னக்குப்பம், பெரியகுப்பம், ஆழிகுப்பம் ஆகிய இடங்களில் யாருக்கும் உயிர்ச் சேதமோ, பொருள் சேதமோ எதுவும் இல்லை. மீன் பிடிக்கச் சென்று காணாமல் போன வர்கள் மீட்கப்பட்ட பகுதிகளைச் சொன்னேன். இன்னும் மீட்கப்படாத நிலையில் சிலர் இருந்தாலும்கூட அவர்களையும் தேடுகிற முயற்சியில் அரசு அதற்குரிய எல்லா விதமான முனைப்பான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, மேலும் வருகிற விவரங் களை அவ்வப்போது இந்த அவையிலே அறிவிப்பேன் என்று கூறி, இந்த அளவில் என்னுடைய செய்திகளை நிறைவு செய்கிறேன்.

### 3. ஒழுங்குப் பிரச்சினை.

விதி 109 இன் கீழ் ஓர் அமைச்சர் தன்னிலை விளக்கம் அளிக்கும் உரிமை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் 109-வது விதியின் கீழ் ஒரு தன்னிலை விளக்கத்தைப் படைப்பார்கள்.

வருகிறது என்றால் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல, இங்கேயிருக்கிற செய்தி உறுப்பினர்களுக்கு என்று மட்டும்தான். இதிலே வாதம் என்னவென்றால், அவர் உறுப்பினராகவும் இங்கேயிருந்து இதிலே பேசலாம் என்று சொல்கிறபோது, நான், அமைச்சராகத்தான் அவர் பேசமுடியும் என்று சொல்கிறேன். அமைச்சராக இருந்து அவர் பேசுவதென்றால் அது 109-ல் முடியாது. இன்னும் ஒரு செய்தி அதிலே சொல்ல விரும்புகிறேன். அப்படியே நான் இதை ஒத்துக்கொள்ளவில்லை. இது விவாதிப்பதற்கு உரியது என்பதற்காகச் சொல்கிறேன். 109-ல் அவர் கொடுக்கவே முடியாது. இரண்டாவது ..........

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 109 மற்றும் 110 ஆகிய இந்த விதிகளை வைத்துக்கொண்டு மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் இந்த விளக்கம் தருகிறார்கள். 110 முதலாக அதில் வரும் விதிகள் அமைச்சர் மட்டுமே கொடுக்கக் கூடியவை. 109 என்பது அமைச்சரோ உறுப்பினரோ, அத்தனை பேரும் கொடுக்கக்கூடியவை. Personal explanation is meant for all Statement is only meant for the Minister.

**Thiru KUMARI ANANDAN**: Statement meant for Minister என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். 110-ல் Suo Moto என்பது public importance ஒரு உறுப்பினர் சொன்னதைப்பற்றி, அவர் உறுப்பினராகச் சொல்ல இயலாது என்ற கருத்து இருக்கிறது. அது இருக்கட்டும். அதைப்பற்றி விவாதிப்போம். அடுத்த செய்தியாக 'டிபேட்டபிள்' எதுவும் அதில் வரக்கூடாது என்று சொல்கிறார். வாதத்திற்குரியதாக நான் மறுப்பு சொல்வதற்கு உடனடியாக விவாதத்திற்குரிய பொருளாகக் கொண்டு வரக்கூடாது. ஏனென்றால், நான் என்ன பேசியிருக்கிறேனோ அதைத்தான் சுட்டிக் காட்ட வேண்டும். நான் என்ன பேசியிருக்கிறேன் என்று சொன்னால், அவருடைய பெயரைச் சொல்லவில்லை. மாண்புமிகு முதல்வரும் இருந்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தன்னிலை விளக்கம் அளிக்க ஒரு அமைச்சர் எழுகிறார். இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் எழுகிறார். தன்னைப் பற்றித்தான் தன்னிலை விளக்கம் அளிக்கப் போகிறார் என்று நம்முடைய குமரி அனந்தன் அவர்களுக்கு எப்படித் தெரியும் என்று தெரியவில்லை. ஒரு வேளை இரண்டு பேருமே அதற்கு முன்பு பேசிக் கொண்டு, தன்னிலை விளக்கம் அளிக்கப் போகிறார்களா அல்லது அவைத் தலைவர், காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரிடம் உங்களைப்பற்றி இப்படி தன்னிலை விளக்கம் வருகிறது என்று அவரிடம் சொல்லியிருக்கிறாரா? எதுவும் இல்லாத ஒரு சூழ்நிலையில்



அவர் எதைப்பற்றி தன்னிலை விளக்கம் அளிக்கப் போகிறார்? ஒருவேளை கண்ணகி கோயிலைப் பற்றி பேசுவதற்கா? அல்லது வேறு ஏதாவதற்கா? எதுவோ இருக்கலாம். ஆனால் அவர் தன்னைப் பற்றிச் சொல்வது அல்லது நான் அதைப்பற்றி சொல்லவில்லை என்று குறிப்பிடுவது முறையல்ல.

**Thiru N. GANAPATHY**: Mr. Speaker Sir, Member—"Rule 2(p) "Member" means a Member of the Assembly;

Provided that a Minister who is not a Member of the Assembly shall be deemed to be a member for the purposes mentioned in Article 177 of the Constitution"
அமைச்சர் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டாலும், ரகசியப் பாதுகாப்புப் பிரமாணம் செய்து கொண்டாலும், இங்கே வந்து எம்.எல்.ஏ. பதவிப் பிரமாணம் எடுக்காமல் இந்த அவையில் உட்கார முடியாது.
Basically when his membership right is affected he wants to give a self-explanation. So, Rule 109 equally applies. அதற்குப் பொருந்தும்.

திரு. குமரி அனந்தன் : முதல் அமைச்சரவர்கள் விரும்பினால், உறுப்பினராக இல்லாமல் 6 மாதங்களுக்கு அமைச்சராக இருக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் க.அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே விளக்கங்களுக்குள்ளே அதிகம் செல்லத் தேவையில்லை. A Member means anybody who participates here. Minister means only a Cabinet Member.

10—35 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் பெருமக்களுக்கு ஒரு விளக்கம். கடந்த முறை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் முந்தைய ஆட்சியில் இருந்த வீட்டு வசதி குறித்த சில செய்திகளை இந்த அவையிலே எடுத்து வைத்தார்கள். அவை தனிப்பட்ட எவர் பெயரையும் காட்டாமலேயே சொல்லப்பட்ட செய்திகள். எனினும் இப்போது நம்முடைய அவையிலே இருக்கின்ற எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள், அது தான் பொறுப்பில் இருந்த காலத்தில் ஏற்பட்டுள்ள நிகழ்வுகளைக் குறித்த செய்திகள் என்ற ஒரே காரணத்தினால், அதற்கு அடுத்த நாள், அவரே முன் வந்து, தன் பெயர் சுட்டப்படாத நிலையில், தன்னைத் தான் சுட்டுகிறதென்று தெளிவுபடுத்திக் கொண்டு 109-வது விதியின் கீழ் ஓர் அறிக்கையை அளிக்க, தெளிவான விளக்கம் படைக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எனவே இதற்கு முன் உதாரணம் இருக்கிறது. இனிமேல் இதிலே விவாதம் கூடாது.

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே, விவாதத்திற்கே போகவில்லை. இதிலே, நமது முதல்வரவர்கள் உங்களைப் பற்றிச் சொல்லப் போகிறாரா என்பது தெரியாதென்று சொன்னார்கள். அதையே சொன்னாலும் பரவாயில்லை. சிறிய விளக்கத்திற்காகச் சொல்கிறேன்.

Practice and Procedure cf Parliament, Third Edition, Kaul and Shakdhar.

When the Member in question does not wish to make a personal explanation on the spot or if he is not present at that time in the House, he is allowed to make a statement later on. In this case the member seeking permission for a personal explanation either places personally the facts before the Speaker in his chamber or makes a written request to him enclosing a copy of the statement to be made by him by way of proposed explanation or a gist thereof.

உங்களிடம் ஓர் அறிக்கையைக் கொடுத்து, இதைத் தான் சொல்லப் போகிறேன் என்று உங்களிடம் எழுத்து மூலமாகக் கொடுத்திருக்க வேண்டும். Advance copy of the statement is examined with a view to seeking that it is brief and concise and does not introduce any controversial or debatable matter. நீங்கள் அதிலே வாதப் பொருள் ஏதாவது இருக்கிறதா, பிரச்சினைக்கு உரியதாக ஏதாவது இருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டும். சுருக்கமாக இருக்கிறதா என்றும் நீங்கள் பார்க்க வேண்டும்.

If any portion there is considered objectionable or beyond the scope of the personal explanation the member is asked to delete it before permission to make the statement is granted. எனவே ஏதாவது அதில் அப்ஜக்ஷனபுளாக இருந்தது என்று சொன்னால், The copy is to be submitted.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதிலே இவ்வளவு பிரச்சினைகள் இருப்பதைச் சிந்தித்து, நாளையோ அல்லது நாளை மறு நாளோ, இதை எடுத்துக்கொள்ளலாம்.

**Hon. Thiru K. MANOHARAN :** Mr. Speaker Sir, இதிலே என்ன அக்கடமிக் இன்டரஸ்ட் இருக்கிறது. Either he should speak legally or constitutionally or otherwise: So there is absolutely no academic interest.



4. அறிவிப்புகள்.

(அ) 1990-91ஆம் ஆண்டிற்கான பேரவைக் குழுக்கள்.

அலுவல் ஆய்வுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 231 (1)-ன் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1990-91 ஆம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :

(1) மாண்புமிகு முதலமைச்சர்.
(2) மாண்புமிகு பேரவை முன்னவர்.
(3) மாண்புமிகு சட்ட அமைச்சர்.
(4) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
(5) திரு. சம்சுதீன் என்கிற கதிரவன், அரசு தலைமைக் கொறடா.
(6) திரு. எஸ். ஆர். இராதா, எதிர்க் கட்சித் தலைவர்.
(7) திரு. கே. ஏ. செங்கோட்டையன்.
(8) திரு. ஜி. கருப்பையா மூப்பனார்.
(9) திரு. குமரி அனந்தன்.
(10) திரு. கே. ரமணி.
(11) திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்.
(12) திரு. சோ. அழகர்சாமி.
(13) திரு. எம். அப்துல் லத்தீப்.
(14) திரு. பி. எச். பாண்டியன்.
(15) திரு. பொன். விஜயராகவன்.
(16) திரு. பி. என். வல்லரசு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக் குழுவின் தலைவர் ஆவார்.

10-40 மணி.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1990-91 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு [Committee on Public Undertakings] கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் :

(1) திரு. இரெ. இராசமாணிக்கம்.
(2) திரு. எம். இராமச்சந்திரன்.
(3) திரு. கே. கந்தசாமி.
(4) டாக்டர் த. சாந்தகுமாரி.

(5) திரு. எஸ். ஆர். சிவலிங்கம்.
(6) திரு. ரா. சின்னசாமி.
(7) திரு. பெ. சீனிவாசன்.
(8) திரு. கே. சுந்தர்.
(9) திரு. என். தங்கவேல்.
(10) திருமதி யசோதா செல்லப்பா.
(11) திரு. வெ. இராசு.
(12) திரு. வே. பெரியசாமி.
(13) திரு. பி. வி. இராஜேந்திரன்.
(14) திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்.
(15) திரு. சி. கோவிந்தசாமி.
(16) திரு. சோ. அழகர்சாமி.

எனவே, 1990-91 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு, இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கின்றேன். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 213-ன் கீழ் திரு. பெ. சீனிவாசன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

மதிப்பீட்டுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1990-91 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் :

1. திரு. வி. பி. இராசன்.
2. திரு. என். கணபதி.
3. திரு. க. சொ. கணேசன்.
4. திரு. எஸ். சிவலோகம்.
5. திரு. க. சுந்தரம்.
6. திரு. பெ. க. திருவேங்கடம்.
7. திரு. த. பொன்முடி.
8. திரு. மு. க. ஸ்டாலின்.
9. திரு. வி. கே. சின்னசாமி.
10. திரு. எம். தங்கவேல்.
11. திரு. ஆ. பாலையன்.
12. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.
13. திரு. கே. ரமணி.



14. திரு. எம். சேட்டு.
15. திரு. எம். முகமது சித்திக்.
16. திரு. பி. என். வல்லரசு.

எனவே, 1990-91 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்குக் குழு தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோரும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 196-வது விதியின் கீழ் திரு. என். கணபதி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1990-91 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் :

(1) டாக்டர் கே. அண்ணாதுரை.
(2) திரு. டி. இராதாகிருஷ்ணன்.
(3) திரு. இளம்வழுதி.
(4) திரு. சோ. பால்ராஜ்.
(5) திரு. ஆர். மகேந்திரன்.
(6) டாக்டர் சி.ரா. மாசிலாமணி.
(7) திரு. ப. முத்துசாமி.
(8) திரு. மீ. அ. வைத்தியலிங்கம்.
(9) திரு. சி. கிருஷ்ணன்.
(10) திரு. அ. பாப்பா சுந்தரம்.
(11) திரு. மா. சுந்தரதாஸ்.
(12) திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.
(13) திரு. உ. ரா. வரதராசன்.
(14) திரு. கோ. பூவராகன்.
(15) திரு. எம். அப்துல் லத்தீப்.
(16) திரு. ஜி. ஜி. குருமூர்த்தி.

எனவே, 1990-91 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்கு குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பேற்றதாக நான் அறிவிக்கின்றேன்.

[பேரவைத் தலைவர்] [1990 மே 9

நிதி அமைச்சர் என்கிற முறையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோரும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 204-வது விதியின் கீழ் திரு. எஸ். ஆர். பால சுப்பிரமணியம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

உரிமைக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1990-91 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பெற்றுள்ளனர் :

(1) திரு. வ. அன்பழகன்.
(2) திரு. பெ. ஆசையன்.
(3) திரு. வெ. கணேசன்.
(4) திரு. இரா. சாமிநாதன்.
(5) திரு. ஆலவயல் சுப்பையா.
(6) திரு. அ. லெ. சுப்பிரமணியன்.
(7) திரு. கே. பிச்சாண்டி.
(8) திரு. எம். எஸ். கே. இராசேந்திரன்.
(9) திரு. கி. வேணு.
(10) திரு. வே. நா. சுப்பிரமணியன்.
(11) திரு. கொ. மாதப்பன்.
(12) திரு. ஆர். ஈஸ்வரன்.
(13) திரு. எ. ஏகாம்பர ரெட்டி.
(14) திரு. எஸ். ஏ. தங்கராஜன்.

எனவே, 1990-91 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 227 (3)-வது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.



1990 மே 9]

அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 248 (1)ஆவது விதியின் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1990-91 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:

(1) திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்.
(2) திரு. பெ. வெங்கடாசலம்.
(3) திரு. ஆர். வரதராஜன்.
(4) திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி.
(5) திரு. எல். மூக்கையா.
(6) திரு. என். பெரியசாமி.
(7) திரு. பொ. நடராசன்.
(8) டாக்டர் எஸ். சுந்தரராஜ்.
(9) திரு. கே. ரவி அருணன்.
(10) திரு. வி. தம்புசாமி.
(11) திரு. கே. ஏ. மணி.
(12) திரு. ஆஸ்கார் சி. நிக்லி.

பேரவையின் 249 (1)ஆவது விதியின்கீழ் திரு. கே. ரவி அருணன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) தமிழகத்திலே விடுதலைப் புலிகள் நடமாட்டம் பற்றிய செய்தி குறித்து முதலமைச்சர் தெரிவித்த கருத்து

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். நேற்றைய தினம் நமது அவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகின்ற போது ஒரு கருத்தை மிகவும் ஆணித்தரமாக இந்த மன்றத்திலே அறிவித்தார்கள். விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தமிழகத்திலே இல்லை என்று........

10-45 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது இதிலே Point of order, Point of clarification எல்லாம் வராது. I am very sorry. வேறொரு சந்தர்ப்பத்திலே பேசலாம். (குறுக்கீடு) வராது. அதெல்லாம் Zero hour-லே முன் அனுமதி பெற்று வந்திருக்க வேண்டும்.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) நம்பியாற்றில் மணல் எடுப்பதால் நீர்வளம் குறைதலும், நிலங்கள் பாதிக்கப்படுதலும்

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், நம்பியாற்றில் மணல் எடுப்பதால் நீர்வளம் குறைவது மற்றும் தனியார் நிலங்கள் பாதிக்கப்படுவது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

நம்பியாறு திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தின் தென்பகுதியில் உள்ளது.

நம்பியாற்றில் ஆங்காங்கே மணல் தேங்கி உள்ள பகுதியிலும், தண்ணீர் போக்குத் தடையாக உள்ள மேட்டுப் பகுதிகளிலும், பொதுப்பணித்துறையினரின் தொழில்நுட்பக் கருத்தை பெற்று, குத்தகை அடிப்படையில் உரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மணல் எடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தைச் சார்ந்த புவியியல் மற்றும் சுரங்கத்துறை துணை இயக்குநர் மூலம் வருவாய்த் துறையினரால் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. நம்பியாற்றின் கரைகளை நேரில் சென்று திருநெல்வேலி கோட்ட பொறியாளர் பார்வையிட்டதில் விதிமுறைகள் ஏதும் மீறப்படவில்லை என்பது தெரிய வருகிறது. மேலும் நம்பியாற்றுப்படுகையில் நாங்குனேரி வட்டம் ஏர்வாடி பகுதி 1 சர்வே எண் 653/2, 669 ஏர்வாடி பகுதி 2 சர்வே எண் 557/2 மற்றும் அனுமான்நதி ஆற்றுப்படுகையில் இராதாபுரம் வட்டம் செட்டிகுளம் சர்வே எண் 10, 615 ஆகிய இடங்களில் பொது மக்களின் ஆட்சேபனைகளின் பேரில் 1399 ஆம் பசலிக்கு மணல் எடுக்க ஏலம் விடப்படவில்லை. பொதுவாக நம்பியாற்றில் இராதாபுரம், செட்டிகுளம், நாங்குனேரி, சிறுமணஞ்சி ஆகிய இடங்களில் மணல் எடுப்பதற்கு பொதுப்பணித் துறையிலிருந்து இதுவரை அனுமதி அளிக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கருத்து தெரிவிக்கப்படவில்லை.

கனிம குத்தகை விதியின்படி ஆற்றின் கரைபாகங்களில் உள்ள மணல் ஆற்றில் தண்ணீர் தங்கும்படி குழிகள் ஏற்படாதவாறு, மூன்று அடிகள் ஆழத்திற்குமேல் போகாமல் பரவலாகவும்,



143983
600 008

சமமாகவும், எடுக்கவேண்டும். ஆற்றின் கரையோரங்களிலும், மதகுகளிலிருந்தும் இரண்டு பர்லாங்குகள் தூரம் வரையிலும், மண் மணல் எடுக்கக் கூடாது. கால்வாய்களில் நீரோட்டத்தைப் பாதிக்குமாறு மண்மணல் எடுக்கக்கூடாது.

இவ்விதிகளுக்கு உட்பட்டு மணல் நிரம்பியுள்ள ஆற்றுப் பகுதியில் மணல் எடுப்பதால் நீர்வளம் குறைவதற்கு எவ்வித வாய்ப்பும் கிடையாது. ஆற்றில் நிரம்பி உள்ள மணல் எடுக்காமல் இருந்தாலும் ஆற்றில் குறைந்த அளவு தண்ணீர் போகும் சமயத்தில் அந்நீர் உறிஞ்சப்படுவதால், கீழ்உள்ள பகுதிக்கு நீர் செல்ல விடாமல் தடுக்கும் வாய்ப்பும் உண்டு. ஆதலால் நிரம்பியுள்ள மணல் எடுப்பதால், நீர் போக்குக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுவது இல்லை.

மேலும் ஆற்று மணல் எடுப்பது காரணமாக ஆற்றின்போக்கு மாறுபடுமா, ஆற்றின் கரைகள் பழுதடைய வாய்ப்புண்டா, அதனால் பொதுமக்களுக்கு பின்விளைவுகள் ஏதேனும் ஏற்படுமா என்பதை ஆய்ந்து அதன்பின் அரசுக்குக் கிடைக்கக்கூடிய வருவாய் யாது என நிர்ணயம் செய்து தகுதிவாய்ந்தவர்களுக்கு கனிம விதிகள் 1959-இன் கீழ் குத்தகைக்கு ஏலத்திற்கு விடப்படுகிறது. ஆற்று மணலைப் பொறுத்தவரை மூன்று ஆண்டுக் காலத்திற்கு ஏலம் மற்றும் குத்தகைக்கு விடப்படுகிறது. ஏலத்தொகை (அல்லது) குத்தகைத்தொகை ஒட்டுமொத்தமாக வசூலிக்கப்படுகிறது. சில குவாரிகள் பகிரங்க ஏல காலம் முடிந்தாலும் மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு காலநீட்டிப்பு விதியின் கீழ் ஏலத்தொகையுடன் 10 சதவிகிதம் உயர்மதிப்பீடு செய்து தொகை வசூல் செய்து குத்தகை உரிமம் மேலும் மூன்றாண்டுகளுக்கு மிகாமல் வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட முறையில் மணல் அப்புறப்படுத்துவதினால் ஆற்றின் நீர்வளம் குறைவதற்கோ, பக்கத்து தனியார் நிலங்கள் பாதிக்கப்படுவதற்கோ எவ்வித வாய்ப்பும் இல்லை.

மணல் எடுக்கும் பகுதியில் ஏதேனும் நீர்வளம் மற்றும் தனியார் நிலங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் மணல் எடுக்கத் தடை செய்யப்படும்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண் எடுப்பதற்கு உரிமம் பெறுபவர்களுக்கு ஒரு சதுர ஹெக்டேர் ஒரு மீட்டர் ஆழத்திற்கு 25 ரூபாய் அரசுக்கு வழங்கிவிட்டு அவர்கள் மண் எடுப்பதாக அறிய வருகிறேன். அப்படி எடுக்கின்றவர்கள் ஒரு மீட்டருக்கு அதிகமாக, 30 அடி, 40 அடி வரைகூட எடுப்பதால் பக்கத்திலே இருக்கின்ற

D
V21,31'N90
N90.33.2

நிலங்கள் சரிகின்றன ; அதனால் மரங்கள் சரிகின்றன ; தனி நபர்கள் அதிலே பாதிக்கப்படுகிறார்கள். இப்படி 30 அடி ஆழமெல்லாம் எடுக்கிறார்கள் என்ற நிலையிலே ஆபத்துக்களுக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று அங்கே, நாங்குனேரி தொகுதி சிறுமணஞ்சேரி என்ற ஊரிலே உள்ளவர்கள் போராட்டம் ஒன்றை நடத்துகின்ற வேளையிலே, அந்த நாங்குனேரி தாசில்தார் அவர்கள் அங்கே மண் எடுக்கும் லாரி யாருக்கு உரியது, ஏன் இப்படி எடுக்கிறார்கள் என்று கேட்கின்ற வேளையிலே இது வேறு ஒரு நபருடைய லாரி என்று சப்-கலெக்டர், சேரன்மாதேவி டி. எஸ். பி., வள்ளியூர் முன்னிலையிலே பல ஊர் மக்கள் மத்தியிலே கூறினார்களே—அப்படி வட்டாட்சியர், மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்த அந்த உரிமத்தை மீறி வேறு நபர்களுக்கும் கொடுத்து வருகின்றார்களா ? அப்படிக் கொடுத்து வருகின்ற நிலை தங்கள் கவனத்திற்கு வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, பொதுவாகவே ஆறுகளிலே மணல் எடுப்பது, ஏரிகளிலே மண் எடுப்பது, இவைகளை வழங்குகின்ற உரிமம் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத்தான் உண்டு. பொதுப் பணித் துறையை அவர்கள் கேட்பார்கள், இந்த ஆற்றிலே மணல் எடுக்க அனுமதி வழங்கலாமா என்று. பொதுப் பணித்துறை வழங்கலாம் என்றால், மாவட்ட ஆட்சித் தலைவர், கனிமம்—என்று ஒரு பிரிவு இருக்கிறது, Mines பிரிவு, அதன்மூலமாக வழங்குவார்கள். இதிலே அனுமதி பெற்றவர்கள் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, ஒரு அளவு உண்டு. அதுவரையிலே அவர்கள் மண்ணோ, மணலோ எடுக்கலாம் ; அதற்கு மேற்கொண்டு எடுக்கக்கூடாது. ஆனால், எடுக்கிறவர்கள், கீழே, அதல சுதல பாதாளத்தை தோண்டுகின்ற அளவிற்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அதனாலே பாதிப்பு ஏற்படுகிறது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். வேறொரு நேரத்திலே இதே அவையிலே நான் குறிப்பிட்டேன். இவைகளை ஒழுங்கு படுத்துவதற்காக, கட்டுப்படுத்துவதற்காக இருக்கின்ற சட்டத்தில் சில மாறுதல்களைக் கொண்டு வரவேண்டுமென்று நம்முடைய வருவாய்த் துறைச் செயலாளர், மற்றும் இருக்கின்ற பல்வேறு சட்டத் துறை செயலாளர், செங்கை—அண்ணா மாவட்டத்தினுடைய ஆட்சிமன்றத் தலைவர் ஆகிய எல்லோரையும் அழைத்து வைத்துப் பேசி, பொதுப் பணித்துறை அதிகாரிகளோடு கலந்து பேசியிருக்கிறோம். அவர்கள் இரண்டு பேர் கவிடத்திலே பொறுப்பை ஒப்படைத்திருக்கிறோம். ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்தில் இருக்கின்ற சில குறைபாடுகளை எப்படி நீக்கி, அவற்றை ஒழுங்குபடுத்துவது என்று வழிமுறை கூற வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். எனவே, விரைவில் இந்த மணல் எடுப்பதையும், மண் எடுப்பதையும் கட்டுப்படுத்த அரசு முனைப்பான சில விதிகளைக் கொண்டுவரும்.



**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மண் கிட்டத்தட்ட 2 அரை சதுர ஏக்கர்—ஒரு மீட்டர் ஆழத்திற்கு மண் எடுப்பதற்கு 25 ரூபாய் என்பது மிகவும் அற்பத்தொகை. ஒரு லாரிக்கு 5 ரூபாய், 10 ரூபாய் கொடுத்தால்கூட அரசாங்கத்திற்கு நிறையக் கிடைக்கும். அப்படியில்லாமல் கொடுத்து, பக்கத்திலே இருக்கின்ற மக்களுடைய நிலமும், பாதிக்கப்படுகிறது, பெரிய பெரிய பள்ளங்களாக ஆகிக் கொண்டிருக்கும்பொழுது, ஆடு, மாடு போனால் உள்ளே விழுந்தால் எடுப்பதற்கும் அல்லது பிள்ளைகள் விழுந்தால் எடுப்பதற்கும் யாரும் துணிந்து வரவும் மாட்டார்கள். அதுபோக அந்த நீர் வளமும் குறைகின்றது. ஏற்கெனவே, அது தண்ணீர் இல்லாமல் தவிக்கின்ற ஒரு பகுதி. ஆகவே, உடனடியாக அரசு தலையிட்டு, அந்த மண் எடுக்கின்ற உரிமத்தை ரத்து செய்து, அந்தப் பகுதி மக்களின் உணர்ச்சிகளை மதித்து, அவர்களுக்கு உதவ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மண் எடுக்கிற, மணல் எடுக்கிற உரிமையை முழுக்க ரத்து செய்துவிட முடியாது. மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுக்குத் தெரியும் ; திருக்குறளிலே மருத்துவத்தைப் பற்றிச் சொல்கிறபொழுது. '' மிகினும் குறையினும் நோய் செய்யும் '' என்பார்கள். அதேபோன்றுதான், ஆற்றிலே மணல் மிகினும், குறையினும் நீரைப் பாழ் செய்யும். எனவே, நீர் வரத்தைக் குறைத்து விடும். ஆகையினாலே அதை ஒரு நிலையிலே வைத்திருக்க வேண்டும். கட்டணத்தை அதிகமாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அது நல்ல யோசனை. அதை அரசு பின்பற்றும்.

*10-50 மணி*

(ஆ) கத்திவாக்கத்தில் உள்ள இ. ஐ. டி. பாரி, கோத்தாரி போன்ற நிறுவனங்களிலிருந்து வரும் கழிவு நீரால் குடிநீர் பாதிப்பு.

**திரு. டி. கே. பழனிச்சாமி :** தலைவர் அவர்களே, ''சென்னை, கத்திவாக்கத்தில் உள்ள இ. ஐ. டி. பாரி மற்றும் கோத்தாரி போன்ற நிறுவனங்களிலிருந்து வெளிவரும் கழிவு நீரால் குடிநீர் பாதிப்பு குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் ;

கத்திவாக்கத்தில் உள்ள இ. ஐ. டி. பாரி (இந்தியா) லிமிடட் தொழிற்சாலையின் ஒருமுறை பயன்படுத்தப்படும் குளிர்நீர், தளங்களைக் கழுவி விடப்படும் நீர் மற்றும் கொதிகலன்களிலிருந்து வெளிவரும் நீர் ஆகியவை அடங்கிய அபாயகரமற்ற கழிவுநீர், குழாய்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டு கடலில் விடப்படுகிறது. பாஸ்பாரிக் அமிலம் தயாரிக்கும் பிரிவிலிருந்து வெளிவரும் புளோரைட் அடங்கிய கழிவுநீர் அங்கேயே சுத்திகரிக்கப்பட்டு உர உற்பத்திப் பிரிவில் மீண்டும் உபயோகப்படுத்தப்படுகிறது. இத்தொழிற்சாலைக் கழிவுநீரின் தரம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயம் செய்துள்ள தரத்திற்குட்பட்டுள்ளதாக ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது. எண்ணூரில் உள்ள கோத்தாரி இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் லிமிடெட் தொழிற்சாலையில் கழிவுநீர் அங்கேயே சுத்திகரிப்பு செய்யப்பட்டு மீண்டும் உற்பத்தியின்போது பயன்படுத்தப்படுகிறது.

2. இந்த இரண்டு தொழிற்சாலைகளும் தற்போது தொழிற்சாலை கழிவுநீரை ஆறு, வாய்க்கால், ஏரி போன்ற நீர்நிலைகளிலோ அல்லது நிலத்திலோ வெளியேற்றாததால் இத்தொழிற்சாலைகளின் கழிவுநீரினால் நிலத்தடிநீர் மாசுபடக்கூடும் என்ற ஐயப்பாட்டிற்கு இடமில்லை. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அமைக்கப்பட்டு தொழிற்சாலைகள் கண்காணிக்கப்படத் துவங்குவதற்கு முன்னர் மேற்படி இ. ஐ. டி. பாரி மற்றும் கோத்தாரி தொழிற்சாலைகளின் ஆரம்ப உற்பத்திக் கட்டத்தில் நீர் மாசுபடுதல் குறித்த பிரச்சினை இருந்துள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வெளியேற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும் தகுந்த ஏற்பாடுகள் ஏதும் அப்போது இல்லை. ஆனால் தற்போது நிலைமை முற்றிலும் மாறி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளைத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது.

3. கத்திவாக்கம், சத்தியவாணிமுத்து நகர் போன்ற பகுதிகளுக்கு உடனடியாக குடிநீர் வழங்கக் காட்டுக்குப்பம் என்ற இடத்தில் உள்ள கிணறு தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால், உப்பு நீர் கலந்ததனால் இக்கிணற்று நீரும் பாழாகிவிட்டது. காமராஜர் நகரில் உள்ள மற்றொரு கிணற்றின் நீர் குடிப்பதற்கு உகந்ததாக உள்ளது. கத்திவாக்கம் நகரிய நிர்வாகம் தற்போது இக்கிணற்றில் ஒரு 5 குதிரைத்திறன் டீசல் மோட்டார் வைத்து இப்பகுதிக்கும் குடிநீர் வழங்கி வருகிறது. காமராஜர் நகர் கிணற்று நீரை வழங்குவது ஒரு தாற்காலிக ஏற்பாடாகவே இருக்க முடியும். ஏனெனில், இக்கிணற்று நீரை அதிக அளவில் எடுத்தால் கடல்நீர் உட்புகுந்து நீர் கெட்டுவிடும்.

4. கத்திவாக்கம் நகரியத்திற்கு ஒரு நிரந்தரக் குடிநீர்த் திட்டம் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் முனைந்து





உள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான நீர்நிலையை (water) Source) தேர்ந்தெடுக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளது. ஆய்வுக்குப்பின் திட்ட அறிக்கை தீட்டும்பணி முடிவுறும்.

திரு. டி. கே. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். மகிழ்ச்சி. நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக கத்திவாக்கம் பகுதிக்குச் சென்று, அங்கே குடிநீர் பாதிக்கப்பட்ட சத்தியவாணிமுத்து நகர், காமராஜர் நகர் ஆகிய நகர்களில் ஒவ்வொரு வீடாகப் பார்த்து, குழாயில் தண்ணீர் எப்படி வருகிறது என்று அடித்து, அதைக் குடித்து, ருசித்து அதைப்பற்றிப் பல்வேறு அதிகாரிகளுக்கும் சொன்னார்கள் அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும், கத்திவாக்கம் நகரியத் துணைத் தலைவரும் அங்கே வந்தார்கள். மக்கள் மகிழ்ச்சி அடையக்கூடிய வகையில் ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்படிப் பேசுவது திரு. ராம. நாராயணன் அவர்களுக்குக்காக வசனம் எழுதுவதைப்போல இருக்கிறது......

திரு. டி. கே. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, ஈ.ஐ.டி பாரி, கோத்தாரி ஆகிய கம்பெனிகளுக்குச் சென்று, அந்த நீரை சரிபார்த்தார்கள். உடனடியாக நல்ல குடிநீர் கொண்டு வருவதற்கு அவசர நடவடிக்கையாக 10 குடிநீர்த் தொட்டிகளைக் கொடுப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு 10 குடிநீர்த் தொட்டிகளை வைத்து தண்ணீர் வழங்குவது நல்ல நடவடிக்கையாக இருக்கும். இப்போது சென்னை குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து, சென்னை மெட்ரோ வாட்டரிலிருந்து நம்முடைய ஜி. எம். அவர்களின் பெருமுயற்சியின் காரணமாக ஐந்து லாரி தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. அது போதாது என்ற நிலை இருக்கிறது. எனவே, மேற்கொண்டு ஐந்து லாரி தண்ணீர் அந்த 10 தொட்டிகளுக்குக் கொடுத்தால் கத்திவாக்கம் மக்களைக் காப்பாற்ற முடியும் என்று தெரிவித்து, அப்படிக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல அந்தப் பகுதிக்கு மே மாதம் 2ஆம் தேதி வாரிய அதிகாரிகளோடு, மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளையும் அழைத்துச் சென்று மேற்பார்வையிட்ட போது, அங்கே அந்தப் பகுதி மக்கள் முன்பு வெளியேற்றப்பட்ட கழிவு நீரின் காரணமாக பல்வேறு நோயால் தாக்கப்பட்டதை, குறிப்பாக பல்நோயால் தாக்கப்பட்டு வந்ததை, நேரில் கண்டறிந்தோம். தமிழக

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி] [1990 மே 9

முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் இதுகுறித்து மனு
கொடுக்கப்பட்ட போது உடனடியாக அதற்கு நிரந்தர நிவாரணம்
செய்ய வேண்டுமென்று ஆணையிட்டு இருக்கிறார்கள். அந்த
எண்ணத்தோடு, அங்கே சென்றபோது, அதற்கு முன்பே அங்கே
யிருக்கிற நகரியம், சென்னை குடிநீர் வடிகால் வாரியத்திற்கு எழுதி
லாரிகள் மூலமாக குடிநீர் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்
கிறது. மேலும், இந்த வியாதி முன்பு நீரில் ''ப்ளோரைடு''
வந்ததன் காரணமாக ஏற்பட்டிருக்கிறது. இப்போது கோத்தாரி
மற்றும் ஈ.ஐ.டி. பாரி ஆகிய இரண்டு ஆலைகளிலிருந்து வெளி
யேற்றப்படுகிற கழிவு நீர் அங்கேயே சுத்திகரிக்கப்பட்டு, மீண்டும்
ஆலைகளுக்கே பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, அங்கேயிருந்து
கழிவு நீர் இப்போது வெளியேற்றப்படுவதில்லை. அதை நேரி
லேயே நாங்கள் சென்று பல்வேறு இடங்களில் அந்த இரண்டு
ஆலைகளிலும் பார்த்து முடிவு செய்தோம். ஓராண்டிற்கு முன்பு
அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தது. இப்போது படிப்படியாக
புதிய கருவிகள் எல்லாம் பொருத்தப்பட்டு, காற்றில் ஏற்படுகிற
மாசும், நீரில் ஏற்படுகிற மாசும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.
ஆனால், நீரில் ப்ளோரைடு வந்ததால் வியாதியால் தாக்கப்
பட்டவர்களுடைய நிலைமை அப்படியே இருக்கிறது நீரும் தாக்கு
தலுக்கு உள்ளாகி பழைய நிலைக்கு இன்னும் திரும்பவில்லை.
குறிப்பாக சத்தியவாணிமுத்து நகரில் இதுபோன்ற குறை
இருக்கிறது. அதற்காக நிரந்தரமாக அந்த குடிநீர்த் திட்
டத்தை மாற்றிக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு,
கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திலும் அந்தப் பகுதி இணைக்கப்
பட்டிருக்கிறது. அது வருவதற்கு 3 ஆண்டுகள் ஆகுமென்ற
காரணத்தால், இப்போது தற்காலிகமாக மெட்ரோ வாட்டரி
லிருந்து அங்கே குடிநீர்த் தேக்க தொட்டிகளைக் கட்டி, குடிநீர்
வழங்குவதற்கு குடிநீர் வடிகால் வாரியம் உடனடியாகப் பணிகளை
மேற்கொண்டிருக்கிறது. இன்னும் 6 அல்லது 9 மாதத்திற்குள்
ளாக அங்கே நிரந்தரமாகக் குடிநீர் கொடுக்கப்படும். கிருஷ்ணா
நதி நீர் வந்தவுடன், இந்தத் திட்டம் அத்துடன் இணைக்கப்பட்டு,
அந்தப்பகுதி மக்களுக்கு நிரந்தரமாகக் குடிநீர்ப் பிரச்சினை தீர்த்து
வைக்கப்படும் என்று உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. டி. கே. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, அமைச்சர்
அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நமது முதலமைச்
சர் அவர்களால் கொண்டு வரப்படுகிற கிருஷ்ணா நதிநீர் கத்தி
வாக்கம் நகருக்கு வருகிறது என்பதைக் கேட்டு திருவொற்றியூர்
பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். இப்போது ஐந்து
தொட்டிகள் மூலம் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது.
அதுவரையில் மேலும் 10 தொட்டிகளை சென்னைக் குடிநீர் வடி
கால் வாரியத்தின் மூலமாக வைக்கவும், அதற்கு மேலும் 5 லாரி
கள் மூலம் குடிநீர் வழங்கவும்வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.



1990 மே 9]

10-55 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரிகள் வழங்குவதிலே பிரச்சினை இல்லை. ஆனால் லாரிகளுக்குத் தண்ணீர் கொடுப்பதிலே தான் பிரச்சினை. சென்னை நகரத்திலே இருக்கிற தண்ணீரை அங்கே பகிர்ந்து கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அங்கேயிருக்கிற தண்ணீரினுடைய தேவையைக் கருதி, அங்கேயிருக்கிற அதிகாரிகளோடு பேசினேன். மறுநாளும் அங்கேயிருக்கிற துணைத் தலைவரையும் அழைத்து எல்லா அதிகாரிகளையும் வைத்து, செயலகத்திலே மறுநாளே 4 மணி நேரம் அதற்கான விவாதம் நடைபெற்றது. 25 ஆயிரம் லிட்டர் ஒரு நாளைக்கு அங்கே குடிநீர் கொடுப்பதற்காக 5 லாரிகள் மூலமாக அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. மேலும் இப்போது சென்னையில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இல்லாமல், குடிநீர் அதிகமாகக் கிடைக்குமானால், அதைப்பற்றி அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய, ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. சட்ட முன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்)

### (அ) பொது விற்பனை வரி மூன்றாம் திருத்த சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி, (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



(ஈ) குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு, தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு நாஞ்சில் கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

திரு. கோ. வீரையன் : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேசன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த மூன்று சட்டத்திலும், தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு, தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு என்று சொன்னார்கள். அது 1990 ஆம் ஆண்டா ? அல்லது இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு, ஏன் என்றால்; தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு என்று சட்டத்திலே பதிவாகிவிட்டால்....சிரிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : 1990 ஆம் ஆண்டில் வாழ்ந்து கொண்டிருக்கிற வீரையனுக்கு இந்தச் சந் தேகம் வரக்கூடாது. (சிரிப்பு)

7. சட்ட முன்வடிவுகள் (ஆய்வுசெய்தல்)

(அ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன் முடிவு எண். 23/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

11-00 மணி

* திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியிலே நிதியாதாரத்தைப் பெருக் கும் நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருப்ப தாகக் கூறப்பட்டிருக்கிறது. நிதியாதாரத்தைப் பெருக்கவேண்டு மென்ற நோக்கத்தோடு கல்வி நிறுவனங்களின்மீது வரி விதிக்க, சொத்து வரி விதிக்க அனுமதிக்கப்படுவது சரியாக இருக்குமா என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். கல்விக்காக மாநில அரசு ரூ. 1,042 கோடி செலவு செய்கிறது. அதிலேகூட புதியதாக கல்லூரி துவக்கவேண்டுமென்றால், நிதி வசதி இல்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். புதியதாகப் பள்ளிக் கூடங்கள் தேவை என்றால், இருக்கின்ற நிதியை வைத்துத்தான் செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். தொகுப்பு ஊதியம் தான் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். இந்த அளவு சிரமம் இருக்கின்ற நேரத்திலே, நீங்கள் கல்வி நிறுவனங்களுக்கு சொத்து மதிப்பு போட்டு, வரி விதிக்க அனுமதிப்பீர்களானால், அவர்கள் அந்த வரியை செலுத்துவதாக வைத்துக் கொண்டால், அவர்கள் அரசிடம்தான். மானியம் கேட்கப் போகிறார்கள். நாங்கள் இவ்வளவு ஆயிரம் ரூபாய் செலுத்தியிருக்கிறோம், இவ் வளவு இலட்சம் ரூபாய் செலுத்தியிருக்கிறோம், எங்களுடைய கல்வி நிறுனத்திற்கு வேறு எந்த வருமானமும் கிடையாது.

*4—5—1990 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



எனவே, மானியமாகக் கொடுத்து விடுங்கள் என்று நம்முடைய ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கின்ற அந்த வரியை கல்வியமைச்சரிடத்திலேயிருந்து கேட்கப் போகிறார்கள். ஆகவே ஒரு இலாக்காவிலிருந்து இன்னொரு இலாக்காவிற்கு செலுத்துவதற்கு, இன்னொரு இலாக்காவிடமிருந்து அவர்கள் பணம் கேட்கப் போகிறார்கள். அந்த நிலைமை வரக் கூடாது, அதற்கு விட வேண்டாம் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சொத்து வரி எப்படி சரியாக இருக்க முடியும் என்பதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அறக்கட்டளைகளை ஏற்படுத்தி ஏராளமான நிலத்தை வளைத்துப் போட்டு வைத்திருக்கிறார்கள. நகரங்களிலே மையப் பகுதிகளிலே, கேந்திரமான பகுதிகளிலே பெரிய அளவிலே வளைத்துப் போட்டிருக்கிறார்கள். எதற்காக என்று சொன்னால், அவர்கள் அந்த விதி விலக்கைப் பயன்படுத்திக் கொண்டு, உச்சவரம்புச் சட்டத்திலேயிருந்து தப்பித்துக் கொள்வதற்காக. நில உச்சவரம்புச் சட்டமாக இருந்தாலும் சரி, நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டமாக இருந்தாலும் சரி, அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவேண்டுமென்ற நோக்கத்தோடு சில பேர் இப்படிச் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களை எடுத்துக் கொள்வதிலும், அல்லது அப்படிப்பட்ட சொத்துக்களின் மீது வரி விதிப்பதிலேயும் நிச்சயமாக எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் நல்ல கல்வி நிறுவனங்கள், நல்ல பள்ளிக் கூடங்கள் அவற்றின் மீது வரி விதிப்பது எப்படி சரியாக இருக்க முடியும்? சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் ஒரு குறிப்பிட்ட சாலையைப் பார்த்தால், ஏராளமான சொத்துக்கள் அந்தச் சாலையில் இருக்கின்றன. இந்தச் சொத்துக் கள் எல்லாம் யாருக்குச் சொந்தம் என்று கேட்டால், கல்வி நிறுவனங்கள், அறக்கட்டளைகளுக்குச் சொந்தம். சென்னை யிலே கிரீன்வேஸ் ரோடில் இருக்கிறது. பெரும்பாலான சொத்துக் கள் கல்வி நிறுவனங்கள், அறக்கட்டளைகளுக்குச் சொந்தம் என்று சொல்கிறார்கள். அவைகள் எல்லாம் நல்ல நோக்கத் தோடு செய்யப்பட்டனவா என்றால் கிடையாது. தப்பித்துக் கொள்ளவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த விதிவிலக்கைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவற்றைக் கையகப் படுத்த நீங்கள் சட்டம் கொண்டுவருவீர்களானால் நிச்சயமாக நாங்கள் அதற்குத் துணையாக நிற்போம். ஆனால் இங்கே இப்போது என்ன நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால் பச்சையப்பன் அறக்கட்டளை இருக்கிறது. நல்ல நோக்கத்தோடு, துவக்கப்பட்டு, புனிதமான நோக்கத்தோடு துவக்கப்பட்ட அறக்கட்டளைதான் பச்சையப்பன் அறக்கட்டளை. அதைப் போன்ற பல கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. பல கல்வி அறக்கட்டளைகள் இருக்கின்றன. அந்தப் பெரும்பாலான கல்வி நிறுவனங்கள் எல்லாம் நகரத்தினுடைய மையமான பகுதிகளிலே, கேந்திரமான பகுதிகளிலே ஒவ்வொரு ஊரிலேயும் இருக்கின்றன.

அதற்கு சொத்து மதிப்பு என்று போட்டு, மார்க்கெட் வேல்யூ என்று போட்டு, ரென்டல் வேல்யூ வசூல் செய்வது என்று சொன்னால், அவர்களாலே செலுத்த முடியுமா? அவர்களுக்கு அந்த அளவிற்கு நிதிவசதிதான் இருக்கிறதா? குறிப்பாக கல்வி பயிற்றுவிக்கும் இடம், ஸ்கூல் பில்டிங், கிளாஸ் ரூம்கள், மாணவர்கள் தங்கும் விடுதிகள், விளையாட்டு மைதானங்கள் என்று பெரிய இடங்களை அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். யாரும் இல்லையென்று சொல்ல முடியாது. பச்சையப்பன் கல்லூரியை எடுத்துக்கொண்டால், பல நூறு ஏக்கரா அங்கே யிருக்கின்றது. அவற்றுக்கு எல்லாம் வரி என்று சொன்னால், அவர்களாலே செலுத்த முடியுமா? செலுத்திவிட்டு, கல்வி நிறுவனத்தை நடத்தமுடியுமா என்று நாம் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல் அவர்கள் செலுத்தினால், மானியம் கேட்கப் போகிறார்கள் என்பதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது.

11-05 மணி

குறிப்பாக எங்களுடைய கோவை மாவட்டத்தில் இப்போது அந்தப் பிரச்சினை பூதாகரமாக வெடித்திருக்கிறது. கோவை நகரத்தினுடைய மையப் பகுதியிலே 'ஸ்டேன்ஸ் ஹைஸ்கூல்' பல ஆண்டுக் காலமாக நடக்கின்ற பழைய உயர்நிலைப் பள்ளி. பல மாணவர்கள்—நம்முடைய சட்டமன்றத்திலே இன்றைய தினம் உறுப்பினர்களாக இருப்பவர்கள் கூட இரண்டொருவர் அங்கே படித்திருக்கிறார்கள். ஆஸ்கார் நிக்லி அதனுடைய பழைய மாணவர் என்று நினைக்கிறேன். எங்களுடைய கட்சியைச் சார்ந்த கோபாலகிருஷ்ணன் அவர்கள் அங்கே படித்தவர். பல நல்ல மாணவர்களை, பல நல்ல குடிமக்களை உருவாக்கித் தந்திருக்கின்றது அந்த ஸ்தாபனம். அதற்கு எவ்வளவு வரி போட்டார்கள். அந்த நகரத்தினுடைய மையப் பகுதியிலே இருக்கின்ற அதற்கு எவ்வளவு வரி விதித்திருக்கிறார்கள் என்று சொன்னால் கடந்த 6 ஆண்டுகளுக்கு மொத்தமாக 30,14,462 ரூபாய் செலுத்த வேண்டுமென்று கோவை மாநகராட்சி கேட்கிறது. இது நியாயமா, முறையா? 30 இலட்சம் அவர்கள் செலுத்திவிட்டு அந்தப் பள்ளிக்கூடத்தை அவர்களாலே நடத்த முடியுமா? யாரிடத்திலே பணம் வசூல் செய்யப் போகிறார்கள்? அரசிடம் மீண்டும் மானியம் கேட்பார்கள். அரசு கொடுக்க வில்லையென்று சொன்னால், மாணவர்கள் இடத்திலே கேட்பார்கள், மாணவர்கள் எவ்வளவு தர வேண்டும்? ஆண்டொன்றுக்கு 235 ரூபாய் ஒரு மாணவர் செலுத்தினால்தான் இந்த வரியை அவர்களாலே செலுத்த முடியும். ஏனென்றால், ஆண்டொன்றுக்கு 4,53,490 ரூபாய் என்று வரி போட்டிருக்கிறார்கள். இந்த வரியை அவர்கள் செலுத்த வேண்டுமென்று சொன்னால், இருக்கின்ற மாணவர்களுக்கு பங்கு போட்டால் 235 ரூபாய் ஒரு





மாணவருக்கு வருகிறது. ஆக இந்த நிலைமை மற்ற மாநகராட்சிகளிலே இருக்கிறதா என்றால் கிடையாது மற்ற மாநகராட்சிகளிலே எல்லாம் மிகவும் குறைவான வரி விதிப்பைத்தான் போடுகிறார்கள்.

உதாரணமாக சென்னையிலே என்று எடுத்துக் கொண்டால், 'ஹிண்டு அயர் செகண்டரி ஸ்கூல்' எல்லாம் 'டெரஸ் பக்கா ஏரியா'. It is valued at 50 lakhs, எக்ஸிஸ்டிங் ரேட் எவ்வளவு டேக்ஸ் என்றால் 1,791.50 இப்பொழுது 'டிமான்டு' எவ்வளவு என்று சொன்னால் 9,40 ரூபாய் எண்ணிப்பாருங்கள்? 4,60,000 எங்கே, 9,400 எங்கே? அதேபோல் 'ஸ்டேன்ஸ் ஹைஸ்கூல்' போல் இங்கே ஒரு ஸ்கூல் இருக்கிறது. 'செண்பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் ஹயர் செகன்டரி ஸ்கூல், சாந்தோம். It is a reputed Institution. அதனுடைய வேல்யூ, It is valued at Rs. 50 lakhs. அதற்குபோடப் படுகின்ற வரி 1,510 ரூபாய். அதேபோல் மதுரையிலே எடுத்துக் கொண்டால் 'யூனியன் கிறிஸ்டியன் ஹயர் செகன்டரி ஸ்கூல், நியர் சென்ரல் பஸ் ஸ்டாண்ட்', மதுரை. It is valued at Rs. 6,22,632. Tax so far collected Rs. 1,337.55. இப்பொழுது அவர்களிடத்திலே கேட்கப்படுகின்ற வரி 9,520 ரூபாய். ஆக இவ்வளவு வேறுபாடு ஏன்? மாநகராட்சிகளுக்குள்ளாகவே, மூன்று மாநகராட்சிகளுக்குள் ஒரு மாநகராட்சியிலே மட்டும் இவ்வளவு பெரிய தொகையைக் கேட்க வேண்டிய அவசியம் என்ன? ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள், விளக்கம் மட்டும் போதாது, நிச்சயமாக இந்த வரிவிதிப்பை மாற்றி அமைக்க வேண்டும். வரி விதிப்பதுதான் என்று முடிவு செய்துவிட்டீர்களானால், நிச்சயமாக மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு பள்ளிக்கூடம் கோவையிலே இருக்கிறது. என். ஜி. ஆர். ஸ்கூல்'. 'என். ஜி. ஆர். என்றால் ஏதோ நினைத்து கொள்ளாதீர்கள். தியாகி என். ஜி. இராமசாமி அவர்களுடைய பெயராலே ஏற்படுத்தப்பட்டிருக்கிற பள்ளிக் கூடம். அதை யார் நடத்துகிறார்கள் என்றால், ஒரு தொழிலாளர் சங்கம் நடத்துகிறது. அந்த தொழிலாளர் சங்கத்திற்கு என்று பணம் கிடையாது. நிதிவசதி கிடையாது. அவர்களுடைய ஆலைத் தொழிலாளர்களுடைய பிள்ளைகளுக்கு அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் ஒரு மையமான பகுதியிலே இருக்கிற காரணத்தினாலே பெரும் தொகை அவர்களிடத்திலே கேட்கப்படுகிறது. அவர்களாலேயெல்லாம் அவ்வளவு பெரிய தொகையை எப்படி செலுத்த முடியும் என்பதை நீங்கள் நிச்சயமாக எண்ணிப்பார்க்க வேண்டும். வரி விதிப்பு நிச்சயம் நகராட்சிகளுக்கு அதை கொடுக்கத்தான் போகிறோம் என்று அரசு முடிவு செய்யுமானாலும் கூட அருள்கூர்ந்து, அந்த வழக்கு இப்பொழுது 'ஹைகோர்ட்டிலே' இருக்கிறது. சட்டத் துறை அமைச்சருக்கு தெரிந்திருக்க

வேண்டும். 'ஹைகோர்ட்டே' அதற்கு 'பார்ஷியல் ஸ்டே' கொடுத்திருக்கிறது. சட்டத்துறை அமைச்சருக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். எனவே, அந்த வேறுபாடுகளைக் களையவாவது அமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும். நிச்சயமாக செய்ய வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். 1980-81 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது கல்வி நிறுவனங்கள் 'ஸ்டெபிலிட்டி சர்ட்டிபிகேட்' வாங்க வேண்டுமென்று சட்டம் வந்தது. பி.டபிள்யூ.டி. இலாக்கா விடத்திலே 'ஸ்டெபிலிட்டி சர்ட்டிபிகேட்' வாங்க வேணும். கேட்கப்போனபோது பி.டபிள்யூ.டி. இலாக்கா '5% 'ஆப் தி வேல்யூ ஆப் தி பில்டிங்ஸ்' வேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். 'சர்ட்டிபிகேட்' தரவேண்டுமென்றால் 5 சதவீதம் அந்த சொத்தின்மதிப்பு எவ்வளவு அவ்வளவே கொடுக்க வேண்டு மென்று கேட்டிருக்கிறார்கள். எந்தக் கல்வி நிறுவனத்தாலும் கொடுக்க முடியாது. எம்.ஜி.ஆர். இடத்திலே முறையிட்டார் கள். எம்.ஜி.ஆர். கடைசியாக சொன்னார். 0.5 சதவீதம், அதாவது 1/2 சதவீதம் அல்லது -'மேக்சிமம்' மிக அதிகமாக 500, இதில் எது குறைவோ அதைச் செலுத்தினால் போதும். 1/2 சதவீதம் குறைவாக இருந்தால் 1/2 சதவீதம் செலுத்துங்கள். 500ரூபாய், மிக அதிகமானால் 500 ரூபாய் செலுத்துங்கள். சொல்லி அவர்கள் செய்தார்கள். அதே போல் நீங்களும் இதை நல்ல முறையில் பரிசீலித்து கோவையிலே வந்திருக்கின்ற இந்தக் கொடுமையைக் களைய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிந்தவரையில் இது அவசியமில்லாத சட்டம் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி ஒருவேளை இருந்தாலும் கூட, 'டேக்சேஷன்' என்பது either it should be nominal or notional என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

11-10 மணி.

திரு. எம். சிரங்கன் : 'பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடங்கள், சொத்துரிமை வரி விதிப்பின்படி பள்ளிகளுக்கு, கட்டிடங்களுக்கு வரி என்ற விதிப்பை நான் பொதுவாக வர வேற்பதோடு அதில் சிலருக்கு விதி விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பள்ளிகள், மாணவர்கள் விடுதிகள் அரசினுடைய கட்டிடங்கள், அநாதை இல்லங்கள் இப்படிப்பட்ட பொது பராமரிப்பில் இருக்கும்படியான அந்த நிலையங்களுக்கு எல்லாம் வரி விதிப்பிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட வேண்டும். மற்ற தனியாருடைய பள்ளிகள், தனியாருடைய கட்டிடங்கள் தனியாருடைய சொத்துரிமைகளுக்கெல்லாம் வரிகள் விதிக்கலாம். இன்றைக்கு தனியாருடைய பள்ளிகளானது கல்விக் கூடங்களாக அல்லாமல் ஒரு வருமானத்தொழிலாக நடத்தும்படியானநிலைமை இருக்கிறது. அவைகளை ஒரு வரையறை நிலைக்குக் கொண்டு வந்து, காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற நண்பர் பால சுப்பிரமணியம் சொன்னது போன்ற வித்தியாசங்கள், வேறுபாடு



கள்—நகரங்களுக்கு நகரம் வேறுபாடு இல்லாமல் ஒரு முறையான வரையறைக்குள் கொண்டு வந்து அவைகளை வரி விதிப்புக்கு உள்ளாக்கலாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி வரி விதிக்க வேண்டும் என்று இருக்கும்படியான இப்போது சேர்க்கப்பட்டு இருக்கும்படியான பொது நிறுவனங் கள்—மக்களுக்கு தேவையான அத்தியாவசியமான அநாதை விடுதிகள் உட்பட போன்றவைகள் எல்லாம் அதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டு பஞ்சாயத்தினுடைய வருமானங்கள், நகரசபையினுடைய வருமானங்கள் பெருகுவதற்காக இந்த வரி விதிப்பை ஒரு சீரான முறையில் அமுல்நடத்த அரசு ஒரே நிலையில் இருக்கும்படியானநிலையில் தன்னுடைய கண்காணிப்பில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் பல்வேறு பொது நிறுவனங்கள் பேரால் பல்வேறு பினாமி சொத்துக்களாக வைத்துக்கொண்டு வரிவிதிப்பி லிருந்து தப்பிப்பதற்காக முயற்சிக்கும்படியான அத்தகைய நிலைகளையும் ஆய்ந்து பரிசீலித்து வரி விதிப்புக்குள் கொண்டுவர வேண்டும் என்று கேட்டு இந்தச் சட்டத்தை நான் வரவேற்று அந்த விதி விலக்கை மட்டும் அளிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன்.

திரு. ரா. சொக்கர் : பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியில் விதிக்கக்கூடிய சொத்து வரியினுடைய ஆன்யூவல் ரெண்டல் வால்யூவை 18 ரூபாயிலிருந்து 180 ரூபாயாக உயர்த்து வதற்கான இந்த சட்ட முன்வடிவை அந்த முடிவினுடைய நோக்கத்தை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஏழை எளிய மக்களுக்கு வரி விதிப்பு இருக்கக்கூடாது என்ற நோக்கத்தில் இந்த அரசு அந்தச் சட்டத்தை கொண்டு வருகிறது. ஆனால் நல்ல நோக்கத்தோடு கொண்டுவரக்கூடிய இந்தச் சட்டத்தினால் அதே மக்களுக்கு பாதகமான ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை விளக்கிக் கூறி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூற விரும்புகிறேன். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அனைத்து நகராட்சிகளிலும் சேர்த்து சுமார் 1 கோடி ரூபாய் இழப்பு ஏற் படும் என்று நான் நினைக்கிறேன். ஏற்கனவே முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சருக்கும் இதுபற்றி கடிதம் கொடுத்திருக் கிறேன். அதில் 3 கோடி ரூபாய் என்று இருக்கிறது. ஆனால் அநேகமாக 1 கோடி ரூபாய் வரலாம் என்று நினைக்கிறேன். விருதுநகர் நகராட்சியில் மட்டும் 6,857 பேர் இதனால் பயனடை வார்கள். ஆனால் நகராட்சிக்கு வருமான இழப்பு ஆண்டு ஒன்றுக்கு 3,21,373 ரூபாய் ஆகும். ஆக ஏற்கனவே நிதிச் சிக்கலில் இருக்கக்கூடிய நகராட்சிகளுக்கு இது போன்ற சலுகை யினால் மேலும் நிதிச் சிக்கல் ஏற்படக்கூடிய ஒரு அபாயம் இருக் கிறது. ஒரு புறம் நிதிச் சிக்கலை விடுவோம். மறுபுறம் என்னாகும் என்றால் நகராட்சிகளிலே இருக்கக் கூடிய ஒவ்வொரு குடிமகனுக்கும் சொத்து வரியை கட்டிய ரசீது வேண்டும். ரேஷன் கார்டு வாங்குவதற்கோ அல்லது ரிஜிஸ்ட்ரேஷன் பண்ணுவதற்கோ

மின்வாரியத்திலிருந்து கனக்ஷன் பெறுவதற்கோ, போலீஸ் அல்லது வழக்கு மன்றங்களிலே ஜாமீன் எடுப்பதற்கோ அந்த ரசீது வேண்டும். ஒருவேளை அந்த ரசீதை பெறுவதற்கு இப்போது வரி விதிப்பு இல்லை என்று 'நில் பேமென்ட்' ரசீதைக் கொடுக்கக் கூடிய ஒரு முறையை அமுல்படுத்தலாம் என்று சொன்னாலும் கூட, நான் வரியே கட்டவில்லை எனக்கு வரி விதிப்பு இல்லை என்ற ஒரு ரசீதை வாங்குவதற்காக அவன் நிச்சயமாக பல இடங்களில் லஞ்சம் கொடுத்துத்தான் அதைப் பெற வேண்டிய ஒரு கட்டாயமான சூழ்நிலை ஏற்படும். இது எல்லாம் நிதர்சன உண்மை. நாம் ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும். லஞ்சத்தைக் குறைப்பதற்கு நாம் எத்தனைவிதமான சட்ட திட்டங்களைப் போட்டாலும் அதனைக் குறைத்துவிட முடியாது. ஆனால்

The system Should be so formul ted tha there is no necessity for the people to give b ibe and the e is no oppo tunity for the officials to receive bribes, என்ற ஒரு முறையை, சிஸ்டத்தை நாம் சரியாக வைத்துக் கொண்டால் தான் லஞ்சத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை நான் உங்களுக்கு மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

11-15 மணி

ஆனால் இன்று சட்டம் நீங்கள் கொண்டுவந்து இருக்கக் கூடிய நிலையிலே நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்து 20 பேரோ அல்லது 50 பேரோ வேண்டாம் என்று சொன்னாலும் நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளப்போவது இல்லை. பேரவைத் தலைவர் ஏற்போர் ஆம் என்க. மறுப்போர் இல்லை என்க என்று சொல்வார், அது பாஸ் ஆகி விடும். ஆகவே நடைமுறையில் என்ன சொல்கிறேன் என்றால் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏதாவது மாற்றிச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறீர்களா ?

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைமுறையில் நடப்பதைச் சொல்கிறேன். எனவே, நடைமுறையில் பிராக்டிக்கலாக இருக்கவேண்டும் என்பதற்காக நான் என்ன சொல்கிறேன் என்றால், இதிலே ஒரு திருத்தம் கொண்டு வர முடியுமா என்று பாருங்கள். சட்டத்திலே திருத்தம் இல்லை என்றாலும் கூட ஒரு அட்மினிஸ்டிரேடிவ் ஆர்டர் மூலமாக இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதை அடுத்து 'குயின்குனியல் ரிவிஷன்' போது எடுத்துக் கொள்ளப்படும் என்ற முறையிலே அந்தத் திருத்தத்தை கொண்டுவர வேண்டும்.

தற்போது நடைமுறையில் இருக்கக்கூடிய ஒரு வழக்கமானது, 18 ரூபாய்க்கு கீழே இருந்தால் வரி விதிப்பு இல்லை என்று இருக்கிறது. ஆனால் நடைமுறையிலே விருதுநகர் நகராட்சியைப்



ாறுத்தவரையில் குறைந்தபட்ச வரி 'ஆனிவல் ரெண்டல் ல்யூ '120 ரூபாயாக நாங்கள் நிர்ணயம் செய்து இருக்கிறோம். கவே, நடைமுறையில் அந்த அந்த நகராட்சிகளுக்கு தக்கபடி த்துக்கொள்ளக்கூடிய முடிவாக இது இருக்கும்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு பல அதிகாரங் ள நகராட்சிகளுக்கு கூட்டிக்கொடுக்கத்தான் செய்திருக்கிறது. திகரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே முக்கியமானது ரி விதிப்பை குறைக்கக்கூடிய அதிகாரத்தை நீங்கள் நகராட்சி நக்குக் கொடுத்து இருக்கிறீர்கள். ஆக யாருக்குக் கூடுதலாக ருக்கிறது என்று அந்த நகர மன்றம் கருதுகிறதோ அவர்களுக்கு வருடைய தகுதியின் அடிப்படையில் குறைத்துக்கொள்ளவதற்கு திகாரம் அந்த நகர மன்றங்களுக்கு இருக்கிறது. ஆனால் ட்டுமொத்தமாக இவ்வளவு தான் வைக்க வேண்டும் என்று ங்கள் நிர்ணயம் செய்வீர்களானால் அந்த நகர மன்றத்திற் ரிய அதிகாரத்தை சற்று குறைப்பதாக ஆகிறது.

இந்த மன்றத்திலே அரசு கொண்டு வரக்கூடிய ஒரு சட்டத்தை திர்த்து நான் பேசுவதாக நினைக்க வேண்டாம். 1986 ஆம் ண்டு டிசம்பர் மாதத்தில் எங்கள் நகர் மன்றக்கூட்டத்திலே ணதப்பற்றி விவாதம் நடந்தபோது அ.தி.மு.க.வைச் சேர்ந்த றுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களும், தி.மு.க.வைச் சேர்ந்த றுப்பினர் திரு. ராஜசேகரன் அவர்களும் இந்த வரி விதிப்பை ாற்றி குடிசைகளுக்கு வரி விதிப்பு ரத்து செய்யப்படுமா என்று வர்கள் கேட்ட கேள்விக்கு அன்றே நான் சொல்லியிருக்கிற தில் குடிசைகளுக்கு நியாயமான முறையில்—வரியை அதிகமாகப் பாட மாட்டோம், ஆனால் ஏற்கனவே இருக்கக்கூடிய வரி ருக்கும். ஏன் என்றால் குடிசை வாழ் ஜனங்களும் வரி கட்டின து எங்களுக்கு தேவையாக இருக்கிறது என்று கேட்பதனுடைய டிப்படையில் அதை செய்கிறோம்.

180 ரூபாய் என்று இருந்தால் 36 சதவீதம் டாக்ஸ்சேஷன் துதான் உயர்ந்தபட்சம் அதற்கு மேல் யாரும் உயர்த்த முடி ாது என்று இருக்கும்போது 6 மாதத்திற்கு 32 ரூபாய் 15 பைசா வருகிறது. அது நாள் ஒன்றுக்கு சுமார் 17 பைசா. இன்று ஒரு நபர் வேலை பார்த்தால் 20 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரை ஒரு நாளைக்கு சம்பாத்தியம் செய்யக்கூடிய நிலையில் நீங்கள் அளிக்கின்ற சலுகை ஒரு நாள் ஒன்றுக்கு 17 பைசாவாக இருந் தால் நிச்சயமாக அவர்களுக்கும் திருப்தியை ஏற்படுத்தாது. ஆனால் அந்த 17 பைசா 17 பைசாவாக நாங்கள் 3 லட்சத்து 11 ரூபாயை சேமிப்பதன் மூலமாக அந்த குடிசைப் பகுதிகளில் வாழக்கூடிய மக்களுக்கு நல்ல சாலைகள் அமைத்துக் கொடுத்தல்; சுகாதாரத்தை மேம்படுத்துதல் ; அவர்களுக்கு வேண்டிய அடிப் படை வசதிகளை செய்து கொடுத்தல் போன்ற காரியங்களுக்கு

அந்தப் பணம் பயன்படும் என்பதால் என்னுடைய கருத்தையும் நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற ஒரு குறிப்போடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் புதிதாக தாக்கல் செய்து இருக்கின்ற இந்த மசோதா நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் உண்மையில் வருமானத்தை உயர்த்தவேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். பொதுவாக இன்றைக்கு மாநகராட்சிகளும், நகராட்சிகளும் நிதித் தட்டுப் பாட்டின் காரணமாக எந்தப் பணியும் ஆற்ற முடியாமல் அரசை மட்டுமே நம்பிக் கொண்டு சாதாரண மக்களுடைய அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலைமையில் இருப்பது நாம் அனைவருக்கும் தெரியும். ஆகவே, ஓரளவுக்காவது நிதி ஆதாரத்தைப் பெருக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்த மசோதா இன்றைக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக தமிழ்நாட்டின் மற்ற எல்லாப் பகுதிகளிலும் பார்க்கும்போது நூற்றுக்கணக்கில் மட்டும் கல்வி நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டு இருந்த அந்த வரியை சில ஆயிரங்களாக மாற்றியிருக்கிறார்களே தவிர இதிலே கல்வி நிறுவனங்கள் மிகப் பெரிய அளவுக்கு பாதிக்கப்படும் என்று எந்தப் பகுதியில் இருந்தும் புகார்கள் இல்லை. ஆனால் கோவை மாநகராட்சியில் மட்டும் ஒரு விசித்திரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த சட்டத் தினுடைய உண்மையான அந்தப் பொருளை புரிந்துகொள்ளாமல் கல்வி நிறுவனங்களுக்கு இப்போது இருக்கக்கூடிய வணிகர்களுடைய சொத்து மதிப்பைப் போல ப்ராப்பர்ட்டி டாக்ஸ் விதிக்கப்பட வேண்டும் என்பதை அங்கே கோவையில இருக்கக்கூடிய மாநகராட்சி அதிகாரிகள் எப்படிப் புரிந்து கொண்டார்கள் என்று தெரியவில்லை.

11–20 மணி

அங்கே இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு நூற்றுக் கணக்கிலே இல்லை, ஆயிரக்கணக்கிலே இல்லை லட்சக்கணக்கிலே் வரியை விதித்து மிகப்பெரிய ஒரு குழப்பத்தை கோவை மாநகராட்சி யிலே உருவாக்கி இருக்கிறார்கள். கோவை மாநகராட்சிக்கு நிதி ஆதாரம் தேவை என்பதிலேயோ, வரிவிதித்தால்தான் நிதி ஆதாரம் சேரும் என்பதிலேயோ எந்தவிதமான இருவேறு கருத்துக்கு இடமில்லை. அங்கே இருக்கின்ற கல்வி நிறுவனங் களும் மற்ற மதுரை, சென்னை போன்ற பகுதிகளுக்கு விதிக்கப் படுவதைப் போன்ற வரி உயர்வினை ஏற்றுக்கொண்டு அந்த வரியினைச் செலுத்துவதற்கு அந்தக் கல்வி நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன. ஆனால், அதற்கு முற்றிலும் மாறாக மிகப் பெரிய டிரஸ்டுகளின் சார்பிலே மிகச் சிறப்பாக நடத்தப்



படுகின்ற, அந்தப் புகழ்மிக்க பள்ளிகளுக்கெல்லாம் லட்சக் கணக்கிலே வரி என்பது முற்றிலும் அவர்களால் கட்டமுடியாத அந்த வரியினை ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலைமைதான் ஏற்படும். இங்கே மணீஸ் ஹைஸ்கூல் என்ற ஒரு பள்ளியைப்பற்றி நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். புகழ்வாய்ந்த அந்தப் பள்ளியில் ஏறக்குறைய 2,500க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்ற அந்த மணி உயர்நிலைப்பள்ளிக்கு திடீரென்று ஆண்டொன்றுக்கு 3 லட்சம் ரூபாய் நீங்கள் ப்ராபர்டி டாக்ஸ், சொத்து வரி கட்டவேண்டு மென்று மாநகராட்சி ஆணை பிறப்பித்து இருக்கிறது. அதேபோல ஸ்டேன்ஸ் ஹையர் செக்கன்டரி ஸ்கூல் நீண்ட காலமாக நடந்துகொண்டிருக்கின்ற, ஆங்கிலோ இண்டியன் பள்ளி. அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 4 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டுமென்று திடீரென ஒரு ஆணை பிறப் பித்து இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, 1983-ஆம் ஆண்டிலேயிருந்து ஏறக்குறைய 30 லட்சம் ரூபாய்களுக்கு மேல் உடனடியாக சொத்து வரியைச் செலுத்தவேண்டுமென்று அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. எதற்கு இதை நான் இங்கே குறிப் பிடுகிறேன் என்று சொன்னால், இந்த இரண்டு பள்ளிகளுக்கு மட்டுமல்ல, கோவையிலே இருக்கக்கூடிய கோவை மாநகராட்சி யிலே இருக்கக்கூடிய மணி உயர்நிலைப் பள்ளியானாலும் சரி, ஸ்டேன்ஸ் உயர்நிலைப்பள்ளியானாலும் சரி இன்னும் பல்வேறு தனியார் பள்ளிகளுக்கு, கார்ப்பரேஷன் பள்ளிகளுக்கெல்லாம் இப்படிப்பட்ட தாக்கீதுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் உடனடியாக இதிலே கவனம் செலுத்தவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் ரூபாய், 3 இலட்சம் ரூபாய் என்று வரியினை விதித்து, அதிலும் 1983ஆம் ஆண்டிலே இருந்து இப்போது செலுத்தவேண்டும், 30 இலட்சம் செலுத்தவேண்டும், 20 இலட்சம் செலுத்த வேண்டும் என்றால் அந்தப் பள்ளிகள் முழுவதும் இப்போது கோர்ட்டுக்குப் போய் இருக்கிறார்கள். நியாயமாக, மதுரை யைப்போல, சென்னையைப்போல ஆயிரக்கணக்கிலே வரி விதித்தால் வரியைக் கட்டுவார்கள், கார்ப்பரேஷனுக்கும் வரி வந்து சேரும். ஆனால், இப்படி லட்சக்கணக்கிலே விதித்த காரணத்தால் மணீஸ் ஹைஸ்கூலிலே என்ன செய்து இருக் கிறார்கள் என்றால், கோர்ட்டுக்குப் போய் இருக்கிறார்கள். ஹை-கோர்ட்டிலே இப்போது தீர்ப்பு கொடுத்து இருக்கிறார் கள். வழக்கு முடிகின்ற வரை 6 மாதகாலத்திற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்று மாநகராட்சி விதித்த வரியில் ஆறில் ஒரு பங்கை மட்டும் இப்போது கட்டினால் போதும் என்று சொல்லி ஹை-கோர்ட் ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிறது, மணீஸ் ஹைஸ்கூலுக்கு.

அதே போல ஸ்டேன்ஸ் ஹையர் செகண்டரி ஸ்கூல். ஆங்கிலோ இண்டியன் ஸ்கூல், அவர்களும் ப்போது ஹை கோர்ட்டுக்குப் போய் விட்டார்கள், 30 இலட்சம் ரூபாய் எங்களால் கட்ட முடியாது; வருடத்திற்கு 4 இலட்சம் ரூபாய் கட்ட முடியாது என்று அவர்களும் கோர்ட்டுக்குப் போய் விட்டார்கள். ஆக, அதிலேயும் கோர்ட் ஒரு ஸ்டே கொடுக்கப் போகிறது. இனிமேல் வருடக்கணக்கிலே அந்த வழக்கு நடக்கும். ஆகவே, முனிசிபாலிட்டிக்கு வரவேண்டிய வருமானமும் கார்ப்பரேஷனுக்கு வரவேண்டிய வருமானமும் வந்து சேராத நிலை ஏற்படும். ஆகவே, உடனடியாக இதிலே அமைச்சர் அவர் கள் தலையிட்டு, ஏன் கோயம்பத்தூரிலே மட்டும் இந்த நிலை ஏற்பட்டது. என்பதை ஆராய்ந்து, அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ள வில்லையா என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் இதிலே கவனத்தைச் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். ஏப்ரல் 15–ஆம் தேதி 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை கோவையிலேயிருந்து வந்த பத்திரிகையிலே வந்த தலைப்பே, "Heavy Property Tax on schools resented" என்று ஒரு பெரிய செய்தியே அதிலே வெளியிடப்பட்டிருக்கிற நிலைமை ஏற்பட்டி ருக்கிறது. அதேபோல 'இந்து' பத்திரிகையிலே "Schools in a fix over Property Tax" என்று அவர்களும் தனியாக ஒரு கட்டுரை யையே வெளியிடுகின்ற அளவிற்கு கோவை மாநகராட்சியிலே நிலைமைகள் ஏற்பட்டு இருக்கின்றன. ஆகவே, இவைகளையெல் லாம் கருத்திலே கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன். ஏனென்றால் இப்படிப்பட்ட பள்ளிகளுக்கெல்லாம் கவர்ன்மெண்ட் ஆடிட்டிங் இருக்கிறது. ஸ்டேன்ஸ் ஹையர் செகண்டரி ஸ்கூலுக்கு 4 இலட்சம் ரூபாய் வரி வருஷத்திற்கு என்று சொன்னால், அவர்கள் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஆண்டொன்றுக்கு நாங்கள் நஷ்டத்திலே இயங்கிக்கொண்டு இருக் கிறோம் என்று கவர்ன்மெண்ட் ஆடிட்லேயே முடிவாகி இருக்கிறது. அதேபோல மணீ'ஸ் ஹைஸ்கூலிலே இங்கிலீஷ் மீடியத்திற்கு மட்டுந்தான் அவர்கள் மாணவர்களிடத்திலேயிருந்து ஃபீஸ் கலக்ட் பண்ணுகிறார்கள். கலெக்ட் பண்ணுகிற அந்தப் பணத் தையும் கவர்ன்மெண்டுக்கு பே பண்ணி விடுகிறார்கள். மீதி எல்லா செலவினங்களையும் மணீ'ஸ் ஹைஸ்கூல்' டிரஸ்ட்தான் ஏற்றுக்கொள்கிறது. அப்படியிருக்கின்ற பொழுது, அவர்களுக்கு கொண்டு போய் தாங்கமுடியாத அளவிற்கு, கமர்ஷியலாக ஒரு கடை வைத்திருந்தால், இவ்வளவு பெரிய கடை இருந்தால் அதற்கு எவ்வளவு டேக்ஸ் ஆகுமோ இவ்வளவு பெரிய மைதானம் வணிக நிறுவனமாகப் பயன்படுத்தப்பட்டால் எவ்வளவு டேக்ஸ் ஆகுமோ அதைத்தான் போடவேண்டுமென்று சொல்வது சரியாகப் படவில்லை.

11-25 மணி.

இவற்றையெல்லாம், 'முனிசிபல் கார்ப்பரேஷன் அதாரிடி' யைச் சார்ந்த அதிகாரிகளோடு கலந்துபேசிய போது, அவர்கள் இவர்களுக்கு என்ன பதில் சொல்கிறார்கள் என்று சொன்னால்,



(மணியடிக்கப் பெற்றது.) முடித்து விடுகிறேன் ஐயா. என்ன பதில் சொல்கிறார்கள் என்றால், எங்களுக்கு வந்த உத்தரவுப் படி, இப்படித்தான் வரிபோட வேண்டும்—'கமெர்ஷியல்' நிறுவனங்களுக்கு ஏற்றாற்போல் வரிபோட வேண்டும் என்று உத்தரவு இருக்கிறது எனவே, அந்த வரியைத்தான் நாங்கள் போடுகிறோம் என்று சொல்கிறார்கள். இது சரியான, பொருத் தமான பதில் இல்லை. மாநகராட்சிக்கு வருகிற வருமானத் தையே கெடுக்கிற வேலை இது. ஹைகோர்ட்டுக்கு போய் 'ஸ்டே' வாங்கி, வருகிற வருமானத்தையும் கெடுக்கிற வேலை. கோவையிலே மட்டும் எங்களுக்கு இந்த நிலைமை கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் பல பகுதி களிலேயும் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படலாம். ஆகவே, அமைச்சர் அவர்கள், இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மாநகராட்சியினுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கு, நியாயமான அளவில் கல்வி நிலையங்களுக்கு வரியை விதிக்க வேண்டும். அவர்கள் கட்ட முடியாத அளவுக்கு வரியை விதிக்கக் கூடாது என்ற நிலைமையில் சட்டத்தை சரியான முறையில், அதிகாரிகள் அமல்படுத்த வேண்டுமென்றும், அந்த நிலையில் அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு உத்தரவிட வேண்டு மென்றும் இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தாக்கல் செய்யப்பட்டிருக் கின்ற இந்தத் திருத்தத்தை எதிர்க்கின்ற நேரத்தில், இது தேவையில்லாத—கல்வி நிலையங்களுக்கு மேலும் சுமையை ஏற்றுகின்ற ஒரு சட்டம் என்ற முறையிலே, இதை அரசு மறு பரிசீலனை செய்து 'வாபஸ்' பெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சொத்து வரியை, கல்வி நிலையங் களுக்கு நாம் போடுகிறோம் என்று சொன்னாலும், அதை கல்வி நிலையங்கள் கட்டமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, அதனால் அரசுக்குத்தான் அதனுடைய சுமைகளைத் தாங்க முடியாத நிலைமை வரும் என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில், அவைகள் எல் லாம் வருமானம் வரக்கூடிய நிலையங்கள் அல்ல. அல்லது வியாபார நிறுவனங்கள் அல்ல. இதை இரண்டையும் கருத்தில் கொண்டு, ஏற்கெனவே பல்வேறு உறுப்பினர்கள் விரிவாகப் பேசியிருப்பதன் காரணமாக, அதையும் எடுத்துக் கொண்டு, மறுபரிசீலனை செய்து, கல்வி என்பது, அதிலும் குறிப்பாக, ஏழை மக்களுக்கும், மற்றவர்களுக்கும் வழங்கக் கூடிய ஒரு தொண்டு நிறுவனம் என்ற முறையிலே அவர்களுக்கு புதிதாக இந்த வரியை நீங்கள் போடுவதற்கு வழிவகை செய்கின்ற சட்டத்

[திரு. எஸ். டி. உகம்சந்த்]



தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதை வாபஸ் பெற
வேண்டும் ; நகராட்சிகளினுடைய வருமானத்தைப் பெருக்க
வேண்டும் என்பதிலே கருத்து மாறுபாடு இல்லை ; அதற்கு
வேறு வழிகள் இருக்கின்றன. அரசாங்கத்தின் பல்வேறு துறை
களின் மூலமாக வருகின்ற வருமானத்தில், பங்குகளை நாம்
சீரான முறையில் பிரித்துத் தந்தாலே, நகராட்சிகளுக்கு,
மாநகராட்சிகளுக்கு வேண்டிய நிதிகள் கிடைக்கும். உதாரண
மாக, கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில், முன்பு 90
சதவிகிதம் வரை, அதிலே இருந்து வருகின்ற வருமானம் நகராட்
சிகளுக்கு வழங்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு அது மிகவும்
குறைக்கப்பட்டு, 45 சதவிகிதம் தான் வழங்கப்படுகிற நிலை
மைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஒரு பக்கத்திலே
வருமானம் வருகின்ற சூழ்நிலையை நாம் குறைத்திருக்கிறோம்.
ஆனால், மக்களுக்குப் பயன்படுகின்ற இந்தத் தொண்டு
நிறுவனங்கள் மீது வரியைப் போட்டு, நகராட்சிகளின் நிதியைப்
பெருக்குவதற்காகக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்
வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துக் கொண்டு,
மற்றொன்று இன்றைக்கு........

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது தொண்டு
நிறுவனங்கள் என்று சொன்னார். எல்.கே.ஜி.-க்கு ஐயாயிரம்;
யூ.கே.ஜி.,க்கு ஏழாயிரம், ஆறாவது வகுப்பிற்கு பத்தாயிரம்
இப்படித்தான் ஒவ்வொரு தனியார் கல்வி நிறுவனங்களும்
வாங்கிக் கொண்டு, பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்த்துக்
கொள்கிறார்கள். அது இல்லாமல், வருடம் பூராவும்,
பிள்ளைகளிடம் 'கார்டு' கொடுத்து, ஒவ்வொரு அகேஷனிலும்
'பில்டிங் பண்டு', வாத்தியாருக்கு, அதற்கு, இதற்கு
என்று வாங்குகிறார்கள். வருடத்திற்கு ஒரு முறை,
நான் 'பேரன்ட்' என்ற முறையில் சொல்கிறேன்; என்னுடைய
குழந்தைகள் படிக்கிறபோது, வருடத்திற்கு எப்படியும்
ரூ. 1,500-க்குக் குறையாமல் கொடுத்திருக்கிறேன். பள்ளிக்
கூடத்தில் சேர்ப்பதற்கு ரூ. 5 ஆயிரம் கொடுத்திருக்கிறேன்.
இந்த மாதிரி நிறுவனங்களை, தொண்டு நிறுவனங்கள் என்று
எப்படிச் சொல்கிறார்கள்? வியாபார ரீதியாகத்தான் எல்லா
ஸ்கூல்களும் நடக்கின்றன—தனியார் பள்ளிக் கூடங்கள்.
அர்சாங்கப் பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கம் கிராண்ட்
கொடுக்கிறது. நூற்றுக்கு, தொண்ணூறு சதவிகிதம் கிராண்
டிலே போய் விடுகிறது. பத்து பங்குகூட கையைவிட்டு அவர்கள்
செலவு செய்வதில்லை. இருக்கிற பொது மக்களை எல்லாம்
துன்புறுத்தி, அவர்களுக்கு வேறு வழியில்லாமல், அவர்களைக்
கசக்கிப் பிழிந்து பணத்தை வசூலிப்பவர்களிடமிருந்து,அரசாங்
கம் வரி வசூலிப்பதிலே என்ன தவறு இருக்கிறது என்பதைச்
சொல்லுங்கள்.



திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. என். கணபதி அவர்கள் பள்ளிகளிலே நடைபெறுகிற கட்டாய 'கேப்டேஷன் ஃபீ' பற்றிச் சொன்னார்கள். மாணவர்களிடத்திலே வசூலிப்பது மற்ற இடங்களிலே வசூலிப்பது பற்றி எல்லாம் சொன்னார்கள். பல பள்ளிகளில் அப்படி நடைபெறுகிறது. ஒத்துக்கொள்கிறோம். ஆனால் எல்லா பள்ளிகளிலும் அப்படி நடக்கிறது என்ற வாசகத்தை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. எல்லா பள்ளிகளிலும் அவ்வாறு நடைபெறுவதில்லை. அற்புதமாக நடக்கின்ற ஒரு பைசா கூட மாணவர்களிடத்திலேயிருந்து வாங்காமல் ஒரு கௌரவத்திற்காக, ஒரு நல்ல பொது நோக்கத்திற்காக நடைபெறுகிற பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே பல பள்ளிகள் அப்படி வசூல் பண்ணுகிறது என்ற காரணத்திற்காக நாம் இலட்சக் கணக்கில் டாக்ஸ் போடுவோம் என்று சொல்வது சரியல்ல. பிறகு பள்ளியே நடத்த முடியாது.

11-30 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிவிலக்குகளை வாழ்த்துவோம்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில கட்டிடங்களுக்கு விதிவிலக்கு வேண்டுமென்று உறுப்பினர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஏற்கனவே விதிவிலக்கு இருக்கிறது என்பதை நான் சுருக்கமாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பொது வழிவகைக்கு என்று ஒதுக்கி வைக்கப்பட்டு உள்ளவாறே அவ்வாறு பயன்படுத்தப்படும் கட்டிடங்கள், பிற நோக்கம் எதற்கும் பயன்படுத்தப்படாத இடங்கள் அதாவது சத்திரங்கள் மற்றும் தங்குவதற்கு பயன்படுத்தப்படக்கூடிய வாடகை எதுவும் விதிக்கப்படாத அந்த சத்திரங்களுக்கும், மற்ற சத்திரங்களுக்கும் மற்ற இடங்களுக்கும், அவற்றை வாடகைக்கு விட்டாலுமே விதிவிலக்கு உண்டு. அது கடைசியில் இப்போது அமன்மென்ட் வருவது கூட ஆதரவற்றவர்கள் அல்லது விலங்குகளுக்கு புகலிடம் அளிக்கின்ற அறம் சார்ந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் பொதுக் கட்டிடங்கள் மற்றும் பொதுமக்கள் அணுகத்தக்க நூலகங்கள், மற்றும் விளையாட்டு மைதானங்கள் இவைகளுக்கு விதிவிலக்கு உண்டு. ஆகவே விதிவிலக்கு அளித்துத் தான் வருமானம் வருவதற்காக போடப்படுகிறது என்று குறிப்பிட்டு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கு நான் பதில் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் ஒரு புதிய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது 'கேப்பிட்டேஷன் ஃபீஸ்' என்று கல்வி நிறுவனங்களிலே வாங்கிக்கொண்டு

இருக்கிறார்கள். அது தெரியும் என்று சொல்கிறார்கள். அதைத் தடுக்கவேண்டியது அரசினுடைய கடமை. நாமெல் லாம் சொல்கிறோம். மதுவிலக்கை அரசாங்கம் சரியாக அமல்படுத்தி நடத்த முடியவில்லை என்றால் அதற்காக அதை ரத்து செய்கிறோம். அதேபோன்று திருட்டையும் நம்மால் தடுக்க முடியவில்லை எனவே அதையும் நாம் லீகலைஸ் செய்கிறோம் என்று சொல்லலாமா ? அதேபோன்று தான் 'கேப்பிட்டேஷன் ஃபீஸ்' வாங்கப்படுவதைப் பொறுத்த வரையில் அரசு தடுக்க வேண்டுமே தவிர அதற்காக நாம் இந்த வரியை வசூல் செய்கிறோம் என்று சொல்லி நியாயப் படுத்தக்கூடாது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். எனவே அதைத் தடுக்கிற அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர அதை ஒழிக்க முடியாததால் இந்த வரி போடுவதாக....

**திரு. என். கணபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றவர்களாகிய எங்களுடைய நிலைமை பிள்ளைகள் படித்தால் போதும், அவர்கள் வாழ்க்கையில் உயர்ந்தால் போதும் என்றுதான் நினைக்கிறோமே தவிர, அவர்கள் அவ்வாறு வாங்குகிறார்கள், எனவே அரசாங்கத்திற்குத் தெரிவித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுப்போம் என்ற மனப்பான்மை பொது மக்களுக்கும் வருவதில்லை. எனக்கும் குறிப்பாக வருவதில்லை.

**திரு. மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்களுடைய பிள்ளைகள் யாரேனும் படிக்கி றார்களா ?

**திரு. எஸ். ஆர். இராதா :** பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் அப்படிப்பட்ட பள்ளிக் கூடங்களில் குழந்தைகளைச் சேர்க்கக் கூடாது. பணம் வாங்காத பள்ளிகளும் சென்னையில் இருக்கின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களிலேயே சேர்க்க லாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரியாகச் சொன்னீர்கள். இனிமேல் எல்லோரும் அதையே கடைப்பிடிக்கலாம் (சிரிப்பு).

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன் காரணமாக நல்ல நோக்கத்தில் நடை பெறுகிற அந்தக் கல்வி ஸ்தாபனங்களும் இதேபோன்று 'கேப்பிட்டேஷன் ஃபீஸ்' வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுமே என்ற காரணத்திற்காக இதை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த் வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்து விடை பெற்றுக் கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய சட்டமன்றத்தில் இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு திரு. பாலசுப்பிர மணியம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு திரு. சீரங்கன் அவர்களும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு திரு. உகம்சந்த் அவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த விருதுநகர் நகராட்சி மன்றத்தின் தலைவரும், இந்தச் சட்ட மன்றத்தின் உறுப்பினருமான திரு. சொக்கர் அவர்களும் இங்கே கருத்துரைகளை வழங்கி இருக்கிறார்கள். கூடுமானவரையில் எனக்கு இருந்த சிரமத்தைக் குறைத்து இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். காரணம் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர் தரப்பு கருத்துக்களையும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் கள் ஆளும் தரப்பு கருத்துக்களையும் ஒருவருக்கொருவர் நன்கு பதமாக பரிமாறி, அவர்களே ஒரு முடிவுக்கு வந்து இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொள்கிற வகையில் அரிய யோசனைகளை வழங்கியதற்காக முதலில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதற்கடுத்தாற்போல் தனிப்பட்ட சில குறைபாடுகளை இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலமாக இங்கே வெளிப்படுத்தி இருப்பதை நான் கூர்ந்து கவனித்துக்கொண்டுதான் இருந் தேன். நம்முடைய மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும், மாண்புமிகு திரு. மோகன் அவர்களும் கருத்துக் கள் சொல்லும்போது திரு. பாலசுப்பிரமணியம் அவர்களை சற்றுத் தாண்டி நம்முடைய ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. மோகன் அவர்கள் ரொம்ப அழுத்தமாக இந்த வரியைப் பற்றி பேசினார்கள். ஆரம்பத்திலே வரவேற்று கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மட்டும் இது கொடுமை விளைவித்து விட்டது என்று குறிப்பிட்டார்கள். திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கோவை மாவட்டத்தி னுடைய மற்றும் மதுரை மாவட்டத்தினுடைய விவரங்களை எடுத்துக் காட்டினார்கள். நான் கோவையிலே விதித் திருப்பது சரி என்ற வாதத்திற்கு தற்போது வரவில்லை. காரணம் அதற்கு சரியான விவரம் தற்போது என்னிடம் இல்லை. அதில் தனியாக உயர் நீதிமன்றத்திலும் வழக்கு இருக்கிறது. ஆனால் கோவையும் மதுரையும் வரிவிதிப்பில் ஒன்றாக இல்லை. தனிப்பட்ட முறையில் பார்த்தாலும்கூட, வீடுகள் மற்ற இதர சொத்து வரிகளைப் பார்த்தாலும்கூட, சொத்து வரியில் மதுரைக்கும், கோவைக்கும் வேறுபாடாக இருக்கிறது.

11–35 மணி

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மதுரை மட்டு மல்ல, சென்னை நகரத்திலேயும் குறிப்பிட்டுக் காட்டினேன். 1,500 ரூபாய் செயின்ட் பீட்ஸ் ஸ்கூலுக்குப் போட்

டிருக்கிறார்கள். ஆனால் அங்கேயிருக்கிற ஸ்டேன்ஸ் ஹைஸ்கூலுக்கு ரூ. 4,63,000 போட்டு இருக்கிறார்கள். இது எந்த சதவீதக் கணக்கில் வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும்கூட சொல்கிறேன். மாநகராட்சியும் நகராட்சியும், எல்லா இடத்திலும் இருக்கிற எல்லாக் கட்டிடங்களையும் ஒரே மதிப்பில், ஒரே வாடகை வருகிறதா என்று பார்த்து வரி விதிப்பதில்லை. ஆகவே, மாநகராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், இடத்திற்கு இடம், கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கிற இடத்திற்குத் தக்கவாறு வரி விதிப்புகள், வாடகை அமைப்புகள் மூலம் மாற்றப்படுகிறது. இப்போதும் சொல்கிறேன், கோவையில் விதித்திருக்கின்ற வரியை நியாயம் என்று நான் வாதாட வரவில்லை. அதை நாம் தனியாக வைத்துக் கொள்ளலாம். இந்தச் சட்டத் திருத்தம் ஒரு கொள்கையின் அடிப்படையில் வந்திருக்கிறது. இதுவரை விடுபட்ட கல்வி ஸ்தாபனங்கள் கொடுக்கிற தகுதியான வாடகை அடிப்படையில் வரி விதிக்க வேண்டுமென்று நாம் கொண்டு வந்திருக்கிறோம். அதற்குக் காரணம், — இங்கே மோகன் ஒரு விளக்கம் சொன்னார், மாண்புமிகு கணபதி ஒரு விளக்கம் சொன்னார். எல்லா கல்வி நிறுவனங்களும் நிச்சயமாக வணிக முறையில் நடத்தப்படுகிறது என்ற கருத்தும் சில நிறுவனங்கள் நல்ல முறையில் நடைபெறுகின்றன என்ற கருத்தும் இங்கே பரிமாறிக் கொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டுக்கும் நடுவே ஒன்றைச் சொல்கிறேன். இரண்டும் நடக்கிறது. வணிக முறையாகவும் நடக்கிறது. கல்வி தர வேண்டுமென்ற நோக்கத்தோடும் நடக்கிறது. உண்மையாக, நியாயமாக ஆரம்ப காலத்தில், அரசாங்கம் கல்விக்கென்று இவ்வளவு தூரம் செலவழிக்காமல், இவ்வளவு ஈடுபாடு இல்லாமல் இருந்த அந்தக் காலத்தில், தனியார் புலர், அந்தக் கல்வியை ஏற்று, பெருந்தன்மையோடு, தகுதி படைத்தவர்கள், வாய்ப்பு வசதியுள்ளவர்கள் கல்வி நிறுவனங்களை அமைத்து, வளர்த்திருக்கிறார்கள். இன்று வரையில் சிறப்பாக வளர்ந்து வருகின்ற கல்வி நிலையங்களும் உண்டு. அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட கல்வி நிலையங்கள் எதுவும் பாதிக்கப்படாத அளவுக்கும் இந்த அரசு பாதுகாப்பாக இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதில் முதல் கட்டமாக நான் கல்வி அமைச்சர் அவர்களையும், முதல்வர் அவர்களையும் கலந்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு இருந்தாலும் அதிகாரிகளை அணுகி, அவர்கள் போட்டிருக்கிற வரி விகிதத்தின் அடிப்படையில் அதிலே மாறுதல் செய்ய வேண்டுமானால் வரி மதிப்





பீட்டுக் குழுவின் மூலமாகவோ அல்லது அரசாங்கத்தின் மூலமாகவோ, ஏற்பாடு செய்யப்படும் என்பதையும் இந்த அவையில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று திரு. சீரங்கன் அவர்கள் விதிவிலக்கைப் பற்றிச் சொன்னார்கள். அந்த விதிவிலக்குக்கு பதிலை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சம்பத் அவர்களும் திரு. சொக்கர் அவர்களும் சொல்லிவிட்டார்கள். ஆகவே அதிலே நான் அதிகமாக குறுக்கிடவில்லை. அதைத் தாண்டி கட்டிடங்களுக்கு வரி விதிக்கிறோம் என்றால் ஏதோ நாங்கள் அனாவசியமாக விதிக்கவில்லை. முன்னுரையில் கூட தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். நலிந்திருக்கின்ற நகராட்சிகளுக்கு ஓரளவு உதவி செய்யலாம் என்று சொல்லியிருக்கிறோம். அதிலே திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது ஒரு இலாக்காவிலிருந்து எடுத்து இன்னொரு இலாக்காவுக்கு கொடுக்க வேண்டுமா என்றுகூட கேட்டார்கள். எங்களிடம் இருக்கிற தண்ணீர் தொட்டிக்குக்கூட மின்சார இலாக்காவுக்கு நாங்கள் பணம் செலுத்துகிறோம். அது தனி வாரியம். ஆனால் எல்லாச் சுமைகளையும் முதலமைச்சர் ஏற்கிறார். எல்லாவற்றையும் இந்த மாமன்றம் ஏற்கிறது. எல்லாவற்றையும் வரி கொடுக்கிற மக்கள் ஏற்கிறார்கள். என்றாலும் இந்த வரியை விதித்து விட்டாலும் அந்த நகராட்சி அந்த வரியைச் செலுத்துவதற்கு உதவி செய்கிறது என்ற நல்ல நோக்கத்தோடுதான் இந்த வரி விதிக்கப்படுகிறது என்பதை மீண்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, 18 ரூபாயை 180 ரூபாய் அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம் என்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் சொன்னார்கள். அப்படிச் சொல்லும்போது ஒரு நகராசி மன்றத் தலைவராகவே அவர் காட்சியளித்தார். சுத்தமாக நகராட்சி மன்றத் தலைவரைப் போல, அந்தப் பொறுப்பில் இருந்து பேசினார். நான் அதைப் பாராட்டுகிறேன். யார் எந்தப் பொறுப்பில் இருந்தாலும் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே அந்தப் பொறுப்புக்குத் தக்கவாறுதான் அவர்கள் பேச்சும் இருக்கவேண்டுமென்பதை நான் ஏற்றுக் கோள்கிறேன். அதே நேரத்தில் இந்த நிறுவனத்திற்கு, இந்தத் துறைக்கு நானும் அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிறேன். எனவே தான் ஒரு இடத்தில் வரியை ஏற்றுகிறோம், ஒரு இடத்தில் வரியை குறைக்கிறோம். இவ்வளவுதான். வேறு ஒன்றும் இல்லை. கிராமப் புறங்களில், கிராமப் பஞ்சாயத்துக்களில் குடிசைகளுக்கு வரியே இல்லை. இன்னும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் சென்னை மாநகரத்தில் இருக்கிறதே, இந்தக் குடிசைகளுக்குக்கூட வரியே இல்லை. சர்ட்டிபிகேட் அவர்கள் சர்ட்டிபிகேட் வாங்காமல் இல்லை. சர்ட்டிபிகேட் என்பது ஒரு சொத்தைக் காட்டி அடமானம் வைத்து

வாங்கலாம். யாரையாவது ஒருவரை ஜாமீனில் எடுப்பதற்கு சர்டிபிகேட் தேவைப்படுகிறது. அப்போது அவர்கள் லஞ்சம் கொடுக்கிறார்களா, இல்லையா என்ற பிரச்சினைக்கு நான் போகவில்லை. அது யாரோ கொடுப்பார்கள், யாரோ சர்ட்டிபிகேட் வாங்குவார்கள். அதில் எல்லாம் நான் நுழையக் கூடாது. இருந்தாலும் என்னைப் பொறுத்த வரையில் அதிகம் சொல்லத் தேவையில்லை, நேரம் கடக்கிறது என்று கருதி, 1920ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 83 ......

11.40 மணி.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏழை எளிய மக்களுக்குச் சலுகைகள் அளிப்பதை நானும் வரவேற்கிறேன். அதற்குத் தடையாக இல்லை. ஆனால் அளிக்கப்படும் சலுகைகளுக்கு மாறாக சில பாதகங்கள் ஏற்படுமே என்ற அச்சத்தில்தான் அதைக் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போதும் வரி விதிக்கப்படாத லட்சக் கணக்கான மக்களுக்கு, குடிசைகளில் வாழ்கிறவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறதோ, அந்தப் பாதுகாப்பு, விதி விலக்கு பெறுகிறவர்களுக்கு நிச்சயமாக இருக்கும் என்பதை இந்த அவையிலே தெரிவிக்கிறேன். 83 (1) (சி) சட்டத்தின் கீழ், நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டதுபோல, கல்விக்காகப் பயன்படுத்தப்படும் கட்டிடங்கள், விடுதிகள், பொதுக் கட்டிடங்கள், கருணை இல்லங்கள், அனாதை ஆசிரமங்கள், பிராணிகள் காப்பிடங்கள், நூல் நிலையங்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் ஆகியவற்றுக்கு சொத்து வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. அந்த நிலையை மாற்றி, இப்போது 1990ஆம் ஆண்டு சட்டத் திருத்தத்தின்படி இவைகள் அனைத்துக்கும் வரி விதிக்க வேண்டுமென்று சொல்லி, இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. அதைப் போலவே 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 83 (5) (i)-ன்கீழ் சொத்து வரி விதிப்புக்கு குறைந்தபட்ச வருட வருமான மதிப்பு 18 ரூபாயாக இருந்து வருகிறது. இதிலே ஒன்று சொல்ல வேண்டுமானால், அதிகப்படியான வித்தியாசம் வரப் போவதில்லை. 1920-ல் சட்டம் வந்தாலும், 1930-ல் ஒரு திருத்தம் வந்து, இது 18 ரூபாயாக வைக்கப்பட்டது. ஏறக்குறைய 59 வருடங்கள் முடியும் தருவாயில் இருக்கிறது. 59 வருடங்களில் 18-க்கும், 180-க்கும் அதிக வேறுபாடில்லை. நம்முடைய உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருந்தார்கள். 180 என்பதை 250 ரூபாயாக உயர்த்தவாமென்று சொல்லியிருக்கிறார்கள். நல்லவேளையாக அவர்கள் நகராட்சியில் பொறுப்பில் இல்லாமல் போய்விட்டார்கள், வெறும் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதால், அந்த அரிய



நல்ல யோசனையை எனக்குத் தந்தார்கள். இருந்தாலும் இதை எல்லோரும் மனமார ஏற்றுக்கொள்கிறார்கள் என்ற நல்ல உணர்வோடு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 83 (5) (i)-ன்படி நகரமன்றத் தீர்மானம் மூலம் வருடாந்திர வாடகை மதிப்பில் வரி விதித்துக் கொள்ளலாம் என்ற சட்டத் திருத்தத்தை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி;

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

''பிரிவு 2, உட்பிரிவு (2)-ல் ''நூற்று எண்பது ரூபாய்'' என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக ''இருநூற்று ஐம்பது ரூபாய்'' என்ற சொற்றொடர்கள் சேர்க்கப் பெறவேண்டும்''.

திருத்தம், முறைப்படி வழி மொழியப்பெற்றது.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னது போன்று 1930ஆம் ஆண்டு 18 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தற்போது 180 ரூபாய் அளவிலே உயர்த்தி இருக்கிறார்கள். அதை மேலும் அதிகமாக உயர்த்த வேண்டும். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யும் வகையில், அவர்களுக்கு வரிகள் இல்லாமல் செய்யும் அளவுக்கு, 250 ரூபாய் அளவிலே அந்த உயர்த்த சட்டத்தை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு வேண்டுமானால் நிலச்சொத்துக்களுக்கு சான்றிதழ்கள் தரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் சொல்வதுபோல, வீட்டுவரி கட்டுவதுதான் சான்றிதழ். எனவே நகராட்சிகளும்,

மாநகராட்சிகளும் அவர்களுக்கு வேறு வகையிலே சான்றிதழ்கள் வழங்கலாம் என்று தெரிவித்துக்கொண்டு, அரசாங்கம் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது வாக்கெடுப்பு.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களின் திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 2, சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1990) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

*11-45 மணி.*

**(ஆ) மக்கள் நல்வாழ்வு (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.**

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

---

*3—5—1990ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



**திரு. பி. வி. இராஜேந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1930 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட மூலச் சட்டத்தின் அடிப்படையில் இன்றைய சட்டத் திருத்தத்திற்கான சட்டமுன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிமுகம் செய்து இருக்கின்றார்கள். இந்த சட்டமுன்வடிவில் நான் குறிப்பிட விரும்புவது எல்லாம் இன்றைக்கு மனிதனுடைய உடலில் எப்படி ''அப்பென்டிஸ்'' என்பது தேவை இல்லாத ஒரு பகுதியாக இருக்கிறதோ—அதைப் பற்றிச் சொல்வார்கள். இறைவன் மனிதனைப் படைத்தது தன்னை வணங்குவதற்காகவும், மனிதனுக்குள்ளே இருக்கின்ற ''அப்பென்டிஸை'' படைத்தது டாக்டர்கள் வாழ்வதற்காகவும் என்று; அது ஒரு தேவையற்ற பகுதி. அதைப் போல இன்றைக்கு நகராட்சிகளுக்கு ஹெல்த் ஆபீசர்ஸ் என்பவர்கள் தனியாக வேண்டுமா? குப்பை அள்ளுவதற்கும், அதைக் கண்காணிப்பதற்கும், சாக்கடை நீரை அப்புறப்படுத்துவதற்கும், கழிப்பிடங்கள் சுத்தமாக இருக்கின்றதா என்று பார்ப்பதற்கும் எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர் ஒருவர் அங்கு தேவையா? அதுவும் டி.எச்.ஓ. கேடரில் இருப்பவர்கள் தேவையா என்பது ஒரு கேள்விக்குறி. அதிலும் நீண்டகாலமாக நகராட்சிகள் அப்படிப்பட்ட மருத்துவ அதிகாரிகளை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குக் கீழே கொண்டுவர வேண்டும்; அவர்கள் இயக்குநர், மருத்துவத் துறைக்குக் கீழே இருக்கக் கூடாது; நாங்கள் கேள்வி கேட்கக் கூடியவராக இருக்க வேண்டும்; கமிஷனருடைய கட்டுப்பாட்டுக்கு உள்ளே இருக்கக்கூடியவராக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்தப் பொறுப்பை எடுத்துவிட வேண்டும் என்பதுதான் எனது கருத்து. ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டரை அங்கே போடுவதனால்—டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர் ரேங்கில் இருப்பவர்களைப் போடுவதனால் அங்கே என்ன பிரயோஜனம் இருக்கிறது Totally it is under utilisation of man-power வீணாகப் போகிறது என்பதுதான் என்னுடைய கருத்து. Human resources ஆகையினால் இந்தச் சட்டத் திருத்தம் தேவையில்லை. இந்த முறையை ஒழித்துக்கட்டினால் நிச்சயமாக உள்ளாட்சித்துறைக்கு ஒரு 50 இலட்ச ரூபாய் மிச்சம் கிடைக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

மேலும் இந்த நல்வாழ்வுத் திருத்தச் சட்டத்தின்மீது நான் சொல்கின்றபோது இன்றைக்கு இந்திய மருத்துவமுறைகள் ''இந்தியன் மெடிசைன்ஸ்'' குறிப்பாக தமிழகத்துக்கு மட்டும் சொந்தமான சித்த மருத்துவம் வீழ்ந்து கிடக்கிறது. அதனை நிமிரச் செய்ய வேண்டும். அதன்மீது மிகுந்த நம்பிக்கையை வெளிநாட்டவர்கள்கூட வைத்து இருக்கிறார்கள். பண்டைய மூலிகைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் எல்லாம் துவங்கப்பட வேண்டும். குறிப்பாக அந்தத் துறைக்கு ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியைப் போடுவதை விட்டுவிட்டு, ஒரு டெக்னிக்கல்

பெர்சனை, அதிலே இருக்கின்ற ஒருவரைப் போட வேண்டும்.
இன்றைக்குப் தமிழ் வளர்ச்சிக்கு டாக்டர் ஒளவை நடராசன்
அவர்களைப் போட்டு இருக்கின்றீர்கள்; அதை நான் வரவேற்
கின்றேன், அதுபோல் தமிழ் வைத்தியமாக இருக்கின்ற சித்த
வைத்திய முறைக்கு ஒரு முறையானவரைத் தேர்ந்தெடுத்து அங்கு
கொண்டுவர வேண்டும்.

பல்வேறு கலைகள்—உலகத்திலே இல்லாத கலைகள் எல்லாம்,
வைத்திய முறைகள் எல்லாம் நம்முடைய மண்ணிலே இருக்
கிறது. இன்றைக்கு வர்மக் கலை கன்னியாகுமரிப் பகுதியிலே
இருக்கின்றது. பழுதுபட்டுப் போய்க் கிடந்த அந்தக் கலையை
இன்றைக்கு இந்திய மருத்துவமுறையின் டைரக்டர்
திரு. இளங்கோவன் அவர்கள், டாக்டர் தர்மலிங்கம் என்பவரை
கொண்டு வந்து, அவரை சென்னையிலே அமரச் செய்து,
இன்றைக்கு உலகுக்கே காட்டிக் கொண்டு இருக்கிறார். அது
போன்ற கலைகளை எல்லாம் நாம் விட்டுவிடக் கூடாது. அதற்கு
உரியவர்களை போட்டு கொண்டு வாருங்கள்.

மேலும் சோழர் காலத்திலே வேதாரண்யத்திலேதான்
மூலிகைப்பண்ணை இருந்தது. இன்றைக்குமீண்டும் அந்த இடத்தில்
ஒரு மூலிகைப் பண்ணை ஆரம்பிக்க வேண்டும் என்று கடந்த
காலத்தில் இருந்த மாவட்ட ஆட்சித்தலைவர், இந்தியமருத்துவத்
துறை டைரக்டர்—ஆகியவர்கள் எல்லாம் வந்து பார்த்து, ஒரு
100 ஏக்கர் இடத்தைக் கேட்டு இருக்கிறார்கள். அந்த இடத்திலே
ஒரு மூலிகைப் பண்ணை விரைவிலே ஆரம்பிக்கப்பட வேண்டும்
என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு வைத்திய முறைகள் இருக்கின்றன. இயற்கை
வைத்தியங்களும் இருக்கின்றது. நம்முடைய பழமைக் கால
வைத்தியர்கள் எல்லாம் இன்றைக்கு பண வசதி இல்லாமல்
அல்லது மருந்து இல்லாமல், மூலிகை இல்லாமல் கஷ்டப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அவற்றின்மீது நீங்கள் கவனம் செலுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பெருகிவருகின்ற டிரக்ஸ் மெனேஸ இருக்கின்றது.
அதன்மீது ஒரு பார்வை வேண்டும். இன்றைக்கு பான் மசாலா
வில்கூட டிரக்ஸ் கலந்து இருக்கிறது. அதுபோல இன்றைக்கு
அடல்ட்ரேஷன்கூட எல்லா இடத்திலும் இருக்கிறது. அதிலே
போடுகிற கேஸ் எல்லாம் "அக்குயிட்" ஆகிக் கொண்டு இருக்
கிறது. அரசு தரப்பு இதிலே கவனம் செலுத்தி அதிலே அவர்கள்
தண்டனை பெற வைக்க வேண்டும். குறிப்பாக விருதுநகரிலே
எங்கு பார்த்தாலும் அடல்ட்ரேஷன் என்று சொல்கிறார்கள்.
மாண்புமிகு உறுப்பினர்கூட ஒரு சிறப்பு சட்டம்,
அவசரச் சட்டம் கொண்டு வந்து அதன்மூலம் அடல்ட்ரேஷன்
செய்பவர்களை தூக்கில் போடுவதற்குக்கூட ஒரு அவசரச்





சட்டம் கொண்டு வாருங்கள் என்று முதல்வருக்கு எழுதி இருக்கின்றார்கள். அவருடைய அந்த உணர்வுகளை நான் பாராட்டுகிறேன். அதைப் போன்ற சட்டத்தையும்..........

11-50 மணி.

திரு. ரா. சொக்கர் : அவர் விருதுநகர் என்று சொன்னதால் நான் விளக்கம் சொல்வதற்குக் கடமைப்பட்டவன். நான் முதல்வரவர்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கின்றேன்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிமேல் யாராவது சொல்லும்பொழுது ஊர்ப் பெயரைச் சொல்லாதீர்கள். (சிரிப்பு).

திரு. ரா. சொக்கர் : முதல்வரவர்களுக்கு என்ன எழுதி இருக்கிறேன் என்றால், யாரோ ஒருசில சமூக விரோதிகள் உணவிலே கலப்படம் செய்வதால் ஒரு ஊருக்கோ அல்லது வணிக சமூகத்திற்கோ வெட்கித் தலை குனியக் கூடிய அளவிற்கு வேதனையான துயரங்கள் ஏற்படுகின்றன. அதைத் தடுப்பதற்கு, கள்ளக்கடத்தலிலே ஈடுபடுத்தப்படக்கூடிய வாகனங்கள் எல்லாம் எப்படிப் பறிமுதல் செய்யப்படுகிறதோ அதே போல, உணவுக் கலப்படத்திற்காகப் பயன்படுத்தப்படக்கூடிய தொழிற்சாலைகள், அலுவலகங்கள், முடிந்தால் அவர்களுடைய வீடுகள் அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்டு, சீல் வைத்து, நீதி மன்றங்களிலே ஒப்படைக்கக்கூடிய அளவிற்குக் கடுமையான சட்டம் இயற்றப்பட்டு இது தடுக்கப்பட வேண்டுமென்று நான் எழுதிக் கொடுத்திருக்கிறேன்.

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** தலைவரவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் ஏதாவது எழுதிக் கொடுத்திருக்கிறீர்களா? (சிரிப்பு).

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது அருமை நண்பர் மாண்புமிகு இராஜேந்திரன் அவர்கள், இந்த முனிசிபல் ஹெல்த் ஆபீசரைப்பற்றிச் சொன்னார்கள். முனிசிபல் ஹெல்த் ஆபீசர் அவர்கள் இந்தக் கார்ப்பரேஷனிலே பல இடங்களிலே, பான் பீடா என்று சொல்லி, ஒரு பீடா 150 ரூபாய்க்குக் கூட விற்கிறார்கள். அதிலே பிரவுன் ஷுகர் இருக்கிறது என்று சொல்லி, சாயங்காலம் அந்தக் கடைக்குப் போனீர்கள் என்றால், இராத்திரி ஒரு மணி, இரண்டு மணிக்குப் பெரிய கூட்டங்கள்; அந்த பான் பீடா கடைக்கு முன்னாலே அதே மாதிரி ஐஸ் கிரீமிலேயும் அந்த பிரவுன் ஷுகர் கலந்து மாணவர்களுக்குக் கொடுக்கிறார்கள் என்று கூடச் சொல்கிறார்கள். இந்த முனிசிபல் ஹெல்த் ஆபிசர் ஸ்டாம்ப்.....,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் இரண்டு பேரும் ராத்திரிக்குப் போய்ப் பார்ப்போம். (சிரிப்பு).

திரு. பி. வி. இராஜேந்திரன் : அப்படிப்பட்ட பான் பீடாக்கள் இரண்டை தாங்கள் அனுமதித்தால் நான் இன்றைக்கு ஒருமணி நேரத்திலே வாங்கிக் கொண்டு வந்து இந்த அவைக்குக் கொண்டுவந்து தருகிறேன்.

இன்றைக்கு வேதாரண்யம் நகரத்திலே 50,000 மக்கள் தொகை கொண்ட அந்த நகரம்—அதிலே upgraded P. H. C. இருக்கிறது. ஆறு மருத்துவ அதிகாரிகள் பணிபுரிய வேண்டிய இடத்தில் கடந்த ஓராண்டுக் காலமாக, ஒரேயொரு மருத்துவ அதிகாரி அங்கே இருந்து கொண்டிருக்கிறார். இன்றைக்கு அந்த நிலைமை மாற வேண்டும். கடந்த 13–12–1989 அன்று அந்தப் பேரூராட்சியினுடைய தலைவர் சங்கரவடிவேல் அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்று அறிவித்தார்கள். மீண்டும் 31–12–1989 அன்று வேதாரண்யம் தாசில்தார் ஒரு சமரசக் கூட்டத்தை நடத்தி—அந்தக் கூட்டம் பற்றி இங்கேயே இருக்கிறது—நடவடிக்கைக் குறிப்புகள், ''சமாதானக் கூட்டம்'' என்று அறிவிப்பிட்டு, தாசில்தாருக்கு முன்னிலையில் சமாதானக் கூட்டம் நடைபெற்று, உண்ணா விரதத்தை வாபஸ் வாங்கியிருக்கிறார், காரணம் 30–1–1990–க்குள் அத்தனை டாக்டர்களும் போடப்படுவார்கள் என்று D.H.O. சொல்லியிருக்கிறார். இன்று வரை அங்கே ஐந்து டாக்டர்கள் போடப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும், தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற செங்கிப்பட்டி காசநோய் மருத்துவமனை, காந்தி மெமோரியல் என்ற தனியார் டிரஸ்ட் ஒன்றைச் சேர்ந்தது. அதனை உடனடியாக அரசு எடுத்து நடத்த வேண்டும். மிக மோசமாக அந்த செங்கிப்பட்டி சானடோரியம் சென்று கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

தஞ்சையிலே இருக்கின்ற இராஜா மிராசுதார் மருத்துவமனை என்கின்ற பெயர் இந்தக் காலத்திற்கு ஏற்றதுதானா என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைக்குத் தஞ்சாவூரிலே இருந்த இராஜாக்களும், மிராசுதார்களும் வீழ்ந்துவிட்ட நேரத்தில் மீண்டும் ஏதோ பழையகாலத்து நினைவோடு இருக்கின்ற இராஜா மிராசுதார் மருத்துவமனை என்கின்ற பெயரை நீங்கள் மாற்றவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரியம், நகராட்சிகளிலே பணியாற்றுகின்ற நல்வாழ்வுப் பணியாளர்களை அந்த நோய்த் தடுப்புத் துறையிலே



யிருந்து நகர இயக்குநர் அவர்களின் மேற்பார்வையிலே கொண்டு வருகின்ற இந்தச் சட்டத் திருத்தம் ஓரளவுக்கு ஏற்கனவே வந்த நிர்வாகத்திலே இருந்து வந்த சீர்கேடுகளைப் போக்குவதற்கு ஓரளவுக்கு உதவி செய்யும். ஆகவே, நான் பார்க்கின்ற நேரத்திலேயே சொந்த அனுபவத்தில், பல்வேறு நகராட்சிகளிலே ஏற்கனவே உள்ள ஊழியர்களுக்கு நிதிநிலையைக் கொடுப்பதற்கு வசதி இல்லாத நேரத்தில் இந்தத் துறையைக் கூட நகராட்சியிலே தான் கவனித்து ஊதியம் வழங்கப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஊழியர்களுக்கு ஏற்கனவே 1—4—1990 முதல் ஆசிரியர்களுக்கு அரசே நேரடியாக ஊதியம் வழங்குவதைப் போல இத்தகைய ஒரு துறை ஊழியர்களுக்கு அரசே நேரடியாக ஊதியத்தை வழங்க வேண்டும் அல்லது அதற்கான மானியங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளிலே இத்தகைய எம்.பி.பி.எஸ். டாக்டர்கள், சானிடரி இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்கள் இருந்தாலும் கூட, பொதுவாக இன்றைக்குக் கலப்படச் சட்டங்கள், சரிவரப் பராமரிக்கப்படவில்லை என்ற மிகப் பெரிய குறைபாடு இருக்கிறது. ஆகவே, நகராட்சிகளிலே இதை இணைப்பதன் மூலமாக நகர மன்றத் தலைவரும், நகர மன்ற உறுப்பினர்களும், இந்தத் துறையிலே இருக்கின்றவர்களைக் கேட்பதற்கும், அவர்கள் சரியாகப் பணி செய்கின்றார்களா என்பதைக் கண்காணிப்பதற்கும் இந்தத் திருத்தம் நிச்சயமாகவே உதவி செய்யும். ஏற்கனவே இந்தத் துறையிலே உள்ளவர்களை நகராட்சித் தலைவர்களோ, நகர மன்ற உறுப்பினர்களோ, கமிஷனர்களோ எதுவுமே கேட்க முடியாது. அவர்களுடைய எல்லாப் பொறுப்புகளும் அந்த மருத்துவத் துறையிலே இருந்த காரணத்தினாலேதான் இத்தகைய நிலைமைகள் இருந்தன.

11-55 மணி

ஆகவே, அத்தகைய மாற்றங்களைக் கொண்டு வருகிற இந்த நேரத்தில் அந்தத் துறையில் உள்ளவர்கள், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சில விஷயங்களைச் சொன்னார்களே, அப்படிப்பட்ட தவறான நடவடிக்கைகள் சென்னை மாநகரத்தில் மட்டுமல்ல, பல்வேறு நகராட்சிகளிலும் கூட இருக்கிறது. பால் மற்றும் உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதை சமீப காலத்தில் சரிவர கவனிப்பதில்லை என்ற குறை இருக்கிறது. அந்தக் குறைகளைப் போக்கி மக்களுக்கு நல்ல பால் கிடைக்கவும், உணவுப் பொருள்கள் கிடைக்கவும், இந்தத் துறை சிறப்பாக பணியாற்றுவதற்கு, அரசு முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டு, இந்த சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, இன்றைக்கு நகராட்சிகளில் ஹெல்த் ஆபீசர்களை நகராட்சியின் அதிகாரிகளுடைய ஆளுகையின் கீழ் கொண்டு வருவதற்காக

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1990 மே 9

இந்தச் சட்ட திருத்தத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம்.
எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன்
அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்த ஹெல்த் ஆபீசர்
பதவியானது, நகர மன்றங்களைப் பொறுத்தவரையில், தேவை
இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் ஒவ்
வொரு நகர மன்றத்திலும், நாம் பார்க்கிற அளவில், பெரிய
மருத்துவமனைகள் இருந்து கொண்டு வருகிறது. அங்கே இருக்
கிற மருத்துவ வசதிகளைப் போதுமான அளவிற்கு நாம் செய்து
தந்தாலே மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் வரமுடியாது
என்ற நிலையில், அந்த நகர மன்றங்களுக்கு மேலும் செலவு
களைக் கூட்டுகிற அளவிற்கு எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற
டாக்டர்களை எல்லாம் கொண்டு வந்து, நகர மன்றங்களில்
இருக்கிற குப்பையை, கொசுத் தொல்லையை அகற்றுவதற்குக்
கூட அவருடைய ஆலோசனையைப் பெற வேண்டிய நிலை
இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

இன்றைக்கு சானிடரி இன்ஸ்பெக்டர் மற்றவர்கள் எல்லாம்
அங்கே இருந்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் இன்றைக்கு
நிர்வாக அதிகாரிகளுடைய ஆளுகையின் கீழ் இருந்து வருகிறார்
கள். நகர மன்றங்களில் பல்வேறு இடங்களில், நகர்மன்றத்
தலைவரும், நகர்மன்ற உறுப்பினர்களும் சொல்கிற காரியங்களை
அவர்கள் செய்வதில்லை என்ற குறைபாடுகள் இருக்கின்றன.
ஆகவே, அந்தப் பகுதிகளில் எல்லாம் நகர்மன்றத் தலைவர், நகர்
மன்ற உறுப்பினர்களுடைய ஆளுகையின் கீழ் அவர்களை கொண்டு
வருகிற அளவிற்கு, அவர்களை நியமிக்கிற, அவர்கள் மீது நட
வடிக்கை எடுக்கிற அதிகாரங்களை நகர்மன்றங்களுக்கு வழங்க
வேண்டுமென்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

எம்.பி.பி.எஸ். டாக்டர்களை நாம் நியமித்தால் நகராட்சியில்
இருக்கிற நிர்வாக அதிகாரிக்கும், அந்த டாக்டர்களுக்கும்
இடையே தகராறு வருகிற நிலைமை பின்னால் ஏற்படும்.
இன்றைக்கு நாம் அவர்களை நிர்வாக அதிகாரியின் கீழ் நியமித்து
இருக்கிறோம் என்று சொல்லலாம். ஆனால் பின்னால் போராட்
டங்கள் ஏற்படுகிற அளவிற்கு, நாங்கள் அதிகமாக சம்பளம்
வாங்குகிறோம், அவர்களை விட அதிகமான படிப்பு படித்து
இருக்கிறோம், ஆகவே, நாங்கள் தான் உயர்ந்தவர்கள், நகர்
மன்றத்தினுடைய நிர்வாக அதிகாரியாக நாங்கள்தான் செயல்
பட முடியும் என்ற முறையில் அவர்கள் சொல்லக்கூடிய நிலைமை
ஏற்படும். இதை எல்லாம் அரசாங்கம் கருத்திற் கொண்டு,
இந்த அதிகாரங்களை நகரமன்றங்களுக்கு வழங்க வேண்டும்.
ஹெல்த் ஆபீசர் என்ற பதவியில் எம்.பி.பி.எஸ். டாக்டர்களைப்
போடுவதை தவிர்த்து, கிராமப்புறங்களில் பல்வேறு இடங்களில்
மருத்துவர்கள் இல்லையென்ற குறைபாடுகள் இருக்
கின்றன என்பதால், அதைப் போக்குவதற்கு



990 மே 9] [திரு. எஸ்.டி. உகம்சந்த்]

அரசாங்கம் இன்றைக்கே கூட ஒரு உத்தரவைப் போடலாம்.
ருக்கிற எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் எல்லாம் கிராமங்களில்
ணியாற்றுவதற்காக அவர்களை டிரான்ஸ்பர் செய்யக்
கூட உத்தரவைப் போடலாம் என்று சொல்லி, இந்த அளவில்
ன்னுடைய உரையை, அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி
முடித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு** திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்
களே, இந்தச் சட்ட திருத்தத்தைப் பொறுத்தவரையில்
4—6—1989 அன்றே இதையொட்டிய அரசாணை ஒன்று
பிறப்பிக்கப்பட்டது. அரசாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு,
அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் சட்டப்படி இந்த ஆணை
சரியாக இல்லை. சட்டம் திருத்தப்பட்டால், அந்தப் பணியைத்
துவங்குகிறோம் என்று சிலபேர் சொன்னதால் தான் இந்த சட்ட
திருத்தம் வந்தது. மாண்புமிகு திரு. இராஜேந்திரன் அவர்களும்
மாண்புமிகு திரு. உகம்சந்த் அவர்களும், மாண்புமிகு திரு.
சுந்தரம் அவர்களும் இதில் பேசியிருக்கிறார்கள். அவர்கள் வர
வேற்று, இருக்கிற குறையை போக்குவதற்கு உஷாராக இவை
களை பரிபாலிக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டுமென்று
கருத்துக்களை தெரிவித்தார்கள். திரு. இராஜேந்திரன் அவர்கள்
ரதோ ஆத்திரத்தின் அடிப்படையில் சொன்னார். இந்த
இலாக்காவை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று சொன்னார்.
அதிலே அவர் இரண்டு கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்.
ஒழித்துக்கட்ட வேண்டுமென்று சொன்னார். அடுத்து, இப்படிப்
பட்ட எம்.பி.பி.எஸ். டாக்டர் தேவையா என்று மாண்புமிகு
திரு. உகம்சந்த் அவர்கள் சொன்ன கருத்தை ஒட்டியும் அவர்
சொன்னார். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில்,
இந்தப் பணியை அறவே ஒழித்துவிட முடியாது.

**12-00 மணி**

காரணம் நோயை நீக்குவதற்கு டாக்டர்கள் இருந்தாலும்,
நோயைத் தடுப்பதற்கு அலுவலர்கள் வேண்டும். நகராட்சிகளில்
நோயைத் தடுத்த பிறகும், மீறிவருகின்ற நோய்க்குத்தான்
மருத்துவர்கள் நோயைப் போக்குவதற்கு அவர்களால் மருந்து
கொடுக்க முடியும். எனவே, இது ஆரம்ப காலத்திலிருந்து
ஆரம்பச் சுகாதாரம் என்ற முறையிலும், சுகாதாரப் பணிகள்
என்ற முறையிலும் வைத்திய முறை என்று இல்லாமல், சுகா
தார முறையாக இருக்கிறது. இதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்
என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆனால், அரசாங்கத்தைப்
பொறுத்தவரையில், எம்.பி.பி.எஸ். டாக்டர்தான் இதற்குப்
புதிதாக நியமனம் செய்யவேண்டும் என்ற நிலையைக் கூட தற்
போது மாற்றலாம் என்று அரசாங்கம் இருக்கிறது. நான் சென்ற

[திரு. கோ. சி. மணி] [1990 மே 9

24-ஆம் தேதி என்னுடைய மானியக் கோரிக்கை விவாதத்தின் போது அறிவிப்புகள் பலவற்றைச் செய்தேன். அதிலே ஒரு அறிவிப்பாகக்கூட இதை நான் அறிவிக்கலாம் என்று இருந்தேன். பசியின் கொடுமையால் பல உறுப்பினர்கள் இருந்த காரணத் தாலும், கால நேரத்தை அனுசரித்து சற்றுக் கடுமையாக இருந்த காரணத்தாலும், இப்படிப்பட்ட வாய்ப்புக்கள் வருகிற நேரத் தில் இந்த மாமன்றம் முடிவதற்குள் அதைச் சொல்லிவிடலாம் என்று நான் கருதி இருந்தேன். அன்று நான் சொல்லாமல் போனதைச் சொல்லவைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப் பினர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மானியக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டபோது, பணியாளர் களுக்குச் சில சலுகைகள் அளிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் நான் ஒரு அறிவிப்பைச் சொல்லிவிடலாம் என்று இருந்தேன். காலத்தைக் கருதி நிறுத்திவிட்டேன். நகராட்சி சுகாதார அலு வலர்கள் இல்லாத நகராட்சிகளில், தற்போது ஹெல்த் ஆபிசர்கள் எங்கே இல்லையோ—ரொம்ப இடத்திலே இல்லை—நான் சொல் வதற்கு முன்பாக, அவர்களே வருவதற்கு கூச்சப்படுகிறார்கள். அதை அவர்களே விரும்பவில்லை. எம்.பி.பி.எஸ். டாக்டர்களை நீங்கள் போய் அங்கே ஹெல்த் ஆபிசராக இருங்கள், சுகாதார அதிகாரியாகப் போங்கள் என்றால், அவர்களே அதை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களே இதை விரும்பவில்லை. அந்தக் காரணத்தாலே, அந்தப் பணிகளுக்கு ரொம்பப் பேர்கள் வராமல் லீவிலே இருக்கிறார்கள். சில இடங்களுக்கு மாறுதல் கேட்டு மன்றாடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட இடங்களில் அலுவலர்கள் இல்லாத நகராட்சிகளில் முதல் நிலைப் படி சிறப்பு பெற்ற நல்ல முதுமையான அதிகாரி, சிறப்பு நிலை துப்புரவு ஆய்வாளர்கள் அங்கேயிருக்கின்ற இன்ஸ்பெக்டர்கள் அவர்கள் ஓரளவிற்கு முதுமை பெற்றவர்களாக இருப்பார்களா னால், அந்த இடத்திலே அவர்களையே நியமிக்கலாம் என்ற உத்தரவை இந்த அரசாங்கம் இடப்போகிறது. அவர்கள் மூலமே இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு, தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய அந்த எண்ணத்தில் நானும் இணைகிறேன். அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதைவிட இதிலே அதிகமான குறை ஒன்றும் நீங்கள் சொல்லவில்லை. எனவே, இந்த சட்டத்தை நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :

"1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 22/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் ".



1990 மே 9]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 6.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :

" பிரிவு 6 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும் ".

திரு. ஆர். சிங்காரம் : Mr. Deputy Speaker, Sir, I make the following amendment :

"In Clause 6, in Sub-Clause (1), for the words 'Executive Authority's or Health officers' substitute the words 'Municipal Council' ".

(This was duly seconded)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது வாக்கெடுப்பு

திரு. ஆர். சிங்காரம் அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" பிரிவு 6, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" 1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு (திருத்த) சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1990) நிறைவேற்றப் பெற வேண்டும் ".

[1990 மே 9

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(இ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 20/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

*12–05 மணி*

* திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குச் சட்டத்தின் இரண்டாவது திருத்தத்தை, திருத்தத்தின் அடிப்படையான நோக்கத்தை, நான் வரவேற்பதோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவருவதன் நோக்கத்தைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இன்று இந்தச் சட்டத்தின் மூலம் சமுதாயத்தின் கொடுமைக்கு இலக்காகியிருக்கின்ற கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கும், கள்ளச் சாராயங்கள் பல்வேறு இடங்களில், தெருக்களில், பொது இடங்களில், பள்ளிக்கூடங் களில், கக்கூஸ்களில் இந்தக் கள்ளச் சாராய விற்பனையை விரோதிகள் பகிரங்கமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் தடுக்கப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு, இந் தச் சட்டத்தின் மூலம் மக்களுக்கு இருக்கும்படியான அந்த அடிப் படையான துன்ப துயரங்கள் தீரும் என்ற முறையில் இந்தச் சட்டம் கொண்டுவருவதனுடைய நோக்கத்தை எங்களால் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் இந்தச் சமூக விரோதிகள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களாக இருந்தாலும், அந்தச் சமூக விரோத செயலை ஆதிக்கப்படுத்தி ஜனங்களை அச்சுறுத்தி காவல் துறையினரின் கைலா பெற்று, அவர்களுடைய சமூக விரோதச் செயல்கள் பகிரங்கமாக நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. அவைகள் அறவே ஒழிக்கப்பட்டு, முழுமையாக இந்த மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத் தோடு இந்தச் சட்டம் முறையாகவும், ஒழுங்காகவும் பயன்படுத் தப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

*3—5—1990 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1990 மே 9] [திரு. எஸ். ஏ. தங்கராஜன்]

மேலும் இந்த மது வாகனங்களைப் பறிமுதல் செய்வதற்கு
இந்தச் சட்டத்தில் அனுமதி கோரப்பட்டிருக்கின்றது. இவைகள்
முற்றிலும் நியாயமானது. இந்தச் சமூக விரோதிகள் இத்தகைய
சமூகவிரோதக் காரியங்களைச் செய்வதற்கு இந்தச் சட்டவிரோத
மான வாகனங்களைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள்.
இந்தச் சமூக விரோதிகள் இவ்வளவு துணிச்சலாகவும், தைரிய
மாகவும் இந்த சமூக விரோதச் செயல்களைச் செய்து
சமுதாயத்தை அச்சுறுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். இந்த
அச்சுறுத்தலைச் செய்வதன் மூலம் மெஜாரிட்டியான மக்கள்
அந்த சமூக விரோதிகளுக்கு அஞ்சி அடங்கிக் கிடக்கின்ற நிலைமை
நீடித்துக் கொண்டிருக்கிறது. கடந்த 10, 12 ஆண்டுக் காலத்தில்
இந்தச் சமூக விரோதச் செயல்கள் அதிகமாக நீடித்துக்கொண்
டிருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், இந்தக் கள்ளச் சாராய
விற்பனையாளர்கள் மொத்தமாக வியாபாரம் செய்வதற்கு
சைக்கிளில்கூட இந்தப் பொருட்களை எடுத்துச் செல்கிறார்கள்.
பொதுத் துறை வாகனங்களில்கூட, பஸ்களில்கூட இந்த பஸ்களி
னுடைய ட்யூப்களில் சாராயத்தை சரக்கு மூட்டைகளில் கட்டி
மூட்டைகளை அடுக்குவது போன்று அடுக்கி மக்கள் பயணம்
செய்யும்படியான பேருந்துகளில் இவைகளைக் கொண்டு செல்
கிறார்கள். இவை கண்காணிக்கப்பட்டு, இவை தடுக்கப்படு
வதற்கு இந்தச் சட்டம் முன்னுதாரணமாக இருக்கும்படி நான்
வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இத்தகைய போக்குகளை தடுப்பதற்கு சட்டத்தினால்
மட்டும் போதும் என்று நாங்கள் உணரவில்லை. இத்தகையச்
சட்டம் இருக்கின்றபோதுதான் இத்தகைய சமூக விரோதமானச்
செயல்கள் பகிரங்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
அவைகளுக்கு எதிராக மக்களின் பேராதரவும் இருக்கவேண்டு
மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வற்புறுத்திக் கேட்டுக்
கொண்டு, அந்த மக்களின் ஆதரவைத் திரட்டிக் கொள்வதற்கு
மக்களுக்கு துணிச்சலையும், தைரியத்தையும் அரசு அளிக்க
வேண்டும். ஏனென்று சொன்னால், இந்தச் சமூக விரோதிகள்
காவல்துறையினரின் உதவியோடு மேலாதிக்கம் செய்கின்ற நிலை
இந்தச் சமுதாயத்தில் நீடித்துக்கொண்டிருக்கிறது. இந்தக் கொடு
மையின் காரணமாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடு
மைகளுக்கு எல்லையே கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்கூட இந்த மசோதாவின்மீது பேசுகின்றபோது இவர்கள்
இவ்வாறு செய்வதற்கு இந்த காவல்துறையினரின் கைலாகு
கிடைக்கின்றது என்பதை அழகாகவும், ரத்தினச் சுருக்கமாகவும்
அவர்கள் அந்த உண்மையை எடுத்துக் கூறினார்கள். இந்த
உண்மையை, மக்களின் உணர்வை காவல்துறையினுடைய உயர்
அதிகாரிகள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்
பத்தில் நான் கேட்டுக்கொண்டு, ரகசிய போலீஸ் இலாக்கா
இந்தக் கள்ளச் சாராய சமூக விரோதச் செயல்களைக்
கண்டுபிடிப்பதற்கு அவர்களின் மூலம் தடுப்பதற்கு அரசு முன்வர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் மது விலக்குக்

12-10 மணி

காவல் துறையினுடைய நடவடிக்கைகள் கள்ளச் சாராயக்காரர் களுக்கு ஆதரவாக நீண்டகாலமாக இருந்து வருவதாலும், இந்த சமூக விரோதிகளோடு நிரந்தரமான உறவு இருக்கின்ற காரணத்தி னாலும், இவைகள் தடுக்கப்படாத நிலை நீடித்துக் கொண்டிருக் கிறது. எனவே, இரகசிய போலீஸ் துறை இவர்களை கண் காணிப்பதற்கு புதிய உத்திரவை அரசு கொண்டு வரவேண்டு மென்று கேட்டுக்கொண்டு மேலும் இந்தச் சமூக விரோதிகள் தங்களை அரசியல்வாதிகளாக ஆக்கிக் கொள்ள முயற்சிக்கின்றார் கள். அவர்களும் கரைப்போட்ட வேட்டிகளைக் கட்டிக் கொண்டு ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதைக் காட்டி, அதிகாரி களிடத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு முயற்சிக்கின்றார்கள். மேலும் அரசியல் கட்சித் தலைவர்களும் கூட இந்த சமூக விரோதி களோடு, கள்ளச்சாராய வர்த்தகர்களோடு அரசியல் உறவை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நிதியை திரட்டுகின்றார்கள். இது போன்ற போக்கையும் சட்டத்தின் மூலம் தடுத்து தமிழகத் தில் இருக்கும்படியான இந்தக் கள்ளச் சாராய சமூக விரோதச் செயல்களை அடியோடும் வேரோடும் இந்தச் சட்டத்தின் மூலம் வீழ்த்துவதற்கு தமிழக அரசு முன்வரவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கொண்டு வரப்படுகின்ற இந்தச் சட்டத் திருத்தத்தைப் பொருத்தவரையில் மதுவிலக்கு இரத்து செய்வதையே தவறு என்று நாங்கள் சொல்லுகின்ற இந்தச் சூழ்நிலையில் மதுவிலக்கை இரத்து செய்தால்தான் கள்ளச் சாராயத்தை கட்டுப்படுத்த முடியுமென்று அதற்காகத்தான் இரத்து செய்கிறோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் மதுவிலக்கு இரத்து செய்யப்பட்டாலும் கள்ளச்சாராயம் காய்ச்சு வதும், விற்பதும் தடுக்கமுடியாதது என்பதுதான் உண்மை நிலைமை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு கள்ளச்சாராயம் விற்பனை செய்வதற்கு மூலப்பொருளாக இருப்பதெல்லாம் எரிசாராயம் என்று சொல்லுகின்றார்கள். இந்த எரிசாராயத்தை அரசாங்கம் தான், சர்க்கரை ஆலைகளிலிருந்து அவைகளை பிரித்து தந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு தமிழகத்திலே 42 "கெமிக்கல்ஸ் பாக்டரிகள்" இருந்து கொண்டு வருகின்றன. அவைகளுக்கு ஏற் கெனவே இந்த எரிசாராயம் நாம் வழங்கிக் கொண்டு வந்திருக்கி றோம். ஆனால் சென்ற சில மாதங்களுக்கு முன்பு அந்த எரி சாராயத்தை, இனி மதுவிலக்கு இரத்து செய்து மலிவு விலை யிலே மது வருகின்றது, அதற்காக குறைத்திருக்கிறோம் என்று சொல்லி 12 சதவீதம் அவர்களுக்கு வழங்கிக் கொண்டு வருகி றார்கள். அதேநேரத்தில் புதியதாக 5 ஆலைகள் துவங்குவதற் காகவும் அவர்களுக்கு உற்பத்தியாகின்ற 800 இலட்சம் லிட்டர் அந்த எரிசாராயத்தில் 380 இலட்சம் லிட்டரானது வழங்குவதற்





காக அரசாங்கம் ஒப்புதலை வழங்கியிருக்கின்றது. இன்றைக்கு ஒரு பக்கத்தில் எரிசாராயத்தை ஏற்கெனவே உள்ள ஆலைகளுக்கு குறைத்து இருக்கின்றார்கள். அதே நேரத்தில் புதியதாக 5 ஆலை களுக்கு வழங்கியிருக்கிறது என்று சொன்னால், அதிலேதான், எங்களுக்கு பல்வேறு சந்தேகங்கள் வருகின்றன. இந்த அளவிலே அவைகளை நீங்கள், கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்துவதற் காக இந்த மலிவு விலை சாராயத்தை நீங்கள் அறிமுகம் செய்தா லும், மற்றொரு பக்கத்தில் அதை ஊக்கம் செய்கின்ற அளவிற்கு புதியதாக ஆலைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற அளவிற்கு, நான் கேள்விப்பட்டிருக்கிறேன். கிங் கெமிகல்ஸ் ஃபாக்டரி' என்ற முறையிலே அதற்கு மட்டும் 115 இலட்சம் லிட்டராவது எரிசாராயத்தை ஒதுக்கு வதற்காக நீங்கள் உத்திரவுகளை வழங்கியிருக்கிறீர்கள். இப்படி இதிலே எந்த ஒரு கொள்கையை, அடிப்படையை நீங்கள் வைத் திருக்கிறீர்கள் என்பதை மட்டும் நான் அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் கள்ளச் சாராயத்தை கட்டுப்படுத்துகின்ற அளவிற்கு அரசாங்கம் மேலும் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த அளவிலே வாய்ப்பினை அளித் திருக்கின்ற துணை தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்து, விடைபெறுகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு மசோதா மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க முற்படுகின்றேன். ஒரு அரசாங்கம் மக்களைப் பார்த்து குடிக்கலாமென்று சொன்னால் குடிக்கிறார் கள், குடிக்கக் கூடாது என்று சொன்னால் குடிக்காமல் இருக்க வேண்டும். அப்படி அதை மீறி குடித்தால் அது குற்றமே என்பதை நாம் மதுவிலக்கு சட்டத்தில் இன்றைக்கு நிறைவேற்றிக் கொண் டிருக்கிறோம். நேற்றைய தினம் ஒரு செய்தியைப் பார்த்தேன். பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்தை கொண்டுவருவதாக. பொது இடத்தில் சிகரெட்டை பிடித்தால் தண்டனை என்பதை. சுதந் திரம் அடைந்து 43 ஆண்டுகள் கழித்து இன்றைக்கு பாராளுமன்றம் இந்த சட்டத்தை நிறைவேற்றவிருக்கிறது. பொது இடங்களில் சிகரெட் பிடித்தால் தண்டனை, சிகரெட்டிற்கும் இந்த மது விற்கும் கூட தொடர்புண்டு என்று என்னுடைய நண்பர்களெல்ல லாம் சொன்ன காரணத்தினாலே இங்கே சொல்கின்றேன் பாராளுமன்றத்தில் அது போன்ற சட்டம் இன்றைக்கு- சென்ட்ரல்ஆக்ட்-ஆக வந்து கொண்டிருக்கிறது. ஆனால் நம் முடைய மதுவிலக்குச் சட்டத்திற்கு இதுவரையில் சென்ட்ரல் ஆக்ட்டை, நாம் ஏன் கொண்டுவரவில்லையென்றால் மாநிலத் திற்கு அந்த அதிகாரத்தை வழங்கிவிட்டோம். ஆகவே புதிய

[திரு. பி. எச். பாண்டியன்] [1990 மே 9

12-15 மணி

புதிய சட்டங்களைப் போடும் போதுதான் புதிய புதிய குற்றவாளிகள் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். காரணம் In sho.t, c.ıme is a p.o.uct of law. இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த திருத்தச் சட்டத்தில் மதுவிலக்கு குற்றத்திற்காக கையகப்படுத்தக்கூடிய வெஸல், வெஹிகிள் இவைகளை கலெக்டர் அளவுக்கே அதை பறிமுதல் செய்யலாம் என்றும் நீதிமன்றம் அதில் தலையிடக் கூடாது என்றும் அரசு கொண்டு வந்திருக்கிறது. என்னதான் நம்முடைய மதுவிலக்குச் சட்டத்தில் நாம் இந்த சட்டப் பிரிவுகளை கொண்டு வந்தாலும் இது மாநில சட்டமன்றம் நிறைவேற்றுகின்ற சட்டம் என்ற காரணத்தினாலும், உயர்நீதி மன்றத்திற்குச் சென்றால் என்னுடைய கார் இந்த வழக்கில் பிடிபட்டுவிட்டது என்று ஒருவர் வழக்கு தொடருவாரேயானால் நிச்சயமாக இந்திய நடைமுறைச் சட்டம் 482 Residuary power of the High Court, ınherent powe of the High cou.t குறுக்கே நிற்க முடியாது என்ற காரணத்தினால் நான் இங்கே சொல்கிறேன். இதுபோன்ற வாகனங்கள் நீதிமன்ற நடவடிக்கை முடிந்து வழக்கில் விடுதலையான பிறகு வாகனத்தை திருப்பிக் கொடுக்கும்போது ரொம்ப பழுதடைந்த நிலையாக இருக்கின்ற காரணத்தினால் இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வந்திருப்பீர்கள் என்று நான் எண்ணுகின்றேன். ஆகவே என்னதான் நாம் அதிகமாக இன்றைக்கு கடுமையான சட்டங்களை, கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டும் என்று கொண்டு வந்தாலும் கூட காவல் துறையினர் முனையாவிட்டால் காவல் துறையினர் முழுமையாக நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்த கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியாது. காரணம் இன்றைக்கு வீதி தோறும் 'டீ' கடை திறந்தது போல் இன்றைக்கு கள்ளச் சாராயம் பல்வேறு இடங்களில் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு). ஆகவே, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு அரசாங்கம் எல்லா துறையிலும் மூனைந்து புரொஹிபிஷன் துறை, காவல் துறை, ரெவின்யூ துறை இன்னும் எந்தெந்த துறைகளில்—சில துறைகளில்—வேலையில்லாமல் அதிகாரிகள் இருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் இந்தத் துறையில் இணைந்து செயலாற்றி மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே உங்களுக்கு முன்னால் வைக்கிறேன்.

காரணம் கள்ளச் சாராயத்தில் ஈடுபடக்கூடியவர்கள்தான் இன்றைக்கு சமுதாயத்தில் அதாவது அந்தந்தப் பகுதிகளில் செல்வாக்கு மிகுந்தவர்களாக இன்றைக்குத் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். யாரும் மறந்துவிட முடியாது. தேர்தல் நேரத்தில் இதை நாம் எல்லாம் கண்கூடாக பார்த்திருக்கிறோம். அவர்கள் முன்னால் சில ஆட்கள் இருப்பார்கள். அவர்கள் எல்லா விவகாரங்களிலும் அந்த தேர்தல் நேரத்தில் ஈடுபடுவார்கள், அவர்கள் கையிலே எல்லா ஆட்களும் இருப்பார்கள். ஆகவே,



990 மே 9] [திரு.பி. எச். பாண்டியன்]

மக விரோதிகளை வளர்க்கக்கூடிய ஒரு தொழில், சாராயத் தொழில் இன்றைக்கு கள்ளச் சாராயத்தின் மூலமாக உருவாகிக் கொண்டிருக்கிறது. நாம் இதை தடுக்காவிட்டால் ஆங்காங்கே அந்தந்தப் பகுதிகளில் அந்தந்த தாலுக்காக்களில் இந்த சாராய லைசென்ஸ், சாராயக் கடைகளை எடுத்தவர்கள். மதுக் கடைகளை எடுத்தவர்கள் தான் ஒரு காலக் கட்டத்தில் மக்களுக்கு சேவை செய்வதற்குக் கூட, பணம் சேர்ந்த பிறகு, இங்கே வரக் கூடிய வாய்ப்பைத் கூட தேடிச் செல்வார்கள் என்ற ஐயத்தோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். கள்ளச் சாராயத்தை ஒழித்து அரசாங்கம் வருவாயைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இன்றைக்கு இந்த மலிவு மதுவை இங்கே கொண்டு வந்திருக்கிறீர்கள். கொண்டு வந்தாலும் அந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு முழுமையாக காவல் துறையைப் பயன்படுத்த வேண்டும் என்றும் காவல் துறையிலே எப்படி நாம் சி. ஐ. டி. துறையில் நேர்மையான அதிகாரிகளைப் போட்டு வழக்குகளை விசாரிக்கின்றோமோ இந்தத் துறையை மேற்கொள்வதற்கு நடத்துவதற்கு, நேர்மை உள்ள நாணயம் உள்ள நல்ல ரெக்கார்டு உள்ள அதிகாரிகளைப் போட்டு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை தெரிவித்து, நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்து அமர்கின்றேன். வணக்கம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிக்க துணை சபாநாயகர் அவர்களே, இந்த வழித்தடம் அதிலே மதுவைக் கொண்டு போகின்ற கொள்கலம் இவைகளைப் பற்றிய விவரங்களை எல்லாம் இங்கே கொடுத்து, எனவே அதற்கேற்ப ஒரு சட்டம் இயற்றுகின்ற ஒரு பணியினை நமது முதலமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். மொத்தத்திலே இந்த மதுவை எதிர்க்கிறவர்கள் நாங்கள். எந்த மதுவாக இருந்தாலும் சரி, அதுவும் குறிப்பாகச் சொல்லப்போனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது பாரதிதாசன் விழாவை எவ்வளவு சிறப்பாக கொண்டாடுகிறாரோ அதைப்போல நாமக்கல் கவிஞரையும் புகழுகின்றவர் இங்கிருக்கின்ற பத்து மாடிக் கட்டிடத்திற்கு நாமக்கல் கவிஞருடைய பெயரையே நாம் சூட்டியிருக்கிறோம். நாமக்கல் கவிஞர், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அப்போது மதுவெல்லாம் ஒழிந்தபோது, உற்சாக மிகுதியிலே ஒரு பாட்டுப் பாடினார். கள்ளும், சாராயமும் போய் விட்டது என்பதற்காக, 'விட்டது சனியன், விட்டது சனியன், விட்டது, விட்டதடா' என்று பாடினார். ஆக, ஒரு சனியன் விட்டது என்பது போக, இப்போது மீண்டும் வந்து நம்மைத் தொட்டது என்று சொல்கின்ற சூழ்நிலை உருவாவதைக் கண்டு நாங்கள் வருந்தாமல் இருக்க இயலாது. இது ஏழை, பாழைகளை மிகவும் பாதிக்கும். ஏனென்றால்

12-20 மணி

மலிவு விலை என்று சொல்லிவிட்டால், அதை விடக் குறைந்த விலைக்குக் கொடுப்பதற்குக் கள்ளச் சாராயக்காரர்கள் இருக் கிறார்கள். கள்ளச்சாராயக்காரர்களை ஒழிப்பதற்குத்தானே நாங்கள் இருக்கிறோம், அது முடியவில்லையே என்று சொன்னால் இப்போது நானும், மாண்புமிகு உறுப்பினர் சிங்காரமும் இங்கே பேசிக்கொண்டு இருந்தபோதுகூட, அதைத்தான் சொன்னார். 'ஒரத்தநாடு திட்டம்' என்று சொல்கிற திட்டத்திலே அங்கு இருக்கிற மக்கள் அத்தனை பேரும் குழுக்களாக அமைத்துக் கொண்டு, அங்கு யாரும் கள்ளச்சாராயம் காய்ச்சக்கூடாது என்று சொல்கின்ற அளவிற்கு முடிவு எடுத்துவிட்டார்கள் என்று சொன் னால், ஊர் மக்களுடைய முடிவை மீறி யாராவது செல்வார் களேயானால், அவர்கள் ஊரிலே குடியிருக்க முடியாது என்று ஆகும். இப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் நாம் செய்து அந்த கள்ளச்சாராயத்தை ஒழிக்க முடியுமே தவிர, மலிவு விலை யிலே சாராயத்தைக் கொண்டு வந்து அதை ஒழிக்க முடியாது.

இப்போது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு போவதற்கு அனுமதிச் சீட்டு கிடைக்கிறது என்று சொன்னால், அந்த அனுமதிச் சீட்டைப் பயன்படுத்திக் கொண்டு கள்ளச் சாராயத்தை அதிலே கொண்டு போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஏனென்று சொன்னால், ஏலம் எடுக்கின்ற கடைக் காரர்கள், மிக அதிகப் பணம் கொடுத்து ஏலம் எடுக்கவேண்டி வரும். போட்டி எங்களிடமிருந்து இல்லை, அன்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக இல்லை. அதைப்போல இந்த மதுவை எதிர்க்கின்றவர்களிடமிருந்து இல்லை. ஆனால் கூட, இதிலே பணம் சம்பாதிக்க வேண்டும் என்கிறவர்கள் அதிக மாகப் போட்டி போடுகிற நேரத்தில், அரசிற்கு இவ்வளவு தொகை கொடுக்க வேண்டி இருக்கின்ற காரணத்தினாலே கள்ளச் சாராயத்தை நாம் இதிலே விற்றால் என்ன என்று சொல்கின்ற ஒரு ஊக்கமும் அவர்களுக்கு ஏற்பட்டு விடும். ஏனென்று சொன் னால், கள்ளச்சராயம் என்று சொல்கிறபோது, அது இப்படிப் பட்ட வரிகளுக்கு உட்படுத்தப்படாத காரணத்தினாலே அது இன்னும் பரவுவதற்கு ஒரு வாய்ப்பைத் தான் நாம் ஏற்படுத்திக் கொடுக்கிறோமோ, என்று சொல்கிற ஐயப்பாடு எனக்கு ஏற்படு கிறது.

ஏனென்றால், மலிவு விலை மது இருந்து கொண்டிருக்கின்ற கேரளாவிலே எவ்வளவு சாவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று பாருங்கள். கள்ளச்சாராயத்தைப் பிடிக்கின்ற போலீசார் கூட அதனை முற்றிலும் அழித்துவிடுவதில்லை. தட்டான்சாவடியிலே பலர் செத்தார்கள். பண்ருட்டிக்குப் பக்கத்திலே. அதில் என்ன சொல்கிறார்கள் என்றால், நீதிமன்றத்தினுடைய சுவர் அருகே கள்ளச்சாராயம் காய்ச்சப்பட்டது, அதைப் பிடித்து வைத்த போலீஸ்காரர்கள் ரொம்ப நாளாக அதனை வைத்துவிட்டார்கள் அந்த ஊறலை. அப்படி வைத்திருந்த ஊறலை பிறகு வேறுசில கள்ளச்சாராயக்காரர்களுக்கு விற்றார்கள். அதனால் நச்சுத்



தன்மை அதிலே இருந்தது என்று சொல்கின்ற வாதமும் வைக்கப் படுகிறது. எனவே, போலீசாரே கள்ளச்சாராயத்தை முற்றிலும் ஒழிப்பார்கள் என்று சொல்வதற்குப் பதிலாகத்தான் ஊர்க் காரர்களை வைத்து அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று நான் உங்களுக்குச் சொன்னேன்.

அடுத்த செய்தியாக, மிக முக்கியமாகச் சொல்வது, ஏழை களுக்கு எட்டாது என்பதற்காக, அரிசி அவர்களுக்கு எட்டாது என்று சொன்னால், மலிவு விலையிலே கொடுக்கலாம். துணி எட்டாது என்று சொன்னால், மலிவு விலையிலே கொடுக்கலாம் வீடு எட்டாது என்று சொன்னால், மலிவு விலையிலே கட்டிக் கொடுக்கலாம். ஆனால், மது அவர்களுக்குக் கிட்டாது அல்லது எட்டாது, அது உயரத்தில் இருக்கிறது என்பதற்காக, பக்கத் திலே கொண்டு போனால் எவ்வளவு ஆபத்து என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்கவியலாது. ஏனென்றால் ஒரு புதுக் கவிஞன் பாடுகிறபோது சொன்னான், மனைவியினுடைய மாங் கல்யப் பெருமையைப் பற்றிச் சொல்கிறபோது, 'மாங்கல்யத் தினுடைய பெருமையை மனைவி அறிவாள், மணவாளன் அறி வான், அதை விட மார்வாரியே அதிகமாக அறிவார்' என்று சொன்னதற்குக் காரணம், மார்வாரி கடைகளுக்கு அது சென்று விடுகிறது, மார்வாரி என்றால் அவர்கள் ஜாதியைக் குறிப்பி வில்லை. வட்டிக் கடைக்கு அது சென்று விடுகிறது என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். ஆக, இப்படியெல் லாம் இது போகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக அழகாக ஒரு செய்தியினை இங்கே சொன் னார்கள். 'சாதிச் சண்டைகள் வருகிறபோது, நமது தமிழகத் திலே சாதி என்ற ஒன்றே இல்லை தொழிலின் அடிப்படையிலே பிரிவு இருந்தது. ஆனால் சிலர் செய்த சதியின் காரணமாக சாதிக்குக் கால் முளைத்து சாதி ஆகிவிட்டது, இன்று வெறி கொண்டு ஆடுகிறது' என்று அழகிய தமிழிலே சொன்னார்.

அதைப் போலே, ஒருவன் மதுவுக்கு அடிமைப்பட்டான் என் றால், மதுவைத் தேடித் தேடிப் போனானானால், பிறகு மது வுக்குக் கால் முளைத்து மாதுவாக அது மாறி, பிறகு அதை தேடிப் போக ஆரம்பிப்பான், இந்த நாட்டிலே எத்தனையோ குழப்பங்களுக்கு அது காரணமாக இருக்கக்கூடும். மது குடிப் தனாலே விபத்துக்கள் ஏற்படுவதற்கு அதிகம் வாய்ப்புக்கள் இருக் கின்றன. அரசாங்க ஆஸ்பத்திரிகளிலே கூட்டமும், மருந்து செலவும் அதிகமாக இருக்கின்ற சூழ்நிலை உருவாகும். மதுவுக்கு செலவிடப்படுகின்ற காரியங்களையெல்லாம் , துணிமணிகள் நகைகள் வாங்குவதற்குச் சென்றார்கள் என்று சொன்னால் அதற்கு விற்பனை வரி கிடைக்கும். இவைகளையெல்லாம் விட்டு விட்டு, இதிலே வருகின்ற பணத்தை மட்டும் நாம் பயன்படுத்தி நல்ல திட்டங்களைக் கொண்டுவரலாம் என்று சொன்னால்,

அது நல்ல திட்டமாக இருக்காது. ஒரு பக்கத்திலே நாம் கொடுப்
பதை விட அதிகமான துன்பத்தைத் தான் இது கொண்டுவரும்
என்ற காரணத்திற்காக, முற்றிலுமே இதனைத் தவிர்ப்பதற்
குரிய சூழ்நிலை வரவேண்டும் என்று தான் நாங்கள் எப்போதுமே
பேசிக்கொண்டிருக்கிறோம்.

உள்ளே எங்களுக்கு ஆதரவு இல்லாத காரணத்தினாலே
அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்
திலே சொன்னார்கள், எங்கள் கட்சித் தோழர்கள் தான் இதிலே
ஏலம் எடுப்பார்கள் என்று. நீங்கள் கூடத் தொடர்ந்து எடுக்க
மூடியாத அளவுக்கு நாங்கள், உள்ளே ஆதரவில்லையென்று
சொன்னாலும், வெளியே மக்களுடைய ஆதரவைத் திரட்டி
மூழு மதுவிலக்கு கொண்டு வருவதற்குரிய அறப் போராட்டத்
திலே வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையிலே இதனுடைய
கருத்துக்களைச் சொல்வதற்கு நீங்கள் அனுமதித்ததற்கு நன்றி
தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

12-25 மணி

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்
தன் அவர்கள் பூரண மதுவிலக்கு பற்றிச் சொன்னார்கள். ஏற்
கெனவே இந்த மன்றத்திலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.
நம்முடைய முதலமைச்சர் அவர்களும் தெரிவித்து இருக்கிறார்
கள். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் மது விலக்கு
நம்முடைய கொள்கை; அண்ணா அவர்களுடைய கொள்கையும்
அதுதான். ஆனால் சூழ்நிலையின் காரணமாக சில திருத்தங்கள்
கொண்டு வரவேண்டிய கட்டாயத்திற்கு அரசு ஆளாக்கப்பட்
டிருக்கிறது என்பதைத் தான் பல வேளைகளில் சுட்டிக் காட்டி
யிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன்
அவர்கள் சொல்லுவது போல் தமிழ்நாட்டிலே மட்டும்தான்
இந்த நிலை என்று இல்லை, இந்தியா முழுவதும் பல மாநிலங்
களிலே அதிலும் குறிப்பாக காங்கிரஸ் ஆட்சி செய்யும் மாநிலங்
களிலே கூட இன்றைக்கு மது விலக்கு அமல் நடத்தப்படவில்லை.
என்பதை நாம் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று நான்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அவையின் முன்னாள் இருக்கிற சட்டமுன்வடிவு பற்றி மாண்பு
மிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்
கள். இந்த சட்டமுன்வடிவில் உட்படுத்தப்படக்கூடிய சட்டப்
பிரிவுகள்; பிரிவு 14 உட்பிரிவு 4, பிரிவு 7 உட்பிரிவு (B) இவைகள்
திருத்தப்படுகின்றன. பிரிவு 14 உட்பிரிவு 5; பிரிவு 22 (C)
புதிதாக சேர்க்கப்படுகிறது. இந்த சிம்பிள் அமெண்டுமெண்டு
களுக்குத்தான் இந்த சட்டமுன்வடிவு இந்த மன்றத்திலே
கொண்டு வரப்பட்டிருக்கிறது.





990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு இரண்டாம் திருத்த
ட்டமுன்வடிவில் முக்கிய அம்சம் என்னவென்றால் பிரிவு 14 (4)
மிழ்நாடு 1937ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தில் மது விலக்குக்
ற்றங்களை சம்பந்தப்பட்ட பொருள்களை கைப்பற்றுதல் சம்பந்த
ான பிரிவு 14 (1), 14 (2), 14 (3) மற்றும் 14 (4) ஆகிய பிரிவுகள்
றித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் பல வழக்குகள்
தாடரப்பட்டன. இந்த வழக்குகளை விசாரித்து உயர்நீதிமன்றம்
937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு சட்டத்திலுள்ள 14 (1),
4 (2), 14 (3) ஆகிய பிரிவுகளை அரசியலமைப்புச் சட்டப்படி
சல்லுபடி ஆகும் என்றும் ஆனால் இந்தச் சட்டத்தில் உள்ள
ிரிவு 14 (4), அரசியல் சட்டத்தினுடைய பிரிவுகள் ஆர்ட்டிகில்
4, 19 (I) (G) மற்றும் 200, 300 (a) ஆகியவற்றின்படி
சல்லத்தக்கதல்ல என்றும் எனவே இந்தப் பிரிவுகள்
ிந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு பிரணானது எனவும்
ீர்ப்பு வழங்கியிருக்கிறது. சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய
தழுவின் தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில்
மேல் முறையீடு செய்திருக்கிறது. அதன்படி தகுந்த நடவடிக்
கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில் மேலே கூறப்பட்டுள்ள சென்னை உயர்நீதி
மன்றத்தின் தீர்ப்பின் காரணமாக கள்ளச் சாராயத் தொழிலில்
ஈடுபட்டு இருப்பவர்கள் மீது 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது
விலக்கு சட்டத்தின் படி கடுமையான நடவடிக்கை எடுக்க இய
லாது எனக் கருதப்படுவதால் கள்ளச் சாராயப் பேர்வழிகள்
இந்தத் தீர்ப்பை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு மீண்டும்
அத்தொழிலில் ஈடுபட்டு வருவதைத் தடுப்பதற்கு 1937ஆம் ஆண்டு
தமிழ்நாடு மது விலக்கு சட்டத்தினுடைய பிரிவு 14 (4) ஐ மாற்றி
அமைப்பதற்கான சட்டத் திருத்தம் ஒன்று நம்முடைய காவல்
துறையால் பரிந்துரைக்கப்பட்டு அதைப் பரிசீலிக்கப்பட்டு
இன்றைக்கு அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தற்போது சட்டப்பிரிவில் உள்ளபடி ஒரு மாவட்ட ஆட்சி
யரோ அல்லது மது விலக்கு அலுவலரோ எந்த ஒரு விலங்கு, களம்,
வண்டி அல்லது இதர வாகனங்கள் தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு
மது விலக்குச் சட்டத்தின் பிரிவுக்கு எதிராக குற்றத்தில்
சம்பந்தப்பட்டு இருக்கிறது என்று தெரிய வந்தால் அத்தகைய
விலங்கு, களம், வண்டி அல்லது இதர வாகனங்களை பறிமுதல்
செய்ய அதிகாரம் வழங்குகிறது.

மேலும் இதன் தொடர்பாக வாகனங்கள், களம், விலங்கு
வண்டி அல்லது இதர வாகனங்களை விடுவிக்கும் இடைக்கால
உத்தரவு எதையும் பிறப்பிக்க நீதிமன்றங்களை தடை செய்கிறது.

12-30 மணி

இந்தப் பிரிவு அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்ட அடிப்படை
உரிமைகளை பாதிப்பதாக, உயர்நீதிமன்றம் கருதுவதால் அவ்
வாறு பறிமுதல் உத்தரவு பிறப்பிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட
அந்த உரிமையாளருக்கு சட்டமுறைப்படி தெரிவிப்பதற்கும் அவ்
வாறு தெரிவிக்கப்பட்ட பின்னர் பறிமுதல் உத்தரவு பிறப்பிக்கவும்,
வாகனங்களை பறிமுதல் செய்வதற்குப் பதிலாக அவ் வாகன
உரிமையாளர்களிடம் அந்த வண்டி அல்லது அந்த வாகனத்
திற்கு இணையான ஈட்டுத் தொகைக்காக, செக்யூரிட்டியாக
அரசுக்கு செலுத்தும் பட்சத்தில் அவ்வாகனங்களை குற்றவியல்
வழக்கு முடிவை எதிர்நோக்கி விடுவிக்கவும் உத்தேசம் செய்யப்
பட்டுள்ளது.

மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அல்லது மது
விலக்கு அலுவலர் அவர்கள் பிறப்பிக்கும் ஆணையை எதிர்த்து
செஷன்ஸ் கோர்ட்டில் மேல்முறையீடு செய்வதற்கு சட்டத்தில்
வகை செய்யப்பட்டிருக்கிறது. பிரிவு 17 (பி) தமிழ்நாடு மது
விலக்கு சட்டத்தில், 6 (பி) பிரிவில் வகைமுறைகளுக்கு இணங்கிய
வாறு அமையும் வகையில் 17-வது பிரிவில் (பி) பிரிவை திருத்துவ
தென முடிவு செய்யப்பட்டுள்ளது. 22 (சி) என்ற புதிய பிரிவை
ஏற்படுத்த தற்போது 1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு
சட்டப் பிரிவு 32 (ஏ)-ல் மாநில அரசு எந்தவொரு இடத்திலும்
கள்ளத்தனமாக, மதுவகைகள் மற்றும் போதை தரும் பொருட்
கள் அடங்கிய சாராயம் போன்றவற்றை கடத்திச் செல்வதை
தடுக்கும் பொருட்டு ஆங்காங்கே சோதனைச்சாவடிகள் அமைத்துக்
கொள்ள அதிகாரம் அளித்திருக்கிறது. ஆனால், யாதொரு நபர்,
களம், வாகனம் போன்றவை, மதுவகைகள், போதை தரும்
பொருட்கள் ஆகியவற்றை ஏற்றுமதி, இறக்குமதி செய்துகொள்
வதற்கும், ஆக, இவற்றை மாநிலத்திற்கு வெளியிலோ அல்லது
மாநிலத்திற்கு உள்ளோ எந்தவொரு சோதனைச் சாவடி வழி
யாக வரவேண்டும் என்பதை குறிப்பிட மதுவிலக்கு சட்டத்தில்
விதிமுறைகள் இல்லை. எனவே, மதுவகைகள் மற்றும் போதை
தரும் பொருட்கள் கொண்டு செல்லும்போதுகூட அதற்குரிய
அனுமதியை வழங்கும் அதிகாரியால், இந்த வழியாகத்தான் செல்ல
வேண்டுமென்ற நிபந்தனையை, உரிமையை, அனுமதி சீட்டில்
ஒரு நிபந்தனையாக ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்யப்
பட்டுள்ளது. அதன்படி 22 (சி) என்னும் புதியதொரு பிரிவை
ஏற்படுத்தவும் சட்டம் வகை செய்கிறது.

பொதுவாக நம்முடைய உறுப்பினர்கள் பேசும்போது கள்ளச்
சாராயத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். கள்ளச் சாராயத்தை
ஒழிப்பதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை
நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கள்ளச் சாராயத்தை



அனுமதிப்பதற்கு முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு.
பி. எச். பாண்டியன் அவர்கள் சொன்னதைப்போல, திறமை
யான அதிகாரிகளைக் கொண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்
களைக் கண்டுபிடித்தும், கள்ளச்சாராய நடமாட்டத்தைத்
தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை
நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு பிரச்சினையாக மாண்புமிகு உறுப்பினர்கள்
சொன்னது, விற்பனை செய்யப்படவிருக்கின்ற சாராயத்தில்கூட
கலப்படம் செய்யக்கூடும் என்ற கருத்தினைத் தெரிவித்து இருக்
கிறார்கள். கலப்படத் தடைச்சட்டம் இருக்கிறதா என்ற
கேள்வியைக்கூட திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் கிளப்பி
யிருக்கிறார்கள். இந்தச் சட்டத்திலே ஒரு தனிப் பிரிவு போடப்
பட்டிருக்கிறது. அந்தப் பிரிவிலே செக்ஷன் 24 (எ)-யின்படி
சாராயத்தில் கலப்படம் செய்தால் 3 ஆண்டுகள் தண்டனை
அளிக்கலாம் என்று சட்டம் இருக்கிறது. எனவே, இப்போது
கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டம், உயர்நீதிமன்றத்தில்
ஏற்பட்ட ஒரு தீர்ப்பின் விளைவாக இந்தத் திருத்தம் செய்ய
வேண்டிய நிலை ஏற்பட்டதே தவிர வேறு ஒன்றும் இல்லை.
எனவே, இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டு
மென்று நான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும்
கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை
முன்னுள்ள கேள்வி :

"1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம்
திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு
எண். 20/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு
விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

12-35 மணி

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை
முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்
பெறவேண்டும்."

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In Clause 4, in the proposed new section 22-C after the words "the prescribed authority" *add* the words "not below the rank of R.D.O. or Sub-Collector."

(திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது வாக்கெடுப்பு.

பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" பிரிவு-4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"*1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பயணிப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1990 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1990ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன் வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஈ) பயணிப்பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :





" 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

நான் இதோடு முன்னுரையாக சில நிலைமைகளை சொல்வதற்கு விரும்புகிறேன். பேருந்துகள் நாட்டுடைமை சட்டத்தைப் பொறுத்தவரையில், 42 ஆண்டு கால வரலாறு, இந்த நாட்டுடைமை சட்டத்திற்கு உண்டு. இந்திய நாட்டிற்கு சுதந்திரம் 1947–லே கிடைத்ததற்குப் பிறகு, முதன்முதலாக 1948-வது ஆண்டில், சென்னை மாநகரத்தில் இருக்கிற போக்குவரத்து ரோடுகள் அனைத்தும் நாட்டுடைமையாக—தேசிய உடைமையாக ஆக்கப்பட்டது. அதற்குப் பிறகு, 11ஆண்டுகள் கழித்து,1959 ஆம் ஆண்டில் 120 மைல் தொலைவிற்கு மேற்பட்ட எல்லா வழித் தடங்களிலும் விரைவுப் பேருந்துகளை, அரசே ஏற்று நடத்த வேண்டுமென்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சட்டம் இயற்றி, அதன்படி நடவடிக்கையும் மேற்கொள்ளப் பட்டது. அதற்குப் பிறகு, 1967-ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு, அன்றைய.போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று இருந்த நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சாதாரண விரைவுப் பேருந்துகள் ஓடுகின்ற 75 மைல் அதற்கு மேற்பட்ட தொலைவு உள்ள எல்லா வழித் தடங்களிலும், அடுத்து சென்னை மாநகரத்திலே தொடங்கி சென்னையிலே வந்து முடிவடையக் கூடிய எல்லா வழித் தடங்களிலும், அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தொடங்கி, அங்கே வந்து முடிவடையக் கூடிய எல்லா வழித் தடங்களிலும், ஆக எல்லா வழித் தடங்களும் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்ற அறிவிப்பு செய்து, அதற்கேற்றாற்போல் சட்டம் கொண்டு வந்து, 1967-ல் இந்த நாட்டுடைமை திட்டத்திலே மேலும் ஒரு படி முன்னேறியது. அதற்கு அடுத்தபடியாக, 1971-வது ஆண்டில், ஒவ்வொரு பேருந்து உரிமையாளரும் அதிகபட்சமாக 10 உரிமங்கள்தான் வைத்திருக்கலாம் என்ற உச்ச வரம்பு சட்டம் கட்டாயமாகக் கொண்டு வரப்பட்டது. அதற்கு அடுத்து, 1971-வது ஆண்டிலே மீண்டும் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. 50 பேருந்துகள் அல்லது அதற்கு மேற்பட்ட உரிமங்கள் வைத்திருக்கக் கூடிய உரிமையாளர்களிடத்திலே இருந்து, பேருந்துகளையும் அவை தொடர்பான சொத்துக்களையும் அரசு தன்வசம் எடுத்துக் கொண்டு, நாட்டுடைமையாக்க வேண்டிய சட்டத்தை நாம் கொண்டு வந்தோம். அதனுடைய அடிப்படையில் " சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட் " சார்பில் 346 பேருந்துகளும் ஏ.பி.டி. பிரைவேட் லிமிடெட் சார்பில் 110 பேருந்துகளும், ராமன் அண்டு ராமன் கம்பெனியின் சார்பில் 115 பேருந்துகளும், எஸ்.ஆர்.வி.எஸ். பஸ் கம்பெனியின் சார்பில் 65 பேருந்துகளும், எஸ்.வி.பி.எஸ். சார்பில் 50 பேருந்துகளும்

* 8–5–1990 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

12-40 மணி

ஆக இப்படிப்பட்ட தனியார் நிறுவனங்கள் அன்றைக்கு நாட்டுடைமையாக்கப்பட்டு சேரன், சோழன், பாண்டியன் போக்குவரத்துக் கழகங்கள் என அன்றைக்கு உருவாக்கப்பட்டன.

அதற்கடுத்தபடியாக 1973ஆம் ஆண்டு நாட்டுடைமைச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் ஒரு மிக முக்கியமான காலகட்டம். 1973-ல் கொண்டுவரப்பட்ட சட்டம் மாவட்டந்தோறும் இருக்கக் கூடிய தனியார் போக்குவரத்தை 5 ஆண்டுகாலத்தில் மாவட்ட வாரியாக அரசுடைமையாக்குவதற் காக சட்டம் கொண்டுவரப்பட்டு அந்த சட்டத்தின் அடிப்படை யில் முதன் முதலாக 14–1–1973-ல் நீலகிரி மாவட்டத்தில் பயணப் போக்கு வரத்துப் பேருந்துகள் அத்தனையும் நாட்டுடைமையாக்கப்பட்டு அன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் முதல் கட்டமாக பயணிப் பேருந்து களை நாட்டுடைமையாக்கிய பிறகு இந்தச் சட்டத்தை எதிர்த்து உயர்நீதி மன்றத்திலேயும், உச்ச நீதிமன்றத்திலேயும் 1973-லேயிருந்து 1983-வரை 10 ஆண்டுகாலம் வழக்கு நடைபெற்று கடைசியாக 31–10–1983 அன்று இந்திய உச்ச நீதிமன்றம், இந்த தேசியமய சட்டம், 1973-ல் கொண்டுவரப்பட்ட சட்டம்—செல்லுபடியாகும் என்று தீர்ப்பு கூறியது. அதற்குப் பிறகு மீண்டும் இந்தச் சட்டம் அதாவது தேசியமயமாக்க வேண்டும், நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட சட்டம் குறித்து 10 ஆண்டுகாலம் நீதிமன்றத்தில் வழக்கு நடை பெற்று கடைசியாக அது செல்லுபடியாகும் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்புச் சொன்னதற்குப் பிறகு அந்தச் சட்டத்தைத் தீவிரமாக அமல் நடத்தாமல் 1984-ம் ஆண்டு இந்தச்சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்தத் திருத்தச் சட்டம் நாட்டுடைமைக் கொள்கையின் உயிர் மூச்சாக விளங்கிய 1973 ஆம் ஆண்டு சட்டத்தின் முக்கிய விதிகள் அனைத்தையும் தளர்த்தியது. 5 பெர்மிட்களுக்கு உட் பட்ட தனியார் பேருந்துகளுக்கு நாட்டுடைமைச் சட்டத்தி லிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டதோடு தனியார்கள் புதிய பெர்மிட்டுகளைப் பெறவும், மாற்றம் செய்யவும், புதுப் பிக்கவும் வழி செய்யப்பட்டது. இது எல்லாவற்றுக்கும் மேலாக புது வழித் தடங்களில் தனியார்களுக்கு உரிமம் வழங்குவதற்கும் இந்தச் சட்டத் திருத்தத்தில் வழி திறந்து விடப்பட்டது. இதனால் 1973ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்ட சட்டத்தின் கொள்கைகள் பாதிப்புக்கு உள்ளாக்கப் பட்டன. அதற்குப் பிறகு இன்னும் ஒரு சட்டத்திருத்தம் 1987-ல் கொண்டுவரப்புட்டது. இந்தச் சட்டத்திருத்தம் படி அறிவிக்கை செய்யப்பட்ட வரைவுத் திட்டங்கள் அதாவது டிராஃப்ட் ஸ்கீம்ஸ்—ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள் அதாவது அப்ரூவ்ட் ஸ்கீம்ஸ் ஆகிய வழித் தடங்களில் எந்த ஒரு பகுதியிலுமோ அல்லது சம்பந்தப்பட்ட திட்டம் முழு வதிலுமோ தனியார் பேருந்துகளை இயக்க முடியும். அதோடு



1973-ல் சட்டம் கொண்டுவரப்பட்டு பத்தாண்டுகளுக்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட தீர்ப்புகளுக்குப் புறம் பாக நாட்டுடைமைக் கொள்கையையே அடியோடு தகர்த்து எறிந்து தரைமட்டமாக்கக்கூடிய சட்டம் 1987-ல் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு 1989-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால் நாட்டுடைமைச் சட்டத்திற்கு ஊறு விளைவிப்பதாக அமையும். அது நாட்டுடைமைக் கொள்கையை அறவே அழித்துவிடும் என்பதைக் கருத்தில் கொண்டு இந்தச் சட்டத்தை மேற் கொண்டு செயல்படுத்துவதில்லை என்று இந்த அரசு தீர்மானித்தது. 1990-வது ஆண்டு மார்ச் திங்கள் 17-ஆம் நாள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், சட்டப் பேரவையில் கீழ்க்கண்டவாறு கொள்கைப் பிரகடனம் செய்தார்கள்:

12–45 மணி

'' மீண்டும் கழக அரசுப் பொறுப்பேற்றதற்குப் பிறகு 1989-வது ஆண்டு ஜூன் திங்கள் 29-ஆம் நாளில் இந்தச் சட்டம் குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டு, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில், மீண்டும் பேருந்துகளை முழுமையாக தேசிய மயமாக்கும் சட்டத்தை முதலில் குறைந்த அளவில் இயக்கப்படும் மாவட் டத்திலிருந்து தொடங்கி, படிப்படியாக ஏறு வரிசையில் மற்ற மாவட்டங்களுக்கு விரிவடையச் செய்து, 10 ஆண்டு களுக்குள் பஸ்களை தேசிய மயமாக்கும் சட்டத்தை நிறைவு செய்ய முடிவு செய்யப்பட்டு, அதை அவசரச் சட்டமாக வெளியிட மத்திய அரசின் முன் அனுமதியைக் கோரி, 1989 ஜூலைத் திங்கள் 28-ஆம் நாள் கடிதம் எழுதப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து இதுநாள் வரை இந்தச் சட்டத்திற்கு முன் அனுமதி வராத காரணத்தால், இதை அவசரச் சட்ட மாகக் கொண்டு வரமுடியவில்லை. எனவே, 1989-வது ஆண்டு ஜூன் திங்கள் 29-ஆம் நாள் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, இந்தச் சட்டம், இந்தக் கூட்டத்தின் முன் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்'' என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்த பிரகடனத்திற்கேற்பத்தான், 1973-வது ஆண்டு வெளியிடப் பட்டு, 1984-வது ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட, பயணிப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகளைக் கையகப் படுத்தும் சட்டத்திற்கு தேவையான திருத்தங்களுடன் இந்தப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில் தனியார் பேருந்துகள் அரசுடைமையாக்கப்படுவதன்மூலம், பொது மக்களுடைய சொத்தாக மாற்றப்படுவது மட்டுமல்ல, சாதாரண

மக்களுக்கும் பயன்படுகின்ற வகையில் லாப நோக்கும் கருதாமல், கிராமங்களுக்கு, நகர்ப் புறங்களுக்கு இப்படி எல்லா இடங்களிலும் பேருந்துகளை இயக்குவதற்கான வழி வகைகளைச் செய்வதற்கும், அதிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு உண்மையிலேயே அவர்களுக்கு மறுவாழ்வு கொடுப்பதற்கும், நிச்சயமாக இந்தச் சட்டத் திருத்தம் பயன்படும் என்ற வகையிலேதான் இந்த முற்போக்கான சட்டத்தை மீண்டும் இந்த அமைச்சரவை முடிவெடுத்து, இங்கே வைத்திருக்கிறது. அதையும் குறிப்பிட்ட காலத்தில், 10 ஆண்டு காலத்திற்குள் படிப்படியாக இந்தச் சட்டத்தை நாங்கள் நிறைவேற்றுவோம் என்ற அடிப்படையிலே இந்த சட்டத்தினுடைய முன்வடிவை இங்கே வைத்திருக்கிறோம். எனவே, இந்த மாமன்றம் இந்த சட்டத்தை ஆய்வு செய்து, இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாக பஸ்களை தேசியமயமாக்குவோம் என்று குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே சில மாவட்டங்களில் அனைத்து வழித் தடங்களையும் தேசியமாக்கப்பட்டு விட்டது. குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் அப்படி ஆக்கப்பட்டிருக்கிறது. அப்படி நீலகிரியில் எடுக்கப்பட்ட அனைத்து பஸ்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது என்றுதான் கருதுகிறேன். இப்போது புதிய மோட்டார் வாகன சட்டப்படி நஷ்ட ஈடு கொடுக்காமல் கூட எடுக்கலாம்.

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற காடு மணக்க வந்த கற்பூர சொற்கோ'' என்று பாடிய பாரதிதாசனுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த அரசு, இன்று உலகம் முழுவதும் செல்லரித்துப் போன பழமைப் பொருளாதாரக் கொள்கை என்று சொல்லப்படுகின்ற கொள்கையை, உலகத்திலேயே கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் (எனது அருமை நண்பர் வரதராசன் அவர்கள் எழுந்துவிடுவார்களென்று நினைக்கிறேன்)–கம்யூனிஸ சித்தாந்தங்களில் கூட, State-owned economics is a failure என்பதை





ஏற்றுக் கொண்டு, ஒரு மாறுபாடான புதிய பொருளாதார சித்தாந்தத்தைச் சிந்திக்கின்ற புதுமையான காலத்தில், புதுமைக் கவிஞர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு நூற்றாண்டு விழா நடத்துகின்ற நீங்கள், செல்லரித்துப் போன பொருளாதாரத் தத்துவத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்ற காரணம் எனக்கு விளங்கவில்லை.

***திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, State-owned economics அங்கே செல்லாக் காசாகி விட்டது, செல்லரித்துப் போனது என்று சொல்கிறார்கள். அது உண்மை அல்ல. அங்கே இன்னும் உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் தனியுடைமையாக்கப்படாமல் பொதுவுடைமையாகத்தான் இருக்கிறது. அங்கே யாரும் தன்னுடைய உழைப்பைத் தவிர பிறருடைய உழைப்பைச் சுரண்டி சொத்து சேர்த்துக் கொள்ளத் தனி உடமை என்பது அனுமதிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

12–50 மணி

***திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்கள், உலகத்திலே நடைபெறுகின்ற மாற்றங்களை ஜன்னல் வழியாக இன்னும் விரிவாகப் பார்க்கவில்லையென்று நான் எண்ணுகிறேன். ''குளோஸ்ட் எக்கானமி'' என்பது கடந்த கால உலகத்தினுடைய பொருளாதாரக் கொள்கையாக இருந்தது. அந்த நிலை மாறி, இன்று ''ஓப்பன் எக்கானமி'' என்பது உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தத்துவமாக இருக்கிறது. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உலகம் முழுவதும் நடைபெறுகின்ற மாற்றங்களை எல்லாம் உற்று கவனித்துக் கொண்டிருக்கிறார்கள், உலகப் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற மாறுதல்களை எல்லாம் உற்றுப் பார்த்து, அனுபவ ரீதியாக உணர்ந்து, அதிலே மாறுதல்களை உண்டாக்காமல், ஏதோ இன்னும் பழமையான கொள்கையை ஏற்றுக்கொண்ட காரணத்தால், அதை எப்படியும் நிறைவேற்றியே தீருவது என்ற உணர்வோடு செயல்பட்டுக் கொண்டிருப்பதாக நாங்கள் உணர்கிறோம்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகிறபொழுது, பொது நலத்தின் சார்பாக, அறிமுகப்படுத்துகிறேன் பப்ளிக் இன்டரஸ்ட்—என்று சொன்னார்கள். ஆனால், அவர்கள் பப்ளிக் இன்டரஸ்ட் என்று எதை நினைக்கிறார்கள் என்று எங்களுக்கு விளங்கவில்லை, அவர்கள் அதன்மூலமாக என்ன நன்மையை இந்த மாநிலத்தில் வாழ்கிற மக்களுக்குச் செய்யவிருக்கிறார்கள் என்பதும் எங்களுக்குப் புரியவில்லை. இன்னும் சொல்லப் போகின்றபொழுது பஸ்களை எல்லாம் பொதுமக்களுடைய

சொத்தாக மாற்றப் போகிறோம் என்று சொன்னார்கள். அது எங்களை எல்லாம் கேலி செய்வதாக இருக்கிறது. ஏற்கெனவே ஓடிக்கொண்டிருக்கிற பஸ்களுக்கும் பொது மக்களுக்கும் இடையிலே எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதை அவர்கள் அறியாதது அல்ல. இருந்தாலும் பொது மக்களுடைய சொத்தாக ஆக்கப்போகிறோம் என்று அவர்கள் சொன்னால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, இது பிள்ளை யார் பிடிக்கப் போய் குரங்கு பிடித்த கதையாக மாறப்போகிறது. ஆனால், நாங்கள் சொல்லி நீங்கள் கேட்கப் போவதில்லை. இருந்தாலும் ஊதுகிற சங்கை ஊதி வைத்தால், விடியும்போது விடியட்டும் என்ற அடிப்படையிலே இந்தக் கருத்தை நான் இந்த அரசுக்குச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

எங்களுடைய கட்சியினுடைய கொறடா அவர்கள் ஒரு கிளாரிபிகேஷன் கேட்டார்கள், நீலகிரி மாவட்டத்தில் எடுத்த பஸ்களுக்கு காம்பன்சேஷன் கொடுத்துவிட்டீர்களா என்று. நமது அமைச்சர் அவர்கள் கொடுத்து விட்டோம் என்று நினைக்கிறோம் என்று சொன்னார்கள். அது தவறு. 1973 ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் எடுக்கப்பட்ட பஸ் கஞக்கு இன்னும் காம்பன்சேஷன் கொடுக்கவில்லை. அங்கே பஸ்களை ஓட்டியவர்கள், அன்று முதலாளிகளாக இருந்தவர்கள் இன்று தொழிலாளிகளாக மாறிவிட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. இப்பொழுது அவர்கள் பஸ்களிலே கண்டக் டர்களாக, டிரைவர்களாக ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அந்த நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படவில்லை.

அதுமட்டுமல்ல, ஒரு நண்பர் எங்களிடம் சொன்னார், எங்கள் மனைவி, மக்களைத் தவிர—, மீதி எல்லாவற்றையும் அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்று. பஸ்களை மட்டும் அல்ல. அங்கே இருக்கிற பணிமனைகள், அங்கேயிருக்கிற அலுவலகக் கட்டிடங்கள், சில பஸ் முதலாளிகள், குடியிருந்த வீடுகள் ஆகியவை கூட அந்த பஸ் கம்பெனியி னுடைய சொத்துக்கள் என்ற முறையிலே அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அவற்றுக்கெல்லாம் இன்றுவரை நஷ்டஈடு கொடுத்தார்களா என்றால், இல்லை. இதுவரை நஷ்டஈடு கொடுக்கவில்லை. இப்பொழுது என்ன சொல்கிறார்கள் என்றால், அந்த ஹையர் பர்சேஸ் ஸ்கீம் அக்ரிமென்ட் தொகை போக, மீதியை 30 வருடங்கள் பாண்டுகளாகக் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். நான் ஏதோ முதலாளிகள் சார்பாகப் பேசுகிறேன் என்று தயவுசெய்து நினைத்துவிடக் கூடாது என்ற காரணத்தால் சொல்கிறேன். இப்பொழுது பெரிய முதலாளிகள் யாரும் இல்லை. அக்கார்- டிங் டு தி இன்பர்மேஷன் கிவன் பை தி ஹானரபிள் மினிஸ்டர், 5 பஸ்கள் வைத்திருப்பவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். பெரிய மொனாபலிஸ்ட்ஸ் எக்கானமி எல்லாம் இந்த மாநிலத் தில் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கே எல்லாம் நான்





போகவில்லை. தனிப்பட்ட பெரிய முதலாளிகள் இத்தொழி லில் இல்லை. ஏதோ ஒரு சிறிய தொழில் நடந்து கொண் டிருக்கிறது. அந்தத் தொழிலிலே கூட நீங்கள் ஒரு நிரந்தர மான காலவரை சொல்லாமல், 5 ஆண்டுகள் என்று சொல் கிறீர்கள், 10 ஆண்டுகள் என்று சொல்கிறீர்கள். எங்கே யிருந்து, எப்படி என்று சொல்ல மாட்டேன் என்கிறீர்கள். ஒரு நிரந்தரமற்ற தன்மை இந்தத் தொழிலிலே ஆரம்பித்துக் கொண்டிருக்கிறது. அந்த நிரந்தரமற்ற தொழில் ஆரம் பிக்கிற காரணத்தால், நான் அன்றே சொன்னேன், அந்த பஸ்களைச் சரியான முறையிலே பாதுகாத்து, பயணிகள் போகிற அளவில் சௌகர்யமாக ஓட்டமாட்டார்கள். ஏன் என்றால் அந்தத் தொழிலில் நிரந்தரம் இல்லையென்று சொல்கிற நிலை இருக்கிறது. அதற்கு நான் இன்னொரு ஆலோசனை கூட சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு முடிவு செய்து விட்டது. தி ஸ்டேட் இஸ் கோயிங் டு ஓன் தி பஸ்ஸஸ் என்று நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், தயவுசெய்து, அந்த பஸ்களை யாவது அந்தக் காலத்தின் முடிவிலே அவர்களே வைத்துக் கொள்ளலாமா என்று அப்படி ஒரு விதியை ஒரு வேளை சேர்க்கலாமா என்று சிந்தித்துப் பாருங்கள். அந்தப் பர்மிட் முடிகிற காலம் வரை அவர்கள் வைத்திருந்து அதற்குப் பிறகு அந்த பஸ்களை விற்றோ அல்லது லாரிகளாக மாற்றியோ தங்கள் கடனை அடைத்து விட்டு வேறு ஏதாவது தொழில் செய்ய வாய்ப்பு இருக்கும்.

அதே போல், அந்தப் பணிமனைகளை, அலுவலகக் கட்டிடங்களை விட்டு விடலாம். முன்பு டஸ்களை தேசிய மயமாக்கும்போது, ஸ்டேட் ஓண்டு கார்ப்பரேஷனுக்குப் பணி மனைகள் இல்லை, அங்கே ஆபீஸ்கள் இல்லை. அதனால் அப் பொழுது பணிமனைகளை எல்லாம் எடுத்துக் கொண்டார்கள். இப்பொழுது ஒவ்வொரு தாலுக்காவிலும் டெப்போ இருக் கிறது. ஒவ்வொரு தாலுக்காவிலும் பணிமனை இருக்கிறது. இப்பொழுது அந்த மாதிரி சொத்துக்களை எல்லாம் எடுத்துக் கொண்டு அரசினுடைய பணத்தை அதிலே கொண்டு போய் போட வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு வர வேண்டாம். ஆல்ரெடி தி ஸ்டேட் எக்கானமி இன் ஸ்ட்ரெயின்ட். மேலும் அரசினுடைய பணத்தை முதலீடு செய்வதை விட, அந்த ரூட்ஸ், அந்த பர்மிட்ஸ் மட்டும் அரசாங்கம் எடுத்துக் கொண்டு, அந்த பஸ்களையும் அந்த பஸ்களை ஓட்டி இருக்கக்கூடிய மற்ற பணிமனைகளையும் வைத்துக் கொண்டு அந்த முதலாளிகள் வேறு தொழில் பார்க்க முடியும். ஏனென்றால் எல்லோரும் சிறிய பஸ் தொழில் அதிபர்கள், 2 பஸ், 3 பஸ் ஓட்டிக் கொண் டிருக்கிறவர்கள். அதிலும் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வர்கள். ஏனென்றால், இப்பொழுது பெரிய முதலாளிகள் கூட இல்லை. என்னிடம் கூடச் சொன்னார்கள். ஒரு அரசியல் நோக்கோடு இது கொண்டு வரப்படுகிறது. ஏதோ பஸ்

முதலாளிகள் காங்கிரஸ் மனப்பான்மை
அ. தி. மு. க. ஆதரவாக இருப்பவர்கள். ஆகவே, உடையவர்கள்,
எல்லாம் ஓட்ட அனுமதிக்கவில்லை என்று கூடச் சொன்னார்கள்.
நான் அந்தக் கருத்துக்குள் போகவில்லை. இது ஒரு தொழில்.
இது நடந்து கொண்டிருந்தது. தேசியமயமாக்கப்பட்ட பஸ்கள்
சிறப்பான முறையிலே ஓடுவதற்குத் துணையாக
பதற்குப் பயன்பட்டது. அதாவது ஒரு முரட்டுக் இருப்
சண்டிக் குதிரையைப் பிடித்து வைத்திருக்கிறோம். குதிரை,
சண்டிக் குதிரையைப் பிடித்து விட்ட காரணத்தால், அந்தச்
வளர்க்க வேண்டிய நிர்பந்தத்திலே தள்ளப்பட்டுள்ளவர்களாக அதை
இருக்கிறோம். அந்தக் குதிரைக்கு இந்தத் தனியார் போக்கு
வரத்து என்பது ஒரு கடிவாளம் போல் இருந்தது. இப்பொழுது
நீங்கள் இந்தக் கடிவாளத்தை எடுத்துவிட்டு அந்த முரட்டுக்
குதிரையை, அந்த சண்டிக் குதிரையை தெருவிலே நடமாட
விட்டிருக்கிறீர்கள். அது எங்கே போய் முடியப் போகிறது
என்பதை நாங்கள் இப்பொழுது சொல்லப்போவதில்லை-
காலம் உணர்த்தப்போகிறது.

12-55 மணி

நான் இன்னும் அதிமாகச் சொல்லப்போனால் நம்முடைய
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கருத்தைச்
சொல்ல விரும்புகிறேன். ஒரு 'சாம்பிள் சர்வே' எடுங்கள்.
தமிழ்நாடு முழுவதுமாக இருக்கிற பஸ்களை தேசியமயமாக்க
வேண்டும், முழுமையாக ஆக்குவதை மக்கள் விரும்புகிறார்களா
என்று 'ரெபரண்டம்' எடுங்கள் என்று நான் சொல்லவில்லை;
ஒரு சாம்பிள் சர்வே எடுங்கள். ஓர் அரசு ஏஜென்சியிடம்
கொடுத்து ......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர்
அவர்களே, எல்லா மக்களுக்கும், எல்லா இடங்களிலும்
போக்குவரத்து வசதியைச் செய்து கொடுக்க முடியாத சூழ்
நிலையில் உள்ள கிராமங்களிலே உள்ள மக்களுக்கும் நம்
போக்குவரத்து வசதியைச் செய்துகொடுக்க வேண்டுமானால்
நட்டத்தைப் பற்றிக் கவலைப்படாமல், ஆதாயம் இருந்தால்
தான் அங்கே பேருந்துகளை விடுவோம் என்ற கொள்கை
இல்லாமல், மக்களுக்காக இத்தகைய வழித்தடங்களை அமைப்
பதற்கு அரசு ஒன்றால்தான் முடியும்; தனிப்பட்டவர்களால்
இயலாது. எனவேதான், இரயில் போக்குவரத்து போல பஸ்
போக்குவரத்தும் மாநிலத்திலே இருக்க வேண்டுமென்று விரும்பு
கிறோம்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : துணைத் தலைவர் அவர்
களே, ஆதாயம் இல்லாத இடங்களுக்கு பஸ்களை விடுவதை
நான் ஆட்சேபிக்கவில்லை. இந்த அரசு அதை எப்போதும்



செய்யலாம். நான் சொல்வது என்னவென்றால், 'பிரைவேட்
ஓண்டு ட்ரான்ஸ்போர்ட் சொசைட்டி'யை ஏன் ஒரு 'செக்
அண்ட் பாலன்ஸ்' மாதிரி நம் கையில் வைத்துக் கொள்ளக்
கூடாது? முன்னால் கூட ஒரு போராட்டம் நடந்தது.
வேலை நிறுத்தம் நடந்தது. அப்போது தனியார் பஸ்கள்
கையிலே இருந்த காரணத்தால் நாம் இப்படிப்பட்ட போக்கு
வரத்து வசதியை செய்து கொடுக்க முடிந்தது. இப்போது
நீங்கள் முழுமையாக தேசியமயமாக்கப் போகிறீர்கள். மத
யானை கோவிலில் இருக்கிறது. கோவிலில் இருக்கிற
யானைக்கு மதம் பிடித்திருக்கிறது.....

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர்
ஆல்போன்ஸ் அவர்கள் பொதுப் போக்குவரத்தை சண்டிக்
குதிரை என்கிறார்; மதயானை என்கிறார். அவர் முதலிலே
பேச ஆரம்பிக்கிறபோது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின்
சார்பிலே என்று சொன்னார். ஆகவே, தேசியமயமாக்கும்
திட்டத்தை காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறதா இல்லையா என்
பதை நான் அறிந்துக் கொள்ள விரும்புகிறேன். பொது
வேலை நிறுத்தத்தின்போது தனியார் பஸ்களைப் பயன்
படுத்தி அதை உடைக்கப் பயன்படுத்துவது என்பது நல்ல
காரியம் அல்ல. அந்தக் காரியத்தைச் சொல்லி, இந்தத்
தேசியமயமாக்கும் கொள்கையைத் தடுக்க வேண்டுமா என்
பதை நண்பர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் சிந்தித்தால்
நல்லது. தடுக்கக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : துணைத் தலைவர
வர்களே, நண்பர் வரதராஜன் அவர்கள அவர்களுடைய கட்சி
ஆளுகிற கேரளத்தையும் மேற்கு வங்கத்தையும் பார்க்கட்டும்.
அங்கே எல்லாம் கூட They have got second thoughts
about nationalisation of buses இதிலே நேஷனலை
சேஷனை நாங்கள் எதிர்க்கவில்லை, ரேஷனலை
சேஷனைப் பற்றித்தான் சிந்தித்துப் பாருங்கள் என்று சொல்லு
கிறோம். நான் என்ன சொல்கிறேன் என்றால், மதம்
பிடித்த யானையை வைத்துக்கொண்டு, அதிலே அம்பாரி
ஏற்றப் போகிறீர்களா? மதம் பிடித்த யானைக்கு மதம்
தீரட்டும், மதம் தீர்ந்த பிறகு அதிலே கோவிலிலே இருக்கிற
தெய்வத்தை ஏற்றுங்கள் என்று நான் சொல்கிறேன். அதற்
காக நான் சாமியை ஏற்ற வேண்டாம் என்று சொல்லவில்லை;
அதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏற்கெனவே இருக்கிற இந்த கார்ப்பரேஷன் பஸ்கள்
They are running into heavy loss of crores of rupees. பல்லவன்
போக்குவரத்துக் கழகம் 3 கோடி; திருவள்ளுவர் போக்கு
வரத்துக் கழகம் 12 கோடி. ஆண்டு ஒன்றுக்கு 60, 70 கோடி

ரூபாய் நட்டத்தில் ஓடுகிறது எதற்காக? ஃபார் வாட் பர்ப்பஸ்?
இதனால் அரசுக்கு கோடிக்கணக்கான ரூபாய் இலாபம் வரப்
போகிறது என்று சொல்லுங்கள்; நாங்கள் ஒத்துக்கொள்
கிறோம். அல்லது தனியார் பேருந்துகள் நடத்துபவர்கள்
வந்து உங்களை விடமாட்டேன் என்று தடுக்கிறார்கள் என்று
சொல்லுங்கள், நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். தனியார்
பஸ்கள் are completely at the mercy of the Government. It is
a controlled industry, a guided industry and a checked industry.
அது நம்மை மீறி போகமுடியாது. நாம் சொன்ன நேரத்
திலே ஓட்டுகிறார்கள். நாம் சொன்ன ரூட்டிலே ஓட்டுகிறார்
கள். நாம் சொன்ன கட்டணத்திலே ஓட்டுகிறார்கள். அப்
படி இருக்கிற Checks and balances, a safety valve, a valve to
ensure proper running of the State corporations. அதை ஏன்
எடுக்கவேண்டும்? அதில் என்ன இருக்கிறது? எடுப்பதற்கு என்ன
அவசியம் இருக்கிறது என்று தெரியவில்லை. அநேக சட்டங்
களை அன்று கொண்டுவந்திருக்கிறீர்கள். அவற்றிற்கு எல்லாம்
அவசியம் இருந்தது என்பதை ஒத்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கம்தான். பல
நிறுவனங்களிலே நட்டம் வருவதாக மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் தெரிவித்தார்கள். இதிலே அவர்களுடைய கொள்
கையை தெளிவாகச் சொல்ல வேண்டும். பல்லவன் மற்றும்
இருக்கிற திருவள்ளுவர் போக்குவரத்திலே நட்டம் வரு
கிறது, எனவே இது வேண்டாம் என்று சொல்கிறார்களா?
கொள்கை அளவிலே இதை வேண்டாம் என்று சொல்கிறார்
களா? அப்படியானால் நட்டம் வருகிறது என்ற காரணத்தை
மட்டும் சொல்வார்களானால் மதுவிலக்கில் நல்ல இலாபம் வரு
கிறது, ஒத்துக் கொள்கிறீர்களா?

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு அமைச்சர்
துரைமுருகன் அவர்களுடைய கருத்துக்கு நான் ஒரு சிறிய
கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மதுவிலக்கு என்பது குடிப்
பவர்கள், குடிக்காதவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது.
அதிலே நீங்கள் சொல்வதை ஒத்துக்கொள்கிறேன். இது
public convenience. Every man has to travel and every
individual has to find some transport facility. அதை இந்த
அரசு ஏற்றுக்கொண்டிருப்பதை ஒரு நல்ல முயற்சியாகக்
கருதுகிறேன். அதேநேரத்தில் இதற்கு மீறி வருகிற சிந்தனை
களை எல்லாம் சிந்தித்துப் பாருங்கள். நாம் தேசிய மயத்
தினைப்பற்றி சிந்திப்பதற்கு முன்னால், நினைப்பதற்கு எல்
லாம் முன்னால் டெல்லி அட்மினிஸ்ட்ரேஷன் ட்ரான்ஸ்போர்ட்
அண்டர்டேக்கிங் எடுத்தது. இப்போது அவர்களே அதை
தோல்வி என்று நினைத்து, அதை மாற்றிக் கொண்டிருக்கிறார்





கள். உலகம் முழுவதும் உள்ள பொருளாதார தத்துவத்தை எல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஏதோ ஒரு வீட்டிலே வாழ்ந்துகொண்டு, அங்கே உட்கார்ந்து கொண்டு இன்று அரசியல் 'மோட்டிவ்' வுக்காகச் சொல்லவில்லை. There is no political motive in this. It is only in the interests of the public who are in need of transport conveniences that I say, 'kindly reconsider this Bill', இதுதான் எங்களுடைய கோரிக்கை.

13-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் ஒப்புதலுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவரவர்களே, தனியார் தொழில்கள் என்றால் எல்லாமே பொது மக்களோடு தொடர்பு கொண்டவையல்ல. ஒரு தொழிற்சாலை என்றால் ஆயிரம் தொழிலாளர்களோடு தொடர்பு கொண்டதாக இருக்கும். ஆனால் பேருந்து என்பது, ஒவ்வொரு தனியார் நடத்துகிற நேரத்திலே 50 அல்லது 60 தொழிலாளர்களோடு தொடர்பு கொண்டுள்ளதாக இருந்தாலும்கூட, அது பொது மக்களோடு தொடர்பு கொண்டதென்பதை மறந்துவிடக் கூடாது. போக்குவரத்து வசதிகள் என்பது, பொது மக்களுடைய பரவலான, மொத்தமான, குறிப்பான, சிறப்பான தேவையாகும். அப்படிப்பட்ட தேவையை அவர்களுக்கு அளிக்க, லாப நஷ்டத்தைப் பற்றிக் கணக்கிடாமல், அவர்களுக்கு எந்தெந்த நேரத்திலே தேவையோ, அந்த நேரத்திலே எல்லாம் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலே பேருந்து சிஸ்டம் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் அதை முழுமையாக தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்லுகிறோமேயல்லாமல் வேறல்ல. ஏதோ இந்த முதலாளிகளையெல்லாம் ஒழித்துவிட வேண்டுமென்கின்ற எண்ணமல்ல. அப்படிப்பட்ட எண்ணம் இருக்குமானால், தனியார் தொழில்கள் இந்த மாநிலத்திலே, இந்த நாட்டிலே வராது. ஆனால் வருகின்றன. வர வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். அவைகளை அனுமதிப்பதற்குக் காரணம், அவைகள் பொது மக்களோடு தொடர்பு உடையவையல்ல என்பதுதான். ஆனால் போக்குவரத்து என்பது எப்படி இரயிலிலே பயணம் செய்கிறார்களோ, அதைப்போல பஸ்ஸிலே பயணம் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் எல்லாவிதமான சௌகரியங்களையும் செய்து கொடுக்கவும், அதே நேரத்தில் லாப நஷ்டம் பார்க்காமல் அதை நடத்த வேண்டுமென்றுதான் அரசுடைமையாக்க வேண்டுமென்று கருதுகிறோம்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு முதல்வரவர்கள் விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் லாப நஷ்ட நோக்கத்தை மட்டும் வைத்துச் சொல்லவில்லை.

[திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்] [1990 மே 9

நான் என்ன சொல்கிறேன் என்றால், தனியார் போக்கு
வரத்துத் துறையை The Government can use as a check,
as a safety valve. அதை குதிரைக்கு இருக்கிற
கடிவாளம்போல என்று சொன்னேன். அந்தக் கடிவாளத்தை
ஏன் அறுத்து எறிகிறீர்கள் என்றுதான் கேட்டேனே ஒழிய
குதிரையை வளர்க்க வேண்டாமென்று நான் சொல்ல
வில்லை, லாபமும் இருக்கலாம், நஷ்டமும் இருக்கலாம்.
unless and until the existing transport system is proved to be
profitable and convenient to the public, you please wait. அதற்கு
முன்னால், ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு இதை தேசிய
உடைமையாக்குவதால், அதனாலே பொது மக்களுக்கு எந்த
விதமான நன்மையும் வரப்போவதில்லை. அரசுக்கும் அதிலே
எந்தவிதமான ஆதாயமும் வரப்போவதில்லை. இதைத்தான்
நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சிவகாசி பகுதிகளில் உள்ள தொழிலாளர்களுக்குப்
பயன்படும் பஸ்களுக்குக்கூட வரி விகிதங்களை எல்லாம்
மிக அதிகமாக உயர்த்தி இருப்பதாக அருமை நண்பர் திரு.
சொக்கர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை எல்லாம்
மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு,
நம்முடைய மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்
களுக்கு நான் நன்றி சொலலக் கடமைப்பட்டிருக்கிறேன்.
குற்றாலத்திற்கும் சென்னைக்கும் 12 மணி நேரத்தில் ஒரு
விரைவுப் பேருந்து கேட்டேன். அதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.
அதற்காக நன்றி சொல்லி மீண்டும் இதைப் பரிசீலனை செய்
யுங்கள் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தனியார் பஸ்-
ஆக இருந்தால் கொடுத்திருப்பார்களா? (சிரிப்பு)

*திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, தனியார் பேருந்துகளை நாட்
டுடைமையாக்கும் குறிக்கோளுடன், படிப்படியாக அதை அமல்
படுத்தி, 1999 ஆம் ஆண்டு ஜூன் 30-க்குள் தமிழ்நாடு முழு
வதும் நாட்டுடைமையாக்கும் இந்தக் கொள்கையை அமல்படுத்தும்
கண்ணோட்டத்தோடு, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு
பயணியர் போக்குவரத்து மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள்
கையகப்படுத்தும் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட
முன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மன
தார வரவேற்கிறேன். இன்றுமட்டுமல்ல, இந்த அரசு, திரா
விட முன்னேற்றக் கழக அரசு, தனியார் பேருந்துகள் நாட்டு
டைமையாக்கும் திட்டங்களைக் கொண்டு வந்தபோதெல்லாம்
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்தச் சட்டப் பேரவையிலும்
சரி, வெளியிலேயும் சரி, அதைப் பாராட்டி, வரவேற்று
வந்துள்ளது. அதே நேரத்தில் 1973-ல் நாட்டுடைமையாக்கப்



1990 மே 9] [திரு. எம். அண்ணாமலை]

பட்ட திட்டத்தை எதிர்த்து தனியார்கள் நீதி மன்றத்தினுடைய
உதவியோடு தடைப்பட்ட காலம் நீட்டித்து, இருப்பினும்
1977-ல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அ.தி.மு.க. அரசு இதே
கொள்கையை வலியுறுத்தி வந்தது இருப்பினும் உச்ச நீதி
மன்றத்திலே வழக்கு போட்டு, உச்சநீதி மன்றம் இப்படி நாட்
டுடைமையாக்கக்கூடிய திட்டத்தை ஆதரித்து தீர்ப்பு அளித்த
பிறகும், அது அமல்படுத்தப்படாமல் இருந்தது. உள்ளபடியே
இது எதைக் காட்டுகிறது? மோட்டார் முதலாளிகளை விரட்டி
இதில் முறைகேடுகள் நடப்பதற்கு வாய்ப்பாகப் பயன்படுத்
தப்பட்டது என்பதை இங்கே எண்ணி அஞ்ச வேண்டிய நிலை
மை இருக்கிறது. இந்த அரசு இத்தகைய நிலைக்கு அனுமதி
அளிக்காது என்ற நம்பிக்கை உள்ளதோடு இந்தத் திட்டத்தை
உறுதியாக துரிதமாக அமல்படுத்த வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

13-05 மணி

மேலும், இந்தத் துறையில் நட்டம் ஏற்படுவதாகச் சொல்லப்
படுகிறது. முறைகேடுகள், லஞ்சம் இத்தகைய போக்கு
கள்தான் நட்டம் ஏற்படுவதற்குக் காரணம் இதை பார்க்
காமல். குறிப்பாக தொழிலாளிகள் தங்களுடைய ஊதியங்களுக்
காகவும், பஞ்சப்படி போன்ற கோரிக்கைகளுக்காகவும் வரும்
போதெல்லாம் நட்டம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள்.
அது உண்மையல்ல. இதில் ஏற்படக்கூடிய முறைகேடுகள்,
ஒரு பகுதி நிர்வாகத்தினுடைய நலன்கள் அதாவது ஆளும் கட்சி
நபர்களுக்கு உடந்தையாக இருந்து நடத்தக்கூடிய முறை
கேடுகளின் விளைவு; இரண்டாவது தனியார் துறை என்று
ஒரு இடத்தில் மார்க்கெட் இருக்கும்போது டயர், சாதாரண
உதிரிப் பொருள்கள் எல்லாம் கூட திருடப்பட்டு கொண்டுபோய்
கை மாறுவதற்கு இன்னொரு மார்க்கெட் இருப்பதும் இதற்கு
ஒரு வாய்ப்பாக அமைகிறது. ஆகவே இவற்றில் முக்கிய
கவனம் செலுத்தி முறைகேடுகள் முழுவதும் தவிர்க்கப்பப்பட
வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவக்கத்திலே தனது
உரையிலே குறிப்பிட்டார்கள். தொழிலாளர் நலனைப் பற்றி
வறிப்பிட்டார்கள். நல்ல அம்சம்தான். மேலும் நான் அவரை
வலியுறுத்த விரும்புவது இப்பவும் உழைப்பை தனிமைப்படுத்தி
பார்க்கக் கூடாது நட்டத்துக்கும் முறைகேடுகளுக்கும் காரண
மாக இருக்கிற பல்வேறு அரசியல் சுய நல தலையீடுகளைக்
களையாமல், உண்மையாகவே இதைப்புறக்கணித்து உழைப்பாளி
களை ஒதுக்கி பார்ப்பதும் அதிலிருந்து தனிமைப்படுத்தக் கூடிய
நிலை எடுக்கக் கூடாது. இந்த அரசு இத்தகைய போக்கை அனு
மதிக்கக் கூடாது என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கேட்டுக்
கொள்கிறேன்.

நட்டத்திற்கு இன்னொரு உதாரணம் இன்றைக்கு பஸ் நிலை
'யங்களில் தனியார் பேருந்துக்கு புரோக்கர்களை வைத்து கூவு
கிறார்கள். ஒலிபெருக்கி வைத்து வழித்தடம் முதலாக தெரிவித்து
அழைக்கிறார்கள். அப்படி ஏன் நம்முடைய அரசு பேருந்துகளுக்
கெல்லாம் செய்யவில்லை? செய்யப்படாததின் காரணம் இந்
தத் துறையை நாம் நடத்திற்கு உள்ளாக்கும் காரிய
மாகாதா? மேலும் தனியார் பேருந்துகளில் அவர்கள் மக்களைத்
திருப்பிவிடக் கூடிய அளவுக்கு வாய்ப்பு, நிலைமை இருக்கிறது.
அந்த நிலையை மாற்றவேண்டும். இன்றைக்கு நாமும் பஸ் நிலை
யங்களில் புரோகர்களைப் போட்டு பயணிகளை கூவி அழைக்கக்
கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும். என்று நான் இங்கே
கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இன்றைக்கு நகரப் பேருந்துகள் 30 கிலோ மீட்டர்
வரை தான் ஓட வேண்டும் என்று ஒரு நிபந்தனை
இருக்கிறது. அந்த 30 கி.மீ. என்பதை மாற்றி கிராமங்கள்
அனைத்துக்கும் பேருந்துகள் செல்ல வேண்டும் என்ற ஒரு
குறிக்கோளுடன் விதிமுறையில் திருத்தத்தை அரசு கொண்டு
வர வேண்டும். ஏனென்றால் குறைந்த வருமானம்
உள்ள மக்கள் கிராமப் பகுதிகளில்தான் அதிகம்
இருக்கிறார்கள். விவசாயத்தைப் பெரும்பான்மையாகச் சார்ந்
திருக்கும் அந்த மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் வாகன
வசதி அளிக்கக்கூடிய வகையில் அந்த 30 கி.மீ. என்ற விதிமுறை
களை மாற்றி, அனைத்து கிராமங்களுக்கும் நகரப் பேருந்து
செல்ல வேண்டும் என்பதை கொள்கை அளவில் ஏற்க அரசு
பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, விபத்துகள் பற்றிய சில யோசனைகள். இன்றைக்கு
சாலை முழுவதும் வேளாண்மைக் களங்களாக மாறி வந்
திருக்கிறது. கடந்த காலங்களில் பஞ்சாயத்துக்கு ஒரு
களம் என்று இருந்தது. கடந்த 10 ஆண்டு காலமாக
அதுவும் இல்லை. எனவே இந்தத் துறையில் வருமானத்தைக்
கொண்டாகிலும், பஞ்சாயத்துக்கு ஒரு களம் என்பதை மாற்றி,
கிராமத்துக்கு ஒரு களம் என்று உருவாக்கி—குறைந்தது ஒரு
ஏக்கர் நிலத்தை அதற்கு ஆர்ஜிதம் செய்து கொடுத்து
வேளாண்மைக் கழகம் அமைக்க ஏற்பாடு செய்து—சாலைகளில்
தானியங்களை அடிக்கக்கூடிய நிலையை கண்டிப்பாக மாற்ற
வேண்டும்.

அடுத்து வழித்தடங்கள், இன்றைக்கு பேருந்துகள் அதி
கரிக்கும் காலக் கட்டம். இன்று சாலைகள் எந்த நிலையில்
இருக்கின்றன? அவைகள் பெரும்பாலும் வளைவுகளாக
இருக்கின்றன. அந்த வளைவுகளை எல்லாம் நேர் நெடுஞ்
சாலைகளாக மாற்றி உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.



இறுதியாக ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன்.
இன்றைக்கு காலத்துக்கு ஏற்ப பேருந்துகளை
வழி நடத்தும் விதிமுறைகள் பற்றி மக்களுக்குள் ஒரு
தெளிவற்ற போக்கு இருக்கிறது. இதை மக்களிடத்
தில் விளக்கி ஒரு பிரச்சாரமாக கொண்டு செல்லப்பட்டதா?
இல்லை. இது குறைந்தபட்சம் நமது கடமையாகக் கொள்
ளப்பட்டதால் இனியாவது யூனியன் மட்டத்தில் உள்ள
பல்வேறு சமூக சேவர்கள் மூலமாகவாவது பேருந்துகளின்
பயண காலத்தில், வழித் தடங்களில் எப்படிப் பின்பற்ற
வேண்டும் என்ற ஒரு பிரச்சாரத்தை போதனைகளை மக்
களிடத்திலே கொண்டு சென்றால்தான் விபத்துகள் தவிர்க்
கப்படும். விபத்து ஏற்பட்டால் பஸ் கண்டக்டரையும்,
டிரைவரையும் மட்டுமே திட்டக்கூடிய அல்லது எதிர்க்கக்
கூடிய நிலைதான் இன்று இருக்கிறது. எப்பிரச்சினையானாலும்
பொதுவான மனப்பான்மையை உருவாக்கும். கடமையை
இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டு, விடைபெறு
கிறேன், நன்றி.

**13-10 மணி.**

திரு. பி. எச். **பாண்டியன்:** சட்டப் பேரவைத் தலைவர்
அவர்களே, ஒப்பந்தப் பேருந்து, பயணிப் பேருந்து நாட்டுடை
மையாக்கக் கூடிய சட்ட மசோதாவில் என்னுடைய கருத்துக்
களை எடுத்து வைக்க முற்படுகின்றேன்.

பொருளாதாரத் தத்துவத்தில், மக்களால் செலவழிக்கக்
கூடிய பணம் மீண்டும் மக்களுக்கே வந்து சேர வேண்டுமென்று
நம்முடைய மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்ற நெறிமுறைகள்
Directive principles தெளிவாகக் கூறியிருக்கிறதை நான் இங்கே
நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். The State sh ll direct
its policies towa ds the non-concentration of w alth in particı lar
hands. தனி மனிதருடைய கஜானாவை நிரப்பாமல், அரசாங்கத்தி
னுடைய கஜானாவை நிரப்புவதற்குத்தான் இது போன்ற நாட்டு
டைமையான திட்டங்கள். நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு,
நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள், கழகங்கள் நஷ்டத்தில்
ஓடியதாக இங்கே விவாதிக்கப்பட்டது. நான் இங்கே எடுத்துச்
சொல்வதெல்லாம், நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள்
செல்வதற்கு முன்பு, தனியார் பேருந்துகளைச் சில நேரங்
களில் T ning Conference இதற்கு முன்பு இந்த வண்டி ஓட்டும்
என்று சொல்வதன் காரணத்தால்தான், இந்த நஷ்டம் ஏற்
பட்டிருக்க முடியும். காரணம் நம்முடைய அரசாங்கப் பேருந்
துக்கு முதலிடம் கொடுத்து Pe k Hour நேரத்திலே — மக்கள்
நெரிசல் நேரத்தில் நாம் அதிகமாக விட்டு இருப்போமேயானால்
இந்த நஷ்டத்தைக் கழகங்கள் பார்த்திருக்க முடியாது. அது ஒரு
காரணம்.

இன்றைக்கு மக்களால் செலவழிக்கப்படக் கூடிய பணம்
Public t easury அரசாங்க கஜானாவிற்கு வரவேண்டும் என்ற
நோக்கத்தோடுதான் உச்ச நீதிமன்றமே (ந்தக் கொள்கையை
நிலை நாட்டும்பொழுது, 1983-வது ஆண்டு நீதிபதி Fazl Ali
இந்த வார்த்தையைச் சொல்லியிருக்கின்றார். One of the plans
for building an egalitarian society in order to achieve social,
economic emancipation is the policy of nationalisation of
industry. இதைச்சொல்லிவிட்டுத்தான் அதை, இந்தத் தேசிய
யமாக்கக் கூடிய இந்தச் சட்டத்தை அவர்கள் சரி என்று தீர்ப்பு
வழங்கியிருக்கிறார்கள்.

நம்முடைய தமிழகத்தில் இதற்கு இன்னும் பத்தாண்டு தேவை
என்று இந்தச் சட்டத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை
அமைச்சரவர்கள் நேரம் கேட்டிருக்கிறார்கள். முழுமையாக
நாட்டுடைமை ஆக்குவதற்கு, 1973-இல் நாட்டுடைமையாக்
கப்பட்ட சட்டம், பத்தாண்டுகள் கழித்து, 1983-இல் தீர்ப்பு
வந்த காரணத்தினாலேயோ என்னவோ தெரியாது, இன்னும்
பத்தாண்டுக் காலம் கேட்டிருக்கிறீர்கள்.

பத்தாண்டுக் காலம் தேவையே இல்லை. இரண்டாண்டு,
மூன்றாண்டுக் காலத்திற்குள் — இன்னும் சொல்லப் போனால்,
இந்தச் சட்டப் பேரவையின் காலம் முடிவதற்குள் ஒரு அரசாங்
கம் ஒரு கொள்கையை அறிவித்தால் சட்டப்பேரவையில், அந்தப்
பேரவையின் காலம் முடிவதற்குள் அந்த அரசு அதை நிறை
வேற்ற வேண்டும். இதுதான் நியதி. நாம் ஒன்றைச் சொல்
வது, பிறகு இன்னொருவர் வருவது; அவர்கள் இந்தத் திட்டம்
வேண்டாமென்று சொல்வது; பிறகு உச்ச நீதிமன்றத்திற்குச் செல்
வது; அங்கே பத்தாண்டுக் காலம் கழிப்பது. இதனால் அல்
லல்படுவது யார்? இதனால் யாருடைய பணம் விரயம் ஆக்
கப்படுகிறது? பொதுமக்களுடைய பணம் என்பதை நாம்
உணர்ந்து, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சரவர்
கள் எவ்வளவு வேகமாக இந்த நாட்டுடைமையாக்கப்பட்ட
திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமோ — ஈராண்டு, மூன்
றாண்டு, இல்லாவிட்டால் 1994-க்குள் நிறைவேற்றினால் தான்
ஒரு முழுமையான நாட்டுடைமையாக்கப்பட்ட நிலைமையை
உருவாக்க முடியும்.

இன்றைக்கு மக்களால் இந்தத் துறைக்கு — போக்குவரத்துத்
துறைக்கு மக்கள் வெளியே அதிகமாகச் செல்கின்ற காரணத்
தால், நாள்தோறும் கையில் இருக்கக்கூடிய பணத்தைச் செல
வழித்துக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு துறை. எந்தத்
துறையை மக்கள் அதிகமாகப் பயன்படுத்துகிறார்களோ அந்தத்
துறை நாட்டுடைமையாக்கப்பட வேண்டும். இன்றைக்கு இருக்
கக்கூடிய பாமர மக்கள், நாள்தோறும் தமிழகம் முழுவதும் பஸ்
ஸில் ஏறுவதுபோல, இன்னும் சொல்லப்போனால் பஸ்ஸில் ஏறிக்
கொண்டே போய் இறங்கி, ஒவ்வொரு தியேட்டரிலும் படம்





பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழகம் முழுவதும், பஸ்ஸில் ஏறிக்கொண்டு, இறங்கிக் கொண்டு ஒவ்வொரு தியேட்டரிலும். அதுவும் பொதுப் பணம்தான். இன்றைக்கு இந்தத் திட்டத்தை — நாட்டுடைமையாக்கக் கூடிய இந்தத் திட்டத்தை இங்கே நாம் விவாதிக்கும்பொழுது நான் இங்கே சொல்வதெல்லாம், மக்களுடைய முழுமையான பணம், ஏழை எளிய மக்களின் பணம், விவசாயிகளின் பணம், தொழிலாளர்களின் பணம், பாமர மக்களின் பணம், அப்படியும் தனிப்பட்ட கஜானாவுக்குப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து அதையும் நாட்டுடைமையாக்குவதற்கு — தியேட்டர்களையெல்லாம் — ஒரு சட்டத்தைக் கொண்டு வாருங்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

13-15 மணி

காரணம் தனி மனிதனுக்கு அதிகமாக 'வெல்த்' சேரக்கூடாது. இதுதான் நம்முடைய—Directive Principles of state policy தெளிவாகச் சொல்கிறது. அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டதைதான் சொல்கிறேன். அந்த அளவிற்கு இன்றைக்கு மக்களுக்கு நாம் நன்மையைச் செய்யும்போது, மக்களுடைய பணத்தை வரியாகப் பெற்று, மீண்டும் மக்களுக்கு செலவழிப்பதற்கு இது போன்ற திட்டங்கள் நிச்சயமாக பயன்பட முடியும். எதற்காக இப்படிச் சொல்கிறேன் என்று பல நண்பர்கள் எண்ணக்கூடும். ஒரு திட்டத்தைச் சொல்லும்போது முழுமையாக வரவேற்பு இருக்காது. நாளடைவில் எண்ணிப்பார்க்கும்போது, நாளடைவில் ஆய்ந்து பார்க்கும்போதுதான் இந்தத் திட்டத்தின் மதிப்பே தெரியக்கூடிய நிலை உருவாகும். நான் தியேட்டரைச் சொன்னேன். அமெரிக்கா போன்ற நாடுகளில் எல்லாம் நடிப்புத் தொழிலில் இருப்பவர்களையே தேசியமயமாக்கி விடுகிறார்கள். — ஹாலிவுட். இன்னும் சொல்லப் போனால், அந்த அளவிற்கு நம்முடைய நாட்டில் இன்னும் ஆர்வம் கிளம்பவில்லை, இன்னும் வேகம் கிளம்பவில்லை. தனி மனிதனுடைய பொருளாதாரச் சுதந்திரத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. சமுதாயத்தின் பொருளாதாரச் சுதந்திரத்தை இன்றைக்கு நாம் இழந்து இருக்கிறோம். சமுதாயம் இன்றைக்கு பொருளாதாரத்தை இழந்து இருக்கிறது. சமுதாயத்தில் இன்றைக்கு பொருளாதாதரம் சீரழிந்து இருக்கிறது. சமுதாயத்திற்கு பொருளாதாரம் இல்லாமல் பற்றாக்குறையாக இங்கே நாம் பட்ஜெட்டை சமர்ப்பித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே நான் சொல்வதெல்லாம், சாதாரண மக்களுடைய பணத்தை எந்தத் துறை பெற்றாலும் அந்தத் துறை தேசியமயமாக்கப்பட வேண்டும். மக்களை தேசியமயமாக்கவில்லையா? citizen of India பிரிவினை கிடையாது. மக்களை தேசிய

மயமாக்குவது எதற்கு? ஒரு நாட்டை ஒற்றுமையாக, உருப்பட
வைப்பதற்கு. அதைப் போல தான் ஒரு பொருளாதாரத்தை
தேசியமயமாக்க, எல்லோரையும் எல்லா மக்களையும் பொரு
ளாதாரச் சுதந்திரத்தோடு பாதுகாக்க, இது போன்ற நாட்டு
டைமையாக்க வரக் கூடிய திட்டங்கள் அதிகமாக உருவாக்கப்
பட வேண்டும். இதை குறுகிய காலத்தில் நிறைவேற்ற முடி
யுமா என்று கேட்கலாம். சட்டத்தை உடனே போட்டால்—
இதற்கு 10 ஆண்டுக்காலம் எப்படி ஆனது என்பது எனக்குத்
தெரியாது. இதற்கு நாம் அரசாங்கத்தை குறை சொல்லமுடியாது
காரணம் – Legislative policy. Nationalisation is a legislative pol cy
இதிலே நீதிமன்றம் கூட தலையிட முடியாது என்று நீதிபதியே
இந்தத் தீர்ப்பில் சொல்லியிருக்கிறார். தலையிட முடியாது
என்று சொல்வதற்கு 10 ஆண்டுக்காலம் ஆகியிருக்கிறது. இப்
படி ஒவ்வொரு துறைக்கும் ஒரு சட்டத்தைப் போட்டு, 10 ஆண்
டுக்காலம் கழித்து, நாங்கள் தலையிட முடியாது என்று சொல்
கிற அளவிற்கு இனிமேல் நிலைமை உருவாகக் கூடாது. இன்
னும் சொல்லப் போனால், சில சட்டங்களை நம்முடைய ஆளு
நர் அவர்கள் மூலமாக, குடியரசுத் தலைவரை தொடர்புகொண்டு
ஏன் உச்ச நீதிமன்றத்தில் முதலில், Advisory opinion வாங்கிக்
கொண்டு, நாம் நாட்டுடைமையாக்குவோமானால், — இது
வல்ல, இது இனிமேல் செல்லும் — வேறு துறைக்கு அப்படி
வேகமாகச் செயல்பட வேண்டுமென்ற எண்ணத்தை நான்
வெளிப்படுத்துகிறேன். காரணம் 10 ஆண்டுக்காலம். காலந்
தாழ்த்துவது என்பது — பல்வேறு முறைகள் உண்டு நீதிமன்
றத்தில். பல்வேறு காரணம். இதில் ஈடுபடக்கூடியவர்கள், ஈடு
பட்டவர்கள் பஸ் முதலாளிகள் ஸ்டே வாங்கிக் கொண்டு....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டி
யன் அவர்கள் சொல்வதைப் போல, தீர்ப்பு வருவதற்குத் தாமத
மானதற்குக் காரணம், அவர்களுடைய கூற்றுப்படி பஸ் முத
லாளிகளாக இருக்கலாம். நீதிமன்றத்தில் திரு. பாண்டியன்
அளவிற்கு தைரியமாக என்னால் நுழைய இயலாது. ஏனென்
றால், அவர் சட்டம் படித்தவர் என்பதால் அதைச் சொல்கி
றேன். பஸ் முதலாளிகளுடைய செல்வாக்கால் நீதி கிடைப்ப
தற்கு 10 ஆண்டுக்காலம் தாமதமாகி இருக்கலாம். ஆனால்,
தீர்ப்புக் கிடைத்த பிறகு இவ்வளவு ஆண்டுக் காலம் தாமதம்
ஆனதற்கு என்ன காரணம் என்பதை முன்னாள் அவைத்தலைவர்
திரு. பாண்டியன் அவர்கள் விளக்குவார்களா?

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே,
நான் ஒரு வழக்கு சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்தில்
அமர்ந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அதாவது அரிசி
வேண்டுமென்று வழக்குப் போட்டபோது சர்க்கரை





13-20 மணி.

ஆலை முதலாளிகள் ஒரு வழக்கைப் போட்டார்கள்.
நான் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன். புல் பெஞ்ச்
உட்கார்ந்து இருந்தது. பாராளுமன்றம் நிர்ணயித்த விலை
எங்களுக்குப் போதாது. வேகமாக நடந்தது. எந்த வக்கீல்
வேகப்படுத்தினார்? இப்போது எந்தக் கேஸையாவது நீங்கள்
ஒன்றைச் சொல்லுங்கள், இரண்டு மாதத்திலே முடிக்கச் சொல்
லுங்கள், நான் முடித்துக் காண்பிக்கிறேன். 2 மாதம். வழி
யிருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் வழி இருக்கிறது. சட்டம் கண
பதிக்கும் தெரியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்
களே, நான் நீதிமன்றத்திலே முடிவு ஏற்பட்டதைச் சொல்ல
வில்லை. அது முடிந்த முடிவு. அது முடிந்தாகி விட்டது.
முதலிலேயே சொல்லியாகிவிட்டது. 10 ஆண்டுக்காலம் ஆயிற்று
என்பது நீங்களும் நானும் ஒத்துக் கொண்ட ஒரு உண்மை.
அதற்கு பஸ் முதலாளிகள் குறுக்கே நின்றார்கள் என்பதுபோலச்
சொன்னீர்கள். அது உண்மையா? அல்லவா? ஆராயவேண்டிய
பிரச்சினை. ஆனால் தீர்ப்பு அளித்த பிறகு, இவ்வளவு ஆண்டுக்
காலம் தாமதம் ஆயிற்றே, அதற்குத்தான் முன்னாள் அவைத்
தலைவர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தீர்ப்பை நிறை
வேற்றாததற்கு என்ன காரணம்?

திரு. பி. எச். பாண்டியன்: அவைத் தலைவருக்கு அதை
நிறைவேற்றக்கூடிய அதிகாரம் இருந்திருக்குமானால், அன்
றைக்கே அந்தத் தீர்ப்பை நான் நிறைவேற்றியிருப்பேன். அவைத்
தலைவருக்கு இருக்கக்கூடிய அதிகாரத்திலே அது கிடையாது.

திரு. ரா. சொக்கர்: பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, முன்னாள் அவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள்
சபாநாயகர் அவர்களுக்கு வானளாவிய அதிகாரம் எல்லாம்
இருக்கிறது என்று சொன்னார்கள். அதை வைத்துக் கூட நீங்கள்
நிறைவேற்றவில்லை என்றால், இது என்ன வாதம்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வானளாவிய அதிகா
ரம் இருந்தது, பேருந்தளாவிய அதிகாரம் இல்லை (சிரிப்பு).

திரு. பி. எச். பாண்டியன்: ஆகவே நான் இங்கே (குறுக்
கீடு). இன்றைக்கும் சொல்கிறேன். உங்கள் சபாநாயகரிடம்
சொல்லியாகிவிட்டால், அவையே ஏற்றுக்
சொல்லுங்கள்.

[திரு.பி. எச். பாண்டியன்] [1990 மே 9

கொண்ட மாதிரி. அரசாங்கம் இந்த அவைக்குக் கட்டுப்
பட்டது. (குறுக்கீடு). நான் சொல்லிவிடுகிறேன். நான்
சொன்ன பிறகு சொல்லுங்கள். அவர்கள் சொன்னதால் சொல்
கிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக நமது தமிழக
முதல்வர் எடுத்து வைத்த கேள்விக்கு இதுவரையில் மாண்புமிகு
உறுப்பினர் பாண்டியன் அவர்கள் பதில் சொல்லவில்லை. ஆகவே,
அந்த பதிலை நான் எதிர்பார்க்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள்
அன்றைக்கு இந்த அவையிலே இருந்தார்கள். நான் அங்கேயிருந்த
போது கேட்டிருந்தால் நான் சொல்லியிருப்பேன். அன்றைக்குச்
சொல்லி இருக்கலாம் அல்லவா? நீங்கள் இங்கேயிருக்கும்போது
ஒன்றைப் பேசுகிறீர்கள், அங்கே வந்தவுடன் மறுத்து விடுகிறீர்
கள். நான் அப்படியில்லை. நான் அங்கேயிருந்த
மாதிரிதானே இங்கேயும் பேசுகிறேன். எதையாவது மாற்றி
னால் சொல்லுங்கள். நான் அங்கேயிருந்து பேசியதற்கு மாறாக
ஏதாவது பேசினால் சொல்லுங்கள். மற்றபடி இங்கே நலிந்த
விவகாரத்திற்கு என்னைக் கேட்டால், நான் அதிகமாகச் செய்ய
முடியாது. அதற்கு மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் அன்
றைக்குக் கேட்டிருந்தால், ஏன் என்றால், இந்த அவையே கட்
டுப்பட்டது.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு முன்
னாள் பேரவைத் தலைவர் தவறாக என்னைக் கருதக்கூடாது.
அவர் என்னை அப்போது பேச அனுமதித்தாரா என்பதை அவர்
கள் மனச்சாட்சியோடு பதில் சொல்ல வேண்டும்.

**திரு. பி. எச். பாண்டியன்:** பேசக்கூடிய விஷயங்களைஅதிக
மாகப் பேசியிருக்கிறீர்கள். நான் இன்னொன்றையும் சொல்
கிறேன். நானே ஒரு நண்பரிடம் சொன்னேன். என்ன சொன்
னேன் என்றால், உங்களுக்கு எல்லாம் நான் மணி அடித்ததே
கிடையாது. நேரம் சொல்லுங்கள் என்றால் அரை மணி என்று
சொல்வீர்கள். அதற்கு முன்னால் கிடையாது. அரை மணி
முடிந்த பிறகுதான் அடித்திருப்பேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பேருந்து சம்பந்த
மாக சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு, அதாவது தி.மு.க. அரசு கடந்த
காலத்திலே கொண்டு வந்த தேசியமயச் சட்டம் செல்லும் என்று
சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்த பிறகு, நாஞ்சிலார்
இங்கே இருந்ததாக எனக்கு ஞாபகம் இல்லை.



1990 மே 9]

**திரு. பி. எச். பாண்டியன்:** நான் சொல்வது, நான் சபாநாய
கராக இருக்கும்போது இங்கேதான் இருந்தார்கள். ஆனால்
அதற்கு முன்னாலே அவர்களும் இந்த அவையிலேதான் இருந்
தார்கள். நான் சபாநாயகராக இருக்கும்போதுதானே அதைச்
செய்ய முடியும். கேட்டிருந்தால் அப்போது உடனே சொல்லி
இருப்பேன். என்னைப் பொறுத்தவரையில் நான் எதையும்
நினைப்பது கிடையாது. மக்கள் என்றால், உடனே தீர்ப்பு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆகவே, அந்த நீதிமன்றத்
தீர்ப்பு வந்தவுடன் அதை மதித்து தேசியமயக் கொள்கையை
உடனடியாக அமுலாக்க வேண்டும் என்று எண்ணினீர்கள். ஆனால்
உங்களுடைய மனதிலே உள்ளதை வெளியிட முடியாத சங்கடத்
திலே இருந்தீர்கள். அதுதானே?

**திரு. பி. எச். பாண்டியன்:** இல்லை. என்னுடைய கவனத்
திற்கு யாரும் எடுத்துச் சொல்லவில்லை. நான் ஒன்றைச் சொல்
கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன்.

**திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு பி.
எச். பாண்டியன் அவைத் தலைவராக இருந்தபோது, இந்த
மன்றத்தில் இருந்திருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்
தினுடைய உறுப்பினர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி,
மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் உச்ச
நீதிமன்றத் தீர்ப்பு வந்தபிறகு, ஏன் தேசியமயமாக்கவில்லை
என்கிற கேள்விக் கணையை பலமுறை தொடுத்திருந்தார்கள்.
அப்போதெல்லாம் கேளாக்காதினராக உட்கார்ந்திருந்தார்களா
பி.எச். பாண்டியன் அவர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. பி. எச். பாண்டியன்:** அதாவது என்னைப் பார்த்து
கேட்கவேண்டும். சபாநாயகர் அவர்களே, இதற்கு நீங்கள்
என்ன உத்தரவு போடுகிறீர்கள் என்று கேட்டிருந்தால் போடு
வேன். நீங்கள் பேசுவதற்கு எல்லாம் உத்தரவிட்டால்,
அமைச்சரவையே தேவையில்லை. நேரடியாகப் பார்த்துச்
சொல்லியிருந்தால் போட்டு இருக்கலாம். ஒரு உதாரணத்தை
இங்கே சொல்ல வேண்டும், காரணம் இது எப்படி வந்தது
என்பதால் சொல்கிறேன்.

13.25மணி

மனுக்கள் குழுவை உருவாக்கியிருக்கிறோம். சட்டப் பேரவையில்
அந்த மனுக்கள் குழுவை நெல்லை மாவட்டத்தில் நான் தான்
போய் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் துவக்கி
வைத்தேன். 16 சட்டப் பேரவை உறுப்பினர்கள்
அதில் இருந்தார்கள். தூத்துக்குடியிலும் துவக்கி

வைத்தேன். 70 துப்புரவுத் தொழிலாளர்கள் வந்து முறை
யிட்டார்கள், மனுக்கள் குழுவில், என்ன தெரியுமா? நாங்கள்
ரூபாய் இரண்டு இலட்சம் கடன் வாங்கியிருக்கிறோம் பல்
வேறு பணக்காரர்களிடம். வட்டியாக மட்டும் ரூபாய் ஆறு
இலட்சம் செலுத்தியிருக்கிறோம். எங்களை இன்னும் அந்தப்
பணக்காரர்கள் விட்டதாகத் தெரியவில்லை. மாதாமாதம்
நாங்கள் நகராட்சியில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே,
பணியாற்றிய பிறகு எங்களுடைய சம்பளத்தை வாங்கிச்
சென்று போய்விடுகிறார்கள் என்று சொன்னார்கள். அந்த
மனுக்கள் குழுவில்- அன்றைக்கு திரு. ஆறுமுகம் கலெக்டராக
இருந்தார்கள். எஸ். பி. யாக எஸ்பால் வாலியா இருந்தார்கள்.
இது அவைக்குத் தெரியவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.
இரண்டு பேரையும் அழைத்துச் சொன்னேன். இன்று
மாலைக்குள் அந்தக் கடனை ரத்து செய்வதாக அவர்கள்
அறிவிக்கிறார்களா? அப்படி அறிவிக்காவிட்டால், அன்றைக்கு
இரவே அவர்களை குண்டர்கள் சட்டத்தில் கைது செய்
வோம் என்று சொல்லுங்கள் என்று சொன்னேன். அவ்வளவு
தான், சொல்லித்தான் விட்டேன். ஆறுமுகம், கலெக்டர்
வந்தார்கள், பணக்காரர்கள் எல்லாம் ஒத்துக்கொண்டார்கள்,
ஆனால் எங்களுடைய பெயர்களை மட்டும் சபாநாயகர்
பத்திரிகைக்கு சொல்லக் கூடாது என்று சொன்னார்கள். இது
வரையிலும் நான் சொல்லவில்லை. அப்படி ஏழை
களுக்கு அன்றைக்கு ரூபாய் ஆறு இலட்சம் கிடைத்தது.
அதைச் செய்யும்போது நீங்கள் கேட்டால் ஏன் செய்திருக்க
மாட்டேன்?

மற்றொன்று, இன்னொரு சட்டமுன்வடிவு. வாகனங்
களுக்கு வரியை உயர்த்தி, வேன்களுக்கு ஒரு சீட்டில் ரூபாய்
ஐம்பது என்ற அளவில் (குறுக்கீடு). ஆகவே அதை வேகமாக
செயல்படுத்த வேண்டும். அது மட்டுமல்ல. மக்களுடைய
பணம் எங்கெங்கு எல்லாம் நாள்தோறும் போகிறதோ, அதை
ஓட்டல்களுக்கு எல்லாம் கூட பண்ணிக்கொள்ளலாம். அந்த
அளவிற்கு நீங்கள் நாட்டுடைமையாக்கக் கூடிய கொள்கையை
நிறைவேற்றுங்கள். அதற்கு எங்களுடைய ஆதரவு உண்டு
என்பதைச் சொல்லி, அமைகிறேன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்றையதினம், இந்த மன்றத்திலே
தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று குறைந்த அளவிலே
பஸ்கள் ஓடுகின்ற அந்த மாவட்டங்களிலே அரசுடைமையாக்க
வேண்டுமென்று முதல் கட்டமாக இந்த ஏற்பாட்டினை
நம்முடைய அமைச்சரவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்
கள். பத்து ஆண்டுகளிலே எல்லா மாவட்டங்களிலேயும் முழு
மையாக ஓடுகின்ற தனியார் பஸ் உடைமைகளை எல்லாம்
தேசியமயமாக்க வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய





கொள்கை. பொதுவாக தேசியமயக் கொள்கையையும், அர
சாங்கத்தினுடைய நோக்கத்தையும், நான் பெரிதும் வர
வேற்கிறேன். ஆரம்ப கட்டமாக, முதலாவதாக குறைந்த
அளவிலே ஓடுகின்ற அந்த மாவட்டங்களிலே இருக்கின்ற
பஸ்களை தேசியமயமாக்க வேண்டுமென்ற அந்த ஏற்பாட்
டினை இந்த ஆண்டு அரசாங்கம் ஏற்றிருக்கிறது.

குறிப்பாக தேசியமயமாக்குவது ஏற்கெனவே நம்முடைய
அரசாங்கத்தினுடைய கொள்கையை மேலும் விரிவுபடுத்தி
கடைசிவரையில் அந்தக் கொள்கையை நிறைவேற்றுவது
என்ற நோக்கத்தோடு நிறைவேற்றுகின்ற ஒரு நிலையை
அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. தேசிய மயமாக்கப்பட
வரும்போதெல்லாம் இரண்டு மாவட்டங்களில் ஒரு தனியார்
கம்பெனி குறைந்தபட்சம், 4, 5 பேருக்குத்தான் தமிழ்
நாட்டில் மொத்தமாக எல்லா பஸ்களும் ஓடிக்கொண்டிருந்தன.
அந்த நிலையை மாற்றி அரசாங்கமே முழுமையாக அந்த
பஸ்களை எல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எடுத்து,
ஆங்காங்கே பல பஸ் நிறுவனங்கள், ஒவ்வொரு மாவட்டத்தி
லேயும் ஒரு போக்குவரத்துக் கழகம் இன்றையதினம் இயங்கிக்
கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்
கள் சொன்னார்கள். நாம் லாப நோக்கத்தோடு இந்தப்
போக்குவரத்துக் கழகத்தை நடத்தமுடியாது என்று சொன்
னார்கள். அது வாஸ்தவம் தான். ஏனென்றால் அதிலே
பொதுமக்களுடைய நன்மையைக் கருதி, நாம் அவர்களுடைய
வசதியைக் கருதி, நம்முடைய நிதிநிலைமையைக் கருதி,
அவர்களுக்கு போக்குவரத்து வசதியாகவும், நல்ல விதமாகவும்
நடக்கவேண்டும். அதிலே பண நோக்கு இருக்கக்கூடாது. லாப
நோக்கு இருக்கக் கூடாது என்பதை உணர்ந்து இந்த ஏற்பாடு
செய்யப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் நாம் குறைந்த
அளவிலே நஷ்டம் வராமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.
குறிப்பாக எல்லா நாட்டுடைமையாக்கப்பட்ட அத்தனை கழகங்
களிலே இல்லையென்றாலும், இன்றையதினம் பார்த்தால்,
மோனோபொலியாக ஓடுகின்ற பல்லவன் போக்குவரத்துக் கழ
கத்திலும், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலேயும்
அதிக நஷ்டம் இல்லாமல், லாபமும் இல்லாமல் தனக்குத்
தானே வரக்கூடிய அளவிற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய
முடியுமா என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.
மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற முறை கேள்வி
நேரத்தில் சொன்னார்கள். ரூபாய் 44 கோடிக்கு மேலே
முதல், வட்டி, அபராத வட்டி எல்லாம் முழுமையாக இந்த
பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே சுமத்தப்பட்டிருக்கிறது.
(குறுக்கீடு) அது வருமென்று எதிர் பார்க்கலாம், வரவில்லை
என்றால் அதைத் தள்ளி விடலாமென்று இருக்கின்றோம்
என்று சொன்னார்கள்.

[திரு.கோ. பூவராகன்]

13—30 மணி [1990 மே 9

பல்லவன் போக்குவரத்துக்கழகத்திற்கு நாம் தனிச்சலுகை காட்டிக்
கொண்டிருக்கிறோம். ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சம் ஒரு
சீட்டுக்கு ஒரு 'குவாட்டருக்கு' ஐம்பது ரூபாய் வீதம் பார்த்
தால் ஒவ்வொரு பஸ்சுக்கும் ஐம்பது ஆயிரம் ரூபாய் நாம்
அதாவது விலக்கு அளிக்கிறோம். அப்படிப் பார்க்கும்போது
12 கோடி ரூபாய்க்கு மேலே இந்த வரியிலே அவர்களுக்கு
விலக்கு கொடுக்கிறோம். தனிச் சலுகையாகவே இந்த பல்ல
வன் போக்குவரத்துக் கழகத்துக்குக் கொடுக்கப்படுகிறது.
நஷ்டம் வரக்கூடிய அளவிற்கு நடக்கின்ற இதை கண்காணிக்க
வேண்டும். அதே போன்றுதான் திருவள்ளுவர் போக்கு
வரத்துக் கழகத்துக்கும் கூட இன்றையதினம் 'மோனோ
போலியாக' பஸ் எல்லா மாவட்டங்களும் இணைக்கக் கூடிய
அளவிற்கு போய்க் கொண்டிருக்கிறது. 600, 700 பஸ்கள் அங்கே
போய்க் கொண்டிருக்கிறபோது அதிலே கூட நமக்கு லாபம்
வரவில்லையென்று சொன்னால், எந்த அளவிற்கு நாம் பஸ்
நிறுவனத்தை எடுத்து நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று
நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பொதுவாக தனியார் நிறுவனத்திலே இருக்கின்ற அந்த
நிர்வாக சீர் அமைப்பு சிக்கன நடவடிக்கை, ஒவ்வொரு
காரியத்திலும் அவர்கள் எடுத்துக் கொள்கின்ற முயற்சி, அதில்
இருக்கின்ற நிர்வகிக்கின்ற நிர்வாகிகள் அதை பொறுத்துத்தான்
எந்த நிறுவனமாகயிருந்தாலும் லாபம் இல்லாவிட்டாலும்
நஷ்டத்திலே நடக்காமல் இருப்பதற்கு ஒரு சந்தர்ப்பம்
இருக்கும். அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு
மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் இன்று இந்த ஓராண்டு
காலத்திலே நஷ்டம் வராமல் இந்த போக்குவரத்துக் கழகங்
கள் நடை பெறுவதற்கு பெரிய முயற்சி, பல முயற்சிகள்
எடுத்திருக்கிறார்கள். அதை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.
ஆனால் மேலும் முயற்சி எடுக்க வேண்டும், அதை யொட்டித்
தான் இன்றைய தினம் பல பேர் கேட்ட கேள்வி போல
நான் கேட்க இயலவில்லை. ஏன் பத்து ஆண்டுகள் வைத்து
விட்டீர்கள். இந்த ஆண்டிலே முழுமையாக எடுத்து நடத்த
கூடாதா என்பது நம்முடைய நோக்கமும் நிறைவேற அந்த
அளவிற்கு எடுக்கின்றபோது இது சீராக வருகின்றதா என்று
கூட பார்க்க வேண்டும். அதற்காகத்தான் குறைந்த அள
விலும் இருக்கின்ற மாவட்டங்களிலே இன்றையதினம் எடுத்து
நடத்துவதற்கு முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்று நான்
அறிகின்றேன். குறைந்தபட்சம் இந்தப் போக்குவரத்துக் கழகங்
களிலே வருகின்ற லாபத்தை வைத்து, தொடர்ந்து தேசிய
மயமாக்குகின்ற அந்த அளவிற்கு அந்தப் பணத்தை வைத்து
எடுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். மறுமுறையும்
கடன் பெறுவது, அரசாங்கத்திலேயிருந்து உதவி அளித்து
தேசியமயமாக்குவதற்காக செலவிடுவது என்ற நிலை மாற்றப்
பட்டு, நம்முடைய போக்குவரத்துக் கழகங்களில், பதினைந்து



1990 மே 9] [திரு.கோ.பூவராகன்]

போக்குவரத்துக் கழகங்களிலிருந்து வருகின்ற லாபத்தை
வைத்து தொடர்ந்து அதிலே எடுக்கின்ற போது அவர்களுக்கு
நஷ்ட ஈடு கொடுக்க முடியுமா என்று நீங்கள் பார்க்க வேண்டும்.
அதை செவ்வனே செய்வோமென்று சொன்னால் நீங்கள்
அடுத்த ஆண்டிலோ, இந்த ஆண்டிலோ அந்த அதிக அளவில்
ஈடுபடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கும். எந்தக் காரியமாக
இருந்தாலும், நாம் இன்றையதினம் அதிக முதலீடு செய்து
ஏராளமான பணத்தை முதல் போட்டு செய்து கொண்டிருக்கும்
போது, அதிக நஷ்டத்தை கொடுக்கின்ற அளவிற்கு நாம்
ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதை கவனமாக நீங்கள்
வைத்துக் கொள்ள வேண்டும். அதிக லாபம் தேடவில்லை
யென்று சொன்னாலும் கூட நம்மிடையே நஷ்டத்தை காட்டக்
கூடிய அளவிற்கு வரக்கூடாது என்பதை கண்ணும் கருத்துமாக
நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதோடு, இன்றைய தினம் இதிலே குறிப்பாக இப்பொழுது
கூட சொன்னார்கள், நம்முடைய போக்குவரத்து துறை
அமைச்சர் அவர்கள், நாங்கள் பணமே கொடுக்காது கூட
எடுத்துக் கொள்வோம், அந்தச் சட்டம் என் கையிலே இருக்
கிறது என்று சொன்னார்கள், நம்மிடம் அதிகாரம் இருக்
கிறது. அதை ஒப்புக் கொள்கிறேன். ஏற்கெனவே நீங்கள்
எண்ணியது தேசியமயமாக்கப்பட்டபோது 4, 5 பேர் தான்
இந்த நிலைக்கு இருந்தார்கள். ஆனால் இன்றைய தினம் சிறிய
சிறிய அளவிலே பல பஸ் 'ஆப்பரேட்டர்கள்' இருக்கின்ற
போது அவர்களுடைய நிதிநிலைமையையும் நீங்கள் கருத்திலே
கொள்ள வேண்டும். அப்படி கொள்கின்றபோது, மொத்த
மாக பஸ்சை மட்டும் எடுத்துக் கொள்வதா. அவர்களுடைய
உடைமையையும் நாம் எடுத்துக் கொள்வதா என்றெல்லாம்
நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு பஸ்சுக்கு கடன்
கொடுக்கிறபோது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று
சொன்னால், அந்த பஸ் 'ரூட்டு' மேலேதான் கடன் கொடுக்
கிறான், பஸ் மேலே கடன் கொடுக்கிறதில்லை. இந்த பஸ்
எவ்வளவு தூரம் போகுது, எவ்வளவு 'கலக்ஸன்' ஆகுது
என்று பார்க்கிறார்கள். ஒரு பஸ் 3 ஆயிரம், 4 ஆயிரம் தின
மொன்றுக்கு வசூலாகிறது என்று சொன்னால், அந்த 'ரூட்
டிலே' நல்ல வசூலாகிறது. அந்த 'ரூட்டை' யாராவது
வேண்டுமென்று, மாற்றுவதற்கு முயற்சி எடுத்தால் கூட,
ஆறு இலட்சம் பிரிமியம், ஏழு இலட்சம் பிரிமியம் என்று
வாங்கக் கூடிய அளவிலேயிருக்கிறது. அந்தப் பிரிமியத்தை
வைத்து அல்லது அந்த பஸ்சினுடைய நிலைமையை வைத்து
அவர்கள் கடன் கொடுப்பதில்லை.

ஆனால், இன்றையதினம் நீங்கள் பார்க்கின்றபோது பஸ்
எந்த அளவிற்கு இருக்கிறது, அதை வைத்துத்தான் நீங்கள்
அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கிறீர்கள். அதனாலே ஒரு

சிக்கல் இருக்கிறது. இந்த மாதிரி எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதற்காக ஒரு கருத்தாக இன்றைய தினம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இந்த பஸ்சை நீங்கள் முழுமையாக அவர்களுடைய பர்மிட்டை நீங்கள் ஓட்டக் கூடாது என்று நிறுத்திவிடலாம். நம்முடைய அதிகாரத்தை வைத்து, அந்த இடத்திலே நம்முடைய பஸ்ஸை விடலாம். ஆனால் அந்த பஸ்சுக்கு வேணும்கிற பணத்தை கொடுத்தோ அல்லது பர்மிட் கொடுத்தோ அவர்களுக்கு இருக்கிற உடமையெல்லாம் அவர் களுக்கே விட்டுவிட முடியுமா என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். பர்மிட்டை நாம் கொடுத்தோம், அந்த பர்மிட்டை மட்டும் தேசியமயமாக்குகிறோம். மேற்கொண் டிருக்கிற அத்தனையும் அவர்களே வைத்துக் கொள்ளட்டும் என்பதிலே அவர்களுக்கு ஒரு தெளிவு, எப்படி என்று சொன் னால், வேறு முறையிலே இன்றைய தினம் ஒரு பஸ் இரண்டு பஸ் வைத்திருக்கின்றவர்கள் அதை லாரியாக மாற்றுவதற்கோ அல்லது வேறு தொழிலுக்கு அதை அதிக அளவிலே விற்று, நாம் வாங்குவது என்று சொன்னால் அந்த பஸ்சை குறைந்த விலைக்குத்தான் வாங்க முடியும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

13–35 மணி

அதே பஸ் வெளி மாநிலங்களுக்குப் போகின்ற போது அதிக அளவிலே அந்த பஸ் விலை இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படியெல் லாம் பார்க்கின்ற போது எந்த அளவிற்கு அதிலே நாம் கருத்தாக இருந்து அதிக நஷ்டம் இல்லாமல் பார்க்கக்கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்து இந்த தேசியவுடைமையாக்கு வதிலே அதை எடுத்துக் கொள்வதிலே ஒன்றும் சங்கடம் இருக்காது. ஒரே சமயத்திலே 10 ஆண்டுகள் இதைத் தள்ளிப் போடுவதைப் பார்த்தால் ஏற்கெனவே நடைமுறை யிலே இருக்கின்றார்களே, தனியார் பஸ் ஒருவர் கூட அந்த பஸ்களை சரியாக மெயின்டெயின் செய்ய மாட்டார்கள். ஏனென்றால் நமக்கு என்றைக்கு வருமோ, ஒரு வருடத்திற்கு அப்புறம் வருமோ ஆறுமாதத்திற்கு வருமோ என்று. பத்து வருடம் என்று அப்புறம் பத்து வருஷத்திற்கு இடையிலே எப்போது சொன்னால் எடுத்துக் கொள்ளலாம். அதிலே ஒரு காலவரையறை இல்லை. அதனாலே அவைகள் சரியாகப் பழுது பார்க்கப்படாமல் அது பொது மக்களுடைய போக்குவரத்துக்கு பயன்படாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாது. திட்டவட்டமாக அவர் களுக்கு நீங்கள் சொல்லி வைக்க வேண்டும். இந்த பஸ் நல்ல கண்டிஷனில் இருந்தால்—இப்போது கூட இருக்கிறது. ஆர். டி. ஓ. பார்த்து சரியாக சர்ட்டிபிகேட் கொடுத்தால் அந்தப் பஸ் போகும். ஆர். டி. ஓ. சரியாக கவனித்தால் அந்த பஸ் எப்படி



வேண்டுமானாலும் போகும். அதனாலே அப்படிப்பட்ட சூழ் நிலை இருக்கின்றபோது, பொது மக்களை பாதிக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாது. நம்முடைய நோக் கத்தை நிறைவேற்றுவதற்கு இந்த ஏற்பாடு. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே சமயத்திலே வசதியாகவும் இருக்க வேண்டும் என்பதையும் சொன்னார்கள். எனக்கு யார் பேரிலும் காழ்ப்புணர்ச்சி இல்லை என்றும் சொன் னார்கள். நான் அதை பெரிதும் வரவேற்கிறேன். இந்த ஆண்டு நீங்கள் எடுக்கின்றபோது எந்த மாவட்டத்தைத் தேர்ந் தெடுக்கின்றீர்களோ குறைந்த எண்ணிக்கை ஓடுகின்ற அந்த பஸ்கள் இருக்கின்ற மாவட்டத்தை எடுக்கின்றீர்கள் என்று சொல்கிறீர்கள். குறிப்பாக அது இராமநாதபுரம் மாவட்டத் திற்குத்தான் வரும் என்று எண்ணுகின்றேன். 50, 55 பஸ்கள் அங்கே ஓடிக்கொண்டிருக்கின்றன. அது எந்த மாவட்டமாக இருந்தாலும் குறைந்த அளவில் இருக்கின்ற மாவட்டத்திற்கு நீங்கள் எடுக்கின்றீர்கள். எடுக்கின்றபோது அவர்களுக்கு இந்த லைசென்ஸை மட்டும் நீங்கள் தேசிய வுடைமையாக்கிவிட்டு முழு உடைமையையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதினாலே விட்டுவிட முடியுமா என்பதைக் கூட நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அடுத்த ஆண்டு வருகின்றபோது நம்முடைய நிறுவனத்தி லிருந்து வருகின்ற பணத்தை வைத்துத்தான் மேற்கொண்டு தேசிய மயமாக்கக்கூடிய அளவிற்கு அதிலே ஈடுபாடு செய்ய வேண்டும் என்று சொல்லி நம்முடைய நிர்வாகத்தில் இருக் கின்ற அத்தனை போக்குவரத்துக் கழகங்களிலும் இருக்கின்ற ஓட்டை எல்லாம் அடைக்கப்பட்டு திறமையான நிர்வாகம் ஏற்பாடு செய்யப்பட்டு நல்ல முறையிலே கண்காணிக்கப்பட்டு, அதிக அளவிலே வருவாய் இல்லை என்று சொன்னாலும் நஷ்டம் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அடுத்த ஆண்டு நீங்கள் வரவேண்டும் என்று கேட்டு, என் வார்த்தை களை முடித்துக் கொள்கிறேன். இதை பெரிதும் வரவேற் கிறேன். ஆதரிக்கிறேன்.

திரு. பி. என். வல்லரசு ; பேரவைத் தலைவர் அவர்களே, பஸ்களை தேசியமயமாக்குகின்ற கொள்கையை நாட்டுடைமை யாக்குகின்ற டாக்டர் கலைஞருடைய ஆட்சியின் கொள்கையை நான் சார்ந்துள்ள அகில இந்திய ஃபார்வேர்டு ப்ளாக் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். பஸ்களை தேசியமய மாக்கும் கொள்கையை நிலைநாட்ட டாக்டர் கலைஞர் அவர்களும், அவர்களுடைய அரசும் அன்றும் சரி, இன்றும் சரி சுப்ரீம் கோர்ட் வரை சென்று எத்தகைய தீவிர முயற்சிகளை எடுத்துக் கொண்டார்கள் என்பதை இந்த நாடும் நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள். பஸ்களை தேசியமயமாக்கும் வேளையில் தனியார் பஸ்களை முழுக்க முழுக்க அப்புறப் படுத்தும் நிலையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று

கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 75 சதவீதம் தேசிய மயமாக்கினால் 25 சதவீதம் பஸ்கள் தனியார்களிடம் இருப்பது ஒரு வகையில் நல்லது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்பொழுதுதான் அரசு பஸ்களுக்கும் தனியார் பஸ்களுக்கும் மக்கள் பணியில், மக்க ளுடைய சேவையில் ஒரு போட்டி மனப்பான்மை ஏற்பட்டு மக்கள் பணி சிறப்பதற்கு ஒரு வழி வகை ஏற்படும் என்று நான் கருதுகிறேன். அதுமட்டுமல்லாமல் அரசு போக்கு வரத்து ஊழியர்கள் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து போக்கு வரத்து கழகங்களுடைய ஊழியர்கள் ஒரு காலத்தில் ஒரு நீண்ட கால போராட்டம் நடத்துகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை போக்கு வரத்துக் கழகங்களிலும் இருக்கின்ற அத்தனை ஊழியர்களும் ஒரு நீண்டகால, முடிவற்ற, காலவரையறை அற்ற ஒரு போராட்டத்திற்கு தங்களை உட்படுத்திக் கொள்வார்களே யானால் அன்றுதான் ஒரு மாநில அரசு தனியார்களுக்கு 25 சதவீதம் இடம் கொடுக்க மறுத்துவிட்டோமே என்று உணர்கின்ற காலக்கட்டம் ஏற்படும் என்பதை நான் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர் களே, மாநில அரசினுடைய போக்குவரத்துத் தொழிலாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்துவிட்டால் உதாரணத் திற்குச் சொல்கிறேன். சுமார் 20,000 பேர் வேலை நிறுத்தம் செய்து விட்டால் —அந்த 20,000 பேர்களுடைய இடத்தை நிறைவு செய்ய எத்தனை தனியார் பஸ்களிலே வேலை நிறுத்தத்தை நிறைவு செய்வதற்கான தோழர்கள் வருவார்கள். அதுமாத்திரமல்ல. வேலை நிறுத்தத்தை முறி யடிக்க இப்படிப்பட்ட ஒரு கொள்கையை அகில இந்திய ஃபார்வேர்டு ப்ளாக் வைத்திருக்கிறதா ?

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கூறிக்கொள்வதெல்லாம் அந்த 25 சத வீதம் பஸ் உரிமையாளர்களாவது அன்று ஓட்டி மக்களுடைய வசதிகளை அன்று நிறைவு செய்ய வழி ஏற்படுமே என்பதைத் தான் நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, பஸ்களை தேசியமயமாக்கும் வேளையில், தனியார் பஸ் உரிமையாளர்கள் பஸ் தொழில் நடத்துவதற்காக பைனான்ஸியர்களிட மிருந்து தாங்கள் பெற்ற கடனுக்காக அவர்கள் சொத்துக் களையும், வீடுகளையும் இழக்கின்ற ஒரு நிலைக்குத் தள்ளப் படுவதை கருணை உள்ளம் மிகுந்த டாக்டர் கலைஞர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அப்படி தேசியவுடைமையாக்குகின்ற பட்சத்தில் ஒரு குறிப்பிட்ட காலவரையறையாவது, பஸ் பெர்மிட்டுகளை மட்டும் எடுத்துக் கொண்டு, தனியார்



பஸ்களை அந்தந்த உரிமையாளர்களிடம் வழங்கிவிட்டால் அவர்கள் பஸ்களை விட்டு தொழில் நடத்துவதற்கு ஒரு வழிவகை காணப்படும் என்பதோடு, மாணவர்களுக்கு பஸ் பாஸ் வழங்குகின்ற இந்தச் சூழ்நிலையில் இதுவும் ஒரு நிறைவு செய்கின்ற வழியாக இருக்கும் என்று நினைவுப் படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

13.40 மணி

இன்றைய தினம், பஸ்களைத் தேசியமயமாக்குகின்ற நேரத் தில் அதிக தனியார் பஸ்கள் எந்தெந்த மாவட்டங்களில், எங்கெங்கு ஓடுகின்றனவோ அவற்றைத்தான் முதலில் எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர, தனியார் பஸ்கள் குறைந்த அளவு ஓடுகின்ற மாவட்டங்களில் அவற்றை எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அதே போல, ஆம்னி பஸ்களுக்கு இன்று கூடுதல் வரி விதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே, பல்லாயிரக்கணக்கான, பல இலட்சக்கணக்கான பக்தர்கள் கோயில்களுக்குச் செல் கின்ற நிலை அவதிக்குள்ளாகியிருக்கின்றது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்து இன்னும் இரண்டு வருட காலத்தில் அறநிலையத் துறை அமைச்சரே கோரிக்கை விடப்போகிறார். ஒவ்வொரு கோயிலிலும், ஆம்னி பஸ்கள் நின்று விட்டதால் அங்கே இலட்சக்கணக்கான பக்தர்கள் வராத சூழ்நிலை ஏற்பட்டிருக் கின்றது என்பதை அவரே, இவரிடம் கோரிக்கை விடுகின்ற நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அன்று அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்ட நேரத்தில் தமிழ்நாட்டில் டாக்டர் கலைஞர் அவர்களோடு யாரும் தொடர்பு கொள்ளமுடியாத, டாக்டர் கலைஞர் அவர்களுக்கு யாருமே கார் ஓட்ட முடியாத நிலை ஏற்பட்ட நேரத்தில், பாரதப் போரில் அர்ஜுனனுக்கு கண்ணன் தேரோட்டியதைப் போல இன்றையதினம் டாக்டர் கலைஞருக்கு கார் ஓட்டியாக இருந்த நமது மாண்புமிகு அன்பு அமைச்சர் கண்ணப்பன் அவர் களை நான் கேட்டுக் கொள்வது எல்லாம், தமிழ்ச் சமுதாயத் தினுடைய சார்பில் நான் கேட்டுக் கொள்வதெல்லாம், டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெயரில் ஒரு போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்தில் இருக்கின்ற அத்தனை தமிழர்களுக்கும் தலைவராக இருந்து, உலகத் தமிழர்களுக்கெல்லாம் நான் வாழ்வு கொடுப்பேன் என்று போராடிக் கொண்டிருக்கின்ற இந்த உலகத் தலைவருக்கு, அவருடைய பெயரை ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கு நிச்சயம் சூட்டவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

டாக்டர் கலைஞர் அவர்களே
ஆனால் அவருக்கு மறுப்பதற்கு எத்தகைய உரிமை இருக்கிறதோ,
அதைப் போன்று அவருடைய மறுப்பை மறுப்பதற்கு
தமிழ்ச் சமுதாயத்திற்கு உரிமை இருக்கிறது என்பதை நான்
தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
இன்று கொண்டு வந்துள்ள இந்தச் சட்டத் திருத்தத்தை உறுப்
பினர் முழுமையாக ஒரு குறையும் சொல்லாமல் ஏற்றுக் கொள்
வாரேயானால், அவருடைய யோசனையைப் பரிசீலிக்கலாம்.
(சிரிப்பு.)

திரு. பி. என். வல்லரசு : கலைஞர் அவர்களுடைய பெயர்
சூட்டுவதாக இருந்தால் நான் அத்தனையையும் முழு மன
தோடு ஏற்றுக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், டாக்டர்
கலைஞர் அவர்களுடைய பெயராலே அமைகின்ற அந்தப்
போக்குவரத்துக் கழகம், ஒரு தாய் ஸ்தாபனமாக தலைமை
ஸ்தாபனமாக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்
கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சின்னசாமி ஏதோ
சொல்ல வேண்டுமாம்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த தேசியமயக் கொள்கையை அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்கிறது.
ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மறைந்த முன்னாள்
முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆருடைய பெயரிலே
ஒரு போக்குவரத்துக் கழகத்தை உருவாக்குவதற்கு முன்
வருவாரா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வல்லரசு, முடிக்
கலாம்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு தேசியத்
தலைவர்களை மதிக்கின்ற அரசு என்ற காரணத்தினால்,
இந்த நாட்டினுடைய விடுதலைக்காக, தனி மனிதனாகச்
சென்று, சிங்கப்பூரிலே ஒரு புதிய சர்க்காரை, சுதந்திர சர்க்
காரை நிறுவி, இந்திய தேசிய ராணுவத்தை நிறுவிய கலைத்
தலைவர் நேதாஜியினுடைய பெயரில் ஒரு போக்குவரத்துக்
கழகத்தை அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
காரணம், அவர், நான் இரண்டாவது பிறப்பை எடுப்பேனே
யானால், அதில் நான் தமிழனாகப் பிறக்கவேண்டும்



அப்படிப் பிறக்கவே விரும்புகிறேன் என்று சொல்லியிருக்கிறார்
எனவே, தமிழ்நாட்டில் அவர் பெயரால் ஒரு போக்குவரத்துக்
கழகத்தை அமைத்திடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு
விடை பெறுகிறேன், வணக்கம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த அரசால் கொண்டு வரப்பட்ட திருத்
தத்தை நான் முழு மனதோடு ஆதரிக்கின்றேன். முழு மனதோடு
ஆதரிப்பதற்குக் காரணம், அன்றைக்கு காங்கிரஸ் ஆட்சியின்
போது, 67-க்கு முன்பு, ஆட்சியில் முதலிலே 125 மைல், பிறகு
100 மைல், பிறகு 75 மைல் வரைக்கும் ஓடிய பஸ்கள் எல்லாம்
தேசியமயமாக்கப்பட்டன. பிறகு, கன்னியாகுமரி மாவட்டம்
முழுவதும் பஸ் தேசியமயமாக்கப்பட்டது. அதன்பிறகு, படிப்
படியாக, முழுமையாக ஆக்கப்பட்டிருக்கும். ஆனால் காங்கிரஸ்
வெளியே வந்துவிட்டது. இன்றைக்கு அந்த இடத்திலே மீண்டும்
நம்முடைய முதல்வர் அவர்கள் வந்து அமர்ந்திருக்கிறார்கள்.
இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்னாள் சபா
நாயகர் சொன்னதைப்போன்று 10 ஆண்டுகள் கூட தேவையில்லை

13-45 மணி

10 ஆண்டுகள் தேவையில்லாமல் அதை விடக்குறைவான
ஆண்டுகளிலே எல்லா பஸ்களையும் நமக்கு நஷ்டம் வந்தாலும்
பரவாயில்லை, எல்லா பஸ்களையும் தேசிய மயம் ஆக்குவதற்
கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
(மேஜையைத் தட்டும் ஒலி) அது மட்டும் அல்ல, காங்கிரஸ்
கொள்கை, காங்கிரஸ் லட்சியம் அதோடு....................
(மேஜையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) அதாவது திரு. பீட்டர்
ஆல்போன்ஸ் என்ன சொன்னார் என்றால், அன்றைக்கு நாங்கள்
எல்லாம் கமிட்டிக்குப் போகும் போது பஸ்ஸில் செல்வோம்.
அதாவது நம்முடைய இன்றைக்கு இந்தியாவினுடைய தலை
மகனாக இருக்கின்ற திரு. வெங்கட்டராமன் அவர்கள் பொறுப்பில்
இருக்கும்போது அந்த பஸ்ஸில் செல்லும் போது அந்த பஸ்கள்
ஆடாது, அசையாது, அப்படி குலுங்காமல் சென்று கொண்
டிருந்தது. இன்றைக்கு பஸ்கள் அது போகும் பக்கம் எல்லாம்
சூப்பர் டிலக்ஸ் என்று இருக்கிறது, அதிலே சில சமயங்களிலே
வந்தால் அது இடையில் விழுகிறது. இந்த மாதிரி நிலைமை வந்து
விடக்கூடாது என்பதற்காகத் தான் நம்முடைய மதிப்பிற்குரிய
உறுப்பினர் தம்பி திரு. பீட்டர் ஆல்போன்ஸ் சொல்லியிருக்
கிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. அந்த முதலாளி
களுக்கு அந்த பஸ்ஸை வைத்து இருக்கிறார்களே அவர்கள்
கடன் வாங்கி பஸ் வாங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த
நஷ்ட ஈடு கொடுப்பதில் நாம் சற்று கவனம் செலுத்தவேண்டும்.
நஷ்ட ஈடு கொடுக்காமல் அவர்களை 73 ஆம் ஆண்டிலே எடுத்த
பஸ்களுக்கு எல்லாம் இன்னும் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்

காமல் அவர்கள் சிரமப்படுகிறார்கள். அதையும் மாண்புமிகு
அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முத[illegible]ச்சர் அவர்
களும் சற்று கருணையோடு பார்த்து அவர்களுக்கு நஷ்ட ஈடு
கொடுத்து விட்டு இந்த பஸ்களை எடுத்து தேசிய மயம் ஆக்கி
பஸ்களை ஒழுங்கான முறையில் ஓடக்கூடிய அளவுக்கு செய்ய
வேண்டும் என்று கேட்டு உரையை முடிக்கிறேன். நன்றி,
வணக்கம்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த சட்டத் திருத்தத்தை அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நான் ஆதரிக்க
கடமைப்பட்டிருக்கிறேன். இதை ஆதரிக்கிற நேரத்திலே கூட
இங்கே எழுப்பப்பட்ட பல்வேறு கருத்துக்களில் முதலில் ஒரு
கருத்துக்கு நான் தெளிவாக கூறுவது என்னுடைய கடமை
என்ற முறையில் ஒன்றை மட்டும் நான் இங்கே எடுத்துக்கூற
விரும்புகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
ஆட்சியில் இருக்கும்போது ஏன் இந்த பேருந்துகளை தேசிய
மயம் ஆக்குகிற நிலை உருவாக்கப்படவில்லை என்ற கேள்வியை
இங்கே கடுமையாகக் கேட்டார்கள்.

இதே கேள்வியை நாங்களும் கட்சியினுடைய எல்லாத் தரப்
பிலும் எங்களுடைய கேள்வியாகக் கேட்டு அதற்கு முதலமைச்சர்
அவர்கள் எங்களுக்குக் கொடுத்த ஒரே ஒரு பதில் தேசிய மய
கொள்கையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை, அதை அமல்
செய்யவேண்டும் என்பதிலும் எந்தவிதமான கருத்து வேறு
பாடும் இல்லை. ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமை
மக்களிடத்திலே அதிகமான அளவுக்கு பேருந்துகள் தேவை இருக்
கிறது. தங்களுடைய கிராமத்திற்கு பேருந்து வேண்டும், என்
னுடைய ஊருக்கு பேருந்து வரவேண்டும் என்ற ஆர்வத்தின்
காரணமாக ஆயிரக்கணக்கான பேருந்துகள் ஓட்ட வேண்டும்
என்று இன்றைக்கும் ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருக்கிறார்
கள். அவர்களுக்கு புதிய பேருந்துகள் தருவதற்கான வசதிகள்,
வாய்ப்புகளுக்கு நிதிநிலை இன்றைக்கு சரியாக இல்லை. இந்த
நிதிநிலைகள் சரியாக்கப்படுகிற நேரத்தில் அவர்களுடைய
தேவைகளையும் பூர்த்தி செய்யும் அந்தப் பணியை நாம் மேற்
கொண்டு விட்டு தேசிய மயக் கொள்கையை நிச்சயமாகப் பின்
பற்ற வேண்டும் என்ற நிலையை எடுத்துக்கொள்ளலாம் என்
றார். நான் இன்றைக்கு ஒன்றை இங்கே பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன்.

தேசிய மயம் என்று சொல்லுகிற கொள்கையில் கருத்து
வேறுபாடு இருக்காது. ஆனால் இன்றைக்கு அந்த தேசிய மயத்
திலே கூட ஏதோ ஒரு தொய்வு வந்து இருப்பதாக சில நேரங்





ளில் இங்கே கருத்துக்கள் பரிமாறுகிற நேரத்தில் இங்கே
ம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கூட முழுக்க முழுக்க
ாட்டுடைமை ஆக்கப்பட்ட நாடாக இருக்கிற தனி உடைமையே
ில்லை என்று சொல்லுகிற நாட்டில் கூட இன்றைக்கு
னி உடைமைகள் அனுமதிக்கப்படுகிறது. தேசிய உடைமை
ள் கொஞ்சம் புறக்கணிக்கப்படுகிறதோ அல்லது ஒதுக்கி வைக்
ப்படுகிறதோ என்ற சந்தேகத்தை எழுப்புகிற அளவுக்கு சில
ருத்துக்களைச் சொன்னார்கள்.

ஆனால் நான் ஒன்றை மட்டும் இங்கே நிச்சயமாக வலு
வோடு சொல்ல வேண்டும். நாட்டுடைமை என்று சொல்லப்
படுகிற நேரத்தில் முழுக்க முழுக்க நாட்டில் இருக்கிற அத்
தனையையும் பொது என்று வைத்து இருக்கிற ரஷ்யாவானாலும்
வேறு நாடுகள் ஆனாலும் தங்களுடைய கொள்கையிலே ஏதேனும்
மாற்றம் இருக்கிறதா என்று சொன்னால் சில தனியார்களை
அவர்களுடைய தொழில்களுக்கு அனுமதித்து இருக்கிறார்களே
தவிர, அதனால் அவர்கள் பொது உடைமைக் கொள்கையில்
நிச்சயமாக மாறிவிட்டார்கள் அல்லது விட்டு விட்டார்கள்
என்று சொல்லிவிட முடியாது. ஆனால் இன்றைக்கு வெளி
நாடுகளில் இருந்து வேறு சிலர் சில அத்தியாவசிய பொருட்கள்
அல்ல, சாதாரணப் பொருட்கள் உற்பத்திச் செய்வதற்கு
அனுமதி கோருகிற நேரத்திலே, அந்தப் பொருளைச் செய்
வதற்கு அவர்கள் அனுமதிக்கின்றார்கள். ஆனால் அதே
நேரத்தில் அவர்கள் இராணுவத்திற்குத் தேவையான பொருளை
தயார் செய்யவோ, நாட்டிற்கு பாதுகாப்புக்கான பொருளை
தயார் செய்வதற்கோ வெளிநாட்டிலேயிருந்து யாராவது அனுமதி
கோரினால், அவர்கள் அனுமதி கொடுப்பார்களா என்றால்,
நிச்சயமாக அனுமதி கொடுக்க மாட்டார்கள். எனவே அவர்
களைப் பொறுத்தவரையிலே கூட இதிலே கருத்து வேறுபாடு
இல்லையென்ற நிலையிலே இருக்கிறது. ஆனால், ஒன்றை நான்
இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்வேன். மக்களுடைய
தேவை என்று சொல்கின்ற நேரத்தில் உணவு முதல் இடத்திலே
இருக்கிறது; இரண்டாவது உடை என்ற நிலை இருக்கிறது;
அடுத்தது இருப்பிடம். இந்த மூன்றுக்கும் நாம் எவ்வளவோ
அதிகமான அளவுக்கு கவனம் செலுத்தி, அதனை நாம் தர
முடியுமோ அதைச் செய்யவேண்டியது ஒரு அரசினுடைய
கடமை என்ற நிலை இருக்கிறது.

13-50 மணி

நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். இன்றைக்கு
உணவைப் பொறுத்தவரையிலும் நிலங்கள் அத்தனையையும்
கையகப்படுத்தி அதை உழுபவனுக்கே சொந்தமாக்க வேண்டு
மென்ற நிலையை நாம் எடுத்து இருக்கிறோம். அதேபோல,

நிலத்தை எடுக்கிற நாம், நிலத்தில் இருந்து வருகிற பொருளை அரிசியாக்குகின்ற ரைஸ் மில்களை தேசியமயமாக்க வேண்டு மென்று, பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்தில், அந்த நேரத்திலே உணவு அமைச்சராக இருந்த மதியழகன் அவர்கள் தீவிரமாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். உணவு உற்பத்தியை எவ்வளவு கவனமாக கவனித்துக்கொண்டு இருக்கிறோமோ அதேபோல் இந்த அரிசி ஆலைக்காரர்கள் ஒழுங்கான முறையிலே அரசுக்கு ஒத்துழைக்கவில்லையென்றால் அடுத்து அரிசி ஆலைகள் அத்தனையும் தேசியமயமாக்கப்படுகின்ற நிலை வரக்கூடும் என்று அறிவித்தார்கள். அதற்குப்பின்னாலே அவர்கள் கொஞ்சம் அடக்கத்தோடு இருந்தார்கள். இன் றைக்குக்கூட நமக்கு வாய்ப்பு இருக்குமானால் அரிசி ஆலைகள், இன்றைக்கு அரசு அரிசி ஆலைகள் வருவதுபோல் தனியா ருடைய அரிசி ஆலைகளை இன்றைக்கு தேசியமயமாக்க லாம்.

அதேபோல உடை என்று எடுத்துக்கொள்கின்ற நேரத் தில், இன்றைக்கு பல்வேறு ஆலைகள் இருக்கின்றன. நூல் ஆலைகளானாலும் சரி, உடைகளைத் தயாரிக்கின்ற, ஆடை களைத் தயாரிக்கின்ற ஆலைகளானாலும் இன்றைக்கு நாம் அவற்றை எடுத்துக்கொள்ளலாம். அதைவிட இன்றைக்கு மக்களிடத்திலே இருக்கின்ற கணிசமான ஒரு பெரிய கோபம் என்னவென்றால் எதற்கெடுத்தாலும் நிலத்திற்கு உச்சவரம்பு என்று நிலத்திலேதான் கை வைக்கிறார்களே தவிர, இந்த வீட்டிற்கு ஒரு உச்சவரம்பு கொண்டுவந்து, ஒவ்வொருவரும் 50 வீடுகள், 60 வீடுகள் வைத்திருக்கின்ற நிலையை மாற்றி, தனித்தனி மனிதனுக்கு வீடு இருக்கவேண்டுமென்ற முறையில், அந்த வீடுகளையெல்லாம் கையகப்படுத்தி, "எல்லோருக்கும் வீடு" என்ற நிலையை உருவாக்கக் கூடாதா என்ற நிலையை யெல்லாம் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். எனவே, இந்த தேசிய மயக் கொள்கையை, அதையும் கொஞ்சம் தீவிரமாக பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதைக் கொள்கை அளவிற்கு இந்த தேசியமயக் கொள்கையை ஏற்றுக் கொள்கிறேன். அதே நேரத்தில், இதில் யாரையும் பழிவாங்குகிற நிலை இருக்காது என்று நான் நம்புகிறேன். அதேபோல அரசு பேருந்துக் கழகங்கள் நஷ்டத்திலே நடப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் உன்னிப்பாக கூர்ந்து கவனித்து அரசு பேருந்துக் கழகங்கள் அத்தனையும் லாபத்திலே வரு கிற நிலையை நீங்கள் உருவாக்கிக் காட்டவேண்டும். அதுதான் இந்த தேசிய மயக்கொள்கைக்கு எடுத்துக்காட்டான நிலையை உருவாக்கக்கூடிய ஒன்று என்பதை நீங்கள் மனதிலே வைத்துக் கொண்டு, அதைச் செய்யவேண்டும்.

அதேபோல, இந்தப் பேருந்துகளை எடுக்கிற நேரத்தில் 1977 ஆம் ஆண்டில் ஒரு நிலை இருந்தது. தேசியமயமாக்கு கிற நேரத்தில் பேருந்துகளை எடுக்கிற நேரத்தில் அவர்கள்





புத்தகத்திலே இருக்கிற கணக்குக்கான ரூபாயை கொடுப்பதா அல்லது மார்க்கெட் வேல்யூ கொடுப்பதா என்ற நிலையெல்லாம் இருந்தது. அதைக் கொஞ்சம் சிந்தித்து, இன்றைக்கு மார்க்கெட் வேல்யூ இல்லாமல் அல்லது புக் வேல்யூ இல்லாமல் இரண்டிற்கும் இடையில் யாரையாவது ஒரு அதிகாரியை, என்ஜினியரை நியமித்து அவர்களுடைய மதிப்புகளை பார்த்து தருகிற நிலை இருப்பதைக் கொஞ்சம் மாற்றி, எந்த அளவிற்கு அந்தப் பேருந்துகளை பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அவைகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதேபோல எடுக்கப்படுகிற பேருந்துகள், பேருந்துகளை எடுத்துக்கொள்வதைவிட அந்தப் பேருந்துகளை வேறொரு இடத்தில், அதே முதலாளிகள் பயன்படுத்துகின்ற அளவிற்குக் கூட நாம் அவர்களை உருவாக்கிக்கொள்ளலாம். நாம் மக்களுடைய தேவைகளை எந்த அளவிற்கு வேகமாகப் பூர்த்தி செய்ய வேண்டுமோ அதை பூர்த்தி செய்கின்ற நடவடிக்கையில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்தத்தை ஆதரித்து அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முற்போக்கான சட்டத் திருத்தத்தில் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அனைவரும் பொதுவாக வரவேற்று நல்ல கருத்துக்களையெல்லாம் தெரிவித்தமைக்காக என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில், குறிப்பாக இதிலே பொது மக்களுக்கு என்ன நன்மை இருக்கிறது என்று நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதற்குரிய பதிலை உடனடியாகச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, நம்முடைய போக்குவரத்துக் கழகங்கள்—15 போக்குவரத்துக் கழகங்களிலேயும் இருக்கக் கூடிய வழித் தடங்கள், 60 சதவிகிதம் நஷ்டத்திலே இயங்கக் கூடிய அளவிலேதான் வசூலாகக்கூடிய வழித் தடங்கள். ஆனால் கிராமத்திலே இருக்கக் கூடிய மக்கள் அல்லது நகரத்திற்கு எட்டாத தொலைவிலே—நெடுந் தூரத்திலே இருக்கக் கூடிய மக்கள் போக்குவரத்து வசதி, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படையிலேதான், நஷ்டம் ஏற்பட்டாலும், அதை போக்குவரத்துக் கழகங்கள் தாங்கிக் கொண்டு, அந்த மக்களுக்கான வசதிகளை ஏற்கனவே செய்து கொண்டிருக்கிறது.

13-55 மணி

[திரு. மு. கண்ணப்பன்] [1990 மே 9

அதோடு, நம்முடைய அரசினுடைய
1,500 மக்கள் தொகையைக் கொண்டிருக்கக்கூடிய, கொள்கையாக,
வசதியுள்ள எல்லா கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதி, சாலை
யைச் செய்து கொடுக்க வேண்டுமென்று ஏற்கனவே ஒரு
கொள்கையை வைத்திருந்தோம். 30 கிலோ மீட்டர்
வரை நகரப் பேருந்துகளை இயக்கலாம் என்ற கொள்கை
யும் வைத்திருந்தோம். ஆனால், கடந்த 20 ஆம் தேதி,
போக்குவரத்து மானிய விவாதம் நடைபெற்றபோது, மாண்பு
மிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களையெல்லாம் ஏற்று,
பொது மக்களுடைய தேவையை மேலும் நிறைவு செய்
கின்ற வகையில், 30 கிலோ மீட்டருக்குப் பதிலாக, 35
கிலோ மீட்டர் தூரம் வரை—கிராமமாக இருந்தாலும்—
அந்தக் கிராமங்களுக்கும், நகரப் பேருந்து வசதிகள் செய்து
கொடுக்கப்படும் என்ற முடிவை நாம் ஏற்கனவே அறிவித்
தோம். அதேபோல் 1981வது ஆண்டு மக்கள் தொகைக்
கணக்கெடுப்பின்படி, 1500 மக்கள் தொகை கொண்ட கிரா
மத்திற்கு பேருந்து வசதி என்ற நிலைமையை
மாற்றி, 1981ஆம் ஆண்டு மக்கள் தொகைக்
கணக்கெடுப்பின்படி, பேருந்து வசதி செய்து கொடுக்கப்படும்
என்றும் நாம் அறிவித்திருக்கிறோம். அதே போல், நீண்ட
தூரப் பேருந்துகள், மற்றப் பேருந்துகள், நகரப் பேருந்துகள்
இப்படிப்பட்ட பேருந்துகள் எல்லாம் வேண்டுமென்று சட்டமன்ற
உறுப்பினர்களாக இருந்தாலும், நாடாளுமன்ற உறுப்பினர்
களாக இருந்தாலும், பொதுமக்கள் மத்தியிலே இருந்து அப்படிப்
பட்ட கோரிக்கைகள் வந்தால், உடனே அவைகள் எல்லாம் பரி
சீலிக்கப்பட்டு, ரோடு வசதி இருந்தால் போதும், உடனடியாகப்
பேருந்துகள் விடப்படும், லாப நஷ்டத்தைப் பற்றிக் கவலை
இல்லை என்ற அந்த லட்சியத்தைக் குறிக்கோளாக வைத்துத்
தான் நாம் ஏராளமான பேருந்துகளைக் கடந்த ஓராண்டு காலத்
திலே, புதிய வழித் தடங்களில் விட்டிருக்கிறோம். எதிர்
காலத்திலே அந்த நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்;
பொது மக்களின் குறைபாடுகள் போக்கப்பட வேண்டும் என்ற
எண்ணத்திலே தான், இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் செயல்
பட்டுக் கொண்டிருக்கின்றன.

எனவேதான், பொது மக்களுக்கு மேலும் வசதியைச் செய்து
தருவதற்கு முழுமையாக போக்குவரத்துக் கழகங்களினுடைய
கையிலேதான் அனைத்துப் பேருந்துகளும் இருக்க வேண்டுமென்ற
எண்ணத்திலேதான், இந்த நாட்டுடைமை சட்டம் இன்றைக்கு
கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை ஏன் உடனடியாகச்
செய்யக் கூடாது? 10 ஆண்டுகள் என்று ஏன் நீங்கள் வைத்திருக்
கிறீர்கள் என்றெல்லாம் கூட, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்
பினர்கள் கருத்து சொன்னார்கள். நம்முடைய அரசைப்
பொறுத்த வரையில், அவசரப்பட்டு ஒரே நாளிலே இந்த
போக்குவரத்துக் கழகங்களினுடைய உடைமைக்கு, தனியார்



1990 மே 9] [திரு. மு. கண்ணப்பன்]

பேருந்துகளைக் கொண்டு வருவோமேயானால், அவைகளை யெல்லாம் ஏற்று நடத்தக் கூடிய பொருளாதார வசதி, அதே நேரத்தில் தனியார்களுடைய பேருந்துகளை ஒரே நாளில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் — நம் முடைய போக்குவரத்துக் கழகத்திலே இருக்கக் கூடிய குறை பாடுகளையும் நாம் போக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். அதைத்தான், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தை வரவேற்கின்ற நேரத்தில் போக்குவரத்துக் கழகத் திலே இருக்கக் கூடிய குறைபாடுகள் தவிர்க்கப்பட வேண்டும்; போக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லியிருக் கிறார்கள். அந்தக் குறைபாடுகளையெல்லாம் போக்குவதற்கு கடந்த ஓராண்டு காலமாக ஏராளமான முயற்சிகள் செய்யப் பட்டு வருகின்றன. தொடர்ந்து முயற்சிகள் செய்ய வேண்டு மென்ற அடிப்படையிலே தான், ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இதுவரை நேர டியான தொடர்பு கிடையாது; இனிமேல் ஒவ்வொரு மாவட் டத்திலேயும் அந்தந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு என்று ஆலோசனைக் குழு அமைக்கப்பட வேண்டும். அதிலே மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராகவும், நிர்வாக இயக்குநர், அந்தப் பகுதியிலே இருக்கக் கூடிய 'டிரான்ஸ்போர்ட் டெபுடி கமிஷனர், ஆர்.டி.ஓ., நெடுஞ்சாலை துறையினுடைய பொறியாளர், நம் முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் கள் எல்லோருமே அந்தக் குழுவில் இடம் பெறுவார்கள் என்ற அடிப்படையில், ஒரு ஆலோசனைக் குழு ஒவ்வொரு போக்கு வரத்துக் கழகத்திற்கும், மாவட்ட வாரியாக விரைவில் நாம் அமைக்க இருக்கிறோம்.

14-00 மணி

அதல்லாமல் ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் நேரடியாக வந்திருந்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களை யும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கூட்டி வைத்து மக்களு டைய போக்குவரத்துத் தேவை என்ன இருக்கிறது என்பதைப் பற்றி நேரடியாகக் கேட்டறிவதோடு போக்குவரத்துக் கழகத்திற் கான ஆலோசனைகளையும், சட்டமன்ற உறுப்பினர்கள் நேரடி யாகத் தெரிவிக்கவேண்டும் என்று ஏற்கனவே பல்லவன் போக்கு வரத்துக் கழகத்திலும், பாண்டியன் போக்குவரத்துக் கழகத் திலும் அத்தகைய ஆலோசனைக் கூட்டங்களை நாம் நடத்தி இருக்கிறோம். சட்டமன்றக் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு மற்ற எல்லா போக்குவரத்துக் கழகத்திற்கும் வந்திருந்து அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும், அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்தவர்களையும் அழைத்து வைத்து உங்க ளுடைய மேலான ஆலோசனைகள் நிச்சயமாகக் கேட்கப்படும்.

அதேபோல் அந்தப் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள
எந்த அதிகாரி மீது குறை சொல்லப்பட்டாலும் அந்தக் குறைகள்
குறித்து உடனடியாக விசாரிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு தயவு
தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கக்கூடிய அரசுதான்
இந்த அரசு என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்த போக்குவரத்துக் கழ
கத்தில் சிறந்த நிர்வாகத்தைக் கொண்டுவரவேண்டும், அதற்குக்
கொஞ்சம் அவகாசம் வேண்டும் என்ற அடிப்படையில்தான்
குறைந்த பெர்மிட்கள் என்ற எண்ணிக்கையிலே இருந்து படிப்
படியாக உயர்த்தி, பெர்மிட்டுகளை, அதாவது அதிகமான அள
வுக்கு பெர்மிட்கள் இருக்கக் கூடிய மாவட்டம் வரை பத்தாண்டு
காலத்தில் எடுக்க வேண்டும் என்று நாம் முடிவுகளைச் செய்திருக்
கிறோம்.

அடுத்தபடியாக இந்த பஸ்களை என்ன செய்யப் போகி
றீர்கள், பணிமனைகளுக்கான இடங்களை எல்லாம் என்ன செய்
யப் போகிறீர்கள், அதையாவது அவர்களுக்கு விட்டு விடக்
கூடாதா என்று கூட இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்
னர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே உங்களுடைய கோரிக்
கைகளை எல்லாம் ஏற்றுக் கொண்டு இந்த அரசாங்கத்தைப்
பொறுத்தவரையில், ஏற்கனவே இருக்கின்ற சட்டத்திலே இருக்
கின்ற விதிமுறைகளின்படி நஷ்டஈடு கொடுத்து நாம்
முழுமையாக எடுத்துக் கொள்கிறோம். ஆனால் பஸ்களை
அவர்கள் தாராளமாக வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு
அரசு வழிவகை செய்யும் என்பதையும் இந்த நேரத்தில் நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேமாதிரி பணிமனைகள் சம்பந்தப்பட்ட இடங்களையும்
அதாவது அவைகளையாவது விட்டுவிடுவீர்களா என்று கேட்
டார்கள். தேவைப்பட்டால் அந்த இடத்திற்குச் சொந்தக்
காரர்கள் விருப்பப்பட்டால் நம்முடைய போக்குவரத்துக் கழகத்
திற்கு, அவர்கள் நஷ்ட ஈடு வாங்கிக் கொண்டு தாராளமாகக்
கொடுக்கலாம். அப்படி விருப்பப்படாவிட்டால் அதையும் விட்டு
விடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ருட்களை மட்
டுமே எடுத்துக் கொண்டு அதிலே அரசினுடைய பெருந்துகளை
இயக்க வேண்டும் என்ற லட்சியத்தோடுதான் இந்தக் காரியம்
செய்யப்படுகிறது. இங்கே ஆரம்பத்திலே நம்முடைய மாண்பு
மிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களும்,
திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களும் நீலகிரி மாவட்டத்தில்
நஷ்ட ஈடு கொடுக்கவில்லையே, ஏன்; கொடுக்கப்பட்டதா என்று
கேட்டார்கள். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
மொத்தம் 19 பஸ் உரிமையாளர்களின் 121 பஸ்கள் எடுத்துக்
கொள்ளப்பட்டன. இவைகளில் 7 பஸ் உரிமையாளர்களுக்கு
42 பஸ்களுக்கு 1973ஆம் ஆண்டிலேயே காம்பென்சேஷன்



கொடுக்கப்பட்டுவிட்டது. மற்றும் 9 பஸ் உரிமையாளர்களின்
8 பஸ்களுக்கு 1988-ல் உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்த
ற்குப் பிறகு காம்பென்சேஷன் வாங்கிக் கொண்டார்கள்.

மீதி இருக்கக்கூடிய 3 பேர்களில் இரண்டு பேர்கள் சம்பந்தப்
பட்டவரையில் உயர்நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.
ஆகவேதான் இன்னும் காம்பென்சேஷன் கொடுக்க இயலவில்லை.
மீதி இருக்கக்கூடிய ஒரு பஸ் உரிமையாளரும் ஆர்பிட்ரேஷன்
கேட்டு அதன் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்
பட்டு இருக்கின்றன. அவர்களுக்கும் விரைவில் நஷ்டஈடு வழங்
கப்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நஷ்டம் வராமல் பார்த்துக் கொள்ள
வேண்டும், ஓடிக் கொண்டிருக்கிற நாட்டுடைமையாக்கப்பட்ட
பெருந்துகள் எல்லாம் நஷ்டத்தில் ஓடுகின்றன என்பதைப் பற்றி
எல்லாம் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவற்றிற்கான விளக்கத்தை
இங்கே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதுவும் இந்தப்
போக்குவரத்துக் கழகங்கள் மேலும் சிறப்பான நிலையை எய்த
வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தப் போக்குவரத்துத்
துறையில் மிகச் சிறந்த நிபுணராக பணியாற்றிய மதிப்பிற்குரிய
திரு. தில்லைநாயகம் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு
அமைக்கப்பட்டு கிட்டத்தட்ட எல்லா போக்குவரத்துக் கழகங்
களுக்கும் அவர்கள் சென்று இருக்கிறார்கள். ஓரிரு போக்கு
வரத்துக் கழகங்களைத் தவிர, அதன்னியில் இந்தியா பூராவும்
இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்கள் எப்படி, எப்படி செயல்
படுகின்றன, எந்தெந்தப் போக்குவரத்துக் கழகங்களில் நல்ல
அம்சங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி எல்லாம்
ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுத்த பிறகு
இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்கள் பிரிக்கப்பட வேண்
டுமா, அப்படிப் பிரிக்கப்பட்டால் எந்த அளவுக்கு பேருந்துகள்
எண்ணிக்கையை வைத்துக் கொள்ளலாம் என்பன போன்றவை
கள் எல்லாம், நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு பின்னால்
தான், அரசு முடிவெடுக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறது.
ஆகவே நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் நிச்சயமாக
லாபகரமாக ஓடுவதற்கு, நிர்வாகம் சீர் செய்யப்படுவதற்கு,
குறைகள் களையப்படுவதற்கு, இந்த அரசு நிச்சயமாக நடவடிக்
கைகளை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கையை இந்த நேரத்தில்
தெரிவித்து, இந்த நல்ல சட்டத்தை, முற்போக்குக் கருத்துள்ள
இந்தச் சட்டத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

14-05 மணி

இதிலே இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். தொழி
லாளர்கள் ஆங்காங்கு ஏதாவது போராட்டங்கள் நடத்தும்
போது, அந்தத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் காரணமா

வேலை நிறுத்தம் தொடர்ந்து பரவலாக நடந்தால், தனியார் பஸ்கள் இருந்தால், அதை ஓரளவுக்கு சமாளிக்க முடியும் என்று காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பிலும் இங்கே கருத்துக்கள் சொல்லப்பட்டன. (குறுக்கீடு). திரு. பீட்டர் ஆல்போன்ஸ் சொன்னார்.........

திரு. ரா. சொக்கர்: தலைவர் அவர்களே, போராட்டத்தை மீறி அடக்க வேண்டுமென்று நோக்கம் இல்லை. பொது மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், அந்த பொருள்படத்தான் கோரினார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, சொன்னவர் உட்கார்ந்திருக்கிறார், அவருடைய நோக்கத்தை இவர் எப்படிப் புரிந்து கொண்டார்?

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு சொக்கர் அவர்கள் சொன்னதைப் போல, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் பொது மக்களுடைய அத்தியாவசியப் போக்குவரத்துக்கு வழி வேண்டுமென்றுதான் சொன்னேனே தவிர, போராட்டத்தை மீறி அடக்குவதற்கு என்று சொன்னது தவறு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. பி. என். வல்லரசு: நானும் அதே கருத்தைத்தான் சொன்னேனே தவிர வேறல்ல.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நீங்கள் எந்தக் கருத்தில் சொன்னாலும், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களுடைய போராட்டம் வருகின்ற வகையில் நிச்ச யமாக நடந்து கொள்ளாது. தொழிலாளர்களுடைய சக்தி யால் உருவாக்கப்பட்ட அரசாங்கமாக இருப்பதால், தொழிலாளர் களுக்கு குறை வராமல் பார்த்துக் கொள்கிற அரசு, கலைஞர் அரசு என்ற வகையில், போராட்டம் வராமல் நிர்வாகத்தை நடத்துகிற அரசு என்ற வகையில், அதற்காகவே தனியார் பேருந்துகளை விட்டு வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால், காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இந்த சட்டத்தை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள் என்பதாலும், ஒருமனதாக இந்தத் திருத் தத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: ஒரு சின்ன கோரிக்கை. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் இன்றைக்கு ஓடுகின்ற பஸ்கள் அவ்வளவு சரியாக இல்லை. இப்போது இருக்கின்ற கட்டணத்தை சற்று உயர்த்தியாவது, நெடுந்தூரம் போகின்ற பஸ்களி ாவது, புஷ்-பேக் சீட்டுகளைப் போட்டால் வசதியாக இருக் ம். அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்தக் கோரிக்கை இரண்டு மாதங்களுக்கு முன்பே நம்முடைய உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கேற்றவாறு பேருந்து ஒன்று தயாரிக்கப்பட்டு, 4, 5 நாட்களுக்கு முன்பே இங்கே சட்டமன்ற வளாகத்தில் கொண்டு வந்து நிறுத்திவைக் பட்டது. இப்போது மதுரைக்கு ஓடிக் கொண்டிருக்கிறது, அந்த பஸ்ஸை அவர் பார்க்க அன்றைக்கு வராத காரணத்தால் தெரியவில்லை என்று நினைக்கிறேன். ஒரு பேருந்து அப்படி உரு வாக்கப்பட்டு, அன்றைக்குக் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் கூட அதில் ஏறிப்பார்த்தார்கள். அதேமாதிரி தொடர்ந்து பஸ்கள் நல்ல முறையில் செய்யப்பட்டு, விடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, சட்டம் நல்ல நோக்கத்தோடு நிறைவேற்றப்படுகின்றது. அதற்காகப் பாராட்டுகின்றோம். ஆனால் இந்த சட்ட திருத் தத்தையும் எதிர்த்து சுப்ரீம் கோர்ட் வரை எடுத்துச் சென்று வழக்குத் தொடர வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அரசியல் அமைப்புச் சட்டத்தின் 9-வது பட்டியலில் இதைச் சேர்ப்பதற்கு மத்திய அரசிடம் கேட்டு சேர்த்துவிட்டால், அதை எதிர்த்து வழக்குப் போட வாய்ப்பு இருக்காது. அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் மற் றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26 1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 4, சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

[1990 மே 9

Thiru S.D. Ugamchand: Mr. speaker sir, I move the following amendment: In Clause 4, in sub-clause (a), for the words fewer number Substitute the words more number.

In Clause 4, in sub-clause (a) for the words and figures 30th day of June 1999, substitute the words and figures "30th day of June 1994."

(This was duly seconded.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வாக்கெடுப்பு.

14-10 மணி.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவுகள் 5 முதல் 14 முடிய, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

"1990ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26/ 1990) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.



1990 மே 9]

4. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஈ) பேரவை அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளை தனியார் அலுவல் கள் முடிந்த பிறகு, அரசு அலுவல்கள் எடுத்துக் கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை (10—5—1990) காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 14-11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

94. 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 12—1—1990 ஆம் நாளிட்ட 78ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

95. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கை, ஏனைய தாள்கள்:

எதுவுமில்லை.

D
V211,31'N90
N90.33.2
143983
சென்னை-600 008.